Registered as a News Paper

விலை: 15.00 பக்கங்கள் -48

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

ஆண்டுச்சிறப்பிதழ்



பொங்குதமிழ் பெருஎழுச்சி





கொழும்பில் தமிழ் சிங்களக் கலைக்கூடல்



ஈழநாதம் 13ம் ஆண்டு நிறைவில் தேசியத்தலைவர்

# 16ம் ஆண்டுமலர்



இடைக்கால நிர்வாக திட்டவரைபு கையளிப்பு

19-02-2004

# அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கங்கள்!

பதினைந்தாம் ஆண்டில் ஈழநாதம்
2004

ஈழநாதம் மக்கள் தினசரி இன்று 15ஆவது ஆண்டில் காலடி பதிக்கின்றது. இதனை ஈழநாதம் தனது சிறுபராயத்தைத் தாண்டி இளமைப் பருவத்திற்குள் காலடி வைக்கின்றது என்று கூடக் கூறமுடியும். இதற்கு ஏற்ற வகையில் ஈழநாதம் சில பௌதீக வளங்களில் மாற்றங்களைக் கொண்டுள்ளது என்பது உண்மையே.

இவ் வளர்ச்சிப் பாதையில் பல ஏற்றங்களும், இறக்கங்களும் ஏற்பட்டதாயினும் ஈழநாதத்தின் தொடரான வருகைக்கு ஒத்துழைப்பும், ஆதரவும் நல்கிய எமது வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கு முதலில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வது அவசியமாகிறது.

ஈழநாதம் தனது சிறுபராயத்தைக் கடந்து இளமைப் பருவத்திற்குள் பிரவேசிப்பதென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே. இதேவேளை, ஈழநாதத்தின் குழந்தைப் பருவ வளர்ச்சியானது, முழு அளவில் ஆரோக்கியமானமாகவும், நேர்த்தியானதாகவும் இருந்ததா? தனது இலக்கை அதனால எட்ட முடிந்ததா? என்பது எண்ணிப்பார்க்க வேண்டியதொன்றே ஆகும்.

1990ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஈழநாதம் வெளிவர ஆரம்பித்த வேளையில், இருந்த அமைதிச் சூழ்நிலையானது, சில மாதங்களுக்கு அப்பால் நீடிக்கவில்லை. அதன் பின்னர் சுமார் நான்கு வருடங்கள் நீடித்த யுத்த காலம் அடுத்து குறுகிய அமைதிக்காலம், அதன் பின்னர் நீண்டதும், கடுமையுமான யுத்த காலம், அதற்கு அடுத்து தற்பொழுது சற்று நீண்ட தான அமைதிக் காலம் என்ற மாறுபட்டதும் கடுமையானதுமான சூழ்நிலை யிலேயே தனது சிறுபராயத்தை ஈழநாதம் கழித்தது/கடந்து வந்தது.

இந்த வகையில், ஈழநாதம் தனது சிறுபராயத்தின் பெரும் பகுதியை யுத்தத்திற்குள்ளேயே கழித்தமையானது, அதன் அப்பருவ வளர்ச்சியைப் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாக்கியிருந்தது. பல தொடர்ச்சியான இடப் பெயர்வுகள், சொத்தழிவுகள், பொருளாதாரத் தடைகள் என்பனவற்றால் ஈழநாதத்தின் குழந்தைப் பருவ வளர்ச்சியானது சீரானதாக இருக்கவில்லை.

ஆயினும், கடினமான சூழ்நிலையில் பல நெருக்கடிகள், துன்ப, துயரங்கள் என்பனவற்றையும் தாண்டி ஈழநாதம் வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக் குரியதே. ஆயினும், அது பெற்றிருக்க வேண்டிய அளவிலான வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ள அவை பெரும் இடையூறாக இருந்துள்ளன என்பது நிராகரிக்கப்பட முடியாததாகவே இருந்துள்ளது.

அண்மைய இரண்டாண்டுக் கால அமைதியானது, ஈழநாதத்தின் தோற்றம், பொலிவு என்பனவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்துள்ளதெனினும், அதன் வளர்ச்சி, மாற்றம் என்பனவற்றினால் அதன் வாசகர்களின் எதிர்பார்க்கையை முற்றிலும் நிறைவு செய்யக்கூடியதாக இருக்கவில்லை என்பதே நிதர்சனமாகும்.

இத்தகைய பூரண வளர்ச்சியை அடைய முடியாமைக்குப் பல காரணிகள் உண்டு. ஆனால், அவற்றை இங்கு பட்டியல் இட்டு எம்மை நியாயப்படுத்துவதோ அன்றி விளக்கம் அளிப்பதோ நோக்கமல்ல.

ஆயினும், வளர்ச்சியில் குறைபாடு உள்ளது என்பதும் மாற்றங்கள் தேவை என்பதும் எம்மால் உணரப்பட்டதாகவே உள்ளது.

இந்நிலையில், எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள், வளர்ச்சி என்பனவற்றை பெறுவதற்காக எம்மாலான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதே தற்பொழுது எம்மால் கூறக்கூடியதொன்றாகும்.

இதேவேளை, இம்முயற்சிகளுக்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியமானதாகும். இத்தகைய ஒத்துழைப்பைக் கடந்த காலத்தில் மக்கள் வழங்கியே வந்துள்ளனர். அத்தகைய ஒத்துழைப்பு தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்ற எதிர்பார்க்கையோடு ஈழநாதம் தனது பயணத்தைத் தொடரத் தயாராக உள்ளது.

நன்றி

பிரதம ஆசிரியர்.

# வாசகர் வாழ்த்துக்கள்!

## இதயங்கள் தேடும் ஈழநாதம் வாழும்!

தேசிய இதழாய், தமிழின்
தேன்கனிச் சுவையாய், உண்மை
பேசிடும் அழகாய் பகையின்
பொய்மையைத் தகர்க்கும் முரசாய்
மாசிலா மணியாய் வன்னி
மண்ணிருந்து ஒலிக்கும் நாதம்,
ஆசிகள் சொன்னோம், தலைவன்
ஆசைபோல் இன்னும் வளர்வாய்!

நாளுமே உன்னில் நாங்கள்
கண்விழிக் கின்றோம்! ஈழ
நாதமே உன்னைத் தானே
நாம்படிக் கின்றோம், உலக
மூலையில் நடக்கும் நிகழ்வை
முற்றத்தில் நின்றே கற்போம்
வேளைகள் தவறா தீழ
வாசலில் எழுவாய் வாழி!

அதிரடிச் செய்தி முதலில்
அறிந்துநீ தருவாய் உலகப்
புதினங்கள் தாங்கி எம்மை
பூரிக்க வைப்பாய்! வழியில்
எதிர்படும் தடைகள் தாண்டி
இன்று நீ நிமிர்ந்தாய், தமிழர்
இதயங்கள் யாவும் வென்றே
இடம்பிடித்திட்டாய் வாழி!

போரினில்த் துவண்டு, மண்ணே
பொசுங்கிய போதும், நீயோ
ஓர்நாள்க் கூட நிற்காது
ஓடியே வந்தாய்! உன்னை
வாரியே கண்ணில் ஒற்றி
வல்லமை பெற்றோம்! தமிழின்
நேர்மையின் வடிவே காலம்
நெடுகிலும் வாழ்வாய் வாழி!

- வேலணையூர் சுரேஸ்

## காலத்தின் குரலே-நீ காலமெல்லாம் வாழி!

காலத்தின் குரலாய்
ஞாலத்தில் சேதி சொல்லி
ஈழத்தின் பெருமை தாங்கி
இமயத்தின் சிகரம் தொட்ட
இனிய நாதமே
எங்கள் ஈழநாதமே
வாழிய நீ வாழி

இளையநாதமே
எங்கள் இனிய நாதமே
கரிகாலன் கருவில் வந்த
காலநாதமே
எம் வீரர்களின்
வெற்றிச்சேதி சொன்ன
வீரநாதமே
எம்இனிய
ஈழநாதமே
வாழிய நீ வாழி.

காலத்தின் குரலே - நீ
காலமெல்லாம் வாழி.

மா. தமிழவன்

## மலரணும் ஈழநாதம் பல்லாண்டுகள்!

பாரினில் எம் பைந்தமிழ்
பரப்பிடும் எம் பத்திரிகையாய்
பல்வகை வேதனை சோதனையுடன்
பணியாற்றுகிறதே எங்கள் ஈழநாதம்
தமிழர்களின் துயர் துடைக்கும்
தனியொரு தமிழ் ஒலியாய்
தமிழீழத்தின் தமிழ் நாதமாய்
தவழ்கிறதே எங்கள் ஈழநாதம்

அல்லல்கள் அவலங்கள்
இன்னல்கள் இடுக்கண்கள்
இத்தனை இடையூறுடன்
ஈழநாதத்திற்கும்இன்று அகவை பதினைந்து

பதினைந்து ஆண்டெனப்
பதித்திடும் அகவையில்
பயனுறும் வெள்ளிநாதமுமாய்
பணிதொடர்ந்தாயே எம் ஈழநாதம்

மாவீரர்கள் தந்த வீரமரணங்கள்
மரபுவழி நடந்த யுத்த சாதனைகள்
மண்ணின் விடுதலைப் போதனைகளுடன்
மலர்ந்தாய் தினம்தினம் எங்கள் ஈழநாதமே!
வெள்ளிநாதமும் விடுதலைக் கீதமுமாய்
குழந்தை நாதமும்
குறள் ஒரு வாரமுமாய்
மண்ணின் நாதமும் மதவடி மயிலருமாய்
மலர்ந்தது பதினைந்தென்ன மலரணும் ஈழநாதம்
பல்லாண்டுகள்!

- பழந்தமிழன்

# யாழ்ப்பாணம்- கண்டி வீதி(ஏ-9) போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டதும் அதன் விளைவும்

கிராமங்கள், நகரங்கள், மாநகரங்கள் தலைநகரங்கள், என்பவை வீதிகள், தெருக்கள், பாதைகள் போன்றவற்றால் ஒன்றிணைக் கப்பட்டுள்ளன. இதையே போக்குவரத்திற்கான வலைப்பின்னல் என்பர். போக்குவரத்திற்கான வலைப்பின்னலில் பெருவீதிகள் இரண்டு வேறுவேறு நாடுகளின் வாயில்களாகவும் ஒரு நாட்டிற்குள்ளேயே ஒரு பிரதேசத்திற்கும் இன்னொரு பிரதேசத்திற்கும் தொடர்புகளை ஏற்படுத்தும் பெருவீதிகளாகவும் இருக்கமுடியும். இந்த வகையில் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் வீதியை இலங்கையின் வீதிவரிசைப்படுத்தலில் A-9 பெருவீதி அல்லது யாழ்ப்பாணம் - கண்டிவீதி என அழைக் கப்படும். அப் பெருவீதி ஆரம்பத்தில் ஆட்சி அதிகார விஸ்தரிப்பிற்காக நிர்மாணிக்கப்பட்டது. பின்னர் அரச நிர்வாகப்பரவலாக்கலுக்கு வசதியாக அமைந்துவிட்டது.

கொழும்பு தலைநகராகத் தொழிற் படத் தொடங்கியதோடு வெளிநாட்டு போக்குவரத்திற்கான வாயிலாக கொழும்புத்துறைமுகம் அமைந்தது. யாழ்ப்பாண மக்களிற்கும் வவுனியா கிளிநொச்சி வாழ்மக்களிற்கும் யாழ்ப்பாணம்- கண்டிவீதி என அழைக்கப்பட்ட பெருவீதி கிளையாகப்பிரிந்து கொழும்புடனான தொடர்புகளுக்கான பெருவீதியாகப் பயன்பட்டது. இவ் வீதிக்கு சமாந்தரமாக புகையிரதப்பாதையும் அமைக்கப்பட்டது. தரைப்பாதையும் புகையிரதப் பாதையும், மக்கள் பயணம் செய்வதற்கும் பொருட் களைக் கொண்டு செல்வதற்கும் பயன்பட்டது.

1948 இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் கொழும்பு, யாழ்ப்பாணம் புகையிரதவீதியும் யாழ்ப்பாணம் கண்டி வீதியும் மக்களின் பல்வேறு பாவனைக்காக மாத்திரமல்ல ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் அரசாங்க நிர்வாகத்தை விஸ்தரிப்பதற்கும் பாதுகாப்பை உறுதிப் படுத்தி படையினரின் பிரசன்னத்தை பரவலாக் குவதற்கும் பயன்பட்டது என்பதை 1980பதுகளிலும் 1990களிலும் இப்பிரதேச மக்கள் உணர்ந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மக்கள் தம் நாளாந்த கடமைகளை ஆற்றுவதற்கும், விவசாயம் செய்வ தற்கும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கும், பொருளாதார சேவைத்தொழில்களை மேற்கொள்வதற்கும் கண்டி - யாழ்ப்பாணவீதியையும் அதனுடன் இணைந்து கொள்கின்ற தெருக்கள் பாதைகளையும் பயன்படுத்தும் போது பின்வரும் காலப்பிரிவுகளை ஊன்றி அவதானிக்க வேண்டியதாய் உள்ளது.

1) 1990 ஆம் ஆண்டுவரை கண்டி - யாழ்ப்பாணவீதி (சிலகுறிப்பிட்ட காலங்களில் தடைப்பட்டபோதும்)பிரதான போக்குவரத்திற்குப் பயன்பட்டது. 1990 ல் ஆனையிறவு முகாம் ஊடான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டதால் யாழ்ப்பாண மக்கள் ஏனையமாவட்டங்களிற்கான போக்குவரத்துத் தொடர்பையிழந்தனர். இதேகாலத்தில் காரைநகர், வேலணை, புங்குடு தீவு, நயினாதீவு, நெடுந்தீவு, மண்டைதீவுகளூடான போக்குவரத்துப் பாதையும் மூடப்பட்டது. இதனால் தீவுப்பகுதியில் வாழ்ந்த மக்களின் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் மற்றும் வெளிமாவட்டங்களிலும் வாழ்ந்ததால் தங்கள் வீடு, வளவு, தென்னை, பனை போன்ற, நிரந்தரப்பயிர்களின் வருவாய் போன்றவற்றை இழந்தனர். இவ்விதமே காங்கேசன்துறை, தெல்லிப்பளை, மயிலிட்டி, வசாவிளான் போன்ற பகுதிகளிலிருந்து படையினரால் விரட்டப்பட்ட மக்களும் மேற்குறிப்பிட்டது போன்ற மெய்வருவாயை இழந்தனர். தம் வீடுகளிற்கான போக்குவரத்து தடைப்பட்டதால் அவர்கள் வீடற்றவர்களாகவும், சொத்துவருமானத்தை இழந்தவர்களாகவும் உற்பத்திக் கருவிகளை இழந்து வறியவர்களாகவும் மாறினர்.

இந்நிலையில் ஆனையிறவூடான போக்குவரத்து தடைப்பட்டதால் வன்னிப் பெருநிலப்பரப்புடனான தொடர்பும் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி,முல்லைத்தீவு, மன்னார், வவுனியாவுடனான தொடர்பும் தடைப்பட்டது. இவ்வேளையில் யாழ்ப்பாண மக்கள் ஆனையிறவுக்கு கிழக்கால் உள்ள கொம்படி, ஊரியான், நல்லூர் ஊடான சேறும், சகதியும், நீரும் உள்ள பாதையைப் பயன்படுத்தினர். இது கண்டிவீதிக்குப் பதிலாகப் பயன்படுத் தப்பட்ட சட்டரீதியற்ற போக்குவரத்தாகும். பின்னர் ஆனையிறவுப்படைமுகாம் விஸ்தரிப்புடன் இப்பாதையும் தடைப்பட்டுப் போக ஆனையிறவுப்படைத்தளத்திற்கும், பூநகரிப்படைத் தளத்திற்கும் இடையிலான கிளாலிக்கடல் பயணம் ஆரம்பித்தது. இது தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் பாதுகாப்புடன் மேற்கொள்ளப் பட்ட போக்குவரத்து. இதில் மக்கள் வள்ளங் களிலும் வெளியிணைப்பு இயந்திரப்படகிலும் பிரயாணம் செய்தனர். மக்களின் போக்குவரத் திற்கு வள்ளங்கள் பயன்பட்டது போல பொருட்களும் கொண்டு செல்லப்பட்டது. இப்பயணத்தில் இலங்கையில் பாதுகாப்புப்படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகி மக்களில் சிலர் மாண்டு போயினர். மற்றும் கடல் அனர்த்தங்களாலும் மக்கள் உயிரிழக்க நேரிட்டது.

1990ல் ஆனையிறவு ஊடான போக்குவரத்து தடைப்பட்டதுடன் தாண்டிக்குளத்திலும் படையினர் சோதனை நிலையம் அமைக்கப் பட்டதால் குறிப்பிட்ட சிலர் குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் பயணிக்க முடிந்தது. பொருளாதாரத் தடையும் கொண்டுவரும் பொருளிற்கான அனுமதியும் படையினரிடம் பெறவேண்டி இருந்ததால் பொருட்கள் கொண்டு செல்வதில் தடைகள், கட்டுப்பாடுகள் இருந்தது. இதனால் தடையற்ற நகர்விற்கான மனித உரிமை மறுக்கப்பட்டது.இதனால் மிகக் குறைந்த

பேராசிரியர்
வி.பி.சிவநாதன்

தொகையினரே கண்டிவீதியூடாக பய ணம் செய்யமுடிந்தது. 1990 இன் பின்னரான போக்குவரத்து நெருக்கடிகளும் MOU அனுமதி பெறுவதில் உள்ள குளறுபடிகளும், பொருளாதாரத் தடைகளும் எரிபொருளின் விலையை பன்மடங்காக உயர்த்தியது. இதனால் மிகக் குறைந்த எண்ணிக்கையான வாகனங்களே போக்குவரத்திலீடுபட்டது. வாகனப்பாவனையாளர்கள் வாகனத்திற்கு சிபார்சு செய்யப்பட்ட எரிபொருளை பெறமுடியாததால் மண்ணெண்ணை போன்றவை பயன்படுத்தப்பட்டதால் போக்குவரத்துச்சேவை போதுமான அளவு நடைபெறவில்லை. கண்டிவீதிப் பாவனையில் ஏற்பட்ட தடை உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதிலும் முட்டுக்கட்டையைப் போட்டது. போக்குவரத்து செய்ய வேண்டிய நிலப்பரப்பும் படையினரின் காவல் அரண்கள் பல இருந்ததால் குறுக்கப்பட்டுவிட்டது. புகையிரதசேவை வவுனியாவுடன் நிறுத்தப்பட்டதுடன் தென்னிலங்கையுடனான தொடர்பை மக்கள் படிப்படியாகக் குறைத்துக்கொண்டனர். இன் நெருக்கடிகளின் மத்தியில் யாழ்ப்பாண மக்கள் முழுஅளவில் தம் தாயகத்தை விட்டு இடம் பெயர்ந்து செல்வதை ஒழுங்குபடுத்தி கட்டுப் பாட்டிற்கு கொண்டுவர தமிழீழ விடுதலைப் புலிகளின் 'பாஸ்' அனுமதி முறையும் போக்கு வரத்துச் செய்வோர் தொகையைக் கட்டுப்ப டுத்தியது.

வர்த்தகர்களும், அவசரசுகாதார சேவையைப் பெறவேண்டியவர்களும் அரசாங்க உத்தியோகத்தவர்களும்,உயர்கல்வி பெறு வோரும் வெளிநாட்டுத் தொடர்புகளை யுடையோருமாக மிகக்குறைந்த தொகையினரே கிளிநொச்சியிலிருந்தான கண்டிவீதியில் பயணித் தனர்.

2) 1995 ஒக்ரோபரிலிருந்து 1996 ஏப்ரல் வரை வலிகாமத்திலிருந்தான மக்களின் பாரிய இடப்பெயர்வு யாழ்ப்பாண குடாநாட்டு மக்களை வடமராட்சி, தென்மராட்சியிலும் வன்னிப் பெருநிலப் பரப்பிற்கும் நகர்த்தியது. இந்தவேளையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் கண்டிவீதிப் பயணம் சாவகச்சேரியிலிருந்து முகமாலைக்கு மாத்திரமே பயன்பட்டது. பின்னர் கிளாலிக் கடலூடாக பயணித்த மக்கள் திரும்ப கிளிநொச் சியிலிருந்து தாண்டிக்குளம் வரை சென்று படையினர் அனுமதித்தால் மாத்திரம் பயணத்தை தொடர முடிந்தது.

3) 1996 ஏப்ரலில் குடாநாடு இலங்கைப்படையினரின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதும் கிளாலிக்கடலூடான கடல் பயணமும் தடைப்பட்டது. இதன் பின்னர் யாழ்ப் பாணக் குடாநாட்டு மக்களின் கண்டி வீதிப்பயணம் முற்றாகத் துண்டிக்கப்பட்டது. அரச உத்தியோகத்தரும் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்வோரும் மற்றும் ஏனைய அவசிய தேவை என்பதை சான்றிதழ்களுடன் படையினரின் கவனத்திற்கு கொண்டுவருவோரும் பாதுகாப்பு அமைச்சின் 'பாஸ்' அனுமதி பெற்றவர்கள் மாத்திரம் கடல் வழியாகவும் வான்வழி விமானசேவையூடாகவும், பயணிக்க முடிந்தது. பயணிகள் சேவைக்காக 'சிற்றி ஒவ் றிங்கோ' 'லங்கா முடித்த' கப்பல்களும் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப்பொருட்களை ஏற்றி இறக்கு வதற்கு 'லங்கா முடித்த', 'தாலியர் கிரித்த', 'பிரின்ஷஸ் ஹாஸ்' 'மேர்க்ஷ‘ண்டி', 'சஜித்த' 'இந்துறுவலி', 'குமண' போன்ற கப்பல் களும் ஈடுபட்டன. வான் வழிப்பயணத்திற்காக 'லயன் எயார்','தெலிருவர்' போன்றவையும் சேவையில் ஈடுபட்டது. கடல் வழியாகப் பயணம் செய்வோர் 1500ரூபா முதல் 3000ரூபா வரையும் வான்வழிப்பயணம் செய்வோர் 6000 ரூபா வரையும் ஒரு வழிப்பயணத்திற்காக செலவிட்டனர். கண்டி வீதிப் பயணம் முற்றாகத் துண்டிக் கப்பட்டதால் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் சுற்றிவர படையினர் இருக்க மக்கள் நடுவில் இருந்தனர். குடாநாட்டிற்குள்ளேயும் ஒரு கிராமத்திற்கு போகும் போதும் படையினரின் சோதனைச் சாவடியூடாக அனுமதி பெற்றே பயணம் செய்ய முடிந்தது. இதனால் போக்கு வரத்து இறுக்கமாகவே இருந்தது.

4) வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்கும் இடையிலான போர் நடவடிக்கைகளும் ஆனையிறவு படைத்தளத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றிக்கொண்டதும் பளை, முகமாலை வரையிலான பகுதியை பெரும் போரின் பின் விடுதலைப்புலிகள் பெற்றுக் கொண்டமையும் அதன் பின்னரான 2002 ஏப்ரல் அரசு புலிகள் சமாதான ஒப்பந்தம் (MOU) மீண்டும் கண்டி வீதியை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை யாழ்ப்பாண மக்களுக்கு அளித்தது. .யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை வரையிலான கண்டி வீதி படையினரின் கட்டுப்பாட்டிலும், முகமாலையில் இருந்து ஓமந்தை வரையிலான பகுதி தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டிலிருக்க மக்கள் கண்டி வீதியை பயன்படுத்தத் தொடங்கினர்.



ஏறக்குறைய 12 வருடகாலம் தொடர்ச்சியாக கண்டி வீதியைப் பயன்படுத்த முடியாதிருந்த மக்கள் 2002 ஏப்ரலில் தொடர்ச்சியாக பயணிக்க திறந்து விடப்பட்டதால் மகிழ்ச்சியடைந்தனர். மக்கள் இதுவரைக்கும் நிறைவேற்ற முடியாதிருந்த தேவைகளை நிறைவேற்ற முன்வந்தனர்.

மக்களின் தேவையை முன்னிறுத்தி அதனைச் சாதகமாக்கிக் கொண்டு இதுவரையிலும் தென்னிலங்கையில் வர்த்தகம் செய்தோர் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர். இதுவரைக்கும் அடிப்படைத் தேவைகளைத் தானும் நிறைவேற்ற வசதிகளற்ற நிலையிலிருந்த மக்களை தமது வாடிக்கையாளர்களாக்க எண்ணிய பலதரப்பினரும் படையெடுத்து வந்தாற்போல் வந்தனர். குறிப்பாக பாவப்பட்ட மக்களை மீட்டெடுக்க வந்த இரட்சகர்கள் என தம்மைக் காட்டிக்கொண்ட தென்னிலங்கை வர்த்தகர்கள் ஏதோ சலுகை செய்பவர்கள் போல் பாவனை காட்டி சந்தையை தமதாக்கிக் கொள்ள வந்தனர். தேசிய முதலாளிகளோடு பல்தேசியக் கம்பனிகளும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்.

பாதை திறப்பதற்கு முன்னரே அரசாங்கம் தொலைத்தொடர்பு சேவையை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்தால் அதைப் பயன்படுத்தி தனியார் தொலைத்தொடர்பு நிலையங்கள் பல தோன்றின் தொலைத்தொடர்பு சேவை வெளிநாட்டில் வாழும் எம்மவர்களுடனான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்பளித்தது அத் தொடர்பிற்காக மக்கள் எவ்வளவு பணத்தையும் கொடுப்பதற்குத் தயாராக இருந்தனர். தொலைத்தொடர்பு சேவையை பயன்படுத்துபவர்கள் வெளிநாட்டுத் தொடர்பை நாளாந்தம் ஏற்படுத்திக் கொண்டதால் அவர்களிற்கு வெளிநாட்டிலிருந்து பணம் வந்தது. உறவினரோ, நண்பர்களோ வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பத் தொடங்கிய காலத்தில் A-9 பாதையும் திறக்கப்பட்டது. இதைச் சாதகமாக்கிக் கொண்ட இயங்காதிருந்த வங்கிகள் சேமிப்பு நிறுவனங்கள் காப்புறுதி நிறுவனங்கள் இங்குள்ளவர்களின் சேமிப்பைப் பெறுவதையே நோக்காகக் கொண்டு இங்கு வந்துசேர்ந்தனர். குறிப்பாக செலெயின் வங்கிபோன்றவை புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அதுபோல சிலிங்கோ நிறுவனத்தின் ஈகிள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இந்தியாவின் LIC காப்புறுதிக்கூட்டுத்தாபனம் போன்ற வையும் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டு மக்களை வாடிக்கையாளராக்க அயராத முயற்சியெடுத்தனர். இவ்வேளையில் முன்னர் இங்கிருந்து செயற்பட்ட வங்கிகளும் வங்கிக்

(45 ஆம் பக்கம் பார்க்க)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஓர் அம்சமாகிய யுத்தநிறுத்தம் பெருமளவில் மீறல்கள் இன்றிக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக விமர்சனங்கள் இப்போது முன் வைக்கப்படுகின்றன. இதனையிட்டு பல்வேறு நாடுகளும் பாராட்டும் தெரிவித்து வருகின்றன. குறிப்பாக கடந்த நவம்பர் மாதம் 04ஆம் திகதி சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று அமைச்சுக்களை அரசாங்கத்திடமிருந்து பறித்த பின்னர் 'திரிசங்கு சொர்க்க' நிலையில் யுத்த நிறுத்த அமுலாக்கம் சிறிலங்கா தரப்பில் இருக்கின்றபோதும் கூட அதனைக் கடைப் பிடிப்பதில் புலிகள் காட்டிவரும் உறுதிப்பாடு சர்வதேச நாடுகளைப் பொறுத்தவரை புலிகள் குறித்த மன எண்ணங்களை மாற்றிய மைத்துள்ள அதேவேளை பாராட்டுதல்களையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

புலிகளின் இந்நடவடிக்கையானது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஒப்பந்தம் செய்துகொண்ட ரணில் விக்கிரமசிங்கவை விடவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டிய நிலைக்குத் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தள்ளியுள்ளது என்றே கூறவேண்டும்.

ஆனால் கடந்த இரண்டு வருட காலமாக யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றபோதிலும் யுத்தத்திற்கான தயாரிப்பில் சிறிலங்கா தரப்பு முனைப்புடன் ஈடுபட்டுக்கொண்டுதான் இருக்கிறது என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை. பாதுகாப்புக்கு முன்னரைவிட அதிக நிதி ஒதுக்கியது முதல் இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள எடுத்துவரும் முயற்சி வரை ஆயுத தளபாடக் கொள்வனவு முதல் பயிற்சிகள் வரை இது விரிவடைந்து செல்கிறது. சமாதானத்தின் பெயரால் உலக நாடுகளிடமிருந்து பெற முயன்ற 4500 கோடி டொலர் நிதி உதவி கிடைக்காமையை அபிவிருத்திக்குத் தடையெனக் கூறும் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு நிதியில் எதுவித குறைப்பையும் செய்யவில்லை. அதேவேளை இந்நிதி ஒதுக்கீட்டை மறைமுகமாகவேனும் சிங்களக் கட்சிகள் விரும்பவே செய்கின்றன. அல்லது எதிர்க்க விரும்பாதுள்ளன.

அதேவேளை இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தைச்செய்து கொள்வதில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ரணில் விக்கிரம சிங்கவுக்குமிடையில் கடும்போட்டி.

வருகின்றன.

அமெரிக்காவைப் பொறுத்தவரை முப்படையினருக்குமான பயிற்சி வழங்கும் நடவடிக்கையில் அது ஈடுபட்டிருக்கிறது/ஈடுபட்டு வருகிறது. இதனை நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு ரீதியிலான பயிற்சி என அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரி ஒருவர் கடந்த ஆண்டிறுதியில் வர்ணித்திருக்கிறார்.

இதனடிப்படையில் 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் அமெரிக்க உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வந்தது. இது நான்கு நாட்கள் தங்கியிருந்து சிறிலங்காவுக்கு வழங்கவேண்டிய இராணுவ உதவிகள் குறித்து ஆராய்ந்தது. இக்குழு இராணுவ முன்னரங்க நிலைகளுக்குச் சென்று பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் சிறிலங்கா விசேட படைப்பிரிவினருக்குப் பயிற்சி, சிறிலங்கா விமானப்படைக்குப் பயிற்சி, கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பாகப் படையினருக்குப் பயிற்சி, மற்றும் பொறியியல் மருத்துவம் சார்ந்த பயிற்சிகளும் படையினருக்கு வழங்க

குறிப்பிடவேண்டும். அதாவது கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்புக் குறித்து சிறிலங்கா- அமெரிக்கா கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் செய்துகொண்ட ஒப்பந்தமாகும் இதன் அடிப்படையில் அமெரிக்காவிற்குப் பேரழிவு ஆயுதங்கள் கொண்டு செல்லப் படுவதைத் தடுக்கும் ஒரு மையமாக கொழும்புத் துறைமுகம் விளங்கும். இதனடிப்படையில் கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்புக் குறித்தும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சிறிலங்காவுக்கு வருகை தந்த அமெரிக்க விமானப்படையின் ஆசிய பசுபிக் பிராந்தியக் கட்டளைத்தளபதி ஜெனரல் வில்லியம் கே.பெசக் கட்டுநாயக்கா திருமலை சீனன்குடா விமானத்தளங்களை பார்வையிட்டார். இதனடிப்படையில் அமெரிக்கா சிறிலங்கா விமானப்படை அபிவிருத்திக்கு 400 மில்லியன் டொலர் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் 30 வீத விலைக்கழிவில் உபகரணங்களை வழங்க இணங்கியதாகவும் தெரியவருகின்றது.



பயிற்சிகளையும் பெற்று வருகின்றது. இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் கோரும் வேளை ஆயுத உதவிவழங்கத் தயார் என இஸ்ரேல் அறிவித்திருக்கிறது.

அத்துடன் சீனா,ரஷ்யா. பாகிஸ்தான் உட்பட பல்வேறு நாடுகளிடமும் ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது.

இதேவேளை 2002 ஆம்ஆண்டு யூலை மாதம் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஸ்சை 15 நிமிட நேரம் சந்தித்துப் பேசிய பின்'சர்வதேச பாதுகாப்பு அரணுக்குள் இலங்கை வந்துவிட்டது' என அறிவித் திருந்தார். அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்புகளை அமைச்சர் மிலிந்த மொறகொட ஊடாக இவர் வைத்திருந்தார். சமாதான நடவடிக்கைகளுக்கு உதவுதல் என்ற ரீதியில் உலக நாடுகள் வழங்கும் பெரும்தொகை நிதியைப் பெற்றுக்கொடுக்க ஜப்பானும், அமெரிக்காவும் தீவிரமாக முயன்று கொண்டிருந்த வேளை- அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஸ்சுடன் மறுதினம் ரணில் சந்திக்க



# சமாதான காலத்திலும் சிறிலங்காவின் தளராத யுத்தமுனைப்பு



அரசியல் ரீதியாக இவ்வாறாயின் இராணுவ ரீதியாகவும் யார் கூடுதல் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பது என்பதிலும் இவ்வாறான நிலையே இருக்கின்றது.

முப்படைகளுக்குமான பயிற்சிகள் இராணுவத் தளபாட விற்பனை என்பவற்றிலும் சரி அரசியல் ரீதியான நடவடிக்கைகளிலும் சரி அமெரிக்காவும் இந்தியாவும் போட்டி போட்டுச் செயற்பட்டு வருகின்றன. அதேவேளை அவர்கள் போட்டியிடாவிட்டாலும் சிறிலங்காவின் தலைவர்களிடையே இவ்விரு நாடுகளையும் திருப்திப்படுத்தும் மனப்பாங்கே காணப்படுகின்றது. இதனைவிட ஆயுத விற்பனை என்ற ரீதியிலும் தாங்களும் இதிலிருந்து விலகியிருக்க முடியாது என்ற ரீதியிலும் இவை இதில் ஈடுபாடு காட்டி

ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதுடன் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதனைவிட சிறிலங்காப் படையினருக்கு அமெரிக்கா ஏற்கனவே வழங்கி வருகின்ற 'பலன்ஸ் ஸ்ரைல்' பயிற்சியையும் தொடரவும் அமெரிக்கா சம்மதித்தது. இப்பயிற்சிகள் பலாலிப் படைத்தளத்திலும் அதிகாரிகள் மட்டப் பயிற்சிகள் அமெரிக்காவிலும் வழங்கப்படுவதாக தகவல்கள் கூறுகின்றன. மேலும் பாரிய அழிவு தரும் ஆயுதங்கள் மூலம் நடத்தப்படும் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வது எப்படி என்பது குறித்து சிறிலங்காப் படையினருக்கு அமெரிக்க நிபுணர்கள் பயிற்சி வழங்கி வருகின்றனர்.

சிறிலங்காக் கடற்படையின் திறனை அதிகரிக்கும் வகையில் உலங்குவானூர்திகள் இறங்கக் கூடிய கரேஜஸ் என்னும் கரையோரப் பாதுகாப்பு விரைவுப் போர்க்கப்பலை வழங்க அமெரிக்கா இணங்கியுள்ளது. அத்துடன் புஸ் மாஸ்ரர் எனும் 30 மி.மீ நீண்ட தூர வலுவுள்ள நவீன அயுதங்களை உற்பத்தி விலைக்கு வழங்கவும் முன்வந்துள்ளது. 30 புஸ்மாஸ்ரர் ரக ஆயுதங்களை அமெரிக்காவிடமிருந்தும் இஸ்ரேலிடமிருந்தும் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் சிறிலங்காவினால் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் சிறிலங்கா கடற்படைப் படகுகளுக்கு நவீன ராடர் கருவிகளைப் பொருத்துவதற்கு 769 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க உடன்பாடு கண்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை அமெரிக்க ஏவுகணை நாசகாரிக் கப்பல்களான யு.எஸ்.எஸ்.ஓகேன் கடந்த ஆண்டு யூன் மாத நடுப்பகுதியில் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்தது.

இங்கு மற்றொரு விடயம் குறித்தும்

இதேவேளை இந்தியாவிடமும் பல இராணுவ தளபாட பயிற்சி உதவிகளை சிறிலங்கா பெற்று வருகின்றது. இந்திய பாதுகாப்பு நிபுணர்களின் ஆலோசனைப்படி சிறிலங்கா அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட விசேட படை (PROTECTIVE SECURITY RANG) கடந்த மார்ச் மாதம் தனது செயற்பாட்டை ஆரம்பித்தது. இப்படையணி முக்கிய அரசியல் வாதிகளுக்கும் சிறிலங்கா வரும் உயர் பிரமுகர்களுக்கும் பாதுகாப்பு வழங்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை இந்தியாவிடம் சிறிலங்கா அரசாங்கமாயினும் சரி எதிர்கட்சிகளாயினும் சரி கடலில் கூட்டு ரோந்து, கூட்டுப் பயிற்சி என்பவற்றை இடைவிடாது கோரி

வேலவன்

வருகின்றன. இதன் மூலம் கடற்பிராந்தியத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியுமென சிறிலங்காத்தரப்பு நினைக்கின்றது.

இதனைவிட பலாலி விமானத்தளத்தின் ஓடுபாதையை புனரமைக்க இந்தியா 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதுடன் புனரமைப்புக்கான நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

இதேவேளை சிறிலங்கா தனது முன்னைய ஆயுத விநியோகஸ்தர்களையும் மறக்கவில்லை. அது முன்னர் இஸ்ரேலிடம் கொள்வனவு செய்து வைத்திருக்கும் டோராப் பீரங்கிப் படகுகளுக்குப் பொருத்தமான நவீன பீரங்கிகள் தொடர்பு சாதனங்கள், மற்றும் கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்து வருவதுடன் நிபுணத்துவ ஆலோசனைகளையும் அவற்றுக்கான

இருந்தவேளை- மூன்று அமைச்சுக்களை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பறித்துக் கொண்ட போதும் ரணில் பதற்றமுறாமைக்கு அமெரிக்காவுடனான நெருக்கம் காரணமாக இருந்தது.

இதேவேளை இந்தியாவுடனும் ரணில் விக்கிரமசிங்க இணக்கப் போக்கையே காண்பித்து வந்தார். ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதும் முதலில் சென்ற நாடு இந்தியாதான். அவரது வெளிநாடுகளுக்கான விஜயங்களில் கூடுதலாக இந்தியாவுக்கானதாகவே இருந்தன.

கடந்த ஆண்டில் பொதுசன ஐக்கிய முன்னணி, சமாதானப் பேச்சுவார்த்தை இந்தியாவுக்கு ஆபத்தை விளைவிக்கும் ஒன்றென இந்தியாவிடம் நிறுவ முயன்றது. குறிப்பாக திருகோணமலையில் புலிகள் அமைத்துள்ள முகாம்கள் இந்திய எண்ணெய்க் குதங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென காட்ட முயன்றது. இம்முயற்சியில் சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கதிர்காமர் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். இதனை முறியடிக்கும் வகையில் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச்செய்து கொள்ளும் முயற்சியில் ரணில் விக்கிரம சிங்க தீவிரமாக ஈடுபட்டு வந்தார்.

இந்த ஒப்பந்தம் பாதுகாப்பு ரீதியாக சிறிலங்காவுக்கு இந்தியா வழங்கக் கூடிய உதவிகள் குறித்துக் கூறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில்

1. சிறிலங்காப் படையினருக்குப் பயிற்சி அளித்தல்.
2. சிறிலங்காவின் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தைத் தரமுயர்த்தல்.

(41ஆம் பக்கம் பார்க்க...)

# அழகன் சுவரில் படமாகவும்.... மனதில் நினைவாகவும்...



அழகா!
உன் வருட நினைவு வருகிறது.
வேகமெடுத்தோடும் காலநதியில்
நனைந்தபடி நின்று
உன் நாமம் பாடுறோம்.
ஈழநாதமும் நீயும் எமக்கு
இரட்டைப்பிள்ளைகள்.
ஒன்றை நினைக்க மற்றதின் நினைவு
உடனே வரும்.
விதையூன்றிய உன் புண்ணியத்தில்
இன்று களைப்பாற முடிகிறது.
ஒரு சிலை செய்யும் சிற்பிபோல
தொட்டும்,
தடவியும்,
கிட்ட நின்றும், எட்டநின்றும் பார்த்து
ஈழநாதத்தைச் செதுக்கினாய்.
அதிசயமானது சிற்பம்
விதி வசமானான் சிற்பி.
நினைக்கப்படும்படி வாழ்வதே
உண்மை மனிதனுக்குரியது.
அழகா! நீ உண்மை மனிதன்.
எந்நாளும் நினைவுக்குரியனாய்
எம்மோடிருக்கிறாய் நீ.
சுவரில் படமாயும்
மனதில் நினைவாயும்.
நன்றி மறப்பது நன்றல்ல
அதுவும் உன்னை மறப்பதெனில்
எப்படி இயலும் எம்மால்?
இருப்பாய் எம்முடன் இனியும்.

# விடுதலையைச் சிறகாய் விரித்து என்றுமிறங்குக எம் முற்றம்.

புதுவை இரத்தினதுரை

ஈழநாதமே!
நீயே எம் வயல்;
நீயே எம் வனம்;
நீயே எமைத்தழுவும் காற்று.
உழுது விதையெறிந்து,
காவலிருந்து,
களைகொல்லி நாசினி விசிறி,
பயிர் வளர்த்து
மணிமுற்ற அறுவடைக்காய் கிடக்கிறாய்
வயலாய்.
நிழலாய் படர்ந்து பூத்து,
மழையருளி,
இளைப்பாற இருக்கை தந்து,
கரைந்துறைந்து பகைமுடிக்க அரணாகி,
கூனின்றி முதுகு நிமிர
எம் வம்சத்துக்கு ஆதர்சமாகி
கிடக்கிறாய் வனமாய்.
சுவாசக்குழலில் இணக்கிய புல்லாங்குழலினுள்
மூச்சாய் நுளைந்தும்,
குவியும் இருள்முகிலைக் கலைக்கும் பலம் நல்கியும்,
வியர்க்கும் போதிலெம் மேனியில்
இதமாய்ப் பரவியும்
இருக்கிறாய் காற்றாய்.
காலம் நரையெறிந்து முதிர்ந்து உதிரவும்
நீ புதிய, புதிய காலையாய் விடிகிறாய்
நாளுமெம் கையில் குழந்தையாய்.
உன் ஒவ்வொரு பிறந்தநாளுக்கும்
வாழ்த்துரைக்கும் முதல் வாயனாய்
நானே வருகிறேன் உன்வாசல்.
என் கைபற்றி வாஞ்சையாய் அழுத்தி
அன்பென்னில் ஊறச் சிரிப்பாய்
நான் சிலிர்த்துப்போவேன்.
பிரசவ அறைக்குள்ளேயே வந்து
உன்னைத்தரிசித்து
முத்தமிட்டவனல்லவா நான்?
அழகன் உயிரருளிய அழகே!
நீயே எம் வாழ்வெழுதி.
நீயே எம் தாயுறுதி.
மற்றவர் விற்பனைக்காய் கடைபரவ
நீயோ விடுதலைக்காய் மடைதிறந்தாய்.
எல்லோரும் வயிற்றுக்காய் மொழியுதிர
நீயோ பரம்பரைக்காய் வழிதிறந்தாய்.
வரவு செலவு பார்த்து இழியாமல்
நீ இரவுபகல் இயங்கும் உணர்வுப் பொறி.
எம் தேசப்புனலே!
நீ பொல்லார்வாய்ப் பூட்டானாய்.
எல்லார்வாய்ப் பாட்டானாய்.
பருவ வயது எட்டி
வானத்திறங்கும் சின்னத் தேவதையாய்
எழில்காட்டி இலங்கிறாய் இன்று.
வன்னியென்பது வெறும் முல்லை வனமல்ல,
நெய்தலுடுத்த வெளியல்ல,
மருதம் படுக்கும் வயலல்ல
வன்னி தமிழரின் வரலாற்று வாசல்.
சமர்களமாய் விரிந்து,
சாதனையின் நிலைகளமாய் தெரிந்து
அத்தாணி மண்டபமாக அறியப்படுகிறது.
நீயே அக்கொற்றவையின் முரசு,
குடிமக்கள் வரைவோலை,
ஆராச்சிமணி,
அரச முத்திரை
வாழிய அரசி
வாழிய நாதம்
வாழிய தமிழரின் மிடுக்கு.
ஈழநாதமே!
பல்லாண்டு வாழ்க
நீயே குடமுழுக்கின் கோபுரமாய்.

15ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும்
ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

சகல விதமான படங்களை விரும்பிய டிசைன்களில்
பிறேம் செய்து கொள்ளவும்

பிற்றிங் மூலம் அலுமாரி, அலங்காரப்பொருட்களை அடுக்கி வைத்து
அழகு பார்ப்பதற்கான சோக்கேஸ் வகைகள்

மாலைகள், சகல விதமான படங்களையும்
பெற்றுக்கொள்ளவும்

நாடவேண்டிய இடம்

**ஒளிக்குமரன் படமாடம்**

முல்லைவீதி, புதுக்குடியிருப்பு.

உரிமையாளர்: சூரியகுமார் (சி-8785)

15ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும்
ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

**தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்**

**விசுவமடுக்குளம் விவசாயிகள்**

**ப.நோ.கூ.சங்கம்**

விசுவமடுக்குளம்.

(சி-9253)

15 ஆவது அகவை காணும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

**முல்லை பல்பொருள் வாணிபம்**

பலசரக்குப்பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்
என்பவற்றை மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள

**முல்லை பல்பொருள் வாணிபம்**

பஜார் வீதி, முல்லைத்தீவு.

உரிமையாளர்: மா.கோகுலன், மா.றஜிதரன் (சி-8783)

15 ஆவது அகவை காணும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

**திருச்செல்வம் பல்பொருள் வாணிபம்**

சைக்கிள் உதிரிப்பாகங்கள், எரிபொருள்,
கட்டடப்பொருட்கள் அனைத்தையும் ஒரே
இடத்தில் பெற்றுக்கொள்ள

**திருச்செல்வம் பல்பொருள் வாணிபம்**

பஜார் வீதி, முல்லைத்தீவு.

உரிமையாளர்: திருச்செல்வம் (சி-8787)

புதிய அகவையில் பாதம் பதிக்கும்
ஈழநாதம் தினசரிக்கு
எமது வாழ்த்துக்கள்

திருமண விழா,
பூப்புனித நீராட்டுவிழா,
புதுமனைப்புகுவிழா,
பிறந்த நாள் ஏனைய
எந்த வைபவங்களையும்
வீடியோ மூலம்
ஒளிப்பதிவு செய்யவும்
போட்டோ
பிடித்துக்கொள்ளவும்
நம்பிக்கை நாணயம்
உத்தரவாதத்துடன்
தொடர்பு கொண்டு
நன்மையடைய நாடுங்கள்.



**சிவமகன் வீடியோ**
அன்
**போட்டோ**

முல்லைவீதி, புதுக்குடியிருப்பு. (சி-8784)

15 ஆவது அகவை காணும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

**அறிவு வைரவர் பல்பொருள் வாணிபம்**

பலசரக்குப்பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், நாட்குறிப்பேடு,
பிஸ்கட் வகைகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள முல்லைத்தீவில் முதன்மையான இடம்

**அறிவு வைரவர் பல்பொருள் வாணிபம்**

பஜார் வீதி, முல்லைத்தீவு.

(சி-8786)

கண்ணைக் கவரும் வண்ணக் கலரில்
வெள்ளிநாதத்தையும் அள்ளித் தரும் ஈழநாதமே!

15 ஆவது அகவையில் எம்மையும் அழைக்கும் உன்னை
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



**சர்வதேச தொலைத்தொடர்பு சேவை**

மிகவும் குறைந்த கட்டணத்தில் உரையாடும் நடைமுறை
உலகின் எப்பாகத்திலிருந்தும் வன்னிப் பெருநிலப்பரப்புடன் தொடர்புகொள்ள

ச.தொ.தொ.சேவை - கிளிநொச்சி
Tel/Fax:} 021-2285714
021-2285725

ச.தொ.தொ.சேவை - புதுக்குடியிருப்பு
T.P;00873762077512
00873763080842
Fax:00873762077514
00873763080844

ச.தொ.தொ.சேவை - மல்லாவி
0712 348783
0712 373398
0712 299435
0712 399209

ச.தொ.தொ.சேவை - நெடுங்கேணி
0712 370115
0712 370166

ச.தொ.தொ.சேவை - புளியங்குளம்
0712 373397

ச.தொ.தொ.சேவை - விசுவமடு
0602 213251
0712 753634
0712 373361

ச.தொ.தொ.சேவை - பூநகரி
0712 399140

ச.தொ.தொ.சேவை - முழங்காவில்
0712 750386

ச.தொ.தொ.சேவை - வட்டக்கச்சி
0602 212371
0712 373422

ச.தொ.தொ.சேவை - உருத்திரபுரம்
0712 373421
0777 550465

ச.தொ.தொ.சேவை - கூட்சன் வீதி
0712 373360

ச.தொ.தொ.சேவை - இராமநாதபுரம்
0712 373396
0712 373362

ச.தொ.தொ.சேவை - ஜெயபுரம்
0712 295227
0712 295228
0602 213504

ச.தொ.தொ.சேவை - பாலையடி
0712 701677
0712 526371

ச.தொ.தொ.சேவை - துனுக்காய்
0712 370634
0712 704827

ச.தொ.தொ.சேவை - பாண்டியன்குளம்
0712 299168
0712 299169

ச.தொ.தொ.சேவை
பாரதி-கிளிநொச்சி
021-228 5711
021-2285712

ச.தொ.தொ.நிலையம்
இசைவாணி (கரடிப்போக்கு)
021-228 3970

ச.தொ.தொ.நிலையம் -பளை
0602 213241
0712 370219

ஆளுகை
சர்வதேச தொலைத்
தொடர்பு சேவை,
தமிழீழம்.

(சி-8791)




சி. கதிர்காமநாதன்
(தொல்புரம்)

அரன் பள்ளிக் கூடம் முடிந்து வீடு வரும் போது உற்சாகமாய் வந்தான். உடம்பு முழுவதும் ஏதோ ஒரு உணர்வு அவனை அரித்தது. நாலுபேருக்கு சொல்லிக் குதித்து கும்மாளமிட வேண்டும் போல் இருந்தது. வீடு வரும் போது நண்பர்கள் வைத்த ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டு வழமைபோல் பின்னால் வராமல் நண்பர்களை இன்று பின்னுக்குத் தள்ளினான்.

**"எவ்வளவு நல்ல பெரிய்யவீடு. குட்டிக் குட்டி அறையளும், கதவும் ஜன்னலுமாய் நல்ல வடிவாய் கிடக்கு. அப்பா வீட்டு உள்ளுக்கையெல்லாம் பச்சை நிறமெல்லே அடிச்சு வைச்சிருக்கிறார். நான் கட்டுற வீட்டுக்கும் இந்த நிறம்தான் அடிக்க வேணும்.**

மதிய வெயிலில் மண்சூடாகி புழுதி விரைந்து மேலெழுந்தது. தொலைவில் குண்டுவீச்சு விமானத்தின் இரைச்சல். அவன் நண்பர்கள் காலில் ஒன்றும் போட்டிருக்கவில்லை.

"கெதியாய் போங்கடா கால் கொதிக்குது"

என்று கூப்பாடு போட்டார்கள்.

"அன்ரன் ரீச்சர் நாளைக்கு வீடு செய்துகொண்டு வரச்சொல்லி சொன்னவவெல்லே"?

நெட்டையான உருவம் கொண்ட ரகுசாந் சந்தேகமாகக் கேட்டான்.

"பின்ன வீடு செய்து கொண்டரச் சொல்லி சொன்னவதானே"

ரகுசாந்தை விட குள்ளமான அரனுக்குக் கோபம் வந்தது.

"நீர் செய்துகொண்டு வருவீரே?"

அகல முகமும் பெரிய கண்களையுடைய வைஷ்ணவன் கண்களை வெட்டியபடி கேட்டான்.

"பின்ன செய்துகொண்டு தான் வருவன். அப்பாட்டச் சொல்லி பெரீய்ய வீடா செய்துகொண்டு வருவன். எனக்கு ஒரே அந்தரமாய்க் கிடக்கு. வீடு எப்ப செய்யப்போறனெண்டு."

அரன் சொல்லிக்கொண்டு துள்ளிக் குதித்தான். அவனது சிவந்த முகம் மதிய வெயிலில் மேலும் சிவந்தது. நீங்களும் செய்துகொண்டுதானே வருவியள்.

அரன் நண்பர்களைப் பார்த்துக் கேட்டான்.

"நாங்களும் செய்துகொண்டுதான் வருவம்"

"கெதியாய் ஓடிப்போவமடா. பிள்ளையார் கோவிலடி பைப்பில தண்ணி குடிக்கலாம்".

❖ ❖ ❖

அரன் புத்தகப்பையைக் கதிரையில தூக்கிப் போட்டுவிட்டு அவன் தாயாரைத் தேடினான். வேப்ப மர நிழலில் சாக்குக் கட்டிலைப் போட்டு அதில் லேசாகக் கண்ணயர்ந்து கொண்டிருந்த கமலம் மகனின் குரல் கேட்டு திடுக்கிட்டு எழும்பினாள்.

"என்னப்பு இப்பதான் வந்து படுத்தனான். கத்தி எழுப்பிப்போட்டாய்".

அவன் தாய் சொன்னதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

"அம்மா எனக்கு இப்ப உடன வீடு செய்ய வேணும். ரீச்சர் நாளைக்கு வரேக்க வீடு செய்துகொண்டு வரச்சொல்லி சொன்னவ."

அவன் அந்தரப்பட்டான்.

எழுந்து நின்ற தாயின் கைகளைப் பற்றி, வீட்டுக்குள் இழுத்தான்.

"அப்பு பொறுங்கோ முதலில சாப்பிடுங்கோ,எனக்கு வீடு செய்யத் தெரியாது. அப்பாவுக்குத் தான் தெரியும். கமலம் மெலிதான புன்னகையுடன் மகனுக்கு கூறினாள்.

"என்னம்மா உங்களுக்குத் தெரியாதோ போங்கோ அங்கால" அவன் முகத்தைச் சுருக்கி சிணுங்கினாள். தாயோடு கோபிக்கவும் செய்தான்.

நேற்றுத்தான் தூக்கி வளர்த்த 'பயல்' நேர்சரி போய் தரமொன்றுக்கு வந்து இன்று தன்னைக் கோபிக்கும் மகனின் அழகைத் தாய் ஆனந்தமாக ரசித்தாள்.

"என்னம்மா சிரிக்கிறியள்?"

கமலத்துக்கு மேலும் பொறுக்க முடியவில்லை. மகனை வாரியெடுத்தாள்.

"நல்ல பிள்ளையெல்லே உடுப்பை மாத்திப்போட்டு வங்கோ சாப்பிடுவம். அப்பா வந்தவுடன் பிள்ளைக்கு டக்கெண்டு வீடு செய்து தந்துவிடுவார்.

"உண்மையாவோ அம்மா?"

"அம்மா பிள்ளைக்குப் பொய் சொல்வனே? அப்பா வந்தபிறகு செய்து தருவார்."

"அம்மா அப்பா எங்கட வீடுமாதிரி பெரிசாய் செய்து தருவாரே?"

அவன் கண்களை அகலத்திறந்து கேட்டான்.

"அவற்ர கேள்வியைப்பார் பெரிசாய் செய்தா எப்படி தூக்கிக் கொண்டு போவீர்?"

அவன் அவள் கன்னங்களை வருடியபடி கேட்க அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"நான் விசரன் தூக்கிக் கொண்டு போகேலாது."

அப்பா வந்து சின்ன வீடு செய்து தரட்டும்

சாப்பாடு முடிந்தது. இப்போது அவனுக்கு விளையாட்டு நேரம். வாசலில் பெருத்த ஆரவாரம்.

சாம்பவி,மதன்,ஆரணி,விதுரன் எல்லோரும் வழமைபோல் விளையாட வந்து அரனை அழைத்தார்கள். அவன் அசையவில்லை.

கொய்யா தருவோம். மாங்காய் தருவோம் என ஆசையூட்டிப் பார்த்தார்கள். அவன் அசையவே இல்லை.

"நான் இண்டைக்கு விளையாட வரமாட்டன் அப்பா வந்தவுடன நானும் அப்பாவும் வீடு செய்யப் போறம். நாளைக்கு பள்ளிக் கூடத்தில ரீச்சரிட்ட கொண்டுபோய் காட்ட வேணும்.

அவன் தனது வீடு பற்றிப் பெருமை அடிக்க அவர்கள் அவனுடன் கோபம் போட்டு விட்டு வெளிநடப்புச் செய்தார்கள்.

வழமையாகப் பொழுதுபடும் நேரத்தில்தான் தகப்பன் வருவது அவனுக்குத் தெரியும். இண்டைக்கு அவர் கெதியாய் வந்துவிட வேண்டுமென்று அவன் எதிர்பார்த்தான். ஏதோ நினைத்தவனாகத் தங்களது சொந்த வீட்டைப் ஆர்வமாகப் பார்த்தான்.

"எவ்வளவு நல்ல பெரீய்ய வீடு. குட்டிக் குட்டி அறையளும்,கதவும், ஜன்னலுமாய் நல்ல வடிவாய் கிடக்கு. அப்பா வீட்டு உள்ளுக்கையெல்லாம் பச்சை நிறமெல்லே அடிச்சு வைச்சிருக்கிறார். நான் கட்டுற வீட்டுக்கும் இந்த நிறம்தான் அடிக்க வேணும்.

வீட்டு யோசனையாய் இருந்தவன் திடுக்கிட்டு எழுந்தான்.

"ஐயோ மறந்துபோய் இருந்திட்டன் ரீச்சர் சொன்னவரெல்லே வீடு செய்யிறதெண்டால் பிஸ்கற் பெட்டி,வாணீஸ் பேப்பர்,கம்,ஈர்க்கு எல்லாம் வேணுமெண்டு. நான் எடுக்காமல் சும்மா இருந்திட்டன். இப்ப எல்லாத்தையும் எடுத்து வைச்சால்தான் அப்பா வந்த உடன வீடு செய்து போடலாம்.

அவன் துள்ளி எழுந்தான்.

"அப்பா வந்திட்டார். எங்கட அப்பா வந்திட்டார்" அரன் தகப்பன் வந்ததை அறிந்து துள்ளலுடன் ஓடினான்.

"அப்பா கெதியாய் வாங்கோ எனக்கு வீடு செய்து தரவேணும் உடுப்பை மாத்திப்போட்டுக் கெதியாய் வாங்கோ".

மகனின் இந்த திடீர் கெரில்லாத் தாக்குதலை நாதன் எதிர்பார்க்கவில்லை. காய்ந்துபோய் சீமெந்து தூசு நன்கு படிந்திருந்த தலையும், உடம்பும் நாதனை ஆள்மாறாட்டம் செய்தன. கைகளைப் பற்றி இழுத்த மகனை யோசனையுடன் அவன் உற்றுப் பார்த்தான்.

"என்னப்பா யோசிக்கிறியள் கெதியாய் வாங்கோ எனக்கு வீடு செய்யவேணும்.அவன் தகப்பனை விடாமல் தொந்தரவு செய்தான்.

"அப்பு அப்பாவை விடுங்கோ என்னப்பா நல்லா களைச்சுப் போய் வந்திருக்கிறியள்..."

கமலம் கணவனைப் பார்த்துக் கவலையுடன் கேட்டாள்.

"இண்டைக்கு வேலைக்கு வாற ஆக்கள் ரண்டு பேர் வராமல் விட்டுட்டாங்கள். வீட்டுக்காரரும் ஒரே அரியண்டம் வீட்டைக் கெதியாய் செய்து முடியுங்கோ குடிபுகுதலும் செய்ய வேணுமென்று அதான்..."

"சரியப்பா உங்கட வேலையை முடிச்சுப் போட்டு வாங்கோ. பிள்ள அப்ப தொடக்கம் விளையாடவும் போகாமல் வீடு செய்யிறத்துக்கு உங்களைப் பார்த்துக் கொண்டெல்லே இருக்கிறான். வந்து உடனசெய்து குடுங்கோ.

பிஸ்கற் பெட்டி அளவாக இருந்தது. பெட்டியின் மேல் பக்கம் வெட்டி எடுத்து வீட்டுக்குக் கூரை செய்தார்கள்.

"அப்பு எங்கட வீடு போலதான் இந்த வீடும் செய்யப்போறன். இங்க பாருங்கோ. இது விறாந்தை,அடுத்து முன் ஹோல்,இது அரன் படிக்கிற அறை, பக்கத்தில சாமி அறை அங்கால அம்மான்ர குசினி... என்ன சரியே."

"நல்ல வடிவாய் செய்யிறியள் அப்பா." அவன் மகிழ்ச்சியில் மூழ்கி நின்றான்.

"அப்பு ஈக்கை எடுங்கோ. ஜன்னல் வைக்கிறதுக்குக் கம்பி வைக்கவெல்லே வேணும்."

ஜன்னலுக்கு கம்பி உடனே வைக்கப்பட்டது.

"அப்பா எங்கட வீட்டுக்கு அடிச்ச மாதிரி உள்ளுக்கு பச்சை வாணிஸ் பேப்பர் வெட்டி ஒட்டுங்கோ."

வீட்டின் உள்ளுக்கு பச்சை கலரும் வெளியே நீலமும் அடிக்கப்பட்டது. வீட்டின் ஒவ்வொரு பகுதியும் அங்குலம் அங்குலமாய் பார்த்துப் பார்த்துச் செய்யப்பட்டது. வீட்டுக்கு வெளிச்சம் வர கூரையில் கண்ணாடி பதித்தார்கள்.

மறுபடியும் வீடு சரிபார்க்கப்பட்டு, பூச்சு கலர்,வேலைகளில் குறைகள் திருத்தப்பட்டன. மெல்லிய கம்பியில் 'அன்டேனா' செய்து வைத்தார்கள்.

அரனுக்குத் தலைகால் புரியாத சந்தோசம்.

வீடு குடிபுகுதலுக்காகக் காத்து நின்றது. அவன் கூப்பாடு போட்டு தாயாரை அழைத்தான்.

"அம்மா,அம்மா ஓடிவந்து அப்பா கட்டின வீட்டைப் பாருங்கோவன், நல்ல வடிவான வீடம்மா. அப்பா டக்கெண்டு கட்டிப்போட்டார்."

கமலம் விரைந்து வந்து பார்த்தாள்.

"நான் ஒவ்வொரு நாளும் அப்பா கட்டின வீட்டைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறன்."

அவன் கண்களைப் பெரிய வீட்டில் அலைய விட்டான்.

"அம்மா எங்கட வீட்டையும் இப்பிடி கெதியாவே கட்டினவர்."

"அப்பா உழைச்ச காசைக் கொட்டி கட்டின வீடெல்லே. கொஞ்சம் கொஞ்சமாய் கஸ்ரப்பட்டுக் கட்டினது."

இரவு அப்பா கட்டிக்கொடுத்த வீட்டை அவன் ஆசையுடன் மடியில் வைத்தான்.

"ராசா நேரமெல்லே போகுது. வந்து சாப்பிடுங்கோ"

சாப்பாடு முடித்து படுக்கையில் வீழ்ந்தும் அவனுக்கு நித்திரை வரவில்லை. புரண்டு படுக்கிறான். மேசையில் வைத்த வீடு அவன் நித்திரையைக் கலைத்தது. எழுந்து உட்கார்ந்தான். இடையில் கண்விழித்த கமலம் மகனைப் பார்த்தாள்.

"அப்பு என்ன செய்யுது?"

அவள் பதறினாள்.

"அம்மா வீட்டை எனக்குப் பக்கத்தில வைச்சுக்கொண்டு படுக்கப் போறனம்மா"

அவன் தாயைக் கெஞ்சிக் கேட்டான்.

"ஏனப்பு வைச்சுக்கொண்டு படுக்கிறது கஸ்ரமெல்லே?"

"என்ரையம்மாவெல்லே வைச்சுக்கொண்டு படுப்பனம்மா?"

தலையணைக்குப் பக்கத்தில் வீடு வைக்கப்பட்டது. அவன் கண்ணயர்ந்த வேளையிலும் இடது கை ஆதரவாய் வீட்டை அணைத்துக்கொண்டிருந்தது.

நள்ளிரவு நேரம் நாய்களும் பேய்களும் தமது அட்டகாசமான ஆட்டத்தை ஆரம்பிக்கும் நேரம். போரும் அதே போலதான் இரவில்தான் ஆட்டம் போடத் தொடங்கும். முதலில் தரையில் விழுந்து வெடித்த செல் சத்தத்தோடு ஆட்டம் தொடங்கியது. சூடான ஆட்டம். நிறுத்த முடியாத ஆட்டம். சனங்களை ஓட ஓட விரட்டும் ஆட்டம். சொத்துக்களை,உடமைகளை, உயிர்களைப் பலிகொண்ட பிறகுதான் ஆட்டம் களைத்து நிற்கும்.

**வீட்டின் உள்ளுக்கு பச்சை கலரும் வெளியே நீலமும் அடிக்கப்பட்டன. வீட்டின் ஒவ்வொரு பகுதியும் அங்குலம் அங்குலமாய் பார்த்துப்பார்த்துச் செய்யப்பட்டது. வீட்டுக்கு வெளிச்சம் வர கூரையில் கண்ணாடி பதித்தார்கள்.**

**மறுபடியும் வீடு சரிபார்க்கப்பட்டு பூச்சு கலர்,வேலைகளில் குறைகள் திருத்தப்பட்டன. மெல்லிய கம்பியில் 'அன்டேனா'. செய்து வைத்தார்கள்.**

நாதன் வெளியே ஓட கமலம் அரனைத் தூக்கித் தோழில் சாய்த்தபடி சேர்ந்து ஓடினாள். பேரிடியான சத்தத்தில் உறைந்துபோய் கிடந்த அரன் பயத்தினாள்

(40ம் பக்கம் பார்க்க.....)

15 ஆவது அகவை காணும்

# ஈழநாதமே!

## உன் பணி என்றும் தொடர வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை.

வட பிராந்திய பார ஊர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்.(வரையறுக்கப்பட்டது)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்.

கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

கிளி /முல்லை மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசம்.

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையம்.

கரைச்சி தெற்கு பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

கரைச்சி வடக்கு பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

கரைச்சி கிழக்கு பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

அக்கராயன் பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

பூநகரி பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

பச்சிலைப்பள்ளி பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.

பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.

பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.

திருவையாறு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம்.

(சி-8792)

# பேரினவாதத்தின் பிடிக்குள் தமிழரின் கேந்திரமையம்

வடக்கு கிழக்கு மாகாணத்தின் மொத்த விஸ்தீரணம் 18 ஆயிரத்து 860.51 சதுர கிலோமீற்றர். மாகாணத்தில் எட்டு மாவட்டங்கள் உள்ளன.அவற்றின் விஸ்தீரணம் வருமாறு. அம்பாறை 4431-30 சதுரகிலோமீற்றர், மட்டக்களப்பு-2804-30 சதுர கி.மீ, முல்லைத்தீவு -2616.90 சதுர கி.மீ, வவுனியா-1966.90 சதுர கி.மீ, மன்னார்-2002 சதுர கி.மீ. கிளிநொச்சி-1237.110 சதுர கி.மீ, யாழ்ப்பாணம்-1025.20 சதுர கிலோமீற்றர், திருகோணமலை-2726.80 சதுர கி.மீ. உள்ளூர் நன்னீர் நிலைகள் 96 சதுர கிலோமீற்றர் போக திருகோணமலை மாவட்டத்தின் மொத்த நில விஸ்தீரணம் 2630 சதுர கிலோமீற்றர் ஆகும்.

இதில் ஒருலட்சத்து 16 ஆயிரத்து 780 ஹெக்டயர் வீட்டு நெற்செய்கை மற்றும் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. அடர்த்தியான காடுகள், காடு வளர்ப்பு மற்றும் இயற்கை வனவளம் 81 ஆயிரத்து 710 ஹெக்டயர் ஆகும். 15 ஆயிரத்து 570 ஹெக்டயரில் சதுப்பு நிலம். சிறுகாடுகள் 2 இலட்சத்து 80 ஆயிரத்து 780 ஹெக்டயரில் காணப்படுகின்றன. மொத்தமாக திருகோணமலை நிர்வாக மாவட்டத்தில் 4 லட்சத்து 94 ஆயிரத்து 840 ஹெக்டயர் நிலம் உள்ளது என்று திருகோணமலை மாவட்ட திட்டமிடல் தயாரித்த புள்ளிவிபர அறிக்கை கூறுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலப்பரப்பில் மூன்றாவது இடத்தை திருகோணமலை மாவட்டம் வகிக்கின்றது. முதலாவது இடம் அம்பாறை மாவட்டத்துக்குக் கிடைக்கின்றது. இரண்டாவது இடம் மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் போகிறது. மூன்றாவது இடம் திருகோணமலை பெறுகின்றது. ஆனால் இலங்கைத் தமிழ் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விஷ யத்தில் திருகோணமலை மாவட்டம் தான் பேரினவாத அட்ட வணையிலும் சரி, உலக அரங்கின் அட்டவணையிலும் சரி முதலிடம் வகிக்கின்றது.

அண்மையில் வெளியான ஏசியா டைம்ஸ் சஞ்சிகையில் ஒரு கட்டுரை பிரசுரமானது. "இலங்கையின் கேந்திர ஆபரணத்தின் மீது பேராசைக் கண்கள்" (covitous ryls or srilanka's stratigies jewll) என்ற தலைப்பில் அக்கட்டுரை எழுதப்பட்டிருந்தது. இலங்கையின் கேநதிர ஆபரணம் எது? திருகோணமலைதான் என்று அக்கட்டுரையில் வர்ணிக்கப்பட்டிருந்தது. உலகின் மிகவும் சிறந்த ஆழ்கடல் துறைமுகம் திருகோணமலையில் அமைந்துள்ளது. மத்திய கிழக்குக்கும் தூரகிழக்கும் இடையேயாக கடல்பாதையில் திருகோணமலைத் துறைமுகம் அமைந்துள்ளது. இதனால் பேராசைக் கண்களுக்கு விருந்தாக திருகோணமலை அமைந்துள்ளது என்று ஏசியா டைம்ஸ் கட்டுரை விவரித்திருக் கிறது. பேரினவாத மற்றும் ஏகாதிபத்திய 'வாதக் கண்களில் சிக்கியுள்ள திருகோணமலை,தமிழ்த்தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளதா? என்ற கேள்வி ஒருபுறமிருக்க , மறுபுறம் திருகோணமலைத் துறை முகத்தைத் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் முயற்சியில் உலக வல்லரசும் பிராந்திய வல்லரசும் ஈடுபட்டுள்ளன என்பது நோக்கர்களின் கருத்து. வெளிநாட்டுப் படை யெடுப்பு திருகோணமலை மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட் டதா? "இல்லை. தற்செயலாகவே திருகோணமலை வெளி நாட்டவரின் கண்களுக்குள் அகப்பட்டுக் கொண்டது என்று 1940 களில் திருகோணமலையில் பிரிட்டிஸ் கடற்படையில் பணிபுரிந்த லெப்டினன்ட் கேணல் ஜி.பி. தோமஸ் 'இலங்கை வரலாறு' என்ற தனது நூலில் கூறியிருக்கின்றார்.

1505 ஆம் ஆண்டு ஒரு நாள் மாலைதீவை நோக்கி மூன்று போர்த்துக்கல் நாட்டுக் கப்பல்கள் சென்றுகொண்டிருந்தன. திடீரென்று சூறாவளி வீசத்தொடங்கியது. திசை மாறி மாலைதீவுக்குப் பதிலாக போர்த்துக்கல்கப்பல் தளபதி லொறன்ஸோ அல்மேடா தலைமையில் இலங்கைத்தீவை வந்தடைந்தன என்று லெப்டினன்ட் கேணல் தோமஸ் லூவிஸ் விவரித்துள்ளார். இவ்வாறான திருகோணமலை மாவட்டம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் நான்கு காரியாதிகாரி பிரிவுகளாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. கொட்டியாரப் பற்று, திருகோணமலை நகரம், கட்டுக்குளம் பற்று,தம்பலகாமம் பற்று ஆகியனவே அவையாகும்.

சுதந்திரம் பெற்ற பின்னர் பேரினவாதத்தின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்குத் திருகோணமலை மாவட்டம் இலக் கானது. ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் ஒரு இனத்தின் (பெரும்பான்மை) ஆட்சியை இலக்கு வைத்தே முதலாவது (சிங்கள)தேசபிதா திட்டம் தீட்டினார். 1952ஆம் ஆண்டில் அதற்கு செயலுருவம் கொடுக்கப்பட்டது.

கந்தளாய் தமிழர்பூமி. தமிழர்கள் வாழ்ந்து வந்த பூமி. தமிழர்கள் ஆண்டு வந்த பூமி. சிங்களக் குடியேற்றம் வரும்வரை கந்தளாய்க் கிராமசபையின் தலைவராகத் தமிழர்களே தெரிவு செய்யப்பட்டு வந்தனர்.அன்றைய தேசபிதா தலைமையிலான அரசு அதன் பின்னர் வந்த தேசபிதாவின் மைந்தனின் அரசாங்கம் கந்தளாய்த் தமிழர் பூமியை ஆக்கிரமிக் கும் திட்டத்தை தீவிரப்படுத்திய நேரத்தில்... காடுகள் அழிக்கப் பட்டுக்கொண்டிருந்தபோது காட்டின் நடுவில் அழிந்துபோன சிவன்கோயிலின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கந்தளாய் சிவன்கோயில் கி.பி.1010 ஆம் ஆண்டில் இராசேந்திர சோழனால் கட்டப்பட்டது என்பது வரலாற்று ஆசிரியர்களின் முடிவாகும்.இப்போது அந்த இடம் பேராறு என்று அழைக்கப்படுகின்றது. பாழடைந்த அச்சிவன் கோயிலின் பீடங்கள், திருவுருவுங்கள்,சிவலிங்கங்கள், ஆலய கற்றூண்கள், பழைய ஆலயம் இருந்த இடத்தில் சிதறிக் காணப்படுகின்றன. இன்று கந்தளாய்,பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புக்கு இரையாகி விட்டது. கந்தளாய்ப் பிரதேசத்தில் பல சிங்களக் குடியேற்றக் கிராமங்கள் உருவாகியுள்ளன.

வென்றரசன்புரம் இன்று வென்டரசன்புர ஆக மாறி விட்டது. கந்தளாயில் ஆரம்பித்த அரச குடியேற்றம் அல்லை வீதிவழியாக ஈச்சிலம்பற்றுப் பிரதேசம் வரை வியாபித்துள்ளது. சேருநுவர, நீலாப்பளை,தெஹீவத்த, சோமபுர,மகிந்தபுர என்று திருகோணமலை மாவட்டத்தின் தெற்கே மட்டக்களப்பு எல்லை வரை நீள்கிறது.

திருகோணமலைக்கு வடக்கே முதலிக் குளம் (மொறவேவா) குடியேற்றம்,பதவியா குடியேற்றத்திட்டம், யானோயக் குடியேற்றத்திட்டம், பெரிய விளாங்குளம் (மகதியுல் வேவா) குடியேற்றத் திட்டம் ஆகியன தமிழ் பிரசேத்தைச் சிங்கள மயமாக்க மேற்கொள்ளப்பட்டப் பேரினவாத சூழ்ச்சியாகும். முதலிக்குளம் மொறவேவாகவும்,புடவைக்கட்டு சாந்தபுர ஆகவும், குமரேசன் கடவைகோமரங்கடவல ஆகவும், வானாறு வான்எல ஆகவும், கல்லாறு சோமபுர ஆகவும், பனிக்கட்டி முறிப்பு பனிக்கட்டியாவ ஆகவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.திருகோணமலை நக ருக்கு அருகில் உள்ள ஆண்டான்குளம் ஆனந்த வெவாக பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சீனன் குடா பிரதேசத்தில் இரு புதிய சிங்களக் குடியி ருப்புக்கள் தோன்றியுள்ளன. நாலந்தபுர,தானியகம ஆகியனவே அவையாகும்.

திருகோணமலை நகரின் மத்தியில் இந்து ஆலயங்கள் பலநூற்றாண்டுகளாகத் தீர்த்தக் கடற்கரையாகப் பயன்படுத்தி வரும் உயர்ந்தபாடு பிரதேசம் இன்று 'சமுத்திரம்' ஆக பெயர் சூட்டப்பட்டுள்ளது. திட்டமிட்ட அரச குடியேற்றங்கள் காரணமாக நான்கு காரியதிகாரி பிரிவுகளைக் கொண்டிருந்த திருகோணமலை நிர்வாக மாவட்டம் இன்று பதி னொரு பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்டதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அப்பிரதேச செயலர் பிரிவுகளும் அவற்றின் விஸ்தீரணமும் வருமாறு.

பதவிசிறிபுர-217.1 சதுர கிலோ மீற்றர். குச்சவெளி-313.3 சதுர கிலோ மீற்றர், திருமலை நகரம்-148.0 சதுர கிலோ மீற்றர், கோமரங்கடவல-285.0,மொரவேவா-322.4, தம்பலகாமம்-244.4, கந்தளாய்-397.3, கிண்ணியா-146.9, சேருவில-377, ஈச்சிலம்பற்று-98, மூதூர்-179.4 இப்பதினொரு செயுலர் பிரிவுகளில் ஐந்து சிங்கள பிரதேச செயலாளர்களால் நிர்வகிக்கப் படுகின்றன. கிண்ணியா தம்பலகாமம் ஆகியன முஸ்லிம் பிரதேச செயலர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. திருகோணமலை, மூதூர், குச்சவெளி ஆகியன மாத்திரமே தமிழ்ப்பிரதேச செயலாளர்களால் நிர்வகிக்கப்படு கின்றன.

மூன்று தேர்தல் தொகுதிகளைக் கொண்டதாக தற்சமயம் திருகோணமலை மாவட்டம் அமைந்துள்ளது. சுதந்திரம் பெற்ற காலத்தில் இரு தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியதாகத் திருகோணமலை மாவட்டம் அமைந்தது. மூதூர்த்தேர்தல் தொகுதி இரட்டை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தொகுதியாக இருந்தது.அத்தொகுதியில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள்தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை இரட்டைஉறுப்பினர் தொகுதி வழங்கியது. 1970களில் நியமிக்கப்பட்ட தேர்தல்தொகுதி எல்லை

கந்தளாயூரான்

நிர்ணயக்குழு கந்தளாய், அல்லைப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச குடியேற்றங்கள் மூலம் குடியேறிய சிங்கள மக்களுக்குத் தங்களின் பிரதிநிதி ஒருவரைத்தெரிவு செய்வதற்கு வாய்ப் பளிக்குமுகமாக புதிய தேர்தல் தொகுதி ஒன்றைத் திருமலை மாவட்டத்தில் உருவாக்கியது. அதன் பெயர்தான் சேருவில.

திருகோணமலைமாவட்டத்தின் மொத்த விஸ்தீரணம் 2726 சதுர கிலோ மீற்றர். இதில் 1800 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் சேருவில தொகுதிக்குள்வருகிறது. சேருவில தேர்தல் தொகுதி திருகோணமலை மாவட்டத்தின் தெற்கே ஈச்சிலம்பற்றை தமிழ்க்கிராமத்தை உள்ளடக்கியதாக ஆரம்பமாகி கந்தளாய் வழியாக சுற்றிவளைத்து கண்டிவீதியால் வந்து அனுராதபுரம் வீதியூடாக, திருகோணமலை மாவட்டத்தின் வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையைத் தொட்டு நிற்கிறது. திருகோணமலை மாவட்டத்திற்கு வடக்கே சிறிபுர, மதவாச்சி, சிறிதிஸ்ஸபுர, சமன்புர, கெமுனுபுர, லஸ்ஸனகம,சிங்கபுர என்ற பெரும்பான்மையினக் குடியிருப்புக்கள் தோன்றின. திருமலை மாவட்டத்தில் திருமலைத் தேர்தல் தொகுதியைச் சுற்றி வளைத்துள்ள சேருவில தொகுதியின் அடுத்த பரிமாணம் என்னவாக இருக்கும்? திருகோணமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய நிர்வாக மாவட்டம் ஒன்றை உருவாக்கும் திட்டத்துடன் தான் பேரினவாத அதிகார வர்க்கம் திட்டமிட்டே செயலாற்றி வருவது தெரிந்த விஷயம். அப்புதிய மாவட்டம் சேருவில மாவட்டம் என்று அழைக்கப்படுமா? கந்தளாய் மாவட்டம் என்ற ழைக்கப்படுமா? எவ்வாறு அழைக்கப்பட்டாலும் புதிய மாவட்டத்தின் தலைநகராக கந்தளாய் அமையப் போவது உண்மை என்பது போன்று காரியங்கள் திரையின் பின்னால் இடம்பெற்றுவருகின்றன.

கந்தளாயில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரி விரிவுபடுத் தப்பட்டு வருகின்றது. தேவையான வசதிகள் எல்லாம் அங்கு செய்து கொடுக்கப்படுகின்றன. திருகோணமலை பொது ஆஸ்பத் திரிக்கு கிடைக்கும் வளங்கள் எல்லாம் கந்தளாய்க்குத் திசை திருப்பப்படுகின்றன. ஒவ்வொரு துறையிலும் பேரினவாத அதி காரவர்க்கம் கந்தளாயை அபிவிருத்தி செய்யும் திட்டத்துடன் செயற்பட்டு வருகின்றது. சேருவில தொகுதியில் உள்ளகாடுகள் கழனிகளாகவும், ஊர்மனைகளாகவும் மாறும்போது திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்பகுதி எவ்வாறு சுருங்கப்போகிறது? நினைத்தாலே அச்சமாக இருக்கின்றது.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தபின்னர் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள ஆதிக்கச் செயற்பாடுகள் ,முன்னரிலும் பார்க்கத் தீவிரமாகியுள்ளதைஅவதானிக்க முடிகின்றது.வேப்பங்குளம், திருகோணமலை நகரி லிருந்து எட்டு மைல் தொலைவில் திருமலை கண்டிவீதியில் அமைந்துள்ளது. வேப்பங்குளம் தமிழர்கிராமம். 1990களில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமிழ்க் குடும்பங்கள் கூண்டோடு வெளியேறின. இன்னும் இடம் பெயர்ந்த தமிழ்க் குடும்பங்கள் வேப்பங்குளத்துக்குத் திரும்ப வில்லை. யுத்தநிறுத்தம் வந்து இரண்டு வருடங்களாகிவிட்டன. இடம்பெயர்ந்தவர்கள் வேப்பங்குளம் கிராமத்தில் மீளக்குடியமருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில் வேப்பங்குளத்தில் ஒரு பௌத்த விகாரை தோன்றியுள்ளது.




கம்பு, தடிகளுடன் கட்டப்பட்ட அவ்விகாரை இப்போது கற்களால் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. அதுமாத்திரமல்ல, திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் தனது பன்முகப்ப டுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலிருந்து பௌத்த விகாரையை நிர்மாணம் செய்வதற் காக நிதியை வழங்கியுள்ளார்.

பாலம்பட்டாறு பத்தினி அம்மன் ஆலையத்தின் அருகில் நிறுவப்பட்ட புத்தர்சிலையை அடுத்துள்ள காணி தமிழருக்கச் சொந்தமானது. இக்காணியிலிருந்து ஒரு ஏக்கரை பௌத்த விகாரை அமைப்பதற்குபெற்றுக் கொடுப் பதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.யுத்தநிறுத்த காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் பேரினவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதற்கு இவை உதாரணங்கள்.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை பேரினவாத அரசியல் தலைவர்களிலும் பார்க்க திருகோணமலை மாவட்டத்திலிருந்து இயங்கும் பேரினவாத அதிகார வர்க்கத்தினரின் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் தமிழரின் பரம்பரைப் பிரதேசம் அங்குலமாக அல்ல, அடிக்கணக்கில் அபகரிக்கப்படும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. திருகோணமலைத் தமிழ் மண் காப்பாற்றப்படுவதற்கு என்ன செய்யலாம்? சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. •




உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளுக்குமான
அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்

**இ.வி பந்தல் பணி**

யாழ் முகவரி :
விநாயகர் வீதி,
மயிலிட்டி.

வன்னிமுகவரி:
முல்லைசாலை
தருமபுரம்.

(சி-9255)



# நடைமுறை

வளலாய் செல்வகுமார்

மாலை மயங்கும் வேளை! படுவான் கரையின் கீழ்ப்புறமாக செக்கச்செவேல் என சிவந்த நிறத்தில் எரிந்து கொண்டிருந்த சூரியன் மெல்ல மெல்ல கடல் அன்னையின் மடிக்குள் அமிழ்ந்து கொண்டிருந்தான்.

பொழுது சாய்ந்ததன் அறிகுறியாய் கீழ்வானிலிருந்து கிளர்ந்தெழுந்து வரும் குருவிக்கூட்டங்கள் அமைதியாய் அந்த ஆல மரக்கிளைகளில் வந்து அமர்ந்து கொண்டிருந்தன.

மெல்லிய இளங்காற்றில் ஓங்கியுயர்ந்து நின்ற பெரும் தென்னை மரங்களின் கீற்றுக்கள் மெதுவாய் சடசடத்துக் கொண்டிருக்க கீழே உதிர்ந்து கிடந்த சருகுகள் ஏதோ தமக்குள் இரகசியம் பேசுவதாய் அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தன.

எங்குமே நிசப்தம்!

காற்றடங்கிப்போன மயான அமைதிக்குள் ஏதோ சோகத்தை சொல்லத்துடிப்பதாய் கடல் அலைகளின் சீறல் மாத்திரம் கரையில் பேரிரச்சலுடன் வந்து மோதிக்கொண்டிருந்தது.

வழமையாகவே சனநடமாட்டம் மிகுந்திருக்கும் அந்தத் தெருவில் இன்று கண்ணுக்கெட்டிய தூரம் வரையும் எவரையும் காணவில்லை.

மாலை வேளையானதும் அவ்வூர் பெரிசுகளாலும், இளவட்டங்களாலும் நிரம்பி வழியும் அந்த ஆலடி மைதானம் வெறிச்சோடிப் போயிருந்தது.

என்ன காரணம்? ஏன் ஒருவரையும் காணவில்லை?

எதுவுமே புரியாத என்னை- என் மனம் கேள்விகளால் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது. இருந்தும் என்னால் விடை காணமுடியவில்லை.

வழமையாக ஊரடங்குச் சட்டம் அல்லது ஊரில் வேறு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் மட்டுமே எல்லோரையும் அழைத்துச்சென்று முகமூடிக்கு முன்னால் நீண்ட நேரம் நிறுத்தி வைத்திருப்பார்கள். ஆனால் இன்று அப்படியேதும் நடந்ததாக தெரியவில்லை. அப்படியானால்....?

புரியாதவனாய் மைதானத்துக்கு அப்பாலுள்ள இராணுவ முகாமையும் கடந்து சென்ற போது சற்றுத்தூரத்தில் கழிவு வாய்க்கால் திரும்பிச் செல்லும் அந்தப் பற்றைப் புறமாகவுள்ள ஓர் ஓரத்தில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இடைக்கிடை இயந்திரத்துப்பாக்கிகளுடன் பச்சைத் தொப்பி அணிந்திருந்த இராணுவத்தினர்...

"வழமை போல் ஏதாவது கொலை" கொடூரம் நடந்திருக்குமோ?"

உள் மனம் சுயமாக முடிவெடுக்க நடந்துகொண்டிருந்த என் எதிரில் ஓர் சிறுவன் வந்துகொண்டிருந்தான். விசாரித்துப் பார்த்தேன். என் ஊகம் பொய்க்கவில்லை. ஓர் போராளிப் பெண்ணை இராணுவத்தினர் சுட்டுப் போட்டிருப்பதாகக் கூறிவிட்டுச் சென்றான்.

உள் மனம் சுயமாக முடிவெடுக்க நடந்துகொண்டிருந்த என் எதிரில் ஓர் சிறுவன் வந்துகொண்டிருந்தான். விசாரித்துப் பார்த்தேன். என் ஊகம் பொய்க்கவில்லை. ஒரு போராளிப் பெண்ணை இராணுவத்தினர் சுட்டுப் போட்டிருப்பதாகக் கூறிவிட்டுச் சென்றான்.

எனக்கு உடலெல்லாம் வியர்த்து வெடவெடக்கத் தொடங்கியது. இப்படி ஏதாவது நடந்தால் அவ்வூர் இளைஞர் யுவதிகளுக்கு அப்பீலே இல்லை. எல்லோரையும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று மாதக் கணக்கில் தடுத்து வைத்திருப்பார்கள். அப்படிப் போனாலும் மீளுவது ஒரு சிலர்தான்.

எனக்கு உள்மனம் ஏதோ சொல்லியது. கால்கள் தடுமாறின. உள்ளூரப் பயம் இருந்தாலும் போய்ப்பார்க்க வேண்டுமென்ற உத்வேகம்.

கூடி நின்ற சனக்கூட்டத்திற்குள் நானும் ஒருவனாய் போய்ச் சேர்ந்து கொண்டேன். எல்லோர் மனமும் பயத்தால் ஆட்கொள்ளப்பட்டிருப்பது ஒவ்வொருவர் முகத்திலும் அப்பட்டமாய் தெரிந்தது. உள்ளே நுழைந்து சென்றபோது பச்சையுடை தரித்த ஒரு சிப்பாய் அந்த வாய்க்காலின் ஓரமாக உள்ள புற்தரைக்குள் குப்புற வீசப்பட்டிருந்த பெண்ணின் சடலத்தை கைகளில் பிடித்து இழுத்து வந்து கூடியிருந்தவர்களுக்கு முன்னால் போட்டு விட்டு எல்லோரையும் ஓர் வெறிப்பார்வை பார்த்தான். அவன் பார்வையில் குரூரம் தெரிந்தது. எல்லோருக்குள்ளும் சாடலாய் ஓர் சிறு நடுக்கம். வழமை யாக இப்படி ஏதா வது கொலை, கற்பழிப்பு, நிகழ்ந்தால் அதை மக்கள் மீது திணித்து விடுவது மட்டுமல்லாமல் "புல்" என்ற முத்திரையும் குத்தி விடு வது அங்கு எழுதப் படாதவிதி.

இன்றும் அதே பாணியில் தான்அவன் பார்வை இருந்தது. சடலத்தையும் கூடி இருந்தவர் களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். எல்லோரும் தலையைக் கீழே போட்டபடி குந்தியிருந்தனர்.

தற்செயலாக பச்சை குத்தப்பட்டிருந்த அந்தக்கையைப் பார்த்ததும் எனக்கு நெஞ்சு ஒரு முறை திக் என்றது.

"அ..அ...து...! எனக்கு வார்த்தைகள் எதுவும் வரமுடியாமல் விக்கித்துப்போய் நின்றன. இவள்....இவள்... இங்கு எப்படி?

"இந்தப் பொம்பளைப் புலியை ஒங்களுக்குத் தெரியுமா...?" அவன் கேட்க, இல்லை என்பது போல தலையசைத்தார்கள்.

"இவங்க... அம்மா... ஐயா...யாராவது இங்கி?" மீண்டும் எல்லோரும் மௌனமாக நின்றிருந்தார்கள்.

"பொய் சொல்லிடாதீங்க அப்புறம் நாம கண்டுபிடிச்சா...? பல்லை நெருமினான்.

விசாரணைக்காக வந்த காக்கிச் சட்டைக்காரர்கள் ஒவ்வொருத்தராகக் கூப்பிட்டு விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

தெரிந்த பெண் என்றோ அல்லது இவ்வூரைச் சேர்ந்தவளென்றோ யாரும் சொல்லிக் கொள்ளவில்லை. என்பது அவர்களது தலையசைப்பு மூலமாக எனக்கு விளங்கியது.

சடலத்தை எட்டிப்பார்த்தேன். அடையாளம் காணமுடியாதபடி அந்தப் பெண்ணின் உடல் வீங்கிப்போயிருந்தது. மஞ்சள் நிறச் சட்டையெங்கும் இரத்தத்தில் ஊறி சிவப்பு நிறமாக மாறியிருந்தது. இரண்டு பக்க கன்னத்திலும் சிகரெட் சூடுகள் தாராளமாக இருந்தன.

அழகான சிவந்த பெண்ணாய் அவள் இருந்திருக்க வேண்டும். அவளது வெள்ளை முகம் வெளிறிப்போய் நீலநிறமாகியிருந்தது. சிவந்த உதடுகள் இரண்டிலும் யாரோ ஒருத்தனின் பல் அடையாளங்கள் படிந்திருந்தன.

கீழ் உதடு பற்களால் கடித்து கிழிக்கப்பட்டு தொண்டைப்புறமாகத் தொங்கியபடி இன்னமும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

நாடியின் கீழ்ப்புறமெங்கும் பற்களால் கடிக்கப்பட்ட அடையாளங்கள்.

மூடியிருக்க வேண்டிய ,கண்களிரண்டும் மலக்கத் திறந்தபடி ஊதா நிறத்தில் மேல் இமைக்குள் சொருகிக்கிடந்தன. உடலெங்கும் ஆங்காங்கே நகங்களால் கீறல் பட்டும், பற்களால் கடிக்கப்பட்டுமிருந்த இடங்களிலிருந்து நிணநீர் வழிந்து கொண்டிருந்தது.

தோள் பட்டையின் இரண்டு பக்கங்களிலும் ஏதோ சுமைபோடப்பட்டதாலோ, கட்டப்பட்டதாலோ கீழ்புறமாக நசிந்திருந்தன.

பற்களால் கடித்துக்குதறப்பட்டிருந்த முலைக்காம்புகள் இரண்டும் எதிர்ரெதிர்ப்புறமாக இழுபட்டிருந்தன. நசித்து கொலை செய்யப்பட்ட அடையாளமோ என்னவோ கழுத்தில் "நைலோன்" கயிறொன்றின் அடையாளம் சுற்றி வரப்பட்டிருந்தது.

ஒரு போராளி "ஏன் இப்படி கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்?"

புதிராகத்தான் இருந்தது. அலங்கோலமாக்கப்பட்டிருந்த ஆடைக்கு மோலால் கழுத்தில் வேறு புதிய கறுப்பு நிற நூலொன்றில் கட்டப்பட்ட சயனைட் குப்பி ஒன்று கொழுவப்பட்டிருந்தது.

ஆச்சரியம் மேலும் வலுத்தது!

இரத்தத்தில் தோய்ந்து சேற்றில் கிடந்த அந்த சடலத்தில் "இது" மட்டும் எப்படி புதிதாய் இருக்க முடியும்.?...

ஒருவேளை அப்பாவிப் பெண்ணை "இவர்கள்" கெடுத்துக் கொலை செய்து விட்டு ஆடிய நாடகமாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றியது.

கிழிக்கப்பட்டிருந்த கடைவாய் வழியாக வடிந்துகொண்டிருந்த இரத்தம் தலையின் கீழ்ப்புறமாக இருந்த இடக்கையை நனைத்துக் கொண்டிருந்தது.

தற்செயலாக பச்சை குத்தப்பட்டிருந்த அந்தக்கையைப் பார்த்ததும் எனக்கு நெஞ்சு ஒரு முறை திக் என்றது.

"அ..அ...து!... எனக்கு வார்த்தைகள் எதுவும் வரமுடியாமல் விக்கித்துப்போய் நின்றன. இவள்....இவள்... இங்கு எப்படி?

கூடி நின்றவர்களின் முகத்தைப் பார்த்தேன். எல்லோர் முகத்திலும் அதே கேள்வி?

எனக்கு எல்லாமே புரிந்து விட்டது. பாவம் ஓர் அப்பாவிப் பெண்! எனக்கு அறிமுகமானவள்.என்னோடு கூடப்படிப்பவள் தான்.

அது என் வீட்டுக்குப் பக்கத்தில் கடை வைத்திருக்கும் மங்களத்தின் கடைசி மகள் வாசுகி நேற்றுத்தான் அவளை கடைசியாக் கண்டேன்.

நேற்று பாடசாலை விட்டு நான் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது மைதானத்துக்கு அப்பாலுள்ள ஓர் சோதனைச்சாவடியில் வைத்துத்தான் இரண்டு இராணுவத்தினர் அவளை மறித்துவைத்து நீண்ட நேரமாக கதைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனாலும் அப்போது நான் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதன் பிறகுதான் அவளைக் கொண்டு போய் இப்படிக் கொடூரமாக ......

சே... நினைக்கவே எனக்கு நெஞ்சு வலித்தது. எவ்வளவு குரூரம்!. சாதாரணமாக பள்ளியில் படித்துத்திரிந்தவளை மனித மற்ற வெறிநாய்கள் 'புலி' என்று முத்திரைகுத்தி...! அநியாயமாக... இன்னும் இப்படி எத்தனையோ?

பாவம் மங்களம் அக்கா அறிஞ்சால் எப்படி தாங்கிக் கொள்ளப்போறாவோ?

ஆனாலும்! என்ன செய்ய? இதுதான் சில அப்பாவித் தமிழ்ப் பெண்களின் தலைவிதியாச்சே!! மனதை நொந்தபடி நடந்து கொண்டிருந்தேன்.

"எடி மங்களம்...! அவளை பெண் புலி எண்டு சொல்லிப்போட்டாங்கள். இனி உதில நிண்டு நீ அழுது புலம்பி உன்ரை மகள் தான் எண்டதை சொன்னியோ... இருக்கிற பிள்ளைகளுக்கும் ஆபத்து! நீ என்ன சொன்னாலும் அவங்கள் ஏற்கப்போறதில்லை. தங்கட பிழையை மூடிமறைக்கத்தான் சயனைட் குப்பியையும் கொண்டு வந்து அவளுக்குப் போட்டுப் புலி எண்டு சொல்லுறாங்கள். இனி ஒண்டும் செய்யேலாது. நடந்தது நடந்து போய்ச்சுது பேசாமல் நீயும் யாரோ மாதிரிப்போய் கவலையெண்டா வீட்டுக்குள்ள இருந்து அழு. இங்க காட்டிப்போடாத..."

சத்தமின்றி சனக்கூட்டத்திற்குள் அழுதுகொண்டிருந்த மங்களத்துக்கு கூறியபடி- யாரோ அவளை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போவது அந்த இருட்டிற்குள்ளும் எனக்கு தெளிவாய் தெரிந்தது.

15 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் ஈழநாதத்திற்கு எமது வாழ்த்துக்கள்!

எங்களிடம் NATURAL பிறவுன் கலர், அலுமினியபார்கள், ஒட்டுப்பலகை, M.D.F வெள்ளை போட், சிப்போட், சீலிங்சீற் வகை, தரை விரிப்புக்கள், ரெக்சின், வெல்பட் துணி, ஜன்னல், மேசைக்கண்ணாடி, பிளைவுட் கதவு, பிளாஸ்ரிக் கதவு, பிளாஸ்டிக் கலர்க்கண்ணாடிகள், அனைத்து வகையான பூட்டுக்கள், கைப்பிடிகள், ஹாட்வெயார் சாமான்கள் மற்றும் அனைத்து வகையான அலுமினிய பிற்றிங் வேலைகளும் செய்துகொள்ள நாடுங்கள்.

விநாயகா ரேட் சென்ரர்

VINAYAGA TRADE CENTRE

[சி.8779]

T.P: 0712 35556

No.102.First Floor. New Bus Stand Complex, Vavuniya

# தமிழ் மொழிக்குப் பாடை நூலாகும் தமிழ்ப் பாடநூல்கள்

ச.வே.பஞ்சாட்சரம்

இலங்கையின் அனைத்துப்பிள்ளைகளுக்கும் பாடசாலைகளில் வைத்து இலவசக்கல்வி வழங்கப்படுகிறது.காலத்துக்குக் காலம் மாற்றமடையும் கல்விக்கொள்கை களுக்கமையப் புதிதுபுதிதாகக் கல்வித்திட்டங்கள் வகுக்கப்பட்டு மாணவர்களுக்குச் சரியானவை பயன்மிக்கவை என்ற பெயரில் அறிவுகள் ஊட்டப்படுகின்றன.

ஆனால் தமிழ்மொழிக்கல்வியைப் பொறுத்தமட்டில் பிழைகளான நச்சு விதைகளும் சரியானவை என்ற நம்பிக்கையில் இலட்சோப லட்சம் மாணவ மனங்களில் விதைக்கப்பட்டு வருகின்றன. 'கட்டாயம் பாடசாலைக்கு வா' என்று வற்புறுத்தி அழைக்கும் அரசாங்கம், அவர்கள் பிழையானவற்றையும் சரியானவையென நம்பிக்கற்றுக்கொள்ள வைப்பது பெரும் மானுடத் துரோகமாகும். தாய்மொழி மூலம் கல்வி என்ற கொள்கை அடிப்படையில் தமிழ்மொழியிலேயே எம் பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கப்படுகிறது. பாடவிதானங்களும் கற்பிக்கப்படும் கருத்துப் பரப்புக்களும் மாறும் போதும் தான் மட்டும் மாறாத ஊடக மொழியான தமிழே நிரந்தரக் கல்வி மொழியாகத் தமிழ்,முஸ்லிம்களுக்கு இங்கு பயன்பட்டு வருகிறது. அவ்வாறு தொடர்ந்து கற்பிக்கப்படுவதால் தமிழ்மொழி நம்மாணவர் மனங்களில் அழுத்தமாகப் பதிகிறது. ஆனால் அழுத்தமாக அன்றித்திருத்தமாகவும் மனங்களில் பதிவு பெறும் போது மட்டுமே அது நன்மை தரமுடியும்.

'தமிழ் மாணவர்களின் பாடப்புத்தகங்களும் சரியானவையாக-பிழைகள் அறவே அற்றவை யாக அமையும். அரசாங்கம் மிகுந்த பொறுப்புணர்ச்சி, நிதானத்தோடு 100 % சரியானவையாகவே தம்பிள்ளைகளின் பாடப்புத்தகங்களை ஆக்கும், ஆக்குகிறது.' என்றே ஒவ்வொரு பெற்றாரும் உறுதியாக நம்புகிறார். பாடப்புத்தகம் 100% சரியானது என்று கண்ணை மூடிக்கொண்டு நம்பி அட்சரம் தவறாமல் மாணவர் தம்மனங்களிற் கஞ்சியப்படுத்துகின்றனர். அவை தவிர்ந்த இலக்கிய, சமய நூல்களில் பத்திரிகை சஞ்சிகைகளில் பிழைகளிருக்கலாம் என்ற எதிர்பார்ப்பே அவர்களுக்கிருக்கிறது.

> **'தமிழ மாணவர்களின் பாடப் புத்தகங்களும் சரியான வையாக-பிழைகள் அறவே அற்றவையாக அமையும், அர சாங்கம் மிகுந்த பொறுப் புணர்ச்சி, நிதானத்தோடு 100% சரியானவையாகவே தம் பிள்ளைகளின் பாடப்புத்தகங் களை ஆக்கும், ஆக்குகிறது.' என்றே ஒவ்வொரு பெற்றாரும் உறுதியாக நம்புகிறார்.**

இந்த நிலையில் எங்கள் "தமிழ் மொழியும் இலக்கிய மும்" பாடநூல்கள் எத்துணைப் பொறுப் புணர்ச்சியோடு வெளியிடப்படுகின்றன. எந்த அளவுக்கு அவற்றால் வழுவற்ற மொழியறிவு நம் மாணவருக்கு ஊட்டப்படுகின்றது என்று பரிசீலனை செய்வதும் பிழைகள் தவறுகளைத் தவிர்த்துக்கொள்வதும் இன்றியமை யாத கல்விப்பணி களாகும்.

எந்த நூலிலேனும் பிழைகள் உள்ளமை வெளிக்காட்டப்பட்டால் அது அந்நூலின் மீது வாசகர்களுக்குள்ள நம்பிக்கையை அடியோடு அழித்து அதனைச் சாகவைத்துவிடும். இதுபோலவே பாடப்புத்தகங்களில் இடம்பெறும் பிழைகள் பகிரங்கப்படுத்தப்பட்டால் அந்நூலில் மட்டுமன்றி எல்லாப்பாடங்களுக்குமான பாடநூல்களிலுமே மாணவன் அவநம்பிக்கைப்படவைத்து அவனது கல்வி ஆர்வத்தைச் சாய்த்து விடும் என்பதுவுமான ரீதியான ஒரு நடைமுறை உண்மை. அதேவேளை கல்விவெளியீட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் தொடர்ந்தும் தான்தோன்றித்தனமாகப் பாடநூல்களைப் பிழைகளுடன் வெளியிடும் பட்சத்தில் அக்கறை கொண்டவர்கள் ஆதாரபூர்வமாக அப்பிழைகளை வெளிப்படுத்தும் பணியானது மாணவர்கள் அந்நூல்களில் நம்பிக்கை இழந்து அவற்றை மட்டுமன்றி, எந்தஒரு நூலையும் ஆராய்வதோடு படித்து நல்லவற்றை-சரியானவற்றை ஏற்று அல்லனவற்றைத் தள்ளி வழுவற்ற அறிவைத்திரட்டிக்கொள்ளப்பழகி நன்மை அடையவைக்கும்.

கடந்த காலங்களிலும் 'தமிழ் மொழியும் இலக்கியமும்' பாடநூல்களில் பிழைகள் ஆங்காங்கே இடம்பெற்று வந்தும் ஆசிரியர்களால் அவை சுட்டிக்காட்டப்பட்டும் எந்தவிதப்பயனும் ஏற்படவில்லை. மாறாக, இப்பாடநூல்களில் பிழைகள் குறைவதற்குப் பதில் அதிகரித்தே வருகின்றன. எனவே இனியும் இப்பிழைகளைப் பகிரங்கப்படுத்தத் தவறுவது இலட்சோப இலட்சம் மாணவர்களின் தமிழறிவு பாழடிக்கப்படுவதற்குத் துணைபோகும் பாவமாகி விடும் அல்லாமலும் 'இலங்கைத்தமிழர் மொழி தமிழ் தானா' என்ற கேள்வியைப் பிற்காலத்தமிழுலகம் கிளப்பும் நிலைக்கு நாம் தள்ளப்படலாம். எனவே எதிர்காலத்தில் இலங்கையில் தமிழினதும் தமிழரதும் நன்மைப்பாட்டைக் கருத்தில் கொண்டும், தமிழுக்காக ஈழத்தில் பல்லாயிரக்கணக்கில் உயிர்கொடுத்ததியாகிகளின் ஆத்மா சாந்தியைப் பேணும் நோக்கிலும் நம்தமிழ்ப்பிள்ளைகளுக்குக் கட்டாயப்படுத்தி ஊட்டப்படுவது சரியான தமிழாக அமைய வேண்டும் என்ற வேணவாவோடு, பாடநூல்களில் இடம் பெறும் வழுக்கள் சுட்டிக் காட்டப்படவேண்டியது காலத்தின் தேவையாகும். அதிலும் தமிழ்ப் பற்று, தமிழ்த்தேர்ச்சி ஈழத்து இளந்தலைமுறையினர் மத்தி யில் படுமோசமாக வீழ்ச்சி அடைந்து செல்லும் இன்றைய நிலையில் இப்பணி தவிர்க்க முடியாத ஒன்று.

> **இனியும் இப்பிழைகளைப் பகிரங்கப்படுத்தத் தவறுவது இலட்சோப இலட்சம் மாணவர் களின் தமிழறிவு பாழடிக்கப் படுவதற்குத் துணைபோகும் பாவமாகிவிடும் அல்லாமலும் 'இலங்கைத்தமிழர் மொழி தமிழ் தானா' என்ற கேள்வியைப் பிற்காலத்தமிழுலகம் கிளப்பும் நிலைக்கு நாம் தள்ளப்ப டலாம்.**

இன்றைய தமிழ் மொழி இலக்கியப் பாடநூல் களின் நிலைமையை வெளிப்படுத்த மாதிரிக்கு ஒரு வகுப்புப் பாடநூலை எடுத்து ஆராய்ந்தால் போதும். அது, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் விழிப்புறச்செய்து பிழைதிருத்தப் பட்டியலை நூலின் பின்னிணைப்பாக மாணவர்களுக்கு வழங்கச்செய்து, புதிய நூல்களையாவது வழுவின்றி வழங்க முற்படச் செய்யக்கூடும். எனவே 9 ஆம் தரத்துக்குரிய தமிழ் மொழியும் இலக்கியமும் பாடநூலை எடுத்துக்கொள்வோம். இந்நூல் தேசியக்கல்வி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு ஆறாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இது பயன் மிக்கவகையில், போதிய இலக்கணப்பகுதிகளோடும் பயிற்சிகளோடும், சிறந்த இலக்கியப்பகுதிகளை உள்ளடக்கியும் தயாரிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி தருகிறது. ஆனால் இலக்கணப்பகுதிகளில் சில தவறுகள் இடம்பெற்றிருப்பது கவலைக்குரியது. உதாரணமாக 20 ஆம் பக்கத்தில், கூற்று வாக்கியம், வினாவாக்கியம், விருப்பு வாக்கியம், மெய்ப்பாட்டு வாக்கியம் என நான்கு வகையாக வாக்கியங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று மட்டும் உதாரணங்கள் சகிதம் விளக்கப்பட்டுள்ளன. நான்காவதாகிய மெய்ப்பாட்டு வாக்கியவகை விளக்காமலே முற்றாகத் தவறவிடப்பட்டுள்ளதோடு அப்பகுதி பயிற்சி வினாக்களில் "(3)" அந்தோ! அவள் என்ன பாவம் செய்தாள்?" (10) "ஆகா! எத்தனை வண்ணங்களில் ஆடைகள் குவிந்து கிடக்கின்றன" ஆகிய இரு மெய்ப்பாட்டு வாக்கியங்களும் தரப்பட்டுள்ளமை அப்பயிற்சி செய்விக்கும் பாட ஆசிரியருக்கும், மாணவனுக்கும் மனக்குழப்பத்தைக் கொடுக்கவே செய்யும் தவறாகும். மேலும் 59 ஆம் பக்கத்தில் சந்தி, சாரியைகளை எழுதும்படி கேட்கப்பட்டுள்ள 5 ஆம் வினாவில், சந்தியுள்ள - ஆனால் சாரியை அற்ற ஒரு சொல்லும் தரப்பட்டுள்ளது. அ-து நட+த்+த்+இல்+அன்(நடந்திலன்) இங்கு வந்துள்ள "இல்" ஆனது சாரியையோ எனில் அன்று இந்த "இல்" எதிர்மறை இடைநிலையாகும். எனவே இது சாரியை அற்ற சொல் இத்தவறான தரவு பாட ஆசிரியரையும் மாணவர்களையும் இந்த "இல்" லும் சாரியையே என்ற பிழையான மனப்பதிவுக்கு நிச்சயம் ஆளாக்கும். மேலும் பக்கம் 73 இல் மரபுப்பெயர் வரிசையில் "கப்பல் செலுத்துபவன் மீகாமன்" என்ற வாக்கியம் இரு தடவை அச்சிடப்பட்டுள்ளமை மாணவனை மனங்குழம்பச்செய்யலாம். மேலும் 82 ஆம் பக்கத்தில் 'ஏ'கார ஈற்றில் 'வ்' உடம்படுமெய் தோன்றுவதுமுண்டு. என்பதற்கு உதாரணமாக "அவனேவரசன், அவனேவழகன் என்று தரப்பட்டுள்ள உதாரணத் தொடர்கள் நூல்வழக்கிலோ பேச்சுவழக்கிலோ இல்லாதவை-பிழையானவை. தேவாரம், சேவுழுதது, சேவடி போன்ற உதாரணங்கள் தரப்பட்டிருக்கலாம். மேலும் 107 ஆம் பக்கத்தில் பலவின்பாற்பெயர்கள் என்றதலைப்பின் கீழ் அவை, பிற,மரங்கள் என்னும் சரியான உதாரணங்களோடு பிழையான 'அவ்' என்பதும் தரப்பட்டுள்ளது. அத்தோடு பலவின்பால் விகுதியாக 'வ்' தரப்பட்டுள்ளது. இந்த 'வ்' எந்த நூலிலும் சரி பேச்சுவழக்கிலும் சரி விகுதியாகக் கொள்ளப்படுவதில்லை. மாணவர்கள் தமிழ் இலக்கணத்தை (terror) பயங்கரம் ஆகக் கருத இது போன்ற பிழைகளே காரணமாகின்றன. அடுத்து 113 ஆம்பக்க இலக்கணப்பகுதியில் "அண்ணனிலிருந்து தம்பி வேறுபட்டவன்" என்ற வாக்கியம் (5ஆம் வேற்றுமை) அண்ணனிலிருந்து தம்பியைத் தூரமாக்கி நீக்குவதால் நீக்கப் பொருள் கொண்டது. ஆனால் பிழையாக ஒப்புப்பொருளெனக் குறிக்கப்பட்டுள்ளது. ஒப்பும், ஒப்பீடும் ஒன்றே என்று மாணவர்கள் தவறாக முடிவு கட்ட வைக்கும் பிழை இது.

மேலும் "வழியும் மொழியும்" எனும் (போராசிரியர் ம.மு உவைஸ் அவர்களின்) கட்டுரையில் " தமிழ் மொழி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியச் செல்வங்களைக் கொண்டு விளங்குகின்றது." என பிழையாக எழுதப்பட்டுள்ளது. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் பதினெண் மேற்கணக்கு நூல்கள், திருக்குறள், நாலடியார் முதலியனவே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை.

இவ்வாறு பாடநூலினைத் தயாரித்தவர்கள் விட்ட குறைந்த பிழைகளோடு, நூற்சரவை (proof) திருத்துவதில் ஏராளமான பிழைகள் இடம்பெற அனுமதித்து, நூலை அச்சிட்டு வெளியிட்ட கல்விவெளியீட்டுத் திணைக்களத்தின் பொறுப்புணர்ச்சிக் குறைவால் இப்பாடநூல் முழுவதும் மிகமோசமாகப் பிழைகள் மலிந்துள்ளன.

ஆயினும் நூலைத்தயாரித்ததோடு தம் கடமை முடிந்ததென்று ஒதுங்கிக்கொண்டு விட்ட நூலாக்க ஆலோசனைக்குழுவுக்கும், எழுத்தாளர் குழுவுக்கும் மொத்தத்தில் தேசியக் கல்வி நிறுவகத்துக்கும் இப்பாவத்தில் பெரும்பங்குண்டு என்பதை மறுக்க முடியாது.

9 ஆம் தரத்துக்கான தமிழ்ப்பாடப் புத்தகத்தின் பரிதாப நிலைக்கு எடுத்துக்காட்டாக அந்நூலின் 126 ஆம் பக்க நிழற்படப்பிரதி கீழே தரப்படுகிறது.

---

இராமபிரான் குகனோடும் தோழமைபாராட்டி அங்கு

17 அன்னவ னுரைகேளா வமலனு முரை நேர்வா
னென்னுயி ரனையாய்நீ யிளவலு னிளையானிந்
நன்னுத லவணின்கே ணளிர்கட னிலமெல்லா
முன்னுழை யதுநானுன் றொழிலுரி மையினுள்ளேன்.

(இ-ள்) அன்னவன் உரை கேளா-அந்தக்குகப்பெருமானது வார்த்தையைக் கேட்டு. அமலன்உம் - குற்றமற்றானான இராமனும். உரை நேர்வான் - மறுமொழிகூறுபவனாய் - (குகனைநோக்கி) - நீ - என்உயிர் அனையாய்-என்னுயிரையொத்தவன் : இளவல்-(என்) தம்பி உன் இளையான்-உனக்குத்தம்பியாவன் : இந்நல் நுதவலள்-அழகிய நெற்றியையுடையளான. இந்தச்சீதை. நின் கேள்-உள்தோழியாவள். நளிர் கடல் நிலம் எல்லாம்-குளிர்ந்த கடலாற்சூழப்பட்ட பூமிமுழுதும் உன்உடையது-உன்னுடைய சொத்தாகும் நான். - உன். தொழில் உரிமையின்-உன்னுடைய ஏவற்றொ ழிலிற் கட்டுப்படும் உரிமையில் உள்ளேன் அடங்கியுள்ளேன்.

18 துன்புள தெனி னன்றோ சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளெ மொருநால்வே முடிவுள தெனவுன்னா
வன்புள வினிநாமோ ரைவர்க ளுளரானோம்.

(இ-ள்) துன்பு உளது எனின் அன்று ஒசிகம் உளது - துன்பம் உளதாயினல்லவா. சுகம் உண்டாகும். அது அன்றி-அவ்வாறு நினையாமல். பின்புஉளது-(உன்னைக் காண்பது) பின்னர் உண்டாகப் போகின்றது. (இன்பமாக இருக்கிற இக்காலத்திற்கும், இனிஉன்னையடையப் போகின்ற காலத்திற்கும் இடை நடுவிலே. மன்உம்-மிகவும் பிரிவு-பிரிவுத்துயரானது. உளது. என-என்று. உன்னேல் கருதிவருந்தாதே; முன்பு-(உன்னோடு தோழமை கொள்வதற்கு) முன்னம் ஒரு நால்வேம் உளேம்-(நாங்கள் உடன் பிறந்தவர்) நால்வராக இருந்தோம். முடிவு உளது என உன்னா-முடிவுளதென்று கருதுவதற்கு முடியாத (எல்லையில்லாமலும் என்றும் நிலைத்துமுள்ள) அன்பு-அன்பை உள-பரஸ்பரம் கொண்டுள்ள. நாம்-இனி-இனிமேல். ஓர் ஐவர்கள் ஆனோம். - உடன்பிறந்தவரைவராய் விட்டோம் (எறு நமக்கு ஏற்பட்ட அன்பின்பிணிப்பைக் கருதுவாய்). (எறு) - இதனால். சீழ் உன் தொழிலுரிமையினுள்ளேன் என்று கூறிய இராமபிரான். தான் பிரிந்து செல்லுதல் நன்மைக்கே யெனக் காட்டுகின்றான்.

19 படருற வுளனும்பி கானுறை பகலெல்லா
மிடருறு பகையாபோ யானென வுரியாய்நீ
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேன்யான்
வடதிசை வருமந்நா ணின்னுழை வருகின்றேன்.

126

---

தமிழீழத்தின் பொருளாதாரத்தில் விவசாயத்துறை மற்றும் மீன்பிடித்துறை ஆகிய இரண்டுமே பிரதான தொழில் துறைகளாக காணப்படுகின்றன. இயற்கையாக உள்ள புறச்சூழ்நிலைகளே இவ்வாறான துறைகள் தொன்று தொட்டு இருந்து வருவதற்குக் காரணமாக அமைந்துள்ளன. இந்த வகையில் சிங்கள பேரினவாத அரசுகள் காலத்துக்கு காலம் மேற்கொண்டு வந்த திட்டமிட்ட நடவடிக்கைகளால் இத்துறைகளின் வளர்ச்சி பெருமளவிற்கு முடக்கப்பட்டு வந்துள்ளன.

இந்த வகையில் விவசாயத்துறையை எடுத்து நோக்குவோமானால் இத்துறை கூட பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. சந்தித்தும் வருகிறது. இந்த வகையில் தற்போதைய சமாதான சூழல் நிலவி வரும் காலப்பகுதியில் இந்தவிவசாயத்துறையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது. என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.




# வேளாண்துறைக்கு பாரிய உதவி தேவை

அனிக்கிலஸ்

22.02.2002 தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் நோர்வே அரசின் அனுசரணையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இதனூடாக கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த தமிழர் பிரதேசங்கள் மீதான திட்டமிட்ட இராணுவ ஆக்கிரமிப்புக்கள், திட்டமிட்ட அழிப்புகள், திட்டமிடப்பட்ட இன பொருளாதார தடை என்பன இடைநிறுத்தப்பட்டன. சமாதானக் காற்று இலங்கைத்தீவு முழுவதும் வீச ஆரம்பித்தது. இன்று வரை அந்தச்சூழல் பேணப்பட்டு வருகின்ற போதிலும் அதனால் ஏற்பட்டுள்ள பயனென்ன என்பதே அனைவரின் மனங்களிலும் எழுகின்ற கேள்வியாக உள்ளது.

இன்னும் இருதினங்களில் ஒப்பந்தம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியடையவுள்ளதே ஒழிய தமிழ்மக்கள் சமாதானத்தின் உரிய பயன்களை அனுபவிக்கவில்லை. அவர்கள் இன்னமும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவில்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து பெருமளவு பகுதிகள்- அதாவது ,எழுபது வீதத்திற்கும் மேலான பகுதிகள் விடுவிக்கப்பட்ட வேளையில் உருவான "புரிந்துணர்வு" உடன்பாடு இன்று வரை இந்த இரண்டாண்டு காலப்பகுதியில் எதனைச் சாதித்துள்ளது?

இரண்டு ஆண்டுகள் என்பது குறிப்பிட்டுக்கூறக்கூடிய தொரு காலப்பகுதிதான். இக்காலப்பகுதியில் நிரம்பவே சாதித்து இருக்கலாம். ஆனால் இன்று வரை நடப்பது தான் என்ன? உண்மையில் எம்மக்கள் மீது சுமத்தப்பட்ட தாக்கங்கள் என்பது அளவிடமுடியாதது. அதனை ஒரு, இருவருட காலப்பகுதியில் நிவர்த்திப்பது என்பதும் இயலாத காரியம் தான். கடந்த இருதசாப்த காலப்பகுதியில் தமிழர்கள் இழந்தவற்றையெல்லாம் இருவருடங்களில் சாதிக்க முடியாதுதான். ஆனாலும் அதில் ஒரு சிறுபகுதி இலக்காவது எட்டப்பட்டு விட்டதா என்பது தான் தற்போதைய கேள்வியாகும்.

வன்னி பெருநிலப்பரப்பின் அதிலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளின் விவசாய நடவடிக்கைகள் என்பதில் சிறிலங்கா ஆட்சியாளர்களின் திட்டமிட்ட தடைகள், செயற்பா[illegible] இன்றைய நாள் வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதற்கா[illegible]தலைப்புலிகளின் கட்டுப்பாடற்ற தமிழீழ பிரதேசங்களில் சிறிலங்கா ஆ[illegible]யாளர்கள் தாராள போக்கை கடைப்பிடித்தார்கள் என்றோ அங்குள்ள மக்களுக்கு வேண்டியவை செய்யப்பட்டுள்ளன என்றோ அர்த்தப்படமுடியாது. அங்கும் இதே கதைதான், பொருளாதாரத் தடைநீக்கப்பட்டு விட்டது. யூரியா உள்ளிட்ட வளமாக்கிகள், இரசாயன நாசினிகள், விவசாய உபகரணங்கள், இயந்திர சாதனங்கள் என்பன தாராளமாக எடுத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளன இனியென்ன. இவைகள் மீதான தடைகள் தானே தமிழர்களின் வாழ்வியலை பாதித்தன. அவர்களின் முயற்சிகளை பாதித்தன.



**இரணை மடு**

- **நீரேந்தும் பரப்பு-227 சதுர மைல்**
- **கொள்ளளவு-1,06,500 ஏக்கரடி**
- **நீர் மட்ட உயரம் - 34 அடி**
- **இம்முறை 33 அடி வரை நீர்தேக்கப்பட்டது.**
- **குளத்தின் கீழான நெற்செய்கை காலபோகம்-20,882 ஏக்கர் ஏற்று நீர்ப்பாசனம் - 1,103 ஏக்கர் (இது தற்போது கைவிடப்பட்டுள்ளது.)**
- **2003ல் குளத்தின் மூலமாக சிறுபோக நெற்செய்கை 7000 ஏக்கரில் இடம் பெற்றது.**

அவ்வாறானால் ஏன் அவர்களின் வாழ்வியலில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை?

விவசாயத்துறையைப் பொறுத்தமட்டில் அதன் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்று வரைஉரிய தீர்வு எட்டப்படவில்லை. வன்னியின் விவசாயத்துறையை பொறுத்து குளங்கள் மிக இன்றியமையாத பங்கை வகிக்கின்றன. அதன் தரைத்தோற்ற அடிப்படையில் உருவான, உருவாக்கப்பட்ட குளங்களில் இயற்கையாக ஆண்டின் சில மாதங்கள் கிடைக்கும் மழைநீரைச் சேமித்து விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குளங்களை அண்டியே மக்கள் குடியிருப்புக்களும் அமைந்துள்ளன. அத்தோடு கணிசமான பகுதியினர் விவசாய நடவடிக்கைளிலேயே ஈடுபட்டும் வருகின்றனர்.

இந்த வகையில் நீர்ப்பாசன குளங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் பாரிய நீர்ப்பாசனக்குளங்கள், என்பனவே அவையாகும். முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களை பார்க்குமிடத்தில் கிளிநொச்சியில் 281 சிறுநீர்ப்பாசன குளங்கள் உள்ளன. முல்லை மாவட்டத்தில் இருநூறுவரையான சிறிய நீர்ப்பாசன குளங்கள் உள்ள போதிலும் முல்லையில் 148 குளங்களே தற்போது பாவனையில் உள்ளன. ஏனையவை கைவிடப்பட்டு அழிந்து போயுள்ளன. இந்த சிறிய நீர்ப் பாசனக் குளங்கள் ஒவ்வொன்றிலும் 250 ஏக்கருக்கும் குறைவான நெற்செய்கையே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரிய நீர்ப்பாசனக் குளங்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்பதும் முல்லை மாவட்டத்தில் இரண்டு குளங்களும் உள்ளன. அதுதவிர நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் சிலவும் காணப்படுகின்றன.

இந்த நீர்ப்பாசன குளங்களைப் பொறுத்த மட்டில் சிறிய நீர்ப்பாசனக் குளங்களே இந்த சமாதான காலப்பகுதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. வடக்கு-கிழக்கில் நீர்ப்பாசன குளங்களை புனரமைக்க சில அமைப்புக்கள் முன்வந்து அதற்குரிய திட்டங்களை முன்மொழிந்த போதிலும் அதனை செயற்படுத்த விடாது சிறிலங்கா ஆட்சியாளர்கள் தடுத்திருந்தனர். தற்போது சிறிய நீர்ப்பாசனக் குளங்களை புனரமைக்க மட்டும் அரசு ஓரளவுக்கு அனுமதியளித்துள்ளது. இதற்கமைய நியாப், நெக்கோட் உலக உணவுத்திட்டம் போன்ற அமைப்புக்களால் ஒரு குறிப்பிட்டளவிலான குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. நியாப் திட்டத்தினூடாக ஒருதொகுதி குளங்கள் புனரமைக்கப்பட்டு அது மக்களிடமே பராமரிப்புக்காக பயிற்சிகளுடன் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் பெரும் பகுதி சிறிய நீர்பாசன குளங்கள் புனரமைக்க வேண்டிய தேவையுள்ளது. இவ்வாண்டுடன் தனது பணிகளை முடிவுறுத்தும் நியாப் அடுத்த ஆண்டில் இரண்டாம் கட்டமாக வேலைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது போல் தெரிகிறது. இது கைகூடுமானால் மேலும் சில குளங்கள் புனரமைக்கப்பட ஏதுவாகும். மற்றும் உலக உணவுத்திட்டம் உட்பட ஏனைய அமைப்புக்களின் ஊடாகவும் சிறிய நீரபாசன குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. புனரமைப்பு நடைபெற்றும் வருகின்றன.

இத்தகைய உதவித் திட்டங்கள் மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ள போதிலும் கிடைக்கும் நிதிகள், உதவிகள் சில இடங்களில் உரிய முறையில் பயன்படுத்தாது இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. உதாரணமாக உலக உணவுத்திட்டம் ஊடாக செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் குறித்த வேலைகளை செய்வதில் உரியவாறான வழிநடத்தல்கள் இருந்தால் இன்னும் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் ஒவ்வொன்றும் மூவாயிரம் மனித வலுக்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த அபிவிருத்தி திட்டத்திற்கு மனித வலுவுக்குப் பதிலாக உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் இதில் மனித வலுக்களை பயன்படுத்தி உணவுப் பொருட்களைப் பெறுவதில் காண்பிக்கும் கவனம் அதன் அபிவிருத்தி வேலைகளில் காண்பிப்பதில்லை. மனித வலு என்கின்ற போது பாடசாலை செல்கின்ற சிறுவர்கள் கூடபாடசாலைக்கு போகாமல் இவ்வாறான திட்டங்களில் இணைந்து கொண்டுள்ளனர். இவர்களில் எதிர்பார்க்கப்படும் உரிய வினைத்திறனை பெறமுடியுமா? எனவே கிடைக்கும் வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் நல்ல பயனைப் பெறமுடியும் என்பதை உணர்ந்து செயற்படுவது எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பேருதவியாக அமையும் என்பது திண்ணமாகும்.

வன்னியின் விவசாய நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா அரசு இந்த சமாதான காலப்பகுதியில் எத்தகைய பங்கை வகித்துள்ளது. என்று பார்த்தால் அது இன்று வரை பூச்சியமாகத்தான் இருக்கிறது. மாவட்டம் தோறும் உள்ள விவசாய திணைக்களங்களுக்கு இருவருடங்களில் அரசு விவசாய அபிவிருத்திக்காக எந்தநிதியுதவியையும் அளிக்கவில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். அதுமாத்திரமல்லாது வெளியிடங்களிலிருந்து கிடைக்கும் உதவிகளைக் கூட வரவிடாது தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலேயே ஆட்சியாளர் கவனம் இருந்து வருகிறது.

இந்நிலையில் வன்னியிலுள்ள நடுத்தர, பாரிய நீர்பாசன குளங்கள் புனரமைப்புக்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் பெரும் முட்டுக்கட்டைகளை போட்டு வருகின்றனர். பெரிய நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்பு செய்யப்படவில்லை. அரசு இது விடயத்தில் உரிய கவனம் செலுத்தாது அக்கறையற்று காணப்படுகிறது. இதனால் இரணைமடு போன்ற பாரிய நீர்த்தேக்கங்கள் புனரமைப்பு எதுவுமின்றி இன்று கிடக்கின்றது. சமாதானம் வந்த பிறகு இக்குளங்களின் புனரமைப்பு பற்றி பார்ப்போம் என்று அரசு கூறிவிட்டதாக நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். என்பதை இவ்விடத்தால் சுட்டிக்காட்டுவது அவசியமாகும்.

கிளிநொச்சி மாவட்ட பாரிய நிர்ப்பாசனக் குளங்கள்

| | |
|---|---|
| 1.இரணைமடு | புனரமைப்பு எதுவுமில்லை |
| 2.அக்கராயன் | ஜெபிக்-நிறுவனம் முழுமையாக புனரமைக்க முன்வந்துள்ளது. இவ்வாண்டில் வேலைகள் ஆரம்பம் |
| 3.கனகாம்பிகை* | நியாப்-திட்டத்தில் புனரமைக்கப்படுகின்றது. |
| 4.கல்மடு | நிக்கொட்திட்டத்தில் 2004 புனரமைக்கப்படும் |
| 5.புதுமுறிப்பு* | நிக்கொட் திட்டத்தில் புனரமைக்கப்படுகிறது. |
| 6.வன்னேரி* | நியாப் திட்டத்தில் புனரமைக்கப்பட்டுள்ளது. |
| 7.கரியாலை நாகபடுவான் | நியாப் திட்டத்தில் புனரமைக்கப்படும் |
| 8.பிரமந்தனாறு* | நியாப் திட்டத்தில் புனரமைக்கப்படுகிறது. |
| 9.பெரிய குளம் | புனரமைப்பு எதுவுமில்லை. |
| | *பகுதிப் புனரமைப்புக்கள் இடம் பெற்றுள்ளதைக் குறிக்கிறது. |



சிறிய நீர்ப்பாசனக்குளங்களின் புனரமைப்பு என்பதை விட பாரிய, நடுத்தர, நீர்ப்பாசன குளங்களின் புனரமைப்பு என்பதே மிகவும் முக்கியமானதாகும். அதுவே விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுவதாக அமையும் பாரிய, நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களில் தேக்கப்படும் நீரைக்கொண்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கையினை

(36ஆம் பக்கம் பார்க்க)

# தன் பலம், பலவீனத்தை உணரமுடியாத நிலையில் சிங்கள இராணுவம்

தமிழீழத் தனியரசுக்கான போராட்டம் தீவிரம் பெற ஆரம்பித்து இரண்டு தசாப்தங்கள் கடந்து விட்டன. இந்தக் காலப்பகுதியில் ஈழவிடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக இலங்கையின் இராணுவக் கட்டமைப்பு திடீரென வீங்கிப் பெருத்து விட்டது.

ஆரம்பத்தில் கெரில்லாப் போராக ஆரம்பித்த புலிகளின் போராட்டம் படிப்படியாக வளர்ச்சி பெற்று மரபு வழிப் போராக மாறி-இன்று இராணுவச் சமபல நிலைவரை வளர்ந்திருக்கும் நிலையில்,

இலங்கை இராணுவமும் ஆளணி வளரீதியாக, ஆயுதவள ரீதியாகப் பெரும் மாற்றம் கண்டிருக்கிறது. இந்த இரண்டு தசாப்த காலப் போரில் அரசபடைகள் பெற்றிருக்கும் மாற்றம் என்ன? என்பதை இக்கட்டுரையில் சுருக்கமாகப் பார்க்கலாம்.

· இலங்கையில் நடைபெறும் போர் குறித்து ஆரம்ப காலத்தில் கட்டுரைகள், வர்ணனைகள் எழுதுவோர் அரச படைகளின் ஆளணிப் பலத்தையும் அதற்கெதிராகப் புலிகள் நடத்தும் கெரில்லாப் போர் தொடர்பாகவும் விபரிப்பது வழக்கம்.

1981/82 காலப்பகுதியில் போர் முனைப்பு தீவிரமடைந்த காலப்பகுதியில் அரச படைக் கட்டமைப்பில் மொத்தமாக 14840 பேர்தான் இருந்தனர். அப்போதைய கட்டுரையாளர்களுக்கு இது ஒரு புள்ளிவிபரத் தகவலாக இருந்தது.

காலப்போக்கில் இந்த இராணுவப் படையமைப்பு பெருவளர்ச்சி கண்டது. புலிகளின் வேகமான பரிணாம வளர்ச்சிக்கேற்ப, அரசபடைகளும் தம்மைப் பெரும் படையாக வளர்த்துக் கொண்டது. இந்த வகையில் சுமார் பத்து ஆண்டுகள் முடிவில் அரச படைகள் தமது ஆளணிப் பலத்தை பத்து மடங்காக அதிகரித்துக் கொண்டன.

இராணுவத்தில் 80 ஆயிரம் பேரும்,கடற்படையில் 14 ஆயிரம் பேரும், வான்படையில் 6 ஆயிரம் பேரும். விசேட அதிரடிப்படையில் (STF) 5 ஆயிரம் பேரும், தேசிய





துணைப் படையில் 10 ஆயிரம் பேரும் ஊர்காவற்படையில் 18 ஆயிரம் பேருமாக மொத்தம் ஒரு லட்சத்து 33 ஆயிரமாக அரச படைகளின் ஆளணிப்பலம் வீக்கமடைந்தது.

1991 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்- புலிகள் அதற்கு அடுத்த பத்தாண்டுகளில் பெற்ற வளர்ச்சிதான் மிகவும் பிரமாண்டமானதும் பிரமிப்பூட்டுவதாகவும் இருக்கிறது. இக்காலத்தில் புலிகள் மரபுவழிப் படைப்பிரிவுகளைத் தோற்றுவித்து இன்று ஒரு தேசிய இராணுவம் என்ற அளவுக்குத் தம்மை வளர்த்திருக்கிறார்கள்.

ஆனால் இப்போது- இரண்டாவது தசாப்த காலத்தில் அரச படைக்கட்டமைப்பு எந்தளவு வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்பது தான் முக்கியமானது. ஒரே வரியில் சொல்லப்போனால்-இன்றைய நிலையில் இலங்கை அரச படைகளின் சரியானதும் துல்லியமானதுமான ஆளணிப் பலத்தை வெளியிடக் கூடியளவுக்கு எவரிடமும் தகவல்கள் கிடையாது.

அந்தளவுக்கு இராணுவப் படைகளின் இரகசியம் பேணப்படுகிறது என்று கணக்கிட்டு விடாதீர்கள். முப்படைகளின் பிரதம தளபதியுடன் பாதுகாப்பு அமைச்சருமான சனாதிபதி சந்திரிகாவுக்கோ அல்லது கூட்டு நடவடிக்கைத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுக்கோ இல்லை. முப்படைத்தளபதிகளுக்கோ கூட தமது படைகளில் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்று துல்லியமாகக் கூறிவிட முடியாது.

1981/82-இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் போர் தீவிரமடைந்த காலப்பகுதியில் 14840 படையினர் இருந்தனர். என்று ஆணித்தரமாக அடித்துக் கூறிய புள்ளிவிபரத்தைப் போல - இன்று கூறமுடியாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

கடந்த ஒரு தசாப்த காலப் போராட்டத்தில் அரச படைகள் எதிர்நோக்கிய உயிரிழப்புக்களை விட புதிதாகச் சேர்க்கப்பட்ட படையினரின் தொகை மிகவும் அதிகமானது. ஆனாலும் இந்தளவு படையினரும் இப்போது படையில் இருக்கின்றனரா என்பதே முக்கியமானது.

இராணுவத்தின் ஆளணிப் பலம் மட்டும் இப்போது 1 இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் எந்தளவு படையினர் இப்போது உள்ளனர் என்று மட்டும் கூறமுடியாமல் இருக்கிறது.

இதற்குக் காரணம் கடந்த தசாப்த காலப்பகுதியில் படையை விட்டுத் தப்பிஓடிய படையினரின் மொத்த எண்ணிக்கை என்ன என்பது எவருக்குமே சரியாகத் தெரியாததுதான்.

மொத்தமாக 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையான படையினர் இதுவரை தப்பி- ஓடியிருப்பதாகக் கூறப்படுகிறபோதிலும் சரியான எண்ணிக்கை வெளியிடப்படுவதில்லை. அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்த மதிப்பீட்டின் படி மொத்தம் 53 ஆயிரம் படையினர் இதுவரை தப்பியோடியிருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது.

முதல் தசாப்த காலத்தில் அரச படைகள் பெற்ற அபரிமிதமான வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் இரண்டாவது தசாப்த காலத்தில் பெரும் வீழ்ச்சிப் போக்கையே காணமுடிந்தது.

அண்மையில் நடந்த 56வது சுதந்திர தின அணிவகுப்பில் படைகளில் உள்ள ஒவ்வொரு படைப்பிரிவுகளும் அணிவகுத்துச் சென்ற போது- அவவற்றின் ஆரம்பம் தற்போதைய பலம் என்பன பற்றி பெருமையாகக் கூறப்பட்டது.

ஆனால் இந்தப் பெருமை பேசல்களுக்குப் பின்னால் அரச படைகள் எவ்வாறு புலிகளையும் அவர்களின் போர்த் தந்திரோபாயங்களையும் முகம்கொடுத்து நிற்கிறார்கள்? இக்காலகட்டத்தில் அடைந்திருக்கும் வளர்ச்சி என்ன என்பது குறித்து எவரும் விபரிக்கவில்லை.

முதலாவது தசாப்த காலத்தின் முடிவில்தான் புலிகள் தம்மை ஒரு மரபுவழிப்படையாக மாற்றுவதற்கான முயற்சிகளில் இறங்கியிருந்தனர். அப்போது அரச படைகள் இராணுவரீதியிலான மேலாதிக்க நிலையில் இருந்தனர் என்பதில் சந்தேகமில்லை.

கெரில்லாப் போராட்டத்தைப் புலிகள் ஆரம்பிக்க அதை முறியடிக்கும் போராட்டத்தில் அரச படைகள் இறங்கி- பின்னர் அது மரபுவழி மற்றும் முறியடிப்புப் போராக மாற்றம் பெற்றது.

இரண்டாவது தசாப்த காலம் தான் அரச படைக்கட்டமைப்புக்கும் சரி, புலிகளின் படைக்கட்டமைப்புக்கும் சரி சோதனையானாலும் அதே வேளை பலப் பரீட்சைகள் நிறைந்தது மான காலமாகும்.

புலிகளின் ஆளணிப்பலமும், ஆயுத பலமும் வளர்ச்சி கண்டு ஒரு தேசிய இராணுவமாக மாற்றமடைந்த பெரும் வளர்ச்சிப் போக்கு அவதானிக்கப்பட்ட இந்தக் காலப் பகுதியில்- புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் அரச படைகள் ஈட்டிய வெற்றிதான் என்ன?

யாழ்.குடாநாட்டையும், வன்னியின் பெரும் நிலப்பரப்புக்களையும் புலிகளிடம் இருந்து கைப்பற்றுவதற்கென தமது பெரும் படைப்பலத்தை சண்டைகளில் ஈடுபடுத்தி பெரும் அழிவுகளை எதிர்நோக்கிய அரச படைக்கட்டமைப்பு

புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் புகுத்தப்பட்ட தவறான போர்த்தந்திரோபாயம் தான் இப்போதைய பலவீன நிலைக்குத் காரணமாகும். படையைவிட்டு தப்பியோடுவோர் தொகை அதிகரித்ததுதான் இராணுவம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாகும்.

புலிகளுடனான போராட்டத்தில் எதிர்கொண்ட இழப்புக்களை விடப் பன்மடங்கு படையினர் தப்பி ஓடியமைக்கு என்ன காரணம் என்றால்-படையினருக்கு வெற்றி குறித்து நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் இராணுவத்தின் போர்த் திட்டங்கள் அமையவில்லை அத்துடன் படையினரை ஒழுங்கு குலையாமல் பேணக் கூடிய தலைமைத்துவம் அமையவில்லை என்பதுதான் சரியானது.







புலிகளுடனான போரில் வீணாக உயிரைவிடுகிறோம் என்ற எண்ணம் எந்தவொரு படைச்சிப்பாயின் மனதில் உருவாகி விட்டாலும்- அவரைச் சரியான முறையில் போரில் ஈடுபடுத்த முடியாது. கிட்டத்தட்ட இராணுவத்தில் மூன்றில் ஒரு பங்கு படையினர் மத்தியில் இந்த மனநிலை தோன்றியதால்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாவது தசாப்த காலப்போர் நடவடிக்கைகளில் புலிகள் கையாண்ட போர்த் தந்திரங்களும் சரி, பயன்படுத்திய போராயுதங்களும் சரி படையினரின் அழிவுகளைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்திருந்தது.

**தன்னின்**

இதனால் தான் படையினர் மத்தியில் இந்த மனோநிலை தோற்றம் பெற்றது.

இதேவேளை அந்தப் போர் நடவடிக்கைகளுக்கு தலைமையேற்ற படைத்தளபதிகளும் படையினரைச் சரியான உளவியல் நோக்குடன் வழிநடத்தவில்லை. இந்தநிலை காரணமாக வன்னியிலும், ஆனையிறவில் படையினர் பெரும் பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது.

இந்த நிலையில் இராணுவத்தின் ஒழுங்கு கட்டுப்பாடுகளில் பெரும் சீர்குலைவு உருவானது. இன்று சுதந்திர தின அணிவகுப்பில்- முன்னால் செல்லும் இராணுவ அதிகாரியின் ஓசை நயத்துக்கேற்ப நடந்துசெல்லும் படையினரால் போர்க்களத்தில் சூழல் நிலவவில்லை.

அணிவகுப்புக்களில் இடம் பெற்ற செக் தயாரிப்பு 122 மி.மீ பல் குழல் பீரங்கிகளோ, டாங்கிகள், ஆட்லறிகளோ படையினரின் உளவியல் கட்டமைப்பை இந்த இரண்டாவது தசாப்த காலத்தில் பேணிக் கொள்ளக் கூடியதாக அமையவில்லை.

பல்குழல் பீரங்கிகள் ஆரம்பத்தில் பெரும் நம்பிக்கைக்குரிய போராயுதமாக இருந்த போதிலும் அதன் பலவீனங்களினூடாகப் புலிகள் போர் வியூகங்களை வகுத்துக்கொண்டதால் அதுவும் ஒரு பேரழிவு ஆயுதமாகப் பார்க்கப்படாத சூழல் நிலவுகிறது.

இன்று புலிகளின் இராணுவப் படைப்பிரிவுகளும், அவற்றின் தாக்கு திறன், சுயாதீனமான நகர்வு திறன் என்பவற்றோடு ஒப்பிடுகையில் அரச படைகள் அத்தகைய மேலாதிக்க நிலையில் இருக்கின்றனவா என்பது சந்தேகமே.

முதலாவது தசாப்த காலத்தில் அரச படைகள் தமது படைப்பிரிவுகளை எப்போதும் எங்கேயும் நகர்த்திச்சென்று தாக்குதல்களை நடத்தக் கூடிய உயர் நகர்வு திறனைக் கொண்டிருந்தன.

இதனால் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, ஆனையிறவு என்று தொடர்ச்சியான படை நகர்வுகளைப் படையினரால் செய்ய முடிந்தது. இதனால் புலிகளின் முன்னணிப் படைப்பிரிவுகள் படையினரின் இழுப்பிற்கேற்ப ஆங்காங்கு நகர்ந்து கொண்டிருக்க வேண்டியிருந்தது.

புலிகளின் படையணிகள் படையினரின் இழப்பிற்கேற்ப சண்டைகளை நடத்திக் கொண்டிருக்க வேண்டியிருந்தால், அரச படைகளை முடக்குவதற்கான நடவடிக்கைகளைப் புலிகளால் முழுமையாக எடுக்க முடியாதிருந்தது.

இராணுவ விஞ்ஞானத்தில்- எந்தவொரு படையமைப்பினது நகர்வு திறன் தடுக்கப்பட்டு முடக்கப்படுகிறதோ அதுவே எதிர்த்தரப்புக்குப் பெரும் வெற்றியாக அமையும். இதனால் தான் முன்னர் குடா நாட்டிற்குள்ளும், பின்னர் வன்னிக்குள்ளும் புலிகளின் நகர்வு திறனை முடக்குவதற்குப் படைத்தலைமை நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

இரண்டாவது தசாப்த காலத்திலும் அரசபடைகள், புலிகளின் நர்வு திறனைக் கட்டுப்படுத்தும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டபோதும், புலிகளின் படையமைப்புத் தொடர்ச்சியாகப் பெற்றுவந்த வளர்ச்சியினால் காலப்போக்கில் அது வெற்றி பெறாமற்போனது.

(46 ஆம் பக்கம்பார்க்க)

# தமிழக-இலங்கைத்தமிழ் மீனவரிடையே நிரந்தர பகைக்கு வித்திடும் முயற்சி!

**கெல்மன்**

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது பிரதேசத்தில் சுதந்திரமாக தொழில் செய்வதில் பல்வேறு தடைகள்- ஆக்கிரமிப்புக்கள்- இடர்பாடுகள்- முட்டுக்கட்டைகள் பலவருடங்களாக இருந்து வருகின்றன.

மீன்பிடி விவசாயம் உள்ளிட்ட அனைத்துத் தொழில் துறைகளையும் தமது படைபலத்தைக் கொண்டு அழித்து தமிழர்களின் பொருளாதார வலுவை செயலிழக்கச் செய்வது தமிழர்களை அடிமைகளாக வைத்திருக்க விரும்பும் சிங்களப் பேரினவாதிகளின் சிந்தனைக்கான செயல்வடிவங்களே.

சிங்கள பேரினவாதிகளின் நடவடிக்கைகளினால் தமிழர்களின் பல்வேறுபட்ட தொழில் துறைகளும் பாதிக்கப்பட்டு / அழிக்கப்பட்டுள்ள போதும் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை பற்றி ஆழமாக நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை இருவேறு தேசங்களின் அரசியல் நடவடிக்கைகளுக்குள் சிக்கித் தவிக்கிறது. எமது மக்களின் வயிற்றுப்பசியை வைத்து இரு தேசங்களின் அரசியல் வாதிகள் பரஸ்பரம் நன்மை அனுபவிக்கும் வகையில்



அரசியலாக்கி காய் நகர்த்திச் செல்கின்றனர். இதன் விளைவாக பாதிக்கப்படுவதும் நட்டப்பொறுப்பை ஏற்கவேண்டியிருப்பதும் இலங்கை வடபகுதி மீனவர்களாகும். நன்மை அனுபவிப்பது சிங்கள மற்றும் தமிழக அரசியல்வாதிகளே. அவர்கள் இதற்காக வகுக்கும் வியூகங்களையும் இராஜதந்திர காய்நகர்த்தல்களையும் இலங்கைத் தமிழர்கள் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

வடக்கு கடற்பகுதியில் மீனவர்கள் தொழில் செய்ய முடியாதவாறு நீண்டகாலமாகத் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது. அரசு- புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் ஓரளவு தொழில் செய்யக்கூடிய தளர்வு ஏற்பட்டுள்ள போதும் ஆழ்கடல் மீன்பிடிக்கு விதிக்கப்பட்டிருந்த யுத்த காலத்தடை தற்போது தொடர்கிறது.

இந்நிலையில் தமிழக மீனவர்கள் இலங்கையின் வடக்கு கடற்பகுதிக்குள் அத்துமீறி-எல்லை தாண்டி மேற்கொண்டு வரும் தொழில் முயற்சியானது வடபகுதி மீனவர்களின் பாரம்பரிய தொழிலில் பாரிய பாதிப்புக்களை உண்டு பண்ணுகிறது. இவை வளச்சுரண்டல்- அதனால் தொழில் வருவாய் இழப்பு சொத்தழிவு இவை தவிர இரு நாட்டு மீனவர்களுக்கிடையிலான மோதல்கள் என பல்வேறுபட்ட இன்னல்களை உண்டு பண்ணுகிறது.

இலங்கையின் வடக்குக் கடல் வளத்தை தமிழக மீனவர்கள் சூறையாடுவது மட்டுமல்ல. இலங்கை-வடக்கு மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களும் / குறிப்பாக வலைகளுக்கும் பெரும் சேதத்தினையும் உண்டுபண்ணுகின்றனர். இதற்கு தமிழக மீனவர்களின் இழுவைப்படகு முறையிலான தொழில்முறை வாய்ப்பாக அமைகின்றது. வடக்கு மீனவரின் மீன்பிடி முறைக்கும்-தமிழக மீனவர்களின் மீன்பிடி முறைக்கும் இடையில் பெரும் வேறுபாடு உண்டு. தமிழக மீனவர்கள் இழுவைப்படகு முறையைப் பயன்படுத்துகையில் வடபகுதி மீனவர்கள் படுப்பு வலை முறை மற்றும் வளிச்சல் முறையிலான தொழில் முறையினையே கைக்கொள்கின்றனர். இவ்விரு முறையிலான தொழில்களும் ஒரே நேரத்தில் ஒரே கடற்பகுதியில் மேற்கொள்ள முடியாததாகும். ஒரே கடற்பகுதியிலாகின் வெவ்வேறு நேரங்களிலும் ஒரேநேரத்திலாகின் வெவ்வேறு கடற்பகுதிகளிலுமே மேற்கொள்ள முடியும். மாறாக மேற்கொள்ளப்படுமானால் படுப்பு, வலை மற்றும் வளிச்சல் வலை முறையில் தொழில் செய்வோர் பெரும் சேதங்களை சந்திக்க வேண்டிவரும். இந்த நிலையிலும் தமிழக மீனவர்களின் இழுவைப்படகுகள் இலங்கையின் வடபகுதி கடலில இருநாடுகளுக்கிடையேயான கடல் எல்லையையும் பொருட்படுத்தாமல் அத்துமீறி தொழில் செய்து வருகின்றன.

இதனால் அவ்வப்போது வடபகுதி மீனவர்களின் வலைகள் சேதப்படுத்தப்படுவதோடு இருநாட்டு மீனவர்களுக்குமிடையில் மோதல்களும் ஏற்பட்டு விடுகிறது.

நீண்ட காலமாக தொழில் இன்றி சொத்தழிவுகளினால் பாரிய பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வரும் இலங்கை வடபகுதி மீனவர்கள் தொழிலுக்கான சகல அடிப்படைகளும் அழிக்கப்பட்ட நிலையில் கடன் அடிப்படையிலும் வேறுவழிகள் மூலமாகவும் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் பல இலட்சம் ரூபாவை முதலீடு செய்து வலைகள், வள்ளங்களை புதிதாக கொள்வனவு செய்து தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில். தமிழக மீனவர்களின் இழுவைப் படகுகளினால் வலைகள் துண்டாடப்படுதல், காணாமல் போதல் அல்லது அழிக்கப்படும் சம்பவங்கள் தமிழக மீனவர்கள் மீது பெரும் அதிருப்தியைத் தோற்றுவிப்பதாக உள்ளது.

வடபகுதி கடலில் தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பு சாதாரணமானவையல்ல. அவை ஒன்று இரண்டுமல்ல. ஒரு நாள் அல்லது இரண்டு நாள் சம்பவங்களும் அல்ல. நூறு முதல் ஐந்நூறு வரையான தமிழக இழுவைப்படகுகள் நாளாந்தம் வடபகுதிக் கடல் வளத்தை சுறண்டிச் செல்கின்றன. இந்த இழுவைப்படகுகளால் வடபகுதி மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்படுவது மட்டுமல்ல. இந்த இழுவைப்படகுகளில் பொருத்தப்படும் மடி என்னும் வலை சிறிய கண்களைக் கொண்ட பின்னலாக இருப்பதால் மீன் குஞ்சுகள், இறால், அட்டைகள் அள்ளுப்பட்டு போகிறது. இது கடல் வளம் அருகிப் போகவும் வழிவகுக்கின்றது.

இந்த அத்துமீறலையும் வளச்சுரண்டலையும் எதிர்த்து பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்கள் இந்திய மத்திய அரசுக்கும் தமிழக மற்றும் சிறிலங்கா அரசுகளுக்கும் பலதடவைகளில் முறையிட்டுள்ளனர். அதற்குப் பலன் கிடைக்காத நிலையில் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஆனால் ஆக்கிரமிப்பு- எல்லை தாண்டி கடல் வளத்தை அபகரிக்கும் நடவடிக்கை நின்றபாடில்லை. மாறாக தமிழக, சிறிலங்கா அரசியல் வாதிகள் பின்பலமாக நின்று ஊக்கம் கொடுத்தனர்/ கொடுக்கின்றனர்.

* இந்த நிலையில் தமிழக மீனவர்கள் தமது அத்துமீறும் நடவடிக்கையை நியாயப்படுத்தவும் முற்படுகின்றனர்.
* தமது எல்லைக்குட்பட்ட கடற்பகுதியில் வளம் தீர்ந்துவிட்டது. அதிகப்படியான வளம் இலங்கை கடற்பகுதியிலேயே இருக்கின்றது. இதனால் தொழிலில் வருமானத்தைப் பெற இலங்கை கடற்பகுதிக்குள் பிரவேசிக்க வேண்டியுள்ளது.
* இலங்கை கடற்பகுதியில் நாம் பாரம்பரியமாக மீன்பிடிக்கின்றோம். இரு நாடுகளுக்குமிடையேயான சர்வதேச எல்லைக் கோட்டை கவனத்தில் கொள்ளத்தேவையில்லை.
* கச்சதீவு உடன்பாடு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.
* சிறிலங்கா அரசுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி மீன்பிடித் தொழிலுக்கான சட்டரீதியான அனுமதியைப் பெற்றுத்தர வேண்டும்.

போன்ற காரணங்களையும் தமிழக மீனவர்கள் கூறுகின்றனர்.

இதனை சிறிலங்கா அரசும் கண்டும் காணாதது போல் இருந்து வருகிறது. ஏனென்றால் பாதிக்கப்படுவது சிங்கள மீனவர்களல்ல என்பதாலும் வடக்குக் கிழக்கில் தமிழர்களின் பொருளாதார வலுவைக் குன்றச் செய்வதன் மூலம் விடுதலைப் போராட்டத்தின் வலுவைக் குறைக்க முடியும் என்பதாலும் இந்த விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க இந்தியாவின் உதவிதேவை என்ற நிலைப்பாட்டில் இலங்கையில் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளதனாலுமாகும்.

இதன் காரணமாகவே தமிழக மீனவர்க ளின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு சிறிலங்கா கடற்படையினர் இதுவரை முழு அளவிலான நடவடிக்கையை எடுக்கவில்லை. இது அவர்களால் முடியாத காரியமுமல்ல. பாக்கு நீரிணையில் விடுதலைப்புலிகளின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அதிக எண்ணிக்கை யிலானதும் வலுக்கூடியதான தூர இடங்களை அவதானிக்கக் கூடியதான நவீன ரோந்துக் கப்பல்களை சிறிலங்கா கடற்படை கொண்டுள்ளது. அத்தோடு நவீன தொலைத் தொடர்புச் சாதனங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் சிறிலங்காவில் அதிகார மட்டத்திலுள்ளவர்கள் இதனை தமிழக தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழ் மீனவர்களுக் குமிடையிலான முரண்பாடாக வளர்த்தெடுத்து அதனை இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்த விளைகின்றனர். குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பு இதனை ஒருபெரும் இராஜதந்திர நகர்வாக மேற்கொள்ள முற்பட்டுள்ளது. இலங்கை சனாதிபதியின் ஆலோசகரும் தற்போதைய காபந்து அரசின் தொலைத் தொடர்பு அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமர் மேற்கொண்டுள்ளார்.

கடந்தமாதம் 18 ஆம் திகதி தமிழக தலைநகர் சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய லக்ஸ்மன் கதிர்காமர் தமிழக மீனவர்களைக் கடத்துவது; துன்புறுத்துவது விடுதலைப்புலிகள்தான். அந்தப் பிரச்சினைக்கும் சிறிலங்கா படைகளுக்குமிடையில் எந்தத் தொடர்பும் இல்லை எனக் கூறியுள்ளார்.

இத்நிலையில்தான் தமிழக, இந்திய மத்திய அரசுகள் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையை தங்களது நாட்டு எல்லைக்குள் நின்று தீர்க்க முற்படாது இலங்கை அரசின் இந்தியாவுடனான நட்புத் தேவையை துரும்புச் சீட்டாக வைத்து வளச்சுரண்டலை மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்ல இலங்கைத் தமிழர் மத்தியிலான தமிழக சகோதர உணர்வைச் சிதைத்து விடவும் முற்பட்டு நிற்கின்றன.

இலங்கை வடபகுதி கடற்பகுதியில் அத்துமீறலை ஊக்குவித்து தமிழக மீனவர்களையும் இலங்கையின் வடபகுதி மீனவர்களையும் மோதவிட்டு நிரந்தரபகை உணர்வை ஏற்படுத்துவதில் வெற்றி காண்பதே சிறிலங்காக் கட்சிகளினதும் தமிழக அரசினதும் குறிக்கோளாக இருந்து வருகிறது. இலங்கைத் தமிழர்களின் தனிநாட்டுக்கான விழிப்புணர்வு தமிழக தமிழர்கள் மத்தியிலும் தனிநாட்டுக்கான உணர்வெழுச்சியை ஏற்படுத்தி விடுமென இந்திய அரசியல் வாதிகள் அஞ்சுகின்றனர்

இலங்கைத் தமிழர்கள் சிங்களப் பேரினவாதிகளின் அடக்குமுறை ஆட்சியிலிருந்தே வெளியேற விரும்புகின்றனர். ஆனால் இந்திய அரசியல்வாதிகள் பிழையான கற்பிதங்களின் - அடிப்படையற்ற ஊகங்களின் அடிப்படையில் தமிழக மக்கள் இலங்கைத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்திற்கான தார்ப்பரியங்களைப் புரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்ளை மூடி அவர்களை மோதவிடும் தந்திரோபாயத்தைக் கடைப்பிடிக்கின்றனர். குறிப்பாக தமிழக ஆழும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமிழக மீனவர்களின் வயிற்றுப் பசியையும் உணர்வு பூர்வப் பிரச்சினையாக்கி அதில் அரசியல் ஆதாயம் தேட முற்படுகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பகையுணர்வைக்கொண்டவரான தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இவ்விடயத்தில் மத்திய அரசாங்கம் மீதும் அழுத்தம் கொடுத்து




வருகின்றார். எல்லை மீறும் தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களின் பின்னணியில் விடுதலைப்புலிகள் இருப்பதாக குற்றஞ்சாட்ட முனைகின்றார். இவற்றின் விளைவுகளே தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்து மீறிப் பிரவேசித்தலும் இலங்கை வடபகுதி மீனவர்களுடனான மோதலுமாகும்.

ஆயினும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு பொய்யானது என்பதற்குக் கடந்த ஆண்டு டிசம்பா மாதம் 24ஆம் திகதி எல்லைதாண்டும் தமிழக மீனவர்கள்

(40ஆம் பக்கம் பார்க்க)


15ஆவது ஆண்டில் கால்பதித்து வைக்கும் ஈழநாதமே! உன் பணி தொடரட்டும்...
சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்
உந்துருளி விற்பனையில் முன்னணி வகிக்கும் நிறுவனம்
நாயகி கட்டடம்,
பரந்தன் சந்தி அருகாமை,
யாழ்சாலை,
கிளிநொச்சி.
உங்கள் சிறந்த தெரிவுகளுக்கு
எங்களின் காட்சியறைக்கு வாருங்கள்.
(சி-9236)


வீரம் விளைந்த மண்ணில் விடுதலைக்குரலாய் ஒலிக்கும் எங்கள் ஈழநாதமே!
உன் அகவைகள் தொடரட்டும் என வாழ்த்துகின்றோம்
அங்கத்தவர்கள்,பணியாளர்கள்
கட்டைவேலி -நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
கரவெட்டி
தொ.பே: 021–226 3263
தொ.நகல்: 0602–212540
(சி-9237)


இன்று புதிய அகவை காணும் ஈழநாதம் நாளிதழுக்கு எமது வாழ்த்துக்கள்!
SUMEE
SM கோல்ட் ஹவுஸ்
இல: 46A ,தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: - 24-2224247, 077 - 6059672.
காலத்தால்
அழியாத கண்கவர்
தங்க நகைகளை சுத்தமான
22கரட் தங்கத்தில் தெரிவுசெய்து
பெற்றுக்கொள்ளலாம்.
(சி-9238)


ஆண்டு பதினைந்தில் அடியூன்றி நிமிரும் ஈழநாதமே! அன்போடு வாழ்த்துகின்றோம்.
நவநாகரீக நங்கையர் விரும்பும் நவீன ரக
ஆடைகளுக்கும் புத்தம் புதிய பட்டுப்புடவைகளுக்கும்
கைராசியான நிறுவனம்.
லிட்டில் இந்தியன் பெஷன்
77, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-222 6440
(சி-9239)


நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை
அசல் 22 கரட்டில் அழகாக வடிவமைத்து
உங்களுக்கு தருபவர்கள்!
அகவை பதினைந்தில் பாதம் பதிக்கும்
ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்.
சிவா கோல்ட் ஹவுஸ்
இல:- 56, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P:- 024 - 2223034
(சி-9240)


EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்
யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.
ஒதுக்கீடுகளுக்கு
அழையுங்கள் -
021-2223891,021-2226297, 0114 512666,
011-2360291, 0712-348888, 0712-349999,
011-2360290,
e-mail- jaffna@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

# சாதனை மனிதன் எதிர்வீரசிங்கம்

## ஒரு நேர்முகம்

**நேர்கண்டவர்: அ.அன்ரன் அன்பழகன்**

**1958**ஆம் ஆண்டு யப்பானின் தலைநகர் ரோக்கியோவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின் மெய்வல்லுனர் குழுவில் எனக்கு இடம்தர மறுத்துவிட்டார்கள். நான் தமிழனாக இருந்ததுதான் காரணமோ தெரியவில்லை. ஆனாலும் அப்போதைய பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் விளையாட்டுப்பகுதி ஆசிரியராக இருந்த திரு. காட்டன் செனவிரத்தின என்பவரின் பெருமுயற்சியால் எனக்கு அணியில் இடம் வழங்கப்பட்டது. போக்குவரவுக்கானபணம் வழங்கப்படவில்லை. பின்பு திரு.காட்டன் செனவிரத்தினவின் முயற்சியால் அக்கால தொழில் அதிபர்களில் ஒருவரான திரு டோணவன்அன்ரே என்பவர் எனக்குரிய பிரயாண வசதிகளைச் செய்து தந்தார் எனத் தெரிவித்தார் ஆசிய போட்டிகளில் இலங்கைக்கான முதலாவது தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்த திரு.நாகலிங்கம எதிர்வீரசிங்கம் அவர்கள். 1958இல் ரோக்கியோவில் இவர் உயரம் பாய்தலில் பெற்றுக் கொண்ட முதலாவது தங்கப் பதக்கமே இலங்கைக்குரிய ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் தங்கப்பதக்க மாயிற்று. 6 அடி 8 அங்குல உயரத்தைத் தாண்டிய இவரின் இலங்கைக்கான சாதனை 30 வருடங்களின் பின் இலங்கையில் 1988இல் மக்ஸ்வெல் பெர்னான்டோ என்பவரால் முறியடிக்கப்பட்டது.



1934ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 17வது வயதில் சாதாரணதரம் படிக்கும் போதே பின்லாந்து "கெல்சிங்" நகரில் (1952இல்) நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். யாழ்ப்பாணம் 'விளான்' கிராமத்தில பிறந்த இவர் தனது இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெற்றுக்கொண்டார். திரு P.ராஜேந்திரன், அந்தனி அபயசிங்க ஆகியோரைத் தன்னுடைய பயிற்றுனர்களாகக் குறிப்பிடும் இவர் கூச்சமும்,(excitemet) உடையவராகவே ஆரம்பமுதல் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

பெரும்பாலும் வீட்டிலேயே தனியாகப் பயிற்சி செய்த தாகக் குறிப்பிடும் இவர் ஆரம்பத்தில் Western Roll முறையிலேயே பாய்ந்ததாகத் தெரிவித்தார். 1953 இல் ஒரு சிறுவன் ஸ்ரேடில் முறையில் பாய்வதை அவதானித்த தான் பின்பு அம்முறையை அவதானித்து அது தொடர்பான விடயங்களைப் புத்தகங்களில் இருந்தும் பெற்றுக் கொண்டு தன்னுடைய பாயும் திறனை விருத்தி செய்ததாகக் கூறுகிறார்.

தினமும் பயிற்சி செய்தமையாலேயே தனது பாயும் திறன் அதிகரித்ததாகக் கூறும் இவர் 1958 மே மாதம் 25ஆம் நாள் இலங்கைக்காக ஒரு தங்கப் பதக்கத்தை யப்பானிய மண்ணில் பெற்றுக் கொடுத்த அடுத்தநாள் இலங்கையில் துயரம் மிகுந்த தமிழ் மக்கள் வாழ்வில் கறைபடிந்த இனக்கலவரம் கொழும்பில் நிகழ்ந்ததையும் தெரிவித்தார்.



கேணல் கிட்டு நினைவு உதைபந்தாட்டப் போட்டி இறுதிநாள் நிகழ்வில்

இளைஞர்களின் குறிப்பாக விடுதலைப் புலிகளின் தியாகம் நிறைந்த அர்ப்பணிப்புக்கள்தான் இன்று உலகறிந்த கௌரவத்தை ஈழத்தமிழர் தேசிய இனத்துக்கு ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கும் இவர், எல்லோருமே ஒற்றுமையாக இருந்து தனித்துவமான அதிகாரமுள்ள தன்னாட்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்கிறார். இல்லையேல் எமக்காகச் சேவையாற்ற எவருமே இல்லாது போய்விடும் எனவும் குறிப்பிடுகிறார்.

விளையாட்டுத்துறையில் குறிப்பாக, உயரம்பாய்தலில் மட்டுமே இவரின் திறமை மட்டுப்படுத்தப்படவில்லை. அமெரிக்க Cornell university இல் மண்ணிரசாயனம்,கல்வி உளவியல் ஆகிய இரு துறைகளிலுமே கலாநிதி (முனைவர்) பட்டத்தைப் பெற்று கல்விப் புலத்திலும் சிறந்து விளங்கும் இவர் சிறிது காலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடத்திலும், வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சிலும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றியுள்ளார்.

பொதுவாக மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு உடைய இவர், குறிப்பாக இளைஞர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி மற்றும்,கல்வி விடயங்களில் வழிகாட்டுவதில் ஆர்வமுடையவராகக் காணப்படுகின்றார். எப்போதுமே தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளத்தயாராக இருக்கும் இவர், தற்போது இலங்கையில் சிறப்பான அடைவுகளையுடைய உயரம் பாய்தல் வீரர்களுக்கு பயிற்சி வழங்கி வருகிறார். ஆண்களும்,பெண்களுமாக 14 பேருக்கு இந்தச் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது. இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படுவதற்கு பெருமளவு ஊதியம் வெளிநாட்டு நிபுணர்களால் பெற்றுக்கொள்

**தினமும் பயிற்சி செய்தமையாலேயே தனது பாயும் திறன் அதிகரித்ததாகக் கூறும் இவர் 1958 மே மாதம் 25ஆம்நாள்இலங்கைக்காக ஒரு தங்கப் பதக்கத்தை யப்பானிய மண்ணில் பெற்றுக் கொடுத்த அடுத்த நாள் இலங்கையில் துயரம் மிகுந்த தமிழ் மக்கள் வாழ்வில் கறைபடிந்த இனக்கலவரம் கொழும்பில்நிகழ்ந்ததையும்தெரிவித்தார்.**

ளப்படுகின்றபோதும் இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனத்துக்காக, இதனை இலவசமாகவே நடத்துகிறார் திரு. எதிர்வீரசிங்கம். இவருடைய இந்த சேவை பற்றிக் குறிப்பிடும் சிறிலங்கா டெய்லிமெரர் பத்திரிகை Arranged the camp with the kind approval from Ethir weerasingham who has done tremendously to improve the standards of Srilankan athletics எனப் புகழ்ந்துள்ளது.

இதே போன்று மாகாண மட்டத்தில் கடை நிலையில் உள்ள வடகிழக்கு மாகாண மெய்வல்லுனர்களில் சிறப்பு அடைவையுடைய ஆண்களும் பெண்களுமாக 40 பேருக்கும் அவர்களுடைய பயிற்றுனர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் தொடர் பயிற்சி நெறி ஒன்றையும் வழங்கி வருகிறார். எப்போதுமே சமூகம் மீது நேசிப்பு மிகுந்த இந்த முன்னாள் ஆசிய மெய்வல்லுனர் வெற்றியாளர் தமது 70 வதாவது வயதிலும் கூட பளு தூக்குதல் உட்பட உடற்பயிற்சிகளைத் தினமும் செய்து வருகிறார் என்பது குறிப்பிடும்படியான விடயமாகும்.

கல்வி என்பதன் முழுமை (holistic) அறிவைப் பெறுதல், விளையாட்டு,கலாச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என எல்லாவற்றையுமே இணைத்ததாக அமைய வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். வளர்ச்சியடைந்த ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் கல்வி என்பது விளையாட்டு,கலாச்சார நடவடிக்கைகள் என எல்லாவற்றையுமே இணைத்ததான முழுமையுடையதாக இருக்க எமது தேசத்தில் மட்டுமே இவை தனித்தனியாக நோக்கப்படும் முறமை ஏற்பட்டுவிட்டது எனத் தெரிவித்தார்.

உடல் வளர்ச்சி,அறிவு வளர்ச்சி, சமூக இயைவாக்கம் என்பவற்றின் இணைவே மனிதனில் முழுமையான ஆளுமை வளர்ச்சியை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டார்.

வெற்றி பெறுவதும், பதக்கங்களை வெல்வதுமான



இலக்கு மட்டுமே விளையாட்டாகாது. ஒவ்வொரு மனிதனும் ஆரோக்கியத்தைப் பெறுவதற்கும், மனமகிழ்வெய்வதற்குமான ஊடகமாக விளையாட்டு அமைய வேண்டும். குறிப்பாக 30 வயதின் மேல் எல்லா மனிதர்களுக்குமே விளையாட்டு அவசியமாகிறது என்கிறார். ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விளையாட்டில் இணைந்திருத்தல் அவனுடைய சமூக இயைபாக்க வளர்ச்சிக்கு உதவும் என்கிறார்.

இளைஞர்களைப் பொறுத்தவரை விளையாட்டில் சாதனைபுரிய வேண்டுமாயின் விளையாட்டுப் போட்டிக்குரிய காலத்தில் மட்டும் பயிற்சியில் (seasonal trainin g) ஈடுபடாமல் சாதனைகளை இலக்காக வைத்து காலம் முழுவதுமே (Round the year) பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்கிறார்.

இளைஞர்கள் குறிப்பாக சிறியவர்கள் விளையாட்டில் ஆர்வம் ஏற்பட விளையாட்டு பூங்காக்கள் (Sports parks) அமைக்கப்பட வேண்டும் என்கிறார். இவற்றில் கிரிக்கெட், உதைபந்து,மெய்வல்லுனர், கரபந்து வலைபந்து, கூடைப்பந்து என்பவற்றிற்கான களங்களுடன்,தசை வலுவூட்டல் உபகரணங்களும் பேணப்பட வேண்டும் எனத் தெரிவிக்கும் இவர், இங்கு பெற்றோரே பிள்ளைகளை அழைத்துச் செல்லும் நிலைமையும் உருவாக வேண்டும் என்கிறார். ஆரம்பத்தில் எல்லா விளையாட்டுக்களிலுமே ஈடுபடும் பிள்ளைகள் காலக்கிரமத்தில் தமக்குரிய விளையாட்டைத் தேர்வு செய்துகொள்வர் எனவும் குறிப்பிடுகிறார். இவ்வாறான Sports parks ஒரு சமூகத்தின் ஆரோக்கியத்தின் அடையாளமாக மட்டுமல்ல,சமூக மேம்பாட்டின் அடையாளமாகவும் திகழும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா அனுபவங்களைப் பொறுத்தவரை அங்கு சிறப்பான அடைவையுடைய விளையாட்டு வீரர்களுக்கு கல்வியில் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. இவர்கள் தமது புலமைப் பரிசிலை தக்கவைத்துக்கொள்வதற்காக கல்வியிலும், விளையாட்டிலும் அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளது. அமெரிக்க மெய்வல்லுனர்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைவருமே பல்கலைக்கழக மாணவர்களாகவோ,அல்லது பட்டதாரிகளாகவோ இருப்பதற்கு இதுவே காரணம் என்கிறார்.

விளையாட்டுத்துறையில் உயர்கல்விக்கு இலங்கையில் தமிழ்மொழி மூலம் கற்பதற்கான வாய்ப்பு இன்றுவரை இல்லை. விளையாட்டு விஞ்ஞானத்துக்கான உயர்கல்வி நிறுவனம் ஒன்று தமிழ்மொழியிலும் அவசியம் நிறுவப்பட வேண்டும் என்கிறார். 50களில் ஏற்படுத்தப்பட்ட இவரின் அடைவை தொடக்கக் கூடிய ஒருவர் கூட இன்றுவரை தமிழர் தாயகத்தில் உருவாகவில்லை என்பதே எமது விளையாட்டு வளர்ச்சி பற்றிய மதிப்பீட்டுக்கு நல்லதொரு உதாரணமாகும்.

உள்ளதை உள்ளவாறு எடுத்துக்கூறி, பத்திரிகா தர்மத்தைக்கடைப்பிடித்து, தமிழீழ மக்களுக்கு தொண்டாற்றி வரும் "ஈழநாதம் மக்கள் நாளிதழ்" இன்று தனது 14 வது ஆண்டு நிறைவுச்சிறப்பிதழாக வெளிவருவதை முன்னிட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

- குறைந்த விலையில் நிறைந்த பயன்பெற நீங்கள் நாடவேண்டிய ஒரேஇடம் - சங்கானை ப.நோ.கூ.சங்கம்.
- தரமான பாண், பிஸ்கட், பணிஸ் வகைகளுக்கு - மக்கள் வெதுப்பகம், கொட்டைக்காடு, வட்டுக்கோட்டை.
- சுவையான சிற்றுண்டி வகைகளுக்கு - மக்கள் உணவகம், பிரதான வீதி, சங்கானை.
- கவர்ச்சியான, தரமான புடைவைகளுக்கும், எவர் சில்வர் பொருட்களுக்கும் - மக்கள் புடைவை நிலையம், சங்கானை.
- தேவையான நிழற்படப்பிரதிகளுக்கும், அடையாள அட்டை கவரிடுதல், றோணியோ வேலைகளுக்கும், வெளிநாடு, உள்நாடு தொலைத்தொடர்பு வசதிகளுக்கும் - தலைமைக்காரியாலயம் சங்கானை.
- சகல விதமான எரிபொருள், ஓயில் வசதிகளுக்கும் - எரிபொருள் விற்பனை நிலையம், சித்தங்கேணி.
- சகல விதமான நுகர்ச்சிப்பாவனைப்பொருட்களுக்கு நாடவேண்டியது - சங்கானை ப.நோ.கூ. சங்கத்தின் கிளை நிலையங்கள்.

எமது பாவனையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதே எமது கூட்டுறவின் சேவையாகும்.

"கூட்டுறவே தமிழீழ நாட்டுயர்வு" T.P: 0602- 212526

சங்கானை ப.நோ.கூ.சங்கம்,
தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள். (சி-9222)



அழகிய கலைநயம்...
எழிலுறு தொழில் வளம்...
உயர்தரமிகு தங்க நகைகளுக்கு...

ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்

22கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

Thaya Nakai Poonka

தயா நகைப்பூங்கா

TNP

213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5846 0777-840379 (சி-9221)

SM Graphics

புதிய அகவை காணப்புறப்படும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

உங்கள் இசை ஆவல்களைப்பூர்த்தி செய்ய எம்மிடம்

- புதிய, பழைய video CD'S
- புதிய, பழைய, இடைக்கால Audio CD'S
- அனைத்து வகையான MP3 CD'S
- தமிழ், ஆங்கில DVD
- கர்நாடக சங்கீத CD'S
- இந்து, கிறிஸ்தவ பக்திப்பாடல் CD'S
- Soft Ware, Games CD'S
- Audio கசட் வகைகள்
- உலக நாடுகளின் (டிஸ்கவரி) CD கள்

மியூசிக் வேள்ட்

பலாலி வீதி,
தபால்பெட்டி சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 6554

E-mail:musicworld@yahoo.com

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்
மீண்டும் உங்களை அழைக்கும்



மற்றும் CD கவர், Blank CD, போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்.

Music World

(சி9220)

SM Graphics



# வாழை, மூங்கில் இரு வர்த்தகப் பயிர்கள்

கலாநிதி க. சோமாஸ்கந்தன்

உலகின் நான்காவது மிக முக்கியமான உணவுப் பயிராக வாழை இடம்பெறுகிறது. நெல், கோதுமை, சோளம் என்பன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை வகிக்கின்றன. சிறிலங்காவில் 50,000 கெக்டேயர் நிலப்பரப்பில் வாழை பயிரிடப்படுகின்றது. இதில் வீட்டுத் தோட்டங்களின் பரப்பளவு சேர்க்கப்படவில்லை. நெல் உற்பத்



திக்கு அடுத்த இடத்தில் வாழைச் செய்கை இலங்கையில் இடம் பெறுகின்றது. வாழை தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவைப் பிறப்பிடமாகக் கொண்டது. மரம் என்று குறிப்பிட்டாலும் இலையும், இலையின் மாறுபட்ட வடிவங்களும், கிழங்கும் கொண்ட தாவரமாகவே இது அமைகிறது.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனித உணவாக வாழை கணிப்பிடப்படுகின்றது. கி.மு.327 இல் மகா அலெக்சாந்தரின் இராணுவம் இந்தியா வந்தபோது அங்கு பண்ணெடுங்காலமாக வளரும் வாழையை அவர்கள் கண்டார்கள். தென்கிழக்காசியாவின் வாழையை இதுவரை அடையாளம் காணப்படாதவொரு இனம். இந்துமா கடல் ஊடாக கிழக்கு கிழக்கு ஆபிரிக்கக் கரைப் பகுதிகளுக்கு எடுத்துச் சென்றதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். பானானா(Banana) என்ற வாழையின் பெயர் ஆபிரிக்க மொழியைச் சார்ந்தது.

ஆபிரிக்காவிலிருந்து 15 ஆம் நூற்றாண்டளவில் போர்[illegible]க்கேயரால் பிறபாகங்களுக்கு [illegible] எடுத்துச் செல்லப்பட்டது. 16[illegible] ஆம் நூற்றாண்டுகளில் அது [illegible]கு இந்தியத் தீவுகள், மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளுக்கும் பரவியுள்ளது. இன்று வர்த்தக அடிப்படையில் மிகப் பிரமாண்டமான வாழைத்தோட்டங்களைப் பராமரிக்கும் நாடுகளாகப் பிலிப்பீன்ஸ், அமெரிக்க மாநிலமான காவாய் தீவுகள், மேற்கு இந்தியத் தீவுகள் மற்றும் தென் அமெரிக்க நாடுகளும் இடம்பெறுகின்றன. உலக வங்கியின் மதிப்பீட்டின்படி 130 நாடுகள் வாழைச் செய்கையைப் பெருமளவில் மேற்கொள்கின்றன.

வாழைச் செய்கைக்கு ஒதுக்கப்பட்ட உலகின் மொத்தப் பரப்பளவு 8.8 மில்லியன் கெக்ரேயர் என்றும் வருடாந்த வாழைப்பழ உற்பத்தியின் மொத்த எடை 97.15 மில்லியன் தொன் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலகின் மொத்த வாழைப்பழ உற்பத்தியில் 18 வீதத்தை இந்தியா சாகுபடி செய்கின்றது. வாழைப்பழத்தை மிகக் கூடுதலாக தயாரிக்கும் நாடு இந்தியாவாக இருப்பினும் உள்நாட்டு நுகர்ச்சிக்கே அது போதுமானதாக இருக்கின்றது.

சிறிலங்காவில் வாழைப்பழ உற்பத்தி சரிந்து வருவதாக விவசாயத் திணைக்களத் தகவல்கள் மூலம் அறியப்படுகின்றது. 1983-2001 காலப்பகுதியில் பயிர்ச்செய்கைக்கு உட்பட்ட பரப்பளவு விரிவடைந்தாலும் பெறப்பட்ட பழத்தின் மொத்த எடை கணிசமானளவு வீழ்ச்சியடைந்துள்ளது. பீடைகளும், வாழையைத் தாக்கும் நோய்களும் வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன. நோயற்ற வாழைக்குட்டிகளின் தட்டுப்பாடுவாழை நிலங்களின் தவறான முகாமைத்துவமும், நீர் வசதிக்குறைவு தெரிவுசெய்யப்பட்ட நிலங்களின் பொருத்தமின்மை பிறகாரணங்களாக அமைகின்றன.

நோயற்ற குட்டிகளைப் பெறுவதற்கு வர்த்தக அடிப்படையில் வாழைச்செய்கையில் ஈடுபடும் நாடுகள் வாழையின் திசுக்களில் இருந்தே தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. இதனால் இரு முக்கிய அனுகூலங்களை அவர்கள் பெறுகின்றனர். திசுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட வாழைக்குட்டிகளைப் பெருமளவில் தயாரிக்க முடியும். அத்தோடு நோயற்ற திசுக்களில் இருந்து நோயற்ற குட்டிகளைப் பெறமுடியும். நோயுள்ள தாய் மரம் நோயுள்ள குட்டியைத் தரும் என்பதை விவசாயிகள் அறிவர். பெருமளவு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யும் போது அவையாவும் உருவத்திலும், எடையிலும், ருசியிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று சந்தை எதிர்பார்க்கின்றது. வழமையான முறையில் இதைச் செய்யவியலாது. திசு மூலமான தயாரிப்பு மாத்திரமே மிக உகந்தது.

நிலத்தின் மேற்பர வாய்க்கால் மூலம் நீர் பாய்ச்சுவதை வாழைச் செய்கையில் ஈடுபடும் பெருந்தோட்டக்காரர்கள் தவிர்த்து வருகின்றனர். சிறு விவசாயிகளுக்கு நிலத்தடி மூலம் வாழையின் வேருக்கு நீர் பாய்ச்சுவது கட்டுப்படியாகாமல் இருக்கின்றது. வட்டவல தேயிலைத் தோட்டத்தில் நீர் வீழ்ச்சி குறைந்த போது நிலத்தின் கீழ்ப்பகுதி ஊடாக சொட்டு நீர்(Underground Drip System) பாய்ச்சும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இத்துறையில் நிபுணத்துவ அனுபவமுள்ள இஸ்ரேலின் பிளாஸ்ரோ அனைத்துலக நிறுவனம் வரவழைக்கப்பட்டது. 61,000 தேயிலைச் செடிகளுக்கு சொட்டு நீர் பாய்ச்சும் ஒழுங்காக ரூபா 3 மில்லியன் செலவில் இந்த நிறுவனம் செய்து கொடுத்தது. கினிகத்தனையிலுள்ள இத்தோட்டம் பிறதோட்டங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

வாழைக்கான பசளை கலந்த நீரை மேற்கூறிய நிலத்தடி சொட்டு நீர் முறையில் பாய்ச்சும் தொழில்நுட்பம் பெரும்பாலான வர்த்தக அடிப்படையில் வாழை சாகுபடி செய்யும் நாடுகளில் கைக்கொள்ளப்படுகின்றது. இந்தியாவிலும் இது வழமையாகிவிட்டது. இந்தவகை நீர் பாய்ச்சுதலோடு வாழை மரங்களை நெருக்கமாகவும் நடும்படி துறைசார் நிபுணர்கள் பரிந்துரை செய்கின்றனர். கெக்ரேயர் ஒன்றிற்கு 3250 தொடக்கம் 4000 வரை யிலான வாழைகளை நடும்படி ஆலோசனை வழங்கு கிறார்கள். சாம்பல் வாழையை நெருக்கமாக நடும்போது கூடுதல் பயன் கிடைத்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.



வாழைக்குலைகளைப் பொலித்தீன் பைகளால் மூடிக்கட்டும்போது குலைகளின் பருமன் கூடுவதாக பெருந்தோட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர். முற்றமுன்பு குலைகளை இவ்வாறு செய்வது மூலம் 20 வீதம் கூடுதலான பயன் இந்தியாவில் பெறப்பட்டுள்ளது. சென்ற வருடம் சிறிலங்காவிலும் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட போது 33 வீதம் கூடுதலான பலன் கிடைத்ததாக விவசாயத் திணைக்களம் அறியத்தருகின்றது. நீர் வசதிகள் கூடுதலான பகுதிகளில் கூடுதல் விளைச்சல் கிடைப்பதாகவும் நீர் வசதிகள் குறைந்த மட்டுப்படுத்தப்பட்ட விளைச்சல் கிடைப்பதாகவும் அதே அறிக்கை கூறுகின்றது.

வாழையைத் தாக்கும் பீடைகளும் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்கு நாசினிகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். பீடைகளையும், நோய்களையும் கட்டுப்படுத்தும் நுண்ணுயிரிகளை பயன்படுத்துவதால் சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கலாம் என்று அவர்கள் சொல்கின்றனர். இந்த வழிமுறை இந்திய வாழைத் தோட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

வாழைப்பழத்தை உண்ணலாம், வாழைக்காயைச் சமைக்கலாம் என்பதோடு நாம் திருப்திப்படுகிறோம். மேற்கு இந்தியத் தீவுகளில் வாழைப்பழத்திலிருந்து மதுபானம் தயாரிக்கிறார்கள். வாழைப்பழ வாசத்துடன் மிகவும் உயர்வான போதை தருவதாகும் நுகர்வோர் சொல்கின்றனர். காய்ந்த வாழைப்பழத்திலிருந்து உணவு வகைகளைத் தயாரிக்கலாம். காய்ந்த வாழைப்பழத்தை மாவு தயாரித்துப் பல்வகையான பலகாரங்களைச் செய்யலாம். வாழைப்பழ மாவைக் கோதுமை மாவுடன் கலந்து ரொட்டி, பிஸ்கட் போன்ற வெதுப்பிகளை உருவாக்க முடியும். குழந்தை உணவுகளில் வாழைப்பழ மாவு கலக்கப்படுகின்றது. வாழைப்பழத்திலிருந்து மிகவும் ருசியான மென்பானம் தயாரிக்கப்படுகின்றது. வாழை இலையில் தொடர்ச்சியாக உணவருந்தி வருபவர்களுக்கு நல்ல தேகாரோக்கியம் ஏற்படுகின்றது. நோய்த் தடுப்பு வலு அதற்கு உண்டு. வாழை நடுத்தண்டின் சாற்றுக்கு நஞ்சை முறிக்கும் சிறப்பு இருப்பதாக நாட்டு வைத்தியர்கள் கூறுகின்றனர். வாழைப்பழம் சிறந்த மலமிழக்கி என்பதோடு அதில் பொட்டாசியம் போன்ற உணவுச் சத்துக்கள் இருப்பது கண்கூடு.

உலக பொருளாதாரத்திலும் அதன் காரணமாக அரசியலிலும் 'பச்சைத்தங்கம்'(Green Gold) என்றழைக்கப்படும் 'ஆனை வாழைப்பழம்' பெரும்பங்கு வகிக்கின்றது. இந்தரக வாழைப்பழத்தின் மூன்றில் இரண்டு வர்க்கத்தை அமெரிக்காவின் மூன்று பழ வர்த்தகம் செய்யும் நிறுவனங்களான டோல் (Dole) டெல்மொன்றோ(Del monte),சிக்கிற்றா(Chiquita) என்பன தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. தென் அமெரிக்காவின் குடியரசுகள் இந்த மூன்று வர்த்தக நிறுவனங்களுக்குப் பக்கபலமாக அமெரிக்கா அரசு செயற்படு கின்றது. அமெரிக்காவின் தென் அமெரிக்கா நாடுகள் சம்பந்தமான வெளியுறவுக் கொள்கை இந்த நிறுவனங்களின் ஆலோசனைப்படியே உருவாக்கப்படுகின்றன. மேற்கு இந்தியத் தீவுகளின் பொருளாதாரம் பெருமளவில் வாழைச் செய்கையில் தங்கியிருப்பதால் மேற் கூறிய மூன்று நிறுவனங்களின் தாக்கம் அங்கும் உணரப்படுகின்றது.

நெல், கோதுமை, மூங்கில் போன்றவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்றால் நம்புவதற்குக் கடினமாகவிருந்தாலும் அது உண்மையே. இவை மூன்றும் புற்குடும்பத்தைச் சேர்ந்தவை. அதிவேகமாகவும் மிக உயரமாகவும் வளரும் புல்லினம் என்று மூங்கில் வர்ணிக்கப்படுகின்றது. 1,250 க்கும் கூடுதலான மூங்கில் வகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 1,500 விதமான மூங்கிலை உலக மக்கள் பயன்படுத்துகிறார்கள் என்றும் இன்னும் கூடுதலான துறைகளில் பயன்படுத்தலாம் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புற்குடும்பத்தில் பூதமாகக் கருதப்படும் ஒருவகை மூங்கில் 120 அடி உயரத்திற்கு வளர்கின்றது. இதனுடைய அடிப்பாகம் 3 அடி சுற்றளவைக் கொண்டது. சீனாவில் பன்னெடுங்காலமாக ஓங்கி வளரும் பம்பூசா ஓல்ட் காமி (Bambbusa oldhamii)என்ற ரகம் மரவேலைக்கு மிகச்சிறந்ததாகக் கணிப்பிடப்படுகின்றது. இது நாளொன்றுக்கு 4 அடி உயரமாக வளரும் அதிசய இயல்புடையது. இரு மாதங்களில் அது 60



அடி உயரம் வளர்ந்து தனது முதிர்ச்சிப் பருவத்தை அடைகின்றது. அதன் பின் அதைத் தறித்துப் பயன்படுத்தலாம்.

ஒருசில அங்குலம் மாத்திரம் வளரும் சின்னஞ்சிறிய மூங்கில்களும் உள. பூந்தோட்டங்களில் அழகுக்காக வளர்க்கப்படும் மூங்கில் இனங்களும் உண்டு. சில இனங்களின் குருத்துக்களை மிகவும் சத்துள்ள மனித உணவாக பயன்படுத்தலாம். ருசியாக மிகவும் விரும்பி உண்ணப்படும் மூங்கில் குருத்து (Bamboo shoots) சீனாவிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. உணவைவிட மூங்கிலின் பயன்பாடுகள் பலதரப்படுகின்றன. கடினமான ரகங்கள் பதனிடப்பட்டபின் வீடு கட்டுவதற்கும், வீட்டுத் தளபாடங்கள் செய்வதற்கும் பயன்படுகின்றன. மூங்கில் பலகை மிகவும் பலமானது. தனது வளர்சிக்காலத்தில் நிலத்திலுள்ள சிலிக்கா கனியத்தை அது உறுஞ்சுவதால் மூங்கிலின் கடினம் தோன்றும். பூச்சி, புழுக்கள் மூங்கிலை எளிதில் தாக்கிவிடுவதால் போரன் (Boron)போன்ற பாதுகாப்புத் திரவங்களைப் பூசுவது மூலம் அழிவைத் தடுக்கலாம்.

காணி எல்லைத் தூண்கள், பாலங்கள்,தண்ணீர் குழாய்கள், இசைக் கருவிகள், மீன்பிடி உபகரணங்கள், கடற் கலங்களின் பாகங்கள் என்பன மூங்கிலின் நறுக்குத் துண்டுகளால் செய்யப்படுகின்றன. பிளந்து வாரிய மூங்கில் துண்டுகளை நிலவிரிப்பு, பாய்கள்,கூடைகள்,திரைச் சேலைகள், கட்டில் கதிரை பின்னும் கீற்றுக்கள், மீன்பிடி வலைகள் செய்வதற்குப் பயன்படுத்தலாம். நாகரிகமாக உணவருந்தும் இடங்களில் பல்குத்துவதற்கு உதவும் குச்சிகள் (Tooth picks) மூங்கில் பிளவுகளில் செய்யப்படுகின்றன. மிகவும் இறுக்கமாகப் பின்னப்பட்ட மூங்கில் உணவருந்தும் தட்டுக்கள், தேநீர் பருகும் கோப்பைகள் சீனா, பிலிப்பீன்ஸ் ஆகிய நாடுகளில் தயாரிக்கப்படுகின்றன. இவை உயர்ந்த கலையம்சத்துடன் விளங்குகின்றன.

உலகில் முதன் முதலாகக் காகிதத்தை (Paper) உருவாக்கிய சீனர்கள் அதை மூங்கில் கூழில் செய்தார்கள் என்பது வரலாற்றுச் செய்தி. இது 2000 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. சீனா, இந்தியா போன்ற நாடுகளில் இன்று பேப்பா தயாரிப்பதற்காக மூங்கில் வளர்க்கப்படுகின்றது. பூமி வெப்பத்தைத் தணிப்பதற்கு மூங்கில் உதவுவதாக ஆய்வுகள் அறிவிக்கின்றன. கார்பன் வாயுக்களை அது பெருமளவில் உறிஞ்சுகின்றது. மண் அரிப்பைத் தடுத்தல், மண் பாதுகாப்பு,மண் வள மாக்குதல் போன்றவற்றிற்கும் மூங்கில் மரம்

(40ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாதம் நாளிதழுக்கு எமது வாழ்த்துக்கள்!

WESTERN UNION | மணி டிரான்ஸ்ஃபர் SM

உலகெங்குமிருந்து ஒரு சில நிமிடங்களில் பணத்தைப்பெற இலகுவான வழி

இப்பொழுது வடமராட்சி மக்களின் நன்மை கருதி நெல்லியடியில் செயற்படுகிறது.

புதிய அம்பிகா மல்ரி சென்ரர்

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

T.P: 021-2263139 FAX: 021-2263571
E-mail:-loshan@slt net.lk
(சி-9214)

புதிய அகவையில் பாதம் பதித்து
புதுமை பல படைத்து
புதுப்பொலிவு பெற வாழ்த்துகின்றோம்!

தலைவர்,
பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்.

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி
கூட்டுறவு சங்கங்களின் சமாசம்(வ-து)

இல:111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே- 021-222 2662 தொ.நகல்- 021-222 2662
(சி-9215)




15 ஆண்டுக்குப்பாய்ந்து புதுமை பல படைக்கப்புறப்பட்ட எமது ஈழநாதமே!
எம்மினிய வாழ்த்துக்கள் உரித்தாகுக இவ்வாண்டில்...

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பழரசத் தொழிலகம்

ஜசுபி தயாரிப்புக்கள்

உள்ளூர் பழத்தில் இருந்து முற்றிலும் சுகாதார முறையில் தயாரானது

தக்காளி சோஸ்
மிளகாய் சோஸ்

மாம்பழக்கோடியல்
பழக்கலவை கோடியல்
தேசிக் கோடியல்

மாம்பழ சட்னி, தேசி ஊறுகாய்,
மோர் மிளகாய்

நெல்லி ரசம்
மாம்பழ ஜாம்
விளாம்பழ ஜாம்
ஸ்ரோபரி ஜாம்
பழக்கலவை ஜாம்

எமது உற்பத்திப்பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.
T.P } 0602-212380 / 0602-212813
ஜசுபி தொழிலகம் உடுவில்.



(சி-9216)

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வ-து

இன்று 14 ஆண்டு நிறைவினை பூர்த்தி செய்யும் ஈழநாதம் மக்கள் தினசரியை எமது நிறுவனம் சார்பாக வாழ்த்துவதோடு, மேன் மேலும் பல வருடங்கள் மக்கள் உள்ளங்களில் நிலைத்திருக்கவேண்டுமெனமனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

"சிக்கனமே சிறந்த செல்வம்"
"குறைந்த வட்டியில் நிறைந்த சேவை"
"எமது பணம் எம்மவர்களுக்கே உதவிட
சிக்கன கூட்டுறவுச்சங்கங்களை நாடுங்கள்"

பணிப்பாளர்,
பணியாளர்கள்.

☏:021-2223131

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வ-து

637, (383), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-9218)

புதுப்பொலிவு பெற்று விளங்கும் ஈழநாதமே!
புதிய அகவைக்கு புறப்படும் இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
நாவிற்கினிய ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
அறுசுவை உணவுகளுக்கும்

லிங்கன் கிறீம் ஹவுஸ்

இல: 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-9217)

இலங்கை உரம்
LAK POHORA



வடபகுதி விவசாயிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள், விவசாயசேவை நிறுவனங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், தொகை சில்லறை வியாபாரிகள் அனைவரும் விவசாயத்திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனங்கள் உபகரணங்கள் என்பவற்றை நியாயவிலைக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் "லக்பொஹொர"
பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் விவசாய இரசாயனம்
ஆகியவற்றின் வடபகுதி பிரதான களஞ்சியம்

வேலும் மயிலும் களஞ்சியம்

353, முதன்மைச்சாலை, கிளிநொச்சி.
(ஈழநாதம் பணிமனை முன்பாக)

எம் குரலாய் எங்கும்
ஒலித்த ஈழநாதமே!
வலியது உன் நெஞ்சுரம்!
வாழ்க! என்றும் வளர்க!




(சி-9219)

# கல்வியில் அடைவு எட்டப்படவில்லை

## சமாதான காலத்திலும்

"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடு அல்ல மற்றையவை."

கல்வி மட்டுமே எல்லா வகைச் செல்வங்களுக்குள்ளும் அழியாத செல்வம். ஏனையவை அனைத்தும் அழிந்துவிடும் செல்வங்கள். கல்வியால் ஏற்படும் புகழ் சிறப்



வகுப்பறை

புடையது என்பது பொய்யா மொழிப் புலவரின் வாக்கு.

அந்த வகையில் இது வரை வன்னியில் யுத்தமும் அதன் எதிரொலிகளுமே அதிர்ந்து கொண்டிருந்தது. தற்போது வன்னியிலும் சமாதான சூழல் நிலவுகின்றன.

அதன் மூலம் இதுவரை இருந்து வந்த பொருளாதாரத் தடைகள் ஓரளவு காணாமல் போயுள்ளன.

இந்நிலையில் சமாதான காலத்தில் கல்வியின் வளர்ச்சி எத்தகைய அடைவினைப் பெற்றுள்ளது என்பதை நோக்கின்,

வன்னிப்பிரதேசத்தைப் பொறுத்த வரை ஆசிரியர் பற்றாக்

| துறை ரீதியாக தேவையான ஆசிரியர்கள்(துணுக்காய் வலயம்) | | தற்போதுள்ள ஆசிரியர்கள் |
|---|---|---|
| கணிதம் | 36 | 14 |
| விஞ்ஞானம் | 39 | 16 |
| ஆங்கிலம் | 94 | 06 |
| உடற்கல்வி | 17 | 01 |

குறை என்பது காலம் காலமாக நிலவிவருகின்ற ஒரு விடயமாக மாறிவிட்டது. சமாதானச் சூழ்நிலை கடந்த இரண்டு வருடங்களாக நீடிக்கின்ற போதும் 35 சதவீதமாகவே ஆசிரியர் பற்றாக்குறை குறைக்கப் பட்டிருக்கின்றது.

இலங்கையில் மாணவர்களின் தொகைக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் தொகை இருப்பதாகவும் இனிவரும் பத்து வருடங்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட மாட்டாது என்றும் கல்வி அமைச்சு அண்மையில் கூறியுள்ளது.

ஆனால் வன்னிப் பிரதேசத்தில் ஆசிரியர் தொகை என்பது கல்வி அமைச்சின் கூற்றுக்கு தலைகீழாகவே உள்ளது. இலங்கையில் ஒருஇலட்சத்து 19 ஆயிரத்து 812 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். ஆனால் மாணவர்கள் தொகை 25 ஆயிரத்துக்கும் 40 ஆயிரத்துக்கும் இடையில் வருடாந்தம் வீழ்ச்சி அடைவதாகவும் கல்வி அமைச்சின் அறிக்கை கூறுகின்றது.

அப்படியெனில்..... வன்னியிலும் போதுமான அதேநேரம் துறை சார்ந்த ஆசிரியர்களும் இருக்கத் தானே வேண்டும்..? அந்த வகையில துணுக்காய் வலயத்தை உதாரணமாக எடுத்தால், இங்கு

துணுக்காய் வலயத்தில் 53 பாடாசலைகள் இருக்கின்றன. இங்கு 395 ஆசிரியர்களே கடமையில் உள்ளார்கள். 283 ஆசிரியர்கள் நிரப்பப்படாது பற்றாக்குறையாக இருக்கின்றது. அதிலும் முக்கியமாக துறைசார்ந்தவர்கள் மிகமிக அரிதாகவே இருக்கின்றார்கள் என்பது கவலைக்குரிய ஒரு விடயம்.

இதே நிலை தான் கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் காணப்படுகின்றது என்பதே உண்மை விடயமாக உள்ளது.

வன்னியில் துறைசார்ந்தவர்கள் உட்பட ஆசிரியர்கள் ஏன் பற்றாக்குறையாகவுள்ளார்கள்.....?

கல்வியமைச்சு வன்னிப் பிரதேசத்துக்கு துறைசார்ந்தவர்களை மிகவும் குறைந்தளவிலேயே நியமனம் செய்கின்றது.

அவ்வாறு நியமனம் பெற்றுக்கொள்பவர்களும் வன்னியில் கடமையாற்ற விரும்புவதில்லை. அதற்குக் காரணம் (1)வன்னி பின்தங்கிய மாவட்டம் அங்கு கடமையாற்றுவது கஸ்ரம் எனும் மனவியல்பு. (2)போக்குவரத்து வசதியின்மை (3)யாழ்ப்பாணம், கொழும்பு மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றுவது பெருமை, வசதி எனும் மனப்பான்மை.

அத்துடன் சமாதான காலத்திற்கு முன்னர் 1997 ல் போட்டிப் பரீட்சை எழுதிய பின்னர், இடம் பெயர்வு காரணமாக வன்

**கிளிநொச்சி மாவட்டம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் விபரம்**

| 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1877 | 1769 | 1777 | 1416 | 1412 | 1083 | மொத்த மாணவர்கள் |
| 73 | 56 | 94 | 63 | 65 | 75 | சித்தி |
| 3.88 | 3.16 | 5.28 | 4.44 | 4.60 | 6.92 | சித்தியடைந்த வீதம் |

னிக்கு வந்த யாழ்ப்பாணம், தீவுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள், வன்னியில் தொடர்ச்சியாக பணியாற்றுவதாக கூறி நியமனம் பெற்றனர்.

ஆனால் இவர்களில் 90 வீதமானவர்கள் ஆசிரியர் கலாசாலைக்கு சென்றபின்னர், வன்னிக்கு கடமைபுரிய செல்லமுடியாது என காரணம் கூறி வேறு மாவட்டங்களுக்கு மாற்றம் பெற்றுச் சென்றனா.

அது மட்டுமன்றி ஏனைய ஆசிரிய வகையைச் சேர்ந்தவர்களும் வேறு மாவட்டங்களுக்குச் சென்று வன்னியில் சண்டை தொடர்வதாக காரணம் காட்டினர். ஆரம்ப காலத்தில் பாதிச்சம்பளம் பெற்றுக் கூட கடமையாற்றினர்.

இதேநேரம் வன்னிப் பிரதேச

**கிளிநொச்சி மாவட்டம் –க.பொ.த உயர்தரம்**

| விபரம் | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த மாணவர்கள் | 662 | 465 | 489 | 675 | 834 | 854 |
| பல்கலைக்கழக உள் நுழைவு. | 314<br>47.43% | 285<br>61.29% | 315<br>64.41% | 365<br>54.07% | 502<br>60.63% | 427<br>50.00% |
| எல்லாப் பாடங்களும் சித்தி | 376<br>56.79% | 414<br>89.03% | 370<br>75.66% | 545<br>80.74% | 423<br>50.71% | 453<br>53.27% |
| எல்லாப் பாடங்களும் சித்தியின்மை | 14<br>2.11% | 09<br>1.93% | 17<br>3.47% | 24<br>3.5% | 22<br>2.69% | 25<br>2.92% |

**கிளிநொச்சி மாவட்ட- க.பொ.த சாதாரணம்**

| விபரம் | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|---|
| மொத்த மாணவர்கள் | 1946 | 1900 | 1819 | 2000 | 1838 |
| A/L க்குசித்தி வீதம் | 583<br>29.95% | 582<br>30.63% | 593<br>32.60% | 651<br>32.55% | 509<br>27.69% |
| ஆறு பாடங்கள் சித்தி வீதம் | 635<br>32.63% | 696<br>36.63% | 740<br>40.68% | 767<br>38.35% | 548<br>29.81% |
| எல்லாப் பாடங்களும் சித்தியின்மை வீதம் | 137<br>7.04% | 89<br>4.68% | 114<br>6.26% | 144<br>7.2% | 106<br>5.76% |

த்தில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்படுவது குறித்து வேலையற்ற பட்டதாரிகள் மட்டத்தில் பலத்த ஆட்சேபங்கள் உண்டு.

ஆனால் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த பல பட்டதாரிகள் வன்னியில்

**கிளி.மாவட்டபயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் விபரம்**

| விபரம் | மொத்தம் |
|---|---|
| கரைச்சி | 10 |
| கண்டாவளை | இல்லை |
| பளை | 02 |
| பூநகரி | 02 |
| மொத்தம் | 14 |

கடமையாற்ற விரும்பாத நிலையில் வேறு மாவட்டங்களில் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க தொன்றாகவுள்ளது.

இதனால் மாணவர்களின் கல்வி நிலையில் எத்தகைய தாக்கம் ஏற்பட்டது. என்பதைக் கீழுள்ள புள்ளி விபரம் எடுத்தியம்பும்.

கிளி. மாவட்டத்தில் 1998ல் 6.92 வீதமாக இருந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்தே வருகின்றது. சமாதான காலத்தில் கூட புலமைப்பரீட்சை சித்தி எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்பதையே புள்ளி விபரம் எடுத்துக் காட்டுகின்றது.

இங்கு கிளி. மாவட்ட கா.பொ.த சாதாரண பெறுபேற்றை நோக்கின், 1998, 1999, 2000, 2001 காலப்பகுதிகளை விட 2002ல் கா.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெறுவோர் தொகை வீழ்ச்சி அடைந்துள்ளது.

அத்துடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலம், கணிதம் இரண்டு பாடங்களிலிலும் தான் அதிகமான மாணவர்கள் சித்தி பெறுவதில்லை. இதற்கு முக்கிய காரணம். துறைசார்ந்த ஆசிரியர்கள் பற்றாக்குறையே.

ஆங்கில ஆசிரியர்களுக்குப் பதிலாக பகுதி நேரஆங்கில ஆசிரியர்கள் கடமையாற்றினர். தற்போது அவர்கள் நிரந்தர நியமனம் கோரி பகிஷ்கரிப்பு செய்வதினால் பகுதி நேரஆங்கில ஆசிரியர்கள் கடமையாற்றிய பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடம் விளையாட்டுக்குரிய பாடமாக மாறியுள்ளது.

க.பொ.த. சாதாரண தரத்திலோ, உயர்தரத்திலோ ஆங்கிலப் பாடத்தில் திறமையின்மை என்பது வன்னியில் பெரிய விடயமாக இருப்பதில்லை கொள்ளப்படுவதுமில்லை.

ஆனால் பல்கலைக்கழகம்



ஆய்வுகூடம்

செல்லும் போது தான் சிக்கல் ஆரம்பிக்கிறது. அங்கே எந்தத்துறை ரீதியாக கல்வி கற்றாலும் ஆங்கிலம் கட்டாய பாடம். சித்தியடையாது விட்டால், துறைசார்ந்த பட்டமளிப்பு கிடைக்காது. அதிலும் பல்கலைக் கழகத்தில் அதிகமாக ஆங்கில சித்தியடையாதவர்கள் வன்னியைச் சேர்ந்தவர்கள் என்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

எனவே ஒரு மாணவனின் எதிர்காலம் ஆங்கிலக் கல்வியினால் கேள்விக்குறி ஆகின்றது. எனவே வன்னியில்துறைசார்ந்த ஆசிரியர்கள் மிகமிக அவசியம்.

கடந்த இருதசாப்தங்களாக போர் தொடர்ந்தமையினால் கற்றல் என்பது மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது. போரின் தாக்கங்களை பாடசாலை சமூகமும் இன்றும் சுமந்துகொண்டு இருக்கிறது. அதன் மூலம் மாணவர்கள் இன்றும் அனுபவிப்பவை.

* கட்டட வசதிகள் அழிந்து போயுள்ளன. கொட்டில்களிலும் மரங்களின் கீழேயும் கல்வி.
* ஒரு மாணவன் 7 சதுர அடி இடத்தையும், ஒரு கதிரை ஒரு மேசையை இழந்திருத்தல்.
* விளையாட்டு மைதானம் இன்மை/ பற்றாக்குறை.
* நவீன கற்றல் வசதியின்மை.
* நூல் நிலையங்கள் இன்மை.
* ஆய்வு கூடங்கள் இன்மை.
* குடிநீர் கிணறுகள் பற்றாக்குறை.

யுத்தம் ஏற்படுத்திய தாக்கம் மாணவர்களின் இடை விலகலையும் அதிகரித்துள்ளது.

இடை விலகல் அதிகரிப்பு. இதற்கான பிரதான காரணிகள்.

* வறுமை
* கற்றலுக்குப் பொருத்தமற்ற குடும்பப் பின்னணி.
* பாடசாலைப் பின்னணி
* சமூகச் சூழல்.
* கலைத்திட்ட இடர்பாடுகள்.
* கற்போரின் மனநிலை.
* ஊக்கமின்மை.
* பொருளாதார நிலை.

**அ.கலைவாணி**

* சமூக பழக்கவழக்கங்கள்.
* பரீட்சை மையக்கற்றல்.
* கற்பித்தல் செயற்பாடுகள்.
* ஆசிரியர் மற்றும் வள ஆளணியினரின் கடமைகளின் திருப்தியின்மை.
* பயவுணர்வு.
* பாலியல் குற்றம்.
* பொருத்தமற்ற பாடத்திட்டம்.
* பாடசாலை இல்லாமை.
* தொழிலுக்குச் செல்லல்.
* தாழ்வு மனப்பான்மை.
* பாடசாலை பெறுபேறு குறைவு.
* காரணம் இன்மை.

இவை போன்ற காரணங்களினால் வடகிழக்கில் 50 ஆயிரம் சிறுவர்கள் உரிய வயதில் பாடசாலைக் கல்வியைப் பெறாது இருக்கின்றார்கள். ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றார்கள் என யுனிசெவ் அறிக்கை கூறுகின்றது.

(40ஆம் பக்கம் பார்க்க)

# எங்கே இந்தப் பயணம்



## தமிழ் சினிமாவை முன்வைத்து ஒரு சிறு விசாரணை.

கருணாகரன்

இப்போது இளவயதினர் அறிந்து கொள்கிற முதல் விவகாரம் சினிமாவாகத்தான் இருக்கிறது. சினிமா பற்றிய செய்திகளை மிகக்கவர்ச்சியாக சொல்கின்றன அநேகமாக எல்லா மீடியாக்களும். உண்மையைச் சொன்னால் கவர்ச்சியாகச் சொல்கின்றன என்பதை விட கவர்ச்சியாக காட்டுகின்றன என்று தான் இதைக் குறிப்பிட வேண்டும். பல மீடியாக்களின் உயிர்மையமாக சினிமாதானிருக்கிறது. சினிமாச் செய்திகள், கிசுகிசுக்கள், சினிமாக் காட்சிகளின் 'ஸ்டில்கள்' சினிமா பற்றிய 'ஆலாபர்னா' விபரிப்புகள் பாடல்கள் என்று விரியும் கவர்ச்சியில் முக்கியமானது சினிமா ஸ்டில்களும் பாடல் களும்தான்.

ஒரு படப்பிடிப்பின் போது எடுக்கப்படும் பல புகைப் படங்கள் படம் பற்றிய ஆவலைத் தூண்ட உதவுகின்றன. இந்த புகைப்படங்களைப் போட்டி போட்டு பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியிடுகின்றன. சினிமாப் பார்வையாளன் தான் பார்க்கவிருக்கும் படம் பற்றிய கனவை விரிக்கும் ஓர் உத்திதானிது. ஆனால் இப்படிப் பிரசுரமாகும் படங்க ளில் பல பின்னர் சினிமாவில் இடம்பெற்றி ருக்காது. சிலவேளை அது தணிக் கைக்குட்பட்டு விடுகிறது. இல்லையென் றாலும் பல காட்சிகள் சினிமாவில் வராமல் விளம்பரத்துக்காகவே எடுக்கப் பட்டு வெளியிடப்படுகின்றன. ஒரு சினி மாவில் நிறைய நல்ல உயிரோட் டமுள்ள காட்சிகள் இருந்தாலும் மலின மான கவர்ச்சி நோக்கிய காட்சி களே விளம்பர உத்தியாகப் பயன்படுத் தப்படுகிறது. இங்கேதான் நல்ல சினி மாவுக்கான தளமும் சிதைகிறது, நல்ல ரசிக முறைக்காகன வழியும் ஒடுங்கு கிறது.

பாடல்களை வெளியிடுவதும் வியாபார நோக்கம் கருதியே. பாடல் களில் தொனிக்கும் கிளுகிளுப்புச் சமாச்சாரங்கள் முக்கல், முனகல் எல்லாமே படம் பற்றிய எதிர்பார்ப்பைத் தூண்டக்கூடியதாகவும் சித்தரிக்கப்படும். உணர்வுத்தனத்தை விரிக்கும் இயல்புடை யவையாகவுமே இருக்கின்றன.

எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் சினிமா மிகச் சக்தி மிக்க கலை ஊடகம் என்னும் அறிவை சரியாக விளங் கிக்கொண்டால் அதன் இன்றைய நிலையையும் அது சமூகத் தில் விளைவிக்கும் தாக்கங்களையும் நிச்சயம் புரியலாம். வெறுமனவே பொழுது போக்குவதற்கான ஒரு ஊடகமாகவே நம்மிற்பலர் சினிமாவை விளங்கிவைத்திருக்கிறார்கள்.

உண்மையில் ஒரு சினிமாவைப் பார்க்கும் போது நாம் செலவழிக்கும் நேரத்தின் பெறுமதி, சினிமாவைப் பார்ப்பதற்கான எங்களுடைய பொருளாதாரச் செலவு, சினிமாச் செய்திகள், பிறகாட்சிகளுடன் செலவு செய்யும் நேரம், வாங்குகின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகளின் செலவு, சினி மாவைப் பார்த்தபிறகு அது பற்றி நண்பர்களிடம் கதைக்கும் நேரம் என்று பார்த்தால் எப்படி ஒரு சினிமாவை நாம் தேர்வு செய்ய வேண்டும் என்ற உணர்வு பிறந்து விடும். ஆனால் எந்தப் பிரக்ஞையுமற்று ஒரே சூத்திரத்தன்மையில் சினிமா பார்க்கும்

> **எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் சினிமா மிகச் சக்தி மிக்க கலை ஊடகம் என்னும் அறிவை சரியாக விளங்கிக் கொண்டால் அதன் இன்றைய நிலையையும் அது சமுகத்தில் விளைவிக்கும் தாக்கங்களையும் நிச்சயம் புரியலாம். வெறு மனவே பொழுது போக்குவதற் கான ஒரு ஊடகமாகவே நம்மிற் பலர் சினிமாவை விளங்கி வைத் திருக்கிறார்கள்.**

பொதுப்போக்கே எங்களில் பரவலாகி இருக்கிறது. 'புதுப்படம்' என்ற் ஆவலுடன், அது எப்படியிருக்கும் என்ற எந்தவிதமான தேர்வார்வமுமில்லாமல் ஒரு படத்தைப் பார்க்கும் இயல்பு தான் இன்று பெருகியிருக்கிறது. வேறு நல்ல படங்களை ஒருவர் சிபார்சு செய்தாலும் கூட அதனை எவரும் பொருட்படுத்துவது மில்லை. மாறாக 'புதுப்படம்' என்று வரும் பழைய கதையமைப்பும் காட்சியமைப்பு உத்திகளும் கொண்ட உழுத்துப்போன படங்களைத் திரும்பத்திரும்ப நாடுவதன் நோக்கம் தான் னென்ன? மெய்யான அர்த்தத்தில் இந்தப் படங்கள் புதிதாகத் தயாரிக்கப்பட்டாலும் இவை புதிய படங்கள் அல்ல. பழைய படங்களே ஏனென்றால் சினிமா நகரும் போதே அதனுடைய கதையமைப்பையும் அது இறுதியாக எப்படியெல்லாம் முடிந்து நிற்கும் என்பதையும் தெரிந்து விடலாம். அந்தளவுக்கு பழைய வழித்தடத்தில் சுழலுகின்றன இந்தப் படங்கள்.

இந்தச் சினிமாக்களில் கதாநாயகன் என்றேனும் தோற்றதில்லை. அவன் எப்போதேனும் கதாநாயகியைத்தவிர வேறு அழகும் 'கவர்ச்சியும்' குறைந்த பெண்ணை விரும்பியதாகவோ மணமுடித்ததாகவோ இருப்பதில்லை. எந்தக் கதாநாயகனுக்கும் ஒரு தோழனேனும் படத்தில் வருவார். அவர் கதாநாயகனை விட துணிவும், அழகும் அறிவும் குறைந்த 'பயலா கவே' இருப்பார். அவருக்கு ஆடவோ, பாடவோ அடிபடவோ தெரியாது. வேண்டுமானால் மிகத்தரக்குறைவான பகிடிகளை மட்டும் விடுவார். காதலுக்குத் துணை நிற்பார். இப்படி வேறுவேறு சிறுசிறு உபகாரியங்கள் மட்டும் தான் செய்வார். பெண்பாத்திரங் களிலும் கூட இதுதான் நிலமை. பகடிவிடும் போது மட்டும் அவர்கள் கொஞ்சம் அடக்கி வாசிப்பார்கள். இதிலும் கூட ஒன்றை அவதானிக்கலாம். ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பேசலாம், நடந்து கொள்ளலாம். ஆனால் பெண்கள் அப்படியெல்லாம் பேசவோ, நடக்கவோ முடியாது, கூடாது என்ற கவனம் ஒளிந்திருப்பதை அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்ச்சினிமாவில் இதுதான் தொடர்கதை.

வெற்றிப்படம் வெற்றிவிழாக் கொண்டாடிய பாடம். என்றெல்லாம் தமதுசினிமாவை அறிந்து வைத்திருக்கும் பார்வையாளர்கள் ஒரு படம் எப்படி, எதனடிப்படையில் வெற்றிப்படமாகிறது, என்று தெரிந்திருப்பதில்லை. வசூலில் வெற்றி பெற்றால் மட்டுமே ஒரு படம் வெற்றிப்படம் என்ற கருத்தை மீடியாக்கள் உருவாக்கி வைத்திருக்கின்றன. தமிழ்ச் சினிமாவில் இத்தகைய கருத்து நிலைதான் பரவலாக உண்டு. ஆனால் ஒரு படம் சினிமாவாகத் தேறியிருக்கிறதா, அதன் கலைப்பெறுமானம் கதையமைப்பு, அதுஉணர்த்தும் செய்திகள் எல்லாம் எப்படி வெற்றி பெற்றிருக்கின்றன என்று யோசிப்ப தேயில்லை. இப்படி இந்த அம்சங் க்ளில் தேறிய அல்லது வெற்றி பெற்ற படங்களை பார்வையாளர்கள் அறி யாமால் அணுகாமல் விட்ட சந்தர்ப்பங்களே அநேக முண்டு. மற்றும் படி வெற்றி பெற்ற படங்கள் என்றால் மீடியாக்கள புகழ்ந்து தள்ளும.. மீடியாக்களின் வியாபார உத்திக்கான படங்களென அதிகமுண்டு. நல்ல சினிமாவை நோக்கி மீடியாக்கள் நகர்வதற்கு அவற்றின் மலினமான தந்திரோபாயம் என்றும்அவற்றுக்கு இடமளிப்பதில்லை.

ஒரு நல்ல சினிமாவில் உடற் கவர்ச்சிகள் (பாலியற் கவர்ச்சிகள்) இருப்பதில்லை. பாலியற் கவர்ச்சிகளுக்கு முதன் மையளித்து அந்தப் பக்கங்களை கலரிலும் பெரிய பெரிய படங்களிலும் அச்சடித்து விடும் மீடியாக்களால் வேறு விதமாக எப்படித்தான் சிந்திக்க முடியும்? கொஞ்சமாவது நல்ல சினிமாவின் பக்கம் எவ்வாறு தான் நகர முடியும்? (இவற்றை விரிவாக இன்னொரு சந்தர்ப்பத்தில் நோக்கலாம்)

படங்களைப் பார்க்கும் போது (தியேட்டர்களில் அல்ல வீடுகளில் வீடியோவில்) பாடல் காட்சிகள் வந்தால் எல்லோரும் அதனை ஓட விடுகிறார்கள். பாடல் காட்சிகளில் கூடுதலாக ஆடைக்குறைப்பும், உடல் அசைவுகளில் உணர்வுகளைத் தூண்டும் நளினங்களும் பார்ப்போரை தலைகவிழச் செய்வதாக இந்தப் பார்வையாளர்கள் நினைக்கிறார்கள் போலும். தமது கெளரவத்துக்கு இழுக்காகி விடுகிறது இந்தக் காட்சிகளைப் பார்ப்பது என்ற அபிப்பிராயம் பலருக்கும் இருக்கிறது. ஒரு படத் தயாரிப்பில் அதிகம் செலவாதலும் கூடுதலான அக்கறை எடுப்பதும் பாடல் காட்சிகளுக்காகத்தான். இப்படியெல்லாம் கஸ்ரப்பட்டு எடுக்கும் பாடல் காட்சிகளை தவிர்த்து விட்டுப் படம் பார்த்தால் தங்களுக்கு எவ்வளவு பாதிப்பு என்றும் அது பெருங்கவலையைத் தருகிறது என்றும் சில தயாரிப்பாளர்கள் சொல்கிறார்கள்.

இந்தக் காட்சிகளைத் தவிர்த்து விட்டால் மற்ற எல்லாமே சரியாகிவிடும் என்று நினைக்கும் பேதைமையை என்னவென்பது? பாடல் காட்சிகளை விடவும் இரட்டை அர்த்தம் தொனிக்கிற மட்டமான 'நகைச்சுவை' என்ற பகடிகளைமட்டும் எப்படி நாகரிகமாக ரசித்து விடமுடியும்? உண்மையில் நகைச்சுவை என்பதினுள்ளேயிருக்கும் 'உட்சுவைதான் இவர்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது. படுமோசமான வன்முறைக்காட்சிகள், சமூக நடைமுறைக்கும் யதார்த் தத்திற்கும் பொருந்தாத சாகசங்கள், சினிமா அறிமுகப்படுத்தும். வாழ்க்கை முறைகள் எல்லா ரசனைவிரிவை பொறுத்து வருவது நமது நடைமுறை வாழ்வை பெரிதும் சிதைத்து வருகிறது. பண்பாட்டு சிதைவில் அடையாளச் சிதைப்பில் இன்றைய தமிழ்ச்சினிமா முக்கியமானதாக இருக்கிறது என்பதையும் நடைமுறை அனுபவத்தினூடாக அவதானிக்க முடியும்; உணரவும் முடியும்.

தமிழ்ச் சினிமாவின் இன்னொரு பக்கத்தில் குறிப் பிடக்கூடியதான - குறிப்பிடவேண்டியதான முயற்சிகளும் வெளிப் பாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் இங்கே அவதானிக்க வேண்டும். ஆனால், அந்த முயற்சிகளுக்கான வரவேற்பும் ஊக்கப்படுத்தலும் குறைவாகவே இருக்கிறது. இதுதான் துயரம். நல்விடயங்களைப்பற்றி யோசிக்கிற நல்ல அம்சங்களை விரும்புகிறவர்களாக நாங்கள் இருந்தால் ஏன் சினிமாவிலும் ஏனைய கலைத்துறை ஈடுபாடுகளிலும் மட்டும் தாழ்ந்து போயிருக்கிறோம்.

சினிமா மட்டுமன்றி, வாசிக்கின்ற புத்தகங்களை தேர் வதிலும் கூட மந்தத்தனமும் பேதைமையும் தான் பெருகிவரு கிறது. இந்தப் பெருக்கம் நல்ல சிந்தனையை வளர்க்க எந்த வகையிலும் உதவப்போவதில்லை. நல்ல மனப்பாங்கையோ நல்ல சமூக இயக்கத்துக்கோ உகந்ததுமல்ல.

தமிழ்ச்சினிமாவின் மலினமான தந்தி ரோபாயங்களில் வீழும் இளைய தலைமுறைப் பார்வையாளர்களில் ஈழத்தமிழ் சமூகத்தினரின் நிலைதான் இன்னும் பாதிப்பானது. இங்கும் புலம் பெயர்ந்த நாடுகளிலுமுள்ள இந்தப் பார்வையாளர்கள் இந்தியக் கனவு வாழ்க்கையின் சாயல்களை தமது மனவுலகில் பதியம்போடுகிறார்கள். சினிமாவின் பிம்பங்கள் அவர்களுடைய இலட்சியக் கனவாக முளைக் கிறது. சினிமாவின் சாயல்கள் அவர் களுடைய நடத்தைக்கோலங்களாகிறது. அதுவும் இந்தியக் கருத்து நிலையுடன்.

நல்ல சினிமாவை இனங் காண் பதனூடாகவும் ரசிப்பதனாலும் நல்ல சினிமா உருவாக்கத்தைத் தூண்டலாம்; அப்ப டித்தூண்டவும் வேணும். அதற்கு மீடியாத் தளத்தில் விரிவு வேண்டும் மோசமான படத்தைக் கொண்டுபோக முனையும் இந்த மீடியாக்களின் அடுத்த பக்கத்தில் நல்ல சமூக உருவாக்கம் பற்றியும் நல்லமனவளர்ச்சி பற்றியும் புகட்டும் பாடல்களிருப்பதைப் பார்க்கும் போது அவற்றின் முரணை நன்றாக விளங்கிக் கொள்ள முடியும்.

நல்ல சினிமாவுக்கான தளத்தை விரிப்பது நல்ல ரசனை விரிவாக்கம் முக்கியமானது. நல்ல ரசனை விரிவுக்கு விமர்சனங்கள், விவாதங்கள், பிறமொழிகளிலுள்ள நல்ல சினிமா அறிமுகங்களை மீடியாக்கள் பரவலாக்க வேண்டும். அத்தோடு சமூக மட்டத்திலான கலை நிறுவனங்கள், அமைப்புக்கள், ஆர்வலர்கள் கூடுதலாகவும் பரவலாகவும் நிகழ்த்துவது அவசியம். இப்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்டும் நல்ல படங்களுக்கான காட்சிக ளுக்குக் கூட இருபது இருபத்தைந்து பேர்வரையில் தான் கூடுகிறார்கள். இலவசமாகக் காட்டப்படும் இந்தக் காட்சிகளுக்கே ரசிகர்கள் வருவது குறைவு என்பது ஒரு அவதானிக்க வேண்டிய யதார்த்தம்.

மோசமான படங்களைத் தொடர்ந்து பார்க்கத்துடிக்கும் ஆவலின் விரிதல் எங்களிடங்கூட நல்ல சினிமா உருவாகு வதற்கான எந்தச்சூழ்நிலையையும் கூட விட்டுவைப்பதில்லை.

> **தமிழ்ச் சினிமாவின் இன் னொரு பக்கத்தில் குறிப்பிடக் கூடிய தான- குறிப்பிடவேண்டிய தான முயற் சிகளும் வெளிப்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதையும் இங்கே அவதானிக்க வேண்டும். ஆனால், அந்த முயற்சிகளுக்கான வரவேற்பும் ஊக்கப்படுத்தலும் குறைவாகவே இருக்கிறது. இது தான் துயரம். நல்விடயங்களைப் பற்றி யோசிக்கிற நல்ல அம்சங் களை விரும்புகிறவர்களாக நாங் கள் இருந்தால் ஏன் சினிமாவிலும் ஏனைய கலைத்துறை ஈடுபாடு களிலும் மட்டும் தாழ்ந்து போயிருக் கிறோம்.**

நாங்கள் தயாரிக்கும் படங்களில் 'நகைச் சுவையும்' ஆடல் பாடலும் சாகசச் சண்டைகளும் இல்லையென்ற 'பெருங்குறை' எங்களின் சினிமா முயற்சியையே புறக்கணிக்க முனைகிறது. இதனால் தாக்குப்பிடிக்கக் கூடிய, ரசிக ஆதரவைப் பெறக்கூடிய சினிமா என்று ரசிக பிடிக்குள் சிக்கியுள்ள தேறாத சினிமாவை நோக்கி விழும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கிறது. இந்தப் பயணம் எம்மை எங்கே கொண்டுபோகும்? ●

# மூன்று கவிதைகள்

ராதேயன்



## நாட்குறிப்பில் எழுதப்படாத நாள்..

அன்றைய தினம் ...
வாழ்வில் அசாதாரணமானதுதான்
விழிந்ததே தெரியாத தூக்கம்
வழக்கமாக இமை மூடமறுக்கும்
சலனங்கள் ஏதுமற்ற மனம்...
அவனுக்கே-
ஆச்சரியகரமான சந்தோஷம்.

காதருகே ரீங்கரிக்கும்
நுளம்பின் மீதான சினமற்று
அனுமதி காத்ததும்
அதிசயமான தொன்றே...!

அதிகாலைப் பிரச்சினைகளின்
வியூகங்கள் எதுவுமற்று,
நிர்மல நிலையில்...
ரசனையற்று கழியும் வாழ்விலும்
இப்படி ஓர் நிம்மதியென உணர்கையில்
கூண்டுவிட்டு பறந்து,செல்லும்
பறவையின் குதூகலம்.

இந்நேரம்-
அன்றைய தினசரியின்
அவலங்களுள் ஆழ்ந்து,
அழியும் உலகின் இரத்த காட்சியான
நிகழ்வுகளில் நொந்து,
மானுடத்தைச் சபித்து,சபித்து...
சலித்திருக்கும் மனம்.
இன்று மட்டும் தெளிந்த
நீரென...

காற்றில் மிதந்து மலர்களைத் தழுவி
இசையுள் இசைத்து.
நிலவில் துயிலும் கவிதைக் கனவுகள்
நனவென முகிழ்ப்பதாய்...

வாழ்வில் உன்னதநாள்
இதுவென...
நாட்குறிப்பு எழுதத்துடிக்கும்
உணர்வுகளுடன்
ஓர் இனிய ஓய்வு...

அவன் தனது முக்கியநாளினை
எழுத மறந்து நாட்குறிப்பின் பக்கம்
வெறுமையாக... நிர்மலமாக..
அவன்-
நேற்றைய இரவில் இறந்ததாக
உலகம் சொன்னது...

## இனியென்ன என்றபோதில்...

வானத்தைக்கேள்
பூமியிடம் விசாரி
நேரத்தை நிறுத்தி வைக்க முடியாது.
சாவதற்கு முன்-சில
வரிகள் எழுதவேண்டும்.
கண்ணீர் பற்றி
துயரம் பற்றி
வாழ்வின் உயிர்ப்பினை பற்றி...
சாவகாசமாக யோசித்தல்
சாத்தியமற்று
உதிரியாக கருதும் நினைவுகள்
எங்கெங்கெல்லாமோ
புகலிடம் தேடி-
பதுங்கி அலையும்
நாட்குறிப்பின் இறுதி பக்கங்குரிய
நாட்களுக்கான வெற்றிடங்கள்
வார்த்தைகளின் பதிவுகளுக்காக
காத்திருக்கும்

02. ஜனசஞ்சாரம் அற்ற பிராந்தியத்தின்
ஜீவனென,
உதிரும் இலைகளின் சலசலப்பில்
உயிர்த்திருக்கும் காற்றின் சமிக்ஞை
எதையெதையோ உணர்த்தி நிற்கும்
காற்றால் மறையும் காலம்
எதையெதையெல்லாமோ அடித்துச்
சென்றுவிட்டதான-
எண்ணச்சோர்வின்
நிமிடச்சலிப்பு.

02, இனியென்ன சொல்லியென்ன
என மறுகும் இளமையை
சமாதானப்படுத்தும்-சுய
முதுமைத்தொனியிலும்
பலஹீனம், விரக்தியின் விசும்பல்

03,இதெல்லாம் இயற்கை,விதியென...
காரணம் சொல்லி
வாழ்வை எதிர்கொள்ளத் தூண்டும்
கிரியா ஊக்கிகளின் செயற்கைத்தனம்
துல்லியமாகையில்...
அழத்தோன்றினாலும் -அழவில்லை
ஆனாலும் கண்ணீர் பெருகும்.
கவிதையென- உதிரும்.... துளிகளின்
நேற்றைய யுகத்தின்
அமானுஷ்யத் தெறிப்பின்
ஜடமாகும்.
எரிசர எண்ணங்களின்
தணல் கனலொளிர்வில்
பொசுங்கிக் கருகும்
தனிமையின் அமைதிக் கணங்கள்

ஒரு வழி, ஒற்றையடிப்பாதையென
நீளும் வாழ்வின் - விதி
நிர்ணயத்தரிப்பு எதுவென, உள்ளே
ஏதோ ஒன்றின் தவிப்பொலியின்
குரல் - கெஞ்சிக்கட்டளையிடும்

வானத்தைக்கேள், பூமியை விசாரி
காற்றுடன் கதைத்துப்பார்...
நேரத்தை நிறுத்தி வைக்க முடியாது!
எழுதப்படவேண்டிய வார்த்தைகளின்
ஒழுங்கு பிசகாத தொகுதியை
வரவேற்கத்தயாராக
காத்திருக்கிறது நாட்குறிப்பில்
வெற்றிடமாக....
அஸ்தமான இதழ்கள்.

## நீர் வட்டங்கள்

காரணம் எதுவும் சொல்வதற்கில்லை.
மனம் போன போக்கில்
கால் போதலுக்கு...
எதிரே-
காய்ந்து கிடந்தது புல்வெளி
ஊர்மாடு ஒன்றேனும் திரும்பிப்பார்க்கா
அநாதை நிலை பார்வையை உறுத்த...
கணத்தில்-
இறுக்க மான தோர் சூழ்நிலை
உயிர்த்தது.
மஞ்சளில் வெளிறிய பூவரசம் பூக்கள்
இடையிடை தலை நீட்டிப் பார்க்க...
வீதிக்கு குறுக்கால் ஓடிவந்த ஓணானுக்கு
ஒதுக்கிடமானது மரம்.
சூழலுடன் இரண்டறக் கலக்கும்
பச்சோந்திரத்தனத்தின் அத்துவித நிலை
ஈக்கும் போதில்
நிர்சலனமற்ற மரத்திலிருந்து விழும்
காய்ந்த மலரில்-ஒரு
புன்னகையின் மரணம்
அப்பால்....
ஆளரவமற்ற குளக்கரை
குளித்தவர்கள் கரையேறி
வெகுநேரமாயிற்று
இக்கரைச் சேற்றில்
வெண்ணல்லி பூத்துக்காத்திருக்கும்
எவரையோ நானும் காத்திருப்பேன்
கைநிறையப் பூக்களுடன்...
மனம் நிறைய கவிதைகளுடன்.

---

# ஊரின் போக்கும் வேரின் நிலையும்

நிதுலா ஆனந்தன்

ஏழாண்டாய் என்னூரை
பார்க்கவில்லை
உறவுகளைக் காணவில்லை
எத்தனையோ கற்பனையில்
ஏங்கி மனம் துடிக்கிறது
பொங்கி நுரைதள்ள
போகமனம் தவிக்கிறது
இங்கு கிடைத்த இடைவெளியில்
அங்கு புறப்பட்டேன்

பளைமட்டும் பூத்திருந்த
பரவசமோ
முகமாலை முன்னரணைத்
தாண்டுகையில்
முழுதாய் போயிற்று
அடையாள அட்டை அவர் கேட்க
அடிமை உணர்வு தலை காட்டிற்று
உடலை உடைமைகளைத் தடவ
உணர்வுகளில் ஊசி குத்திற்று
சிரிப்பு அவர் முகத்தில்
இருந்தாலும்
என் சிந்தனையோ
செம்மணியின் சிகரம் தொட்டிற்று

சோதனைச்சாவடி தாண்டி
வேதனை கோடிடப் புறப்பட்டேன்
வீதியின் இருமருங்கும்
கூப்பிடு தொலைவு இடைவெளியில்
கற்பகதருவின் உடல்களினால்
காவலரண்கள்
முட்கம்பி வேலி
இருகரையும் இடையிடையே இருந்து
இதயத்தில் தைக்கிறது.

ஊர்வாசல்தாண்டி
உள் நுழைந்தேன்
மருந்துக்கும் இல்லாத
அரசமரங்கள் இப்போது
நிரையாக நிற்கிறது
ஏழாண்டுகள் விதைத்த விதைகள்
எழுந்து நிற்கின்றன.
துச்சொழுங்கையெல்லாம்
கறுத்தவீதியாகியிருந்தாலும்
கச்சையிழந்த உணர்வில்
கவிண்டபடி நடக்கிறேன்
வீடு வந்தது கூட தெரியவில்லை.

அம்மா அடுப்படியில்
அமர்ந்திருந்தாள்
என்னைக் கண்டவுடன்
மகிழ்ச்சி கொப்பளிக்க
எழுந்து வந்தாள்
என்னால் இசைவாய்
பிரதிபலிப்புச் செய்யமுடியவில்லை
வெறும் புன்னகையை
வெளிப்படுத்தி நின்றேன்.

சகோதரர் எல்லோரும்
சண்ரீவி முன்னால்
சஞ்சரித்து இருந்தார்கள்
அப்பாவின் கண்கள்
தப்பான போதையிலே
தள்ளாடி நிற்பதையே
எனக்கு உணர்த்தியது

பாட்டியின் படம்
சுவரில் தொங்கியது
பாட்டி வைத்திருந்த
அந்தப் பொருட்கள்
நினைவில் தடம் பதிக்க
அவற்றைத் தேடினேன்
காணவில்லை
அம்மாவிடம் கேட்க
அந்நியனுக்கு விற்றதாய்
சொன்னாள்
வேரைவிற்ற வேதனை
அம்மாவுக்கு எங்கே
தெரியப்போகிறது

வீட்டில் இருக்கப்பிடிக்கவில்லை
வீதிக்கு வந்தேன்
வீதியின் காட்சிகள்
வீட்டிலேயே இருந்திருக்கலாம்
போல உணர்த்தியது.

பண்பாடு
படுகுழியில் கிடக்கிறது.
அடையாளம்
அழிந்து போகிறது
எப்போது எல்லோரும்
இதை உணர்வார்?

# இரண்டாண்டு காலம் யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தைகளும்

சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தம், சமாதான முயற்சிகள் என்பனவற்றை மதிப்பீடு செய்வதற்கான ஒரு பொருத்தமான காலப் பகுதி இதுவாகும். யுத்த நிறுத்தம் சுமார் இரண்டாண்டுகளை எட்டியுள்ள நிலையிலும், பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட ஒரு தரப்பு அதிகாரங்கள் பறிக்கப்பட்ட நிலையில் கட்டாயமாகத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டியதொரு நிலையிலும், யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பன ஒரு கால எல்லையைத் தொட்டு நிற்கின்றது என்பதே நிதர்சனமாகும்.

சனாதிபதி சந்திரிகா கடந்த ஏழாம் திகதி இரவு பாராளுமன்றத்தைக் கலைத்ததன் மூலம், சமாதான முயற்சிகளுக்கு ஒரு கால எல்லையை இட்டிருக்கிறார் எனலாம். தேர்தலில் யார் வெற்றி பெறினும் சரி, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டாலும் சரி, ஆரம்பிக்கப்படாது போனாலும் சரி சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பானதொரு காலப் பகுதி முடிவிற்கு வந்துள்ளது என்பதே யதார்த்தபூர்வமானதாகும்.

மறுவளமாக, சுமார் இரண்டாண்டு காலமாக இடம்பெற்ற யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பன குறித்த மதிப்பீட்டின் தேவையும் அவசியமானதாகவே உள்ளது. இதில் யுத்த நிறுத்தம், யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் அவற்றின் அமுலாக்கம், தமிழ்மக்களின் அபிலாசைகள், சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பெற்றுள்ள அங்கீகாரம் எனப் பல விடயங்கள் முதன்மை பெற்றவையாகின்றன.

இவ் இரண்டாண்டு காலப் பகுதியில் சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பு பல மோசமான யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டபோதும், விடுதலைப்புலிகள் காட்டிய அளவிற்கு மீறிய பொறுமை, சகிப்புத் தன்மை என்பன இவ் யுத்த நிறுத்தம் இதுவரையில் நிலைத்து நிற்பதற்கும், வெற்றிகரமாகத் தொடர்வதற்கும் ஏதுவாகியது எனில் மிகையாகாது.

குறிப்பாக, சிறிலங்கா ஆயுதப் படையினர் அம்பாறை காஞ்சிரங்குடாவில் ஏழு அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று பலரைக் காயப்படுத்தியபோதும், நெடுந்தீவுக் கடற்பரப்பில் புலிகளின் மீன்பிடிப் படகைத் தாக்கி அழித்தபோதும், சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் இரண்டு சரக்குக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்த போதும், மானிப்பாயில் பெண் போராளிகளை மிருகத்தனமாக தாக்கியபோதும் விடுதலைப்புலிகள் காத்த பொறுமையானது யுத்த நிறுத்தம் நீடித்து நிலைப்பதற்கு அடிப்படையாகியது.

இந்த நிலையில், யுத்த நிறுத்தம் என்பது ஒருவகையில் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டது என்றே கொள்ளலாம். ஆனால், சிறிலங்கா அரசிற்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாடு விதிகள் சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பினாலோ அன்றி சிறிலங்கா அரசாங்கத்தினாலோ கடைப்பிடிக்கப்பட்டதாக இல்லை. அதாவது, நிறைவு செய்யப்பட்டதாக இல்லை. இந்நிலையில் யுத்த நிறுத்தத்தின் நோக்கம் முழு அளவில் எட்டப்பட்டதாக இல்லை.

இவ் யுத்த நிறுத்த உடன்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒரு பகுதி விடுதலைப்புலிகளுக்கும்-சிறிலங்கா ஆயுதப் படையினருக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு என்பதாக இருந்திருப்பினும் மற்றைய பகுதியானது, யுத்தம் இடம்பெற்ற வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் என்பதை நோக்கமாகக் கொண்டதாகும். அதாவது, மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பதாகும்.



ஆனால், இவ்விடயத்திற்கு ஆரம்பத்தில் இருந்தே சிறிலங்கா இராணுவமும் சரி, அரசாங்கமும் சரி ஒத்துழைப்பை நல்கவில்லை என்றே கூறலாம். அதாவது, உடன்பாட்டுச் சரத்து விதிகளுக்கு உடன்பட்டு ஆயுதப் படைத் தரப்பு நடக்காத அதேவேளை, அரசாங்கத் தரப்பும் ஆயுதப் படைத் தரப்பிற்கே அனுசரணையாக நடந்து கொண்டது.

உயர்பாதுகாப்பு வலயம், கடல் வலயத் தடைச் சட்டம் போன்றவற்றில் ஆயுதப்படைத்தரப்புக் காட்டிய இறுக்கமான போக்கு யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானதாகியது. இதனால், இயல்பு வாழ்க்கைக்கு மக்கள் திரும்புதல் என்பது சாத்தியப்பாடற்ற தொன்றாகியது. இவ்விடயத்தைச் சுருக்கமாகக் கூறுவதானால், யுத்த நிறுத்தம் அமுலில் இருந்ததே ஒழிய யுத்த காலக் கெடுபிடிகள் எவையுமே குறைவடையவில்லை. மக்களும் இராணுவ அழுத்தங்களில் இருந்து விடுபட முடியவில்லை.

குறிப்பாக, இராணுவம் நிலைகொண்டிருந்த பாடசாலைகள், கோவில்கள், பொதுஇடங்கள் என்பனவற்றிலிருந்து அது விலகுவதற்குப் பின்னடிப்புச் செய்ததோடு, மக்கள் செறிந்து வாழும் பகுதியில் இருந்த முகாம்களையும் அது அப்புறப்படுத்தத் தயாராக இருக்கவில்லை. அதிலும் குறிப்பாக, உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள பாடசாலைகள், கோவில்கள், பொது இடங்கள் என்பனவற்றில் இருந்து அது வெளியேற எந்நிலையிலும் தயாராக இருக்கவில்லை.

ஆயுதப் படைத் தரப்பின் இந் நடவடிக்கைக்கு இராணுவச் சமநிலை, பாதுகாப்பு ஏற்பாடுகள் எனக் காரணம் கூறப்பட்டதாயினும், அவை யுத்த நிறுத்த உடன்பாட்டின் நோக்கங்களை இல்லாது ஒழித்திருந்தது.

இதேவேளை, புரிந்துணர்வு உடன்பாட்டு விதிகளை நிறைவு செய்யக்கோரி மக்களினால போராட்டங்களும், பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டதாயினும், அவற்றில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. அதாவது, யுத்த நிறுத்த உடன்பாட்டின் சரத்துக்களுக்கு அமைவாக சிறிலங்கா அரச / இராணுவத் தரப்பு நடந்து கொள்ள இசையவில்லை.

இந்த வகையில், யுத்த நிறுத்தம் ஓரளவு வெற்றிகரமாகவும், அதேவேளை யுத்த நிறுத்த உடன்பாடு முழு அளவில் அமுல் செய்யப்படாத நிலையும் காணப்பட்டது. இத்தகையதொரு நிலைக்கு சிறிலங்கா அரசதரப்பும் சரி, இராணுவத் தரப்பும் சரி இராணுவ ரீதியிலான அனுகூலங்களை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாமையே காரணமாகும்.

இந்நிலையில், இரண்டாண்டு காலமாக யுத்த நிறுத்தம் அமுலில் இருந்ததாயினும், உடன்பாட்டை அமுல் செய்வதில் இராணுவம் இடையூறுகளைக் கொடுப்பதாகவே இருந்து வந்தது. இந்நிலையானது யுத்த நிறுத்த உடன்பாடு தனது நோக்கத்தை எட்டவிடாது தடுத்தது எனக் கூறின் மிகையாகாது.

இதேவேளை, யுத்த நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து - சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நோர்வே அரசின் ஏற்பாட்டின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளும் எதிர்பார்த்த அளவில் முன்னேற்றம் காணப்படாது இடை நடுவில் நிறுத்தப்பட்டது.

சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் 2002ஆம் ஆண்டு செப்டெம்பரில் மாதத்தில் நோர்வேயின் மத்தியஸ்தத்தின் அடிப்படையில் முதற்சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன் பின்னர் மீண்டும் தாய்லாந்து, ஒஸ்லோ, பேர்ளின், டோக்கியோ எனப் பேச்சுவார்த்தைகள் தென்கிழக்கு, கிழக்கு ஆசியாவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் மாறிமாறி இடம்பெற்றதாயினும் அவற்றால் ஏற்பட்ட பலாபலன் குறித்து கேள்விகள் தற்பொழுது எழுந்துள்ளன.

இப்பேச்சுவார்த்தைகள் யாவற்றிலும் பொதுவாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் அத்தியாவசிய தேவைகள் பற்றியும், புனர்வாழ்வு, புனரமைப்புப் பற்றியும், இவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான இடைக்கால நிர்வாக அலகு ஒன்றை உருவாக்குவது பற்றியும் நிரம்பவே பேசப்பட்டது.

இவற்றிற்கு அப்பால் மனித உரிமைகள் பற்றியும், நிரந்தர அரசியற் தீர்விற்கான வழிமுறைகள் பற்றியும் பேசப்பட்டது. ஆனால், பேச்சுவார்த்தை மேசையில் சிறிலங்கா அரசாங்கத் தரப்பு கொள்கை அடிப்படையில் சில தீர்வுகளை ஏற்றுக் கொண்டதாயினும், அமுலாக்கம் என்ற விடயத்தில் சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை முடிவுகளுக்கு ஏற்ப நடந்து கொண்டதாக இல்லை.

இவ்வாறு பேச்சுவார்த்தைகளின் முடிவுகளுக்கு ஏற்ப சிறிலங்கா அரசாங்கம் நடந்து கொள்ளாமைக்கு விடுதலைப்புலிகளிடம் வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக அலகு ஒன்றை ஒப்படைப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாராக இல்லாது இருந்தமையும், வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரின் நலனில் தீவிர அக்கறை கொண்டிருந்தமையுமே காரணங்களாகும்.

எடுத்துக் காட்டாகக் கூறுவதானால், தாய்லாந்தில் முதலாவது சுற்றுப்பேச்சுவார்த்தையின் போது இடைக்கால நிர்வாகம் பற்றிப் புலிகள் பிரஸ்தாபித்தபோது அப்போதைய அரசியற்சூழ் நிலையை சாட்டாக வைத்து ஆட்சியாளர்கள் அது தொடர்பான பேச்சுக்களைப் பிற்போட்டனர். இதனால், இடைக்கால நிர்வாகம் என்பது பேச்சுவார்த்தை மேசையில் ஒத்திவைக்கப்பட்ட விடயம்போல் ஆகியது.

இதனை அடுத்து, ஒக்- நவம்பரில் தாய்லாந்தில் இடம்பெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களின் முடிவில் மக்களின் அத்தியாவசியத் தேவையினை நிவர்த்தி செய்வதற்கும், மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பான விடயத்தைக் கையாள்வதற்கும் மற்றும் நிரந்தர அரசியற் தீர்வு குறித்து ஆராய்வதற்கெனவும் இரு தரப்பு பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக மூன்று உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.

இது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்டதொரு முன்னேற்றமே. ஆனால், இக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு அரசாங்கத் தரப்பு தனது பூரண ஒத்துழைப்பை வழங்கியதாக இல்லை. குறிப்பாக, உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் உடனடி மனிதாபிமான தேவைக்கான விடயத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பேச்சுவார்த்தை மேசையில் ஒப்புக் கொண்ட வகையிலானதாக இல்லை.

எடுத்துக் காட்டாக, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், மீளக்குடியேற்றம் தொடர்பாகவும் ஆராய்வதற்கென அமைக்கப்பட்ட் பாதுகாப்பு உபகுழு சில தடைவைகள் ஓமந்தையிலும், முகாமலையிலும் கூடிப்பேசி ஆராய்ந்தாயினும் அப்பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. ஏனெனில், இராணுவத் தரப்போ அன்றி அரசாங்கமோ பேச்சுவார்த்தைகளில் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அது மாத்திரமல்ல, இராணுவத் தரப்பு, பேச்சுவார்த்தைத் தீர்மானங்களை நிறைவு செய்வதற்குப் புதிய புதிய நிபந்தனைகளையும் முன்வைக்கத் தொடங்கியது.

குறிப்பாக, யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியேறுதல் தொடர்பாக தளபதிகள் மட்டத்தில் நடந்த சந்திப்பில் அப்போதைய யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேக மீளக்குடியேறுதல் விவகாரத்தை ஆயுத ஒப்படைப்புடன் சம்பந்தப்படுத்தும் வகையில் நிபந்தனைகளை முன்வைத்தார். இவ்விடயத்தில் அரசாங்கத் தரப்பும்-இராணுவத்தின் நிலைப்பாட்டையே ஆதரித்தது. இதன் விளைவாக இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்ட விடயம் ஒன்றில் முட்டுக்காட்டை ஏற்பட்டது. இம்முட்டுக்கட்டையானது, பாதுகாப்பு உபகுழுவின் செயற்பாட்டையே முடக்கியது.

அடுத்ததாக, இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மற்றொரு உபகுழுவான வடக்கு-கிழக்கு அபிவிருத்தி மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பிற்கான உபகுழு தமது

பணிகளை விரைந்து ஆரம்பிக்கும் நோக்கில் கிளிநொச்சியில் தனது காரியாலத்தை நவம்பர் மாத நடுப்பகுதியில் திறந்து செயற்பாடுகளை ஆரம்பித்தது.

ஆயினும், இவ் உபகுழுவிற்கு நிதி வழங்குதல் தொடர்பாக எழுந்த சர்ச்சை காரணமாகவும் மீள் குடியேற்றம் தொடர்பான நெருக்கடி காரணமாகவும் அதன் செயற்பாடுகளும் பலவீனமான நிலையை அடைந்தது. அதாவது, இவ் உப குழுவிற்கு நேரடியாக வெளியில் இருந்து நிதி வழங்குதல் என்பது அரசியல் யாப்பிற்கு முரணானது எனக் கூறி இதற்கான நிதி வழங்கலுக்கு முட்டுக்கட்டை



போடப்பட்டது. இவ்வாறு முடக்கப்பட்ட இவ் அமைப்பின் செயற்பாட்டை மீள ஆரம்பிப்பதற்கும் அரசாங்கத் தரப்பினால் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

இந்த வகையிலேயே இதன் பின்னான ஏனைய சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் பெரிதும் முன்னேற்றம் எதையும் காணவில்லை. அரசாங்கத் தரப்பு வடக்கு-கிழக்கிற்கென தனியானதொரு நிர்வாக அலகை உருவாக்கக் காட்டிய தயக்கமே இத்தகையதொரு நிலைக்குக் காரணமாகும்.

இத்தகையதொரு நிலையில், சிறிலங்காவிற்கு நிதி உதவி வழங்குவதற்கென டோக்கியோவில் நடைபெறவிருந்த உதவி வழங்குவோர் மாநாட்டிற்கு முன்னோடியான மாநாடு ஏப்ரல் மாதத்தில் அமெரிக்கா தலைமையில் வாஷிங்டனில் கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் விடுதலைப்புலிகள் ஓரம் கட்டப்பட்டனர். இதற்கு விடுதலைப் புலிகள் அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட இயக்கமாக உள்ளமை காரணமாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், விடுதலைப்புலிகள் இவ் விளக்கத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில், டோக்கியோவில் சிறிலங்காவிற்கு உதவி வழங்குவதற்கான மாநாட்டை கூட்டுவதில் ஜப்பான் அரசு தீவிர அக்கறை காட்டியது. ஜப்பானின் விசேட தூதுவரான யசுசி அகாஷி இவ்விடயத்தில் தீவிர அக்கறை கொண்டு கடமையாற்றினார்.

ஆனால், டோக்கியோ மாநாடு குறித்து விடுதலைப் புலிகள் தெளிவானதும், உறுதியான நிலைப்பாடு ஒன்றைக் கொண்டிருந்தனர். வடக்கு- கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றிற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் அமுல் செய்யாத வரையில் டோக்கியோ மாநாட்டில் பங்கேற்பதில்லை என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது.

இவ் உதவி வழங்கும் மாநாட்டில் புலிகளைப் பங்கேற்க வைக்க ஜப்பானும், நோர்வேயும் தீவிர முனைப்புக் காட்டின. ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி, நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் உயர் பீடத்துடன் சந்திப்புக்களை நடாத்தினர். ஆயினும் விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், "தமிழர் தாயகத்தில் நிர்வாக அதிகாரமுள்ள ஒரு கட்டமைப்பை நிறுவாமல் டோக்கியோ மாநாட்டில் பங்கேற்பதில்லை" என்ற நிலைப்பாட்டை தெளிவாகவே கொண்டிருந்தார்.

இந்த நிலையில், டோக்கியோ மாநாட்டிற்கு முன்பாக அரசாங்கம் இடைக்கால நிர்வாக கட்டமைப்பிற்கானதொரு திட்டத்தை முன்வைத்தது. ஆனால், விடுதலைப் புலிகளால் அத்திட்டம் நிராகரிக்கப்பட்ட நிலையில், இத்திட்டம் திருத்தங்களுடன் கூடியதாக மீண்டும் யூலை முதல் வாரத்தில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டது. அதுவும் விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்ட நிலையில், யூன் - 9ஆம் திகதி நடைபெற்ற டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்பது சாத்தியமற்ற தொன்றாகியது.

மேலும், டோக்கியோ மாநாட்டில் பங்கேற்ற சிறிலங்கா பிரதம மந்திரி இடைக்கால நிர்வாக சபைக்கான திட்டம் ஒன்றை முன்வைத்தவேளை, புலிகள் அதனை நிராகரிக்காது விடினும் ஏற்காத விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபை ஒன்றிற்கான திட்ட வரைவு ஒன்றைத் தாம் முன்வைப்பதற்குத் தயாராகினர். விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடானது தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் ஒரு மைல்கல் போன்றதாகும்.

ஆனால், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாததையடுத்து, அரசாங்கத்துடனான எந்தவித உத்தியோக பூர்வ பேச்சுக்களும் இடம்பெறாமல் போனது. இவ்வேளையில், விடுதலைப்புலிகள் இயக்கம் தமது உள்நாட்டு, வெளிநாட்டு சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகளுடன் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்ட வரைவு ஒன்றைத் தயாரித்தது, ஒக்டோபர் மாத இறுதி நாளில் அதனை நோர்வே அரசிடம் சமர்ப்பித்தனர். விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது இது தொடர்பாகப் பேசுவதற்கு அரசாங்கம் தயாரானது. ஆயினும், சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் அதற்குப் பெரும் குந்தகம் விளைவிப்பதாகியது.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறிவருவதாகக் குற்றம் சாட்டிவந்த சனாதிபதி தரப்பு - விடுதலைப் புலிகளிடம் தமிழீழத்தை ஒப்படைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தயாராகி வருவதாகவும் குற்றம் சுமத்தியது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் திட்ட வரைவானது, தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் மைல்கல் போன்றதாகும். ஏனெனில், தமிழ் மக்களின் உரிமைகளுக்கான கோரிக்கையாக முதல் தமிழ் மக்கள் தரப்பினால் முன்வைக்கப்பட்டதாக இத்திட்ட வரைவு இருந்தது.



ஆனால், புலிகளின் இவ் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான கோரிக்கைக்கு சனாதிபதி தரப்பில் இருந்தும், ஜே.வி.பி. தரப்பில் இருந்தும் பேரினவாத சக்திகளிடம் இருந்தும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அத்தோடு, இதற்குப் பதிலடி நடவடிக்கை போன்று சனா திபதி சந்திரிகா நவம்பர் 4ஆம் திகதி பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களையும் பிரதமர் ரணில் அரசாங்கத்திடம் இருந்து பறித்தெடுத்தார்.

சனாதிபதி சந்திரிகாவின் இந்நடவடிக்கையானது ஏற்கனவே இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமாதான நடவடிக்கைகளை முற்றாக முடக்கியது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் - குறிப்பாகப் பாதுகாப்பு அமைச்சு தமது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில், பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பது அர்த்தமற்றது எனக் கூறிப் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிக் கொண்டார்.

சனாதிபதி சந்திரிகாவோ யுத்த நிறுத்தம் தொடரும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு அளிக்கப்படும் எனத் தெரிவித்தாரே ஒழிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளில் இருந்து ஒதுங்கிய நிலையிலும், சமாதான முயற்சிகளை சனாதிபதி பொறுப்பேற்று நடத்த வேண்டும் என பிரதமர் ரணில் கோரிக்கை விட்டிருந்த போதும் அவர் சமாதான முயற்சிகளை பொறுப்பேற்கத் தயாராக இருக்கவில்லை. இதேவேளை, கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து நோர்வே அரசும் தனது மத்தியஸ்துவ முயற்சிகளை இடை நிறுத்தியது.

இந்த வகையில், சனாதிபதி சந்திரிகாவின் அமைச்சுக்கள் பறிப்பானது சமாதான முயற்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது என்றே கூறலாம். சமாதான முயற்சிகளுக்கோ, யுத்த நிறுத்தத்திற்கோ தாம் எதிரானவரல்ல எனச் சனாதிபதி சந்திரிகா கூறிக் கொண்டாலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் சனாதிபதி சந்திரிகாவினாலேயே குழப்பத்திற்குள்ளானது என்பதே பொது அபிப்பிராயமும், முடிவுமாகும்.

இவ்வாறாக, யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் பூரணமாகாத நிலையிலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடை நடுவில் குழப்பத்திற்கும் உள்ளான நிலையிலுமாக ஐ.தே.முன்னணி அரசாங்கம் சனாதிபதியால் கலைக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த இரண்டாண்டு கால இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சியினால் ஏதாவது பலன் உண்டா? என்பதை மதிப்பீடு செய்வது அவசியமானதாகிறது.

இச்சமாதானப் பேச்சுவார்த்தை காலம் தமிழ் மக்களுக்கு வெளிப்படையாக / அனுகூலமான அரசியல் - இராணுவ ரீதியிலான மாற்றங்கள் எதையும் கொண்டு வந்துவிடவில்லை. ஒரு வகையில் பார்த்தால் கடந்த காலங்களைப் போன்று ஏமாற்றத்தைக் கொடுத்ததொன்றாகவே இருந்தது. அதாவது, சிங்கள ஆளும் வர்க்கத்தினர் ஒரு தரப்பினரின் எதிர்ப்பால் சமாதான முயற்சிகள் கைவிடப்பட்ட நிலையே ஏற்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல, சர்வதேச நாடுகள் பலவும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இம்முறை இவ் விடயத்தில் ஆர்வம் காட்டியமையால் இடைக்கால ரீதியிலான பொருளாதார அனுகூலமானது கிடைக்கப்பெறலாம் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் பரவலாகவே இருந்தது. ஆனால், அவ் எதிர்பார்க்கைகூட நிறைவேறவில்லை என்றே கூறலாம்.

ஆனால், இம்முறை இவ்யுத்த நிறுத்த காலம் முற்றுமுழுதாக தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு அனுகூலமானவற்றை வழங்கவில்லை என்று கூறுவதற்கும் இல்லை. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான அங்கீகாரத்தை சர்வதேச ரீதியில் ஓரளவேனும் பெற்றுக் கொடுத்துள்ளது என்றே கூறலாம்.

இந்த வகையில், முதலில் குறிப்பிடத்தக்க விடயம், இவ்விரண்டாண்டில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் தொடர்பானதும், விடுதலைப் புலிகள் தொடர்பானதுமான சர்வதேசத்தின் பார்வையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளமையாகும்.

இவ் யுத்த நிறுத்தம் ஏற்பட்ட போது ஒரு தரப்பினர் விடுதலைப் புலிகள் சர்வதேச அழுத்தத்தின் காரணமாகவே இவ்உடன்பாட்டிற்கு உட்படுவதாக விமர்சித்தனர். ஒரு தரப்பினர் புலிகள் பலவீனப்பட்டு போயுள்ளனர் எனவும் கூறினர். சர்வதேச சூழ்நிலையும் விடுதலைப்புலிகளுக்கு மாறானதாகவே இருந்தது.

சர்வதேச தரப்பினரும் விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்திருப்பினும் சிறு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியும் யுத்தத்தை மீள ஆரம்பித்து விடுவர் என்றே கருதினர். விடுதலைப்புலிகளின் கடந்த கால வரலாற்றில் போரில் அவர்கள் காட்டிய முனைப்பே உலகை அத்தகைய முடிவிற்குக் கொண்டு வந்திருந்தது.

ஆனால், இவ்விரு ஆண்டு காலத்தில் விடுதலைப்புலிகள் தமது அரசியல்-இராஜதந்திரப் பணிகளை என்றுமில்லாதவாறு முனைப்புப்படுத்தினர் என்றே கூறலாம். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் ஒவ்வொரு அரசியல்-இராஜதந்திர நகர்வுகளும் அவர் கடந்த காலத்தில் காட்டிய இராணுவ ஆற்றலுக்கு நிகரானதாகவே இருந்தது.

இதன் விளைவாக, இவ்விரு ஆண்டு காலப் பகுதியானது சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் போராட்டத்திற்கான நியாயப்பாட்டை வலியுறுத்துவதற்கும், அங்கீகாரத்தைப் பெறுவதற்குமான அடித்தளம் இடப்பட்டது எனலாம்.

(46ம் பக்கம் பார்க்க...)

ஜெயராஜ்

# விடுதலைக்கான அரங்கு உண்மையில் ஒன்று அல்ல

**96-2001** வரையான காலத்தை இருண்ட காலம் என்று வர்ணிப்பார்கள். அந்த இருண்டகாலத்தில் தடைப்பட்ட அரங்கப்பணியை மீள ஆரம்பிக்க பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் களங்களாக அமைந்தன.இவ்வாறு 1996 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் பல நாடகங்களை எழுதி இயக்கிவரும் தே. தேவானந்த் தெரிவித்தார்.

அவருடனான நேர்காணல் வருமாறு;

01.அரங்கக் கலையினுள் எவ்வாறு ஈர்க்கப்பட்டீர்கள்?

1991 ஆம் ஆண்டு நாடகக்களப்பயிற்சி ஒன்றை எமக்கு நடத்த வேண்டும் என்று குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களை அணுகியிருந்தோம். அவர் அதற்கு ஒத்துக்கொண்டு நாடகக்களப்பயிற்சியை நடத்துவதற்காக க.சிதம்பரநாதன் அவர்களை அனுப்பிவைத்தார். அந்தக்களப்பயிற்சியில் நான் பங்குபற்றியது தான் எனது அரங்கக்கலை நுழைவின் ஆரம்பம்.

களப்பயிற்சி எனக்கு நாடகத்திறன்களை தந்தது என்பதை விட எனக்குள் ஒடுங்கிக்கிடந்த என்னை எனது கேள்விகள், இயலாமைகளுடன் தூக்கி வெளியில் போட்டது. என்னை நானே பிரித்துப்பார்க்க முடிந்தது. எனது பலன்களையும், பல வீனங்களையும் உணர்ந்தேன். என்னால் முடியும் என்ற நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்தபோது அரங்கிற்குள் நுழைய ஆரம்பித்தேன்.

இந்தக்களப்பயிற்சிக்குப் பின் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட உயிர்த்த மனிதர் கூத்து நாடகத்தில் நடிப்பதற்காகச் சென்றிருந்தேன். என்னிடம் நடிப்பதற்கான திறன் இருக்கவில்லை என்பதால் என்னை குறிப்பெடுப்பவராக நெறியாளர் க. சிதம்பரநாதன் இணைத்துக்கொண்டார். நான்கரை மாதம் நடந்த ஒத்திகையில் நான் தினமும் பங்கு பற்றியதன் பயனாக பின்னர் நடிகனாக இணைக்கப்பட்டேன். உயிர்த்த மனிதர் கூத்து நாடகப்பயிற்சி நாடக அனுபவமே இல்லாத எனக்கான அத்திவாரம்.

உயிர்த்த மனிதர் கூத்து நாடக மேடையேற்றங்களில் பங்கு பற்றிய அனுபவம், அதில் கிடைத்த நல்ல நண்பர்கள், சிதம்பரநாதன் சேர்வீட்டில் இடம் பெற்ற சந்திப்புக்கள், எமக்குள் எழுந்த எதிர்காலம் பற்றியதும் இலட்சியம் பற்றியதுமான எண்ணங்கள்.

வாழ்க்கையே எங்கள் ஆயுதம்.
வாழ்வதே எங்கள் போர்முறை

உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்
உலகத்தாய் வயிற்று மைந்தர்

என்று மேடையெங்கும் தெருவெங்கும் ஊர்எங்கும் 91ல் இருந்து 95 வரை பாடித்திரிந்த உணர்வு, குழந்தை ம.சண்முகலிங்கம் போன்ற உன்னத மனிதர்களின் தரிசனம், பல்வேறு நாடகங்களில் நடித்ததால் கிடைத்த பேரானந்தம் நாடக நண்பர்கள் குழுவாகி இறுகி நெருங்கிய போது ஏற்பட்ட சச்சரவுகள் கண்ணீர், கோபம், வெறுப்பு, மகிழ்வு, அணைப்பு, துயர், அனைத்தும் என்னை இந்தத்துறைக்குள் ஈர்த்து வைத்துக் கொண்டவைகள்.

தறுதலையாக திரிந்த என்னை கல்வி நோக்கி வழிப்படுத்திய சிதம்பரநாதன் சேர், கற்பித்த நாடக நண்பர்கள் பல்கலைக்கழக பிரவேசம் ராக்கிங்கை எதிர்த்து பல்கலைக் கழகத்திற்குள் கிரியுடன் மாட்டு வண்டியில் சென்ற துணிவு, அதன் பின் தனியான அதன் எதிர் விளைவை சந்தித்த அனுபவங்கள் இவையும் கூட அரங்கக்கலையில் ஈர்க்கப்பட்டதற்கான காரணிகளாகின்றன.

02.பரவலான அறிமுகத்தை உங்களது நாடகங்கள் பெற்றுள்ளன. அவ்வகையில் உங்களது நாடகங்களையும், அவற்றின் பேசு பொருளையும் சுருக்கமாகத் தாருங்கள்?

நீங்கள் என்னுடைய நாடகங்கள் என்று எதனைக் கருதுகிறீர்கள்?

நான் நடித்த நாடகங்களும் என்னுடையவைதான். நான் நெறியாள்கை செய்த நாடகங்களும் நான் எழுதி நெறியாள்கை செய்த நாடகங்களும் என்னுடையவைதான்.

நான் என்னை ஒரு நெறியாளன் என்ற தளத்தில் வைத்தே பார்க்க முனைகிறேன்.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் அதிகமான பாடசாலை நாடகங்களை/ சிறுவர் நாடகங்களை (கிட்டத்தட்ட 25 நாடகங்கள்) நெறியாள்கை செய்ததோடு நெறியாள்கை என்ற துறைக்குள் நுழைகிறேன். நாடக ஆசிரியரின் பேசுபொருளுடன் உள்ள உடன்பாடு காரணமாகவே அந்த நாடகத்தை நெறியாள்கை செய்ய இணங்கிக்கொள்கின்றேன்.

அந்த வகையில் கல்வி ஒடுக்குமுறை, சாதி வேறுபாடு, மனித விழுமியங்களை பேணுதல் என்பன பேசு பொருளாகின்றன.

கலாநிதி இ.முருகையனின் மேற்கின் மேலாதிக்கத்தின் கொடுமை பற்றி பேசிய 'எல்லாம் சரிவரும்'. நாடகத்தையும் நெறியாள்கை செய்திருக்கின்றேன்.

அடுத்து, நான் எழுதி நெறியாள்கை செய்த நாடகங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிடலாம்.

நான் வன்னியில் இருந்து 96 ஆம் ஆண்டு இறு திப் பகுதியில் யாழ்ப்பாணம் திரும்பிய பின் எனது வாழ்வியலோடு பிணைந்த பிரச்சினைகளை நாடகத்தினூடாக பேசஆரம்பித்தேன். இக்கால கட்டத்திற்குப் பின்பே நான் நாடகம் எழுத ஆரம்பித்தேன்.

நான் முதலில் எழுதிய நாடகம்'புழுதியின் கீதங்கள்' இதனை யாழ். இந்து மகளிர் கல்லூரி தமிழ் விழாவுக்காக எழுதியிருந்தேன். நான் எழுத வேண்டும் என்று விரும்பியவர்களில் குழந்தை ம.சண்முகலிங்கம் சிவயோகன், ரதிதரன் போன்றோர் முக்கியமானவர்கள். இந்த நாடகம் 95 இடம் பெயர்வு துயரையும், மீள்குடியேற்ற அவஸ்தையையும் பேசியது.

96-2002வரையான காலத்தை இருண்ட காலம் என்று வர்ணிப்பார்கள். அந்த இருண்டகாலத்தில் தடைப்பட்ட அரங்கப்பணியை மீள ஆரம்பிக்க பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் களங்களாக அமைந்தன



'புழுதியின் கீதங்கள்' நாடகத்திற்குப் பின் 'துணிவு' என்ற சிறுவர் நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்திருந்தேன். இந்நாடகம் தந்தையை இழந்து துயருறும் பச்சைப் பாலகர்கள் அம்மாமார்களுக்கு சுமைத்தணிவை ஏற்படுத்துவதற்காக அமெரிக்க உளவியலாளர் நான்சிபரன் எழுதிய கதை ஒன்றை தழுவி எழுதப்பட்டது. மட்டக் களப்பில் இராணுவத் தால் கொல்லப்பட்ட தந்தையின் இழப்பைப் புரிந்து கொள்ள முடியாத பிள்ளையை மையப் படுத்தி இந்தக்கதை எழுதப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் 98 ஆம் ஆண்டுவிஞ்ஞானப் பீட மாணவர்களுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட 'விழிச்சுடர்' நாடகம் பெரியளவில் மேற் கொள்ளப்பட்ட முதல் நாடக முயற்சி. அந் தக்காலங்களில் பல்கலைக்கழகத்தில் நாடகப் போட்டி நடத்துவதற்கு முக்கிய நிபந்தனையாக 'அரசியல் பேசக்கூடாது' என்று அச்சடிக்கப்பட்டு சுற்றுநிருபமாக அனுப்பப்படும். 'விழிச்சுடர்' நாடகம் ஐதீகக்கதையூடு சமகாலப் பிரச்சினைகளைப் பேசியது. அதனைப் பார்க்கின்ற அன்றைய யாழ்ப்பாண மக்கள் புரிந்து கொள்வார்கள். வெளிப்படையாக அடக்குமுறை பற்றி பேசுவது சட்டத்தின் பிடிக்குள் அகப்படுவதற்கான ஒன்றாக அமைந்து விடும் என்பதால் குறியீடுகளூடாகப் பேசுவதும், பூடகமாகப்பேசுவதுமான நிலைக்குத் தள்ளியது. அரக்கியரின் ஆட்சியில் அகப்பட்ட தேசம் தன்சாதுரியத்தால் ஒளிபெறுவதான கருப்பொருளை இந்நாடகம் கொண்டிருந்தது.

1999 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் தடல்புடலாக நடந்தன. அதில் ஒரு அங்கமாக கண்காட்சி நடந்தது. நுண்கலை துறைசார்பாக ஒரு நாடகத்தை மேடை ஏற்றும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்காக 'உண்மை கொடிது' நாடகத்தை தயாரித்திருந்தோம். இந்நாடகம் அன்றைய புத்திஜீவிகளும், அதிகாரிகளும் சொல்லி வந்த பின்வரும் கூற்றைப் பொய்யாக்கியது.

'யாழப்பாண மக்கள் விடுவிக்கப்பட்டு விட்டார்கள். யாழ்ப்பாணம் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டது".

முள்ளுக்கம்பி சுருளுக்குள் கிடக்கும் வாழ்வை பார்ப்போர் உணரப்பண்ணுவதாக அமைந்தது. இவ் அரங்கு வடிவ ரீதியில் முக்கியமானதாக அமைந்தது. ஒரு இருண்ட அறைக்குள் 50-80பார்வையாளர்களுக்காக 20நிமிடம் ஆற்றுகை செய்யப்பட்டது. அடுத்தது ஆற்றுகை செய்த எண்ணிக்கை ரீதியில் முக்கியமுடையது. நான்கு நாட்கள் நடந்த கண்காட்சியில் 38 தடவைகள் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்த அரங்க வடிவத்தின் நீட்சியாகவே பொங்கு தமிழுக்கு வித்திட்ட 'ஆன்மவிசாரம்' நாடக ஆற்றுகை நடந்தது. 'உண்மைகொடிது' நாடக ஆற்றுகை அடக்குமுறையை வெளிப்படையாக அரங்கில் பேசலாம் என்ற துணிவைக்கொடுத்தது எனலாம்.

அடுத்து 2000 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'அக்கினிப்பெருமூச்சு' நாடகம் காணாமல் போனோர் பற்றிப் பேசியது. சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன இளங்குடும்பஸ்தன் அல்லது இளைஞனின் பிரிவில் துயருறும் இளம் மனைவி ஒருத்தியினதும், இளம் தாய் ஒருவரதும் துயரை இந்நாடகம் பேசி, இத்துயர்கள் உயிர் மூச்சாக எழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

2001 பிந்துனுவெவ மனித படுகொலைச் சம்பவத்தை சித்தரிப்பதாக 'உயிர்விசை' நாடகம் தயாரிக்கப்பட்டது. தொடரும் கொடுமை நீங்க வேள்விதேவை என்பதை வலியுறுத்தி கொடும்பாவி சாகாளோ கோடி மழை பெய்யாதோ என்ற வேண்டுதலோடு முடிகிறது.

2003 ல் 'முடக்கம்' நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்துள்ளேன். ஏகாதிபத்திய ஆட்சிச்சூழ்ச்சியாக உருவாக்கப்படும் என்.ஜி.ஓ பண்பாட்டின் ஆதிக்கம், ஏய்ப்பு பற்றி இந்நாடகம் பேசுகிறது.

03.சமகால பிரச்சினைகளே உங்களது நாடகங்களின் பேசுபொருளாகும். இவை அரசியலை குறிப்பாக பேசுகின்றன எனலாமா?

நிச்சயமாக அரசியலை பேசுகின்றன எனலாம். குறிப்பாக இனவிடுதலை பற்றியும், சமூக விடுதலை பற்றியும் அதிகம் பேசுகின்றன.

04.'அக்கினிப்பெருமூச்சு' யாழ்ப்பாணம் திறந்த வெளிச் சிறைச்சாலையாக இருந்த காலகட்டத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது. பொதுவாக இக்கால கட்டத்தில் நாடகத்தின் பேசுபொருள் காரணமாக நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் யாவை?

(i) பல்கலைக்கழக நிர்வாகம் இவ்வாறான பிரச்சினைகளை பேசும் நாட கங்களை போடவேண்டாம் என்று அச்சுறுத்தியது. அவர் களுக்கு இராணுவ சிவில் நிர் வாகத்தினால் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணம் என்று கூறினார்கள்.

(ii) வெவ்வேறு இடங்களிலும் மேடையேற்றும் போது எமது நண்பர்கள், உறவினர்கள் எனப்பலரும் "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் கவனம்" என்றார்கள். இப்போ என்மனதில் சாவு பற்றிய பயம் தொத்திக் கொள்ள என்மனம் என்னை பின்வருமாறு அச்சுறுத்தியது. 'நீ பல பேருக்குப்பொறுப்புடயவன்'

(iii) நாம் நாடகத்தை பல்வேறு இடங்களிலும் மேடை ஏற்ற முயற்சித்த போது இராணுவ பொலிஸ் அச்சுறுத்தல் (அனுமதி மறுப்பு) காரணமாக முயற்சியைக் கைவிட்டது.

(iv) சுழிபுரப்பகுதியில் நாடகத்தை மேடை ஏற்றிய போது நாடகத்தை ஒழுங்குபடுத்தியவர்கள் இராணுவத்தினராலும், சிவில் ஆட்சியாளர்களாலும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

(V). மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும் ஊரடங்குச் சட்டம் அதற்குள் மேடைஏற்றங்களை முடித்து ஒவ்வொரு சோதனைச்சாவடியாக இறங்கி அ[illegible]ள அட்டை காட்டி வீடுசெல்லும் வரை உள்ள பயங்கரம் எ[illegible]று பல அச்சுறுத்தல்கள் தொடர்ந்து நாடகத்தை மேடை ஏற்ற தடையாக இருந்தன.

05. அரங்கினூடாக அரசியலைப் பேசுவது என்பது எமது தேசத்தில் வெற்றி அளித்துள்ளதா? அது எவ்வாறான தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது?

உண்மையில் அரங்கினூடாக அரசியலைப் பேசுவதற்காக அரங்கைப் பயன்படுத்துவது இந்த இரண்டு நிலைமைகளும் எமது தேசத்தில் பல ஆண்டுகளாக உள்ளன.இதனால் பல

செவ்வி கண்டோர்
இயல்வாணன்,ஞாபகன்

தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அவை எவை என்பதை சரியான முறையில் குறிப்பிடுவதற்கு ஆய்வுகள் நடைபெறவில்லை.

06. எமது தேசத்தில் விடுதலைக்கான அரங்கின் தேவை எவ்வாறு வேண்டப்படுகிறது? அதற்கான பங்களிப்புக்கள் என எவற்றைக்கருதுகிறீர்கள்?

நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியாத மக்களைப் பார்க்கின்றோம். வெறும் மாயைகளை நம்புவது, தற்காலிகமான தீர்வுகளைப் போதும் என்று நினைப்பது, தேசம் ஒன்று கிடைத்த பின் எமது பிற்போக்கு செயல்களையும், எண்ணங்களையும் களைவதாக எண்ணுவது, சமூக கட்டமைப்பு குழறுபடிகள் என்ற பலவற்றில் 'பண்பாட்டு விடுவிப்பு' அவசியமாகிறது. இதற்காக விடுதலைக்கான அரங்கு தேவை.

இன ஒடுக்கு முறையில் இருந்து விடுவிப்பதுக்கும் சமூக, மனஇறுக்கங்களில் இருந்து விடுவிப்பதற்கும் விடுதலைக்கான அரங்கு அவசியம். இவை அனைத்தும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படுதல் அவசியமாகிறது.

விடுதலைக்கான அரங்கு உண்மையில் ஒன்று அல்ல. அது பல பல்வேறு மக்கட் குழுமத்திற்கு ஏற்ப வேறுபடுவது. அது ஒருவரால் மேற்கொள்ளப்படக்கூடியதுமல்ல. பலரது கூட்டு மொத்தம். எமது தேசத்தில் விடுதலைக்கான அரங்க கோட்பாட்டுடன் பலர் இயங்கி வருகிறார்கள். இவர்களில் வெளித்தெரிய

(46 ஆம் பக்கம்பார்க்க)

# வன்னியின் வளர்ச்சிக்கு இடையூறாக வீதிப் போக்குவரத்துச் சீர்கேடு

இன்றைய நவீன உலகில் ஒரு நாட்டின்/பிரதேசத்தின் வளர்ச்சிக்கு வீதிப் போக்குவரத்து வசதி என்பது இன்றியமையாத ஒன்றாகும். இதுவே வளர்ச்சியின் அடிப்படையாகவும் இருக்கின்றது. இவ்வகையில் பார்க்கும்போது வன்னிப் பிரதேசத்தின் வளர்சசிக்கு கடந்த பல வருடங்களாக வீதிகளின் சீர்கேடு என்பது பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இருந்து வருகின்றது.

யுத்தம் நிறுத்தப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு இரண்டு வருடங்களாகின்ற நிலையிலும் வீதிப்போக்குவரத்தைச் சீரமைக்கும் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருவதைக் காண முடிகின்றது. அரசியல் ரீதியாக முக்கியத்துவம்பெற்ற ஏ-9 வீதி மற்றும் பரந்தன்-முல்லைத்தீவு வீதி உட்பட ஒருசில வீதிகளே இக்காலப்பகுதியில் புனரமைக்கப்பட்டிருக்கின்றன. இவையும் குறுங்கால அடிப்படையில் புனரமைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் "சி" தர "டி" வீதிகள் புனரமைப்பு என்பது மிகவும் விசனத்திற்குரிய ஒன்றாகவே உள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தின் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கென ஒதுக்கப்பட்ட "சி" தர "டி" தர வீதிகளின் புனரமைப்புபணிகள் பற்றி நோக்குவோமாயின்

இம்மாவட்டத்தில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 44 வீதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவை 274.74 கி.மீ நீளமானவையாகும். இதில் 108.63 கி.மீ தார்வீதிகளாகும். 1987ஆம் ஆண்டுக்கு முன்னர் வீதிகளைத் திருத்துவதற்கு திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற நிதியை

த.ரேணுகா

அரசாங்கம் வழங்கியது. ஆனால் அதற்குப் பின்னைய ஆண்டுகளில் வட-கிழக்கு மாகாண சபையினால் ஒதுக்கப்படுகின்ற நிதிக்கேற்ப திணைக்களம் திட்டமிட்டு அபிவிருத்தி வேலையைச் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளதென வீதி அபிவிருத்தித் திணைக்க[illegible]த்தின் நிறைவேற்று பொறியியலா[illegible] சிவயோகன் தெரிவித்தார். இ[illegible]நிலை இன்றுவரை தொடர்கிறது.

அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையில் பலநிறுவனங்கள் உதவி செய்யுமென அனைவரதும் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் சமாதான சூழல் ஏற்பட்ட பின்னரும் எந்தவொரு திட்டத்திலும் இதுவரை வீதிகளுக்கென எவ்வித வெளிநாட்டு நிதி ஒதுக்கீடும் கிளிநொச்சிக்கு வழங்கப்படவில்லை.

"புரிந்துணர்வு" ஒப்பந்தத்திற்கு முன்னர் 1997 ஆம் ஆண்டு 3.9 மில்லியன் ரூபா வீதி புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்டது. பின்னர் 1998 ஆம் ஆண்டு 6.5 மில்லியன் ரூபாவும், 1999 ஆம் ஆண்டு 9 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தி வீதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்ற வேளை ஜூலை மாதம் சகல வேலைகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென கோரி வீதி புனரமைப்பிற்கு



செலவாகிய 6.5 மில்லியன் ரூபாவை விட மிகுதித் தொகையை அரசாங்கம் மீளவும் திருப்பிப் பெற்றது என பொறியியலாளர் கூறினார். அரசாங்கத்தினால் வட-கிழக்கு மாகாணசபைக்கு நிதி ஒதுக்கப்பட்டு இதன் ஊடாகவே வீதி அபிவிருத்தித் திணைக்களங்களுக்கு நிதி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2000/2001 ஆம் ஆண்டுகளில் வீதி அபிவிருத்திக்கென எவ்வித நிதியும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. இக்காலங்களில் தமிழீழ நிர்வாக சேவையின் பொறியியல் பகுதியினர் தங்களின் செலவில் வீதிகளை சீராக்கிபராமரித்தமையால் ஓரளவேனும் வீதிகள் இந்நிலையில் இருக்கின்றதெனவும் அல்லது வீதிகளனைத்தும் மிகப் பாரிய சேதங்களுக்குள்ளாகியிருக்குமெனவும் பொறியியலாளர் தெரிவித்தார்.

பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஏ-9 பாதை திறந்த பின்னர் வீதிப்புனரமைப்பிற்கென 2002ஆம் ஆண்டு ஒரு மில்லியனும், 2003 ஆம் ஆண்டு எட்டு மில்லியனும் ஒதுக்கப்பட்டது. இச்சிறுதொகை நிதியைக் கொண்டு 27474 கி.மீ நீளமான பாதைகளை மக்கள் பாவனைக்கேற்ப பூரணமாக சீரமைக்க முடியாது. ஏனெனில் ஒரு கி.மீ. வீதியை பூரணமாக புனரமைப்புச் செய்வதற்கு 3-4 மில்லியன் ரூபா தேவை.



ஆனால் இவர்கள் இச்சிறுதொகை நிதியை வைத்து முக்கியமான பாதைகளையும், மக்கள் பாவனை அதிகரித்த பாதைகளையும் தற்காலிக போக்குவரத்திற்கேற்ப சிறு திருத்த வேலைகளை மட்டும் செய்துள்ளனர். வீதிகள் அனைத்தும் கிரவலாக மாற்றப்பட்டுள்ளதுடன் இவற்றைச் சீராகப் புனரமைக்க போதிய நிதியில்லாத காரணத்தினால் பாரிய குன்றும், குழியுமாக உள்ள இடங்களுக்கு மட்டும் கிரவல், புழுதிமண் போன்றவற்றைப் போட்டு செப்பனிடுகின்றனர்.இதனால் எவ்வித பயனும் இல்லை. செப்பனிடப்பட்டு சில தினங்களில் அவ்வீதியால் பயணிப்பவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. பாரிய வாகனங்கள் செல்லும்போது மேலெழும் கிரவல் தூசுப்படலத்தினால் அதில் பயணிப்பவர்கள் சுவாசிக்கஇயலாது திணறுகின்றனர். மாணவர்கள் வீட்டிலிருந்து பாடசாலைக்குப் புறப்படும் வேளை வெண்ணிற ஆடை அணிந்து மிகவும் அழகாக செல்கின்றனர். ஆனால் மாலை வீடு திரும்பும்வேளை 'வெண்ணிற ஆடை செந்நிறமாகக்' காட்சியளிக்கின்றது. இதனால் இவர்கள் எதிர்காலத்தில் பல்வேறு நோய்களுக்குள்ளாக வேண்டியநிலை ஏற்படலாம்.

வட-கிழக்கு மாகாணசபை ஊடாக "கிள்ளித் தெளிக்கப்படுகின்ற சிறுதொகை பணத்தின் ஊடாக" தாம் செப்பனிடும்பணியை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகப் பொறியியலாளர் மேலும் கூறினார்.

இதனால் வீதிகளை இவர்கள் பூரணமாக புனரமைக்கவில்லை. வீதியில் சிறு சிறு வேலைகளை மட்டுமே மேற்கொண்டுள்ளனர். அத்துடன் முன்னர் தார் வீதிகளாகக் காட்சியளித்த வீதிகள் தற்போது கிரவலால் மேவப்பட்டுள்ளன.

"இவ்வாறு மாற்றியமைக்கான காரணம் மக்களின் அவசர தேவை கருதியும் போதிய நிதி இல்லாமையே ஆகும். இவ்வாறு கிரவலால் செப்பனிடும் வீதிகள் குறிப்பிட்ட சில தினங்களுக்குப் பின்னர் மீண்டும் பழைய நிலைக்குச் செல்கிறது. இவ்வாறு மாறிமாறிகுன்றும், குழியும் மட்டும் கிரவல்போட்டு மேவுவதனால் எவ்வித பயனுமில்லை. கிரவலைப் பயன்படுத்தி வீதிகளைப் பூரணமாகப் புனரமைப்பதாயின் அப்படியும் செய்ய இயலாது. காரணம் நிதிப்பற்றாக்குறையே"என இது குறித்து பொறியியலாளர் விளக்கிக் கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்போகின்றது என்றவுடன் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திட்ட முன்மொழிவொன்று கச்சேரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை 03 கட்டமாக பிரித்து திணைக்களத்தினர் கொடுத்துள்ளனர்.



* அவசர திருத்த வேலைகளுக்கு 275 மில்லியன் ரூபா தேவையெனவும்.
* புனரமைப்பு வேலைக்கு 230 மில்லியன் ரூபா தேவையெனவும்.
* அபிவிருத்தி வேலைக்கு 820 மில்லியன் ரூபா தேவையெனவும் சமர்ப்பித்துள்ளனர்.

பின்னர் 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் சீனாவிலிருந்து ஒரு குழு இங்கு வந்தவேளை இவர்களிடம் 186.47 கி.மீ வீதியைப் புனரமைப்பதற்கான வீதி நிலவர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதுவரை எவ்வித உதவியையும் இவர்களும் செய்யவில்லை.

இதனைத் தொடர்ந்து சிரான் அறிமுகப்படுத்தப்பட்ட வேளை இவர்களிடம் நான்கு வீதிகளுக்கான முன்மொழிவு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது. சிரான் அமைப்பு தற்போது இயங்காத காரணத்தில் இதனாலும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. அத்துடன் வட கிழக்கு மாகாண சபைக்கு வன்னிப் பகுதியில் உள்ள "சி"தர "டி"தர வீதிகளின் புனரமைப்பிதற்கு 2115.8 ரூபா மில்லியன் தேவை எனவும் இவற்றுள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மட்டும் 532.8 மில்லியன் ரூபா தேவை என முன்மொழிவு கொடுக்கப்பட்டது. இதனூடாகவும் எவ்வித நிதியும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு பல்வேறு தரப்பின ரிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டு சமாதான சூழல் ஏற்பட்ட பின்னர் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இவ்வளவு நிதி தேவை எனக் கூறியும் இதுவரை அவர்களாலும் கைவிரிப்பு நிலையே ஏற்பட்டுள்ளது.

'நிக்கொட் திட்டம் அறிமுகப்படுத்தியவுடன் வீதியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறி இவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்குமாறு கேட்கப்பட்ட வேளை திணைக்களத்திற்கு வீதிப்புனரமைப்புக்கு எவ்வித சிறு நிதியையும் ஒதுக்கவில்லை. கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் பாலங்கள், மதகுகள்,வாகனங்களின் பாவனைக்கேற்ப நிர்மாணிக்கப்பட்டன". தற்போது யுத்தத்தின் காரணமாகவும், கனரக வாகனங்களின் பயன்பாட்டினாலும் இவைகளின் கட்டுமானப் பணிகள் உடைந்த நிலையில் உள்ளது. இவற்றுள் அவசரமாகத் திருத்த வேண்டிய பாலங்களுக்கு நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் எமது மண்ணில் கிடைக்கக் கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி (பலகை,தென்னங்குற்றி,இரும்புக் கேடர்,டீசல் பீப்பா) பாலங்களை தற்காலிகமாக பொறியியல் பகுதி மேற் கொள்கிறது. இவை என்றும் ஆபத் தானவை, மழை காலங்களில் இப பாதை யினால் பயணிப்பது சிரமமா னதே" என பாலங்களின் நிலை குறித்து பொறியியலாளர் தெரிவித்தார்.

இதேவேளை 07 பாலங்கள் நிர்மானிப்பதற்கு 43 மில்லியன் ரூபா மதிப்பில் திட்ட முன்மொழிவொன்று நிக்கொட்டிடம் இவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று பாலங்களுக்குமான திட்ட முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டது. இதற்கென 13.7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இதில்

* புதுமுறிப்பு-கோணாவில் வீதியில் அமைந்துள்ள பாலமும்.
* கந்தபுரம்-கோணாவில் வீதியில் அமைந்துள்ள பாலமும்.
* வன்னேரி -பண்டிவெட்டி வீதியில் அமைந்துள்ள பாலமும், வேலைகள் யாவும் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, மழை கார ணமாக இதற்கான வேலைகள் இடைநிறுத்தப்பட்டு தற்போது மீண்டும் இவ் வேலைகள் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கந்தபுரம்-கோணாவில் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பாலத்தின் கட்டுமானப் பணிகள் மிக விரைவாக முடிவுறுமாயின் மக்கள் பெரிதும் பயனடைவர் என்பது திண்ணம். ஏனெனில் புதிய பாலத்திற்கு அருகில் அமைந்துள்ள பழையபாலமான மரப்பாலம் பாரிய சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. இதனால் இதில் பயணிப்பவர்கள் மிகுந்த அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வீதியால் பாரிய வாகனங்கள் செல்ல இயலாமையால் இவர்கள் யூனியன்குளம்- அக்கராயன் வீதியூடாக பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, மாரி காலங்களில் மக்கள் இவ் வீதியால்

(46ஆம் பக்கம் பார்க்க...)

மக்கள் மனங்களில் நிறைந்த ஈழநாதமே வாழ்க! வளர்க!

பாண், கேக், பேஸ்ரி, மற்றும் வெதுப்பக அனைத்துப் பொருட்களுக்குமான
அன்றும் இன்றும் என்றும் தரமான வெதுப்பகம்

THINESH BAKE HOUSE
தினேஷ்
MANIPAY

# தினேஷ் வெதுப்பகம்

இல:180, யாழ்வீதி, மானிப்பாய். தொ.நகல்: 021-4590095

வன்னிப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு மூன்று மாத கால வெதுப்பகப் பயிற்சியளிக்கப்பட்டு விரும்பினால் பணிக்கு அமர்த்தப்படுவர் அல்லது தாங்கள் விரும்பும் வெதுப்பகங்களிலும் பணியாற்றமுடியும். பயிற்சியின்போது தங்குமிட வசதியும் விசேட கொடுப்பனவும் வழங்கப்படும்.

தொலைபேசி
021-222 2570
021-222 3297
021- 4590096
021 4590097

WESTERN UNION | மணி டிரான்ஸ்ஃபர் SM
உலகெங்கும் பணத்தை பெற விரைவான வழி. SM

(சி.9245)



DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI



காலத்தின் குரலாய் ஒலிக்கும் ஈழநாதமே!
என்றும் உன் பணி தொடர்ந்திடு!!



# சுப்பசூஸ்



DSI பாதணிகளின் யாழ்.குடாநாட்டிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்.
மொத்த வியாபாரிகளுக்கு கொழும்பு விலையில் விசேட கழிவு



எடுப்பான தோற்றத்திற்கு DSI பாதணிகள்

இல:75, கஸ்தூரியார் வீதி, (கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்) யாழ்ப்பாணம். T.P: 021-222 5543 (சி.9243)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI



புதிய அகவையில் பாதம் பதிக்கும் இன்றைய நன்னாளில் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்




இலங்கையின் எந்தப் பாகத்தில் இருந்தும் எந்தத் தொலைபேசியில் இருந்தும் 24 மணிநேரமும் மிகக்குறைந்த கட்டணத்தில் எமது நிறுவனத்தின் ஊடாக வெளிநாட்டு அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாடுகளுக்கான இணைப்புத் தொலைபேசி ( Connecting Call ) அழைப்புக்கள்.

போட்டோக் கொப்பி, பக்ஸ், இன்ரநெற், மற்றும் ஈமெயில் வசதிகள்.

தொலைபேசி அட்டைகள்.



T.P.0212223536
0212223615

E.mail.arulcom 2003@ yahoo.com

இல. 01 பிறவுண் வீதி,
நாவலர் வீதிச்சந்தி
யாழ்ப்பாணம்.

(சி.9241)



புதிய அகவையில் பாதம் பதிக்கும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்.



# வைஷ்ணவி
## நகைப்பூங்கா

VYSNAVY Nagai Poonka

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

பிரதான வீதி, நெல்லியடி.



(சி.9242)



# துயர்துடைத்த கூட்டுறவின் துயர்தரும் இன்றைய நிலை

உலகமயமாக்கள், சிறந்த பொருளாதாரம் என வழி திறந்து, உலக முதலாளிகளை வரவேற்றது இலங்கை அரசு. அதன் விளைவுகளை மக்கள் நாளொரு வண்ணம் பொழுது தொரு மேனியாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது வெறும் செய்தி மட்டுமல்ல தேசத்தின் கட்டுமானம் சீரழிந்து செல்வதை உற்று நோக்கும் மக்களின் வெறுப்பாகவும் வெளிப்படையாகத் தெரிகிறது.

அரசுடமை செயற்பாடுகள் பெரும்பாலும் தனியாருக்கு விற்கப்படும் அவல நிலை நிறைந்து காணப்படுவது இலங்கை அரசிற்குக் கடும் நெருக்கடிகளைக் கொடுக்கக் கூடியது! ஆனாலும் நிலத்தடி நீரைக் கூட தனியாருக்கு விற்று விடுவதில் அரசு அக்கறை காட்டுகிறதே என்பது ஆச்சரியப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் இங்குள்ள மக்கள் சார்ந்த நிறுவனங்களைக் கட்டியெழுப்ப அரசு முன்வரவில்லை என்பதும் விசனத்திற்குரியது தான்.

சிறிலங்கா அரசு கூட்டுறவு அமைப்புக்கள் தொடர்பாகக் கடைப்பிடித்து வரும் கொள்கைகள் மிக மோசமானவை என்பது கண் கூடு.

இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சட்டங்கள் இச் சங்கங்களை அழியாமல் பாதுகாக்கக் கூடியவையுமல்ல, மறுசீரமைக்கப்பட வேண்டியவையாகும்.

இதனால் இன்று இலங்கை முழுவதும் பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது. பல சங்கங்கள் சொல்லாமல் கொள்ளாமல் மங்கி மறைந்துள்ளன. இது பற்றி யாரும் வாய் திறப்பதில்லை. இது கூட்டுறவாளர்கள் வெட்கித் தலை குனிய வேண்டிய விடயம் தான்.

1977 வரை இலங்கையின் கூட்டுறவு தனித்துவம் நிறைந்ததாகக் காணப்பட்டு 77ல் பதவியேற்ற ஜே.ஆர். அரசுடன் அது முடிவுக்கு வந்தது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இலங்கையில் முதன் முதலில் திறந்த

> **சிறிலங்கா அரசு கூட்டுறவு அமைப்புக்கள் தொடர்பாகக் கடைப்பிடித்து வரும் கொள்கைகள் மிக மோசமானவை என்பது கண் கூடு.**
>
> **இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சட்டங்கள் இச்சங்கங்களை அழியாமல் பாதுகாக்கக் கூடியவையுமல்ல, மறுசீரமைக்கப்படவேண்டியவையாகும்.**

பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்திய போது ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி இவர்கள் சிந்திக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

நாடு முழுவதும் பல்வேறுவகையான கூட்டுறவுச் சங்கங்களில் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களும், சுமார் (1 1/2) ஒன்றரை இலட்சம் பணியாளர்களும் உள்ளனர். இவர்கள் அனைவரையும ஜே.ஆர். அரசு கைகழுவி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இதுபற்றி யாரும் போர்க்கொடி தூக்கியதாகத் தெரியவில்லை.

உலக மயமாக்கல் கொள்கையை நாட்டில் திறந்து விடும் போது கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக பொருத்தமான தீர்வை முன் வைத்திருக்க வேண்டும். ஆனால் ஜே.ஆர்.அரசு அவ்வாறான தீர்வு எதனையும் முன் வைக்க வில்லை.

எண்பது காலப்பகுதியில் அதிகார பீடங்களை அலங்கரித்த சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா,பிரதமர் ஆர்.பிறேமதாசா,கூட்டுறவு அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி போன்றோர் கூட்டுறவு இயக்கம் மாபெரும் இயக்கம் அது காப்பாற்றப்பட வேண்டியது என்பதை மறந்து விட்டனர். இவர்களிடம் தூரநோக்கு என்பது இருந்திருக்கவில்லை.

தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் என உலக அரங்கில் நவீனத்துவம் புகுத்தப்படும் போது கூட்டுறவுச் சங்கம் மட்டும் தன்னுடைய கடந்தகால மகிமைக்குள் புதையுண்டு போகும் நிலைக்கு வித்திட்டவர்கள் மேற்சொன்ன ஆட்சியாளர்கள் தான் என்பதனை எந்தவொரு கூட்டுறவாளனும் நிராகரிக்க மாட்டான் என நினைக்கிறேன்.

இலங்கையின் ஒட்டுமொத்த கூட்டுறவை அப்படியே ஒரு பக்கம் தூக்கி வைத்துவிட்டு நாங்கள் வடபுலக் கூட்டுறவைப் பற்றிச் சிந்திப்பது மிகவும் பயனுள்ளதாகவிருக்கும்.

தமிழர் தாயகத்தின் மீது சிறிலங்கா ஆட்சியாளர்கள் போரைத் திணிக்கிறார்கள். சொத்திழப்பும்,உயிரிழப்பும் ஏராளம்! எத்தனையோ மனித உரிமை மீறல்கள். வாழத்துடிக்கும் மக்கள் வரிசையாகக் கொல்லப்பட்டார்கள். அடிப்படை வசதியின்றி அல்லற்பட்ட மக்கள் இராணுவ ஆக்கிரமிப்பினால் புலம் பெயர்ந்த மக்கள் இவர்கள். அனைவருக்கும் கூட்டுறவு இயக்கம் ஈடுகொடுத்துள்ளது என்பது குறித்து கூட்டுறவாளர்களால் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. இரண்டு தசாப்தங்களாகக் கூட்டுறவுச் சங்கங்கள்,வடபுலத்தில் போருக்கு மத்தியில் ஆற்றிய சேவை மணநிறைவைத் தரக் கூடியவை என்பது பலரது கணிப்பு. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ப.நோ. கூ.சங்கங்கள்,பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு யாரும் உதவவில்லை என பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதே போன்று தான் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் நிலையும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் அரசு அமைக்கப்படும் போது துறைசார்ந்த அமைச்சும் அதன் கீழான திணைக்களங்களும் உருவாக்கப்படுவது நியதி. அதற்கான நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படுவதும் அந்நிதியூடாக துறைசார் வேலைத் திட்டங்கள் நிறைவேற்றுவதும் வழமையாகும். இது ஒரு உலக மரபு முறையாகும்.

ஆனால் இலங்கையில் இவ்வாறு நிகழ்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. ஏன்? எப்படி? என்று ஆதங்கப்படுகிறீகளா? கூட்டுறவு அமைச்சைத்தான் நாங்கள் கேட்க வேண்டியுள்ளது. ஒரு பழமை வாய்ந்த கூட்டுறவு நண்பர் "கல்வி மந்திரி நிதி ஒதுக்கி பல பாடசாலைகளில் கட்டடங்கள் எழும்புகின்றன. சுகாதார மந்திரி நிதி ஒதுக்கி ஆசுப்பத்திரிகள் எழும்புகின்றன, பொது நிர்வாக மந்திரி நிதி ஒதுக்கி பிரதேச செயலக கட்டடங்கள் எழும்புகின்றன, மின்சார மந்திரி நிதி ஒதுக்கி வீதிகளில், வீடுகளில் விளக்கெரிகிறது, அனால் இந்த கூட்டுறவு மந்திரி நிதி ஒதுக்கி எத்தனை கூட்டுறவுச் சங்கத்தில் வேலைத்திட்டம் நடக்கிறது என்று வெம்பி வெதும்பினார்.

கூட்டுறவு இயக்கம் என்றால் என்ன? அதன் குறிக்கோள்கள் எவை? என்று யாருக்கும் விளங்கவில்லையா? இலாப நோக்கமின்றி மக்களுக்கு சேவையாற்றும் ஒரு அமைப்பு என்று புரியவில்லையா?

கூட்டுறவுக்கொள்கைகள் தொடர்பாக இலங்கை அரசு கடைப்பிடித்து வரும் நிலையற்ற போக்கு கூட்டுறவு இயக்கத்தை அழித்து விடும்போல் தெரிகிறது. கோடிக்கணக்கான ரூபாவை போருக்குள் தள்ளிவிடும் அரசு கூட்டுறவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாதா? அரசுதான் அப்படி என்றால் அரசசார்பற்ற நிறுவனங்களும் அப்படியா?

இலங்கையில் போர் நடைபெறுகிறது. ஆதலால் இங்கு உதவ வேண்டும் என்று சுவதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பல யாழ்.குடாவிற்குள் நுழைந்துள்ளன. இந்நிறுவனங்களுக்கு வேலைத்திட்டங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஜி.ரி.இசற் என்றால் வீடு,யுனிசெவ் என்றால் கல்வி, எம்.எஸ்.எவ் என்றால் மருத்துவம், கெயர் என்றால் விவசாயம்,

## கலி

போறூட் என்றால் வீடு,கிணறு என தரம்பிரித்து ஒவ்வொரு துறைக்கும் விட்டுள்ளார்கள். ஆனால் கூட்டுறவுக்கு எந்த நிறுவனத்தையும் விடவில்லை. இது ஏன் என்று கூட்டுறவாளர் கேள்வி எழுப்புகின்றனர். கூட்டுறவு மக்கள் சார்ந்த நிறுவனமாக இருப்பதாலா?

கூட்டுறவு இயக்கம் மிகவும் உறுதிமிக்க பெறுமதியானது. கூட்டுறவு இயக்கம். இந்தக்கொடுமையான போரின் போது மக்களோடு மக்களாக நின்று மக்களைக் காத்தது கூட்டுறவு இயக்கத்திற்கு ஆதரவளிக்க இன்று யாருமில்லையா? என ஒரு கூட்டுறவாளர் புலம்பியது என் காதில் விழுந்தது.

1995ஆம் ஆண்டுகாலப்பகுதிக்கு முன் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி அளித்தது. இதில் தென்னிலங்கை கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் நன்மை அடைந்தன. கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் சில நன்மையடைந்தன. ஆனால் யாழ்-வன்னி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் எந்தவித நன்மையும் அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்த வங்கிச் சேவையும் ஆட்சியாளர்கள் நிறுத்தி விட்டனர்.

வடக்கு-கிழக்கில் கூட்டுறவு மேம்மையடைவது ஆட்சியாளருக்குப் பிடிக்கவில்லை போலும், புதிதாக பதவியேற்ற சனாதிபதி சந்திரிகா அம்மையாரும் கூட்டுறவு சங்கங்கள் தொடர்பாக எந்தவித முன்னேற்றமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

கால் நூற்றாண்டு காலமாக இந்த கூட்டுறவு இயக்கம் எந்தவிதமான வளர்ச்சியும் இல்லாமல் வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல், தத்தளித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். இவை ஒருபுறமிருக்க... கூட்டுறவு சங்கங்கள் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்? கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இணைந்து கொள்கிறார்களா? அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுத் தேர்தலில் நிற்க விரும்பும் ஒருவர் மட்டும் தான் உறுப்பினராக இணைந்து கொள்கிறாரா? என்பதெல்லாம் சிந்தனைக்குரியவைதான். ஏனெனில் கூட்டுறவு இயக்கம் தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமை அல்லது கூட்டுறவு தொடர்பான கருத்துக்கள் மக்களிடம் சென்றடையாமை போன்றவை தான் காரணமாக இருக்க முடியுமா?

இலங்கையைப் பொறுத்த வரை அறிஞர்கள், புத்திஜீவிகள் மட்டத்தில் கூட்டுறவு நுழையவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

கூட்டுறவு இயக்கம் பற்றி அறிஞர்கள், புத்திஜீவிகளால் ஆய்வு செய்யப்படவில்லை. சிறந்த கட்டுரைகள், நூல்கள் தமிழில் வெளிவரவில்லை. சிறந்த கருத்துருவாக்கம் ஏற்படவில்லை. இதனால் கூட்டுறவு இயக்கம் பற்றி பாமர மக்கள் மத்தியில் உயர்நிலை அடைய முயடிவில்லை எனக் கூறப்படு கின்றது.

எதிர்காலத்தில் கூட்டுறவு இயக்கம் சிறந்த நூல்கள் எப்படி அவசியமோ?அதே போன்று சிறந்த தலைமைத்துவமும் அவசியம் என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

சிறந்த தலைமையும், வழிகாட்டலும் ஆரோக்கியமான கூட்டுறவு இயக்கத்தை எதிர் காலத்தில் அமைத்துவிட முடியும் என்பதற்கு வரலாறு சான்று பகரும்.

இளைஞர்கள், யுவதிகள்,மாணவர்கள் போன்றோரைக் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்களை உருவாக்கினால் தான் கூட்டுறவு வளரும் என வை.கி.சிவஞானம் போன்ற பழம் பெரும் கூட்டுறவு ஞானியின் கருத்தாகவும் இருந்துள்ளது. இது குறித்து ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தாயக மண்ணில் புதிய கூட்டுறவு யுகம், தோற்றம் பெற வேண்டும். அது தான் எதிர் காலத்தில் கூட்டுறவிற்கு அர்த்தத்தைக் கொடுக்க முடியும்.

இரத்தம் சிந்திய மண்ணில் நிறம் மாறவில்லை. போர் இன்னும் தொடருமா? நிரந்தர அமைதிக்காக தமிழ் மக்கள் ஏக்கத்துடன் காத்திருக்கிறார்கள் போருக்குள் நின்று கொண்டு அபிவிருத்தி பற்றி பேசமுடியுமா? அல்லது கூட்டுறவு பற்றிப் பேச முடியுமா? ஆனாலும் அபிவிருத்தி பற்றி பேசித்தான் தீர வேண்டும்... அது மக்களுக்கு மிகவும் தேவையாக இருக்கிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் இக் கொடும் போரினால் பல கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்துள்ளன. ஆனால் இன்று வரை இச்

> **தமிழர் தாயகத்தின் மீது சிறிலங்கா ஆட்சியாளர்கள் போரைத் திணிக்கிறார்கள். சொத்திழப்பும்,உயிரிழப்பும் ஏராளம்! எத்தனையோ மனித உரிமை மீறல்கள். வாழத்துடிக்கும் மக்கள் வரிசையாகக் கொல்லப்பட்டார்கள். அடிப்படை வசதியின்றி அல்லற்பட்ட மக்கள், இராணுவ ஆக்கிரமிப்பினால் புலம் பெயர்ந்த மக்கள், இவர்கள் அனைவருக்கும் கூட்டுறவு இயக்கம் ஈடுகொடுத்துள்ளது என்பது குறித்து கூட்டுறவாளர்களால் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது.**

சங்கங்களுக்கு எவ்விதமான இழப்பீடுகளும் அரசினால் வழங்கப்படவில்லை. இது குறித்து இச்சங்கங்கள் பிரதமர் முதல் அமைச்சர்கள் வரை கோரிக்கை விடுத்தும் பலனளிக்கவில்லை என ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள்.

குறிப்பாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் ஏற்பட்ட இழப்பு ஆயிரத்து ஐநூறு மில்லியனுக்கு மேல் என கூறப்படுகிறது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மட்டும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு 5000 மில்லி

(40ஆம் பக்கம் பார்க்க...)

உள்ளூரிலே கடந்த 23வருடங்களுக்கு மேலாக
மக்களுக்கு உன்னத சேவையாற்றும்
மாணிப்பாய் "சுந்தர்சன்" ஸ்தாபனத்தினர்
இன்று புதிய அகவையில் பாதம் பதிக்கும்
ஈழநாதம் மக்கள் தினசரியினை இன்னும் பல அகவை
இனிதாய் வாழ வாழ்த்துகின்றனர்.



- மின்சாதனங்கள்
- மின்இணைப்பு உபகரணங்கள்
- அன்டன் பி.வி.சி குழாய்கள்
- அபான்ஸ் ஸ்தாபனத்தின் உற்பத்திப்பொருட்கள்
- தொங்கவிடும் மின்விளக்குகள்
- சுவர் விளக்குகள்

இவையனைத்தையும் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

சுந்தர்சன்

## சுந்தர்சன்

மத்தியசந்தை முன்பாக,
பிரதான வீதி, மானிப்பாய்.
☎ 021-222 2751










குறிப்பு:
குறிப்பிட்ட தொகைக்கு மேலதிகமாகப் பொருட்களைக்கொள்வனவுசெய்பவர்களின் இடத்திற்கு அப்பொருட்கள் எமது வாகனம் மூலம் சேர்க்கப்படும்.

(சி-9212)



15ஆவது அகவை காணும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்

## சமுத்ரா ரேட்ஸ்லிமிட்டட்

- அரிசி, மிளகாய், உழுந்து, கோப்பி என்பனவற்றை தேவைக்கேற்ப மிருதுவாகஅரைப்பதற்கு ஏற்ற உலகப்பிரசித்தி பெற்ற இயந்திரங்களான கெனடி, நவீன், அமுதா பிராண்டுகள்.
- நெல் குற்றுவதற்கான இயந்திரங்கள் ஒரு நாளுக்கு 30 தொன் வரை குற்றக்கூடியது.
- ஈர அரிசி அரைக்கும் இயந்திரங்கள் பட்டி வகைகள் கிறைண்டர் பிளேட் வகைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் அனைத்தையும் சகாய விலையில்

பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

யாழ்ப்பாணத்தில் ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும்


கோப்பி அரைக்கும் இயந்திரம்




உழுந்து அரைக்கும் இயந்திரம்

# சமுத்ரா
## ரேட்ஸ்லிமிட்டட்

117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021-222 2938

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டடஸ்
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-222 5542

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்! உண்மை விளங்கும்!!

(சி-9213)

## கடந்தகால நிகழ்வின் நினைவுப் பதிவு!

# துயரம் தோய்ந்த பயணத்திலே...

எஸ்.டேவிட்

ஆலங்கேணிச் சந்தியிலிருந்து வடக்கு நோக்கிய குறுகலான மண் பாதையூடாக தட்டி வேனில் இருந்து இறங்கிய நானும் அம்மாவும் எங்கள் பயணமுடிச்சுக்களுடன் நடந்து சென்றோம். பாதையின் இரு மருங்கிலும் பனை மரங்கள்.... ஆங்காங்கு சிறிய வீடுகள்... எங்களுடன் வேனில் கூடவந்தவர்களுடன் நாங்களும் இரு ஜீவன்களாக நடந்து சென்றோம்.... பாதை எங்கணும் சுமக்க முடியாத மூட்டை முடிச்சுக்களுடன் பயணிகளைப் பார்க்க முடிந்தது.

நாங்கள் படகுத்துறையை சென்றடைந்த போது சூரியன் கடல் மடியில் அமிழ்ந்து விட்ட நேரம். நான் மேற்கு வானத்தைத் திரும்பிப்பார்த்தேன். வானம் செக்கச்சிவந்திருந்தது.



ஒரு மைல் தூரத்துக்கு மேல் நடந்து வந்த களைப்பால் அனைத்துப் பயணிகளும் மூசி மூசி நின்றனர். துயரமான பயணத்தின் வேதனையை நினைத்து அனைவரது வாயிலிருந்தும் விதம் விதமான முணுமுணுப்புக்கள் .... அனைவரும் கொட்டில் கடைகளில் தேநீர் குடித்தனர்.

ஆலங்கேணி படகுத்துறை-

யாழ்ப்பாணக் கடல் நீரேரி அமைதியாகக் கிடந்தது. கடல் நீரேரியைக் கடந்து... கிளாலிப்படகுத் துறைக்குச் சென்று... அங்கிருந்து அம்மாவும் நானும் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் எனது அப்பாவைப் பார்க்கச் செல்வதுதான் எங்கள் பயணத்தின் நோக்கம்.

படகுத்துறையில் கூடி நின்ற பலநூற்றுக்கணக்கான பயணிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பயணநோக்கம் இருக்கலாம் என நான் யூகித்தேன். ஆனால் பயணத்தின் கஷ்டங்கள் அனைவருக்கும் பொதுவானதுதான்.

பயணிகள் பயணச்சீட்டுக்களைப் பெறுவதற்காக உரிய இடத்தில் ஒழுங்கமைந்து நீண்டு நெழிந்து வரிசையாக நிற்கத்தொடங்கினர்.

"இந்த யுத்தம் எப்ப முடியும்.... நாங்க எங்கட மண்ணில எப்பத்தான் நிம்மதியா... வாழுறது"- என்று மனதுக்குள் ஏங்கிக்கொண்டவனாய் அம்மாவை அருகாக வரச்சொல்லி நானும் 'கியூ'வில் நின்றேன். நன்றாக இருட்டி விட்ட நேரம்.

குழந்தைகளின் அழுகுரல் கூடுதலாகக் கேட்டது, உப்புக் காற்று சோர்ந்து போன எங்கள் உடல்களை நடுநடுங்க வைத்தது. தூரத்தில்... கடலின் மடியில் ஆங்காங்கு ஒளிப்பொட்டுக்கள் தெரிந்தன. அதில் ஒரு அழகு தெரிந்தது. வானத்தில் வெள்ளிகள் கண் சிமிட்டின...

பேரிரச்சலுடன் இயந்திரப்படகொன்று பல படகுகளை பிணைத்துக்கொண்டு நா[illegible]ள் நின்ற படகுத் துறையை நோக்கி வந்துகொண்டிருந்தது.

> 'எனது அம்மாவைப் போல... எத்தனை ஆயிரம் அம்மாக்கள்'- நான் எனக்குள் சமாதானம் செய்து கொண்டேன். ஒரு பெரிய இயந்திரப் படகின் துணிவுடன் பல படகுகள் தொடுவைகளாக...! கடலில் படகுகள் நகரும் வரை பலவிதமான மனித கூச்சல்கள் காதைப் பிழந்தன. ஒவ்வொரு படகின் அணியத்திலும் ஒவ்வொரு ஓட்டி...! கடல் மடியில் பழகிப்போன இயல்பான வாழ்க்கையால் முறுக்கேறிய உடல்வாகு மிக்க அவர்கள்... கம்பீரமாக நின்றனர்...

"ஆ...ஆ... அந்தா 'போட்'டெல்லாம் வருது அந்த போட்டிலதான் நாங்க போப்போறம்"- கிழவர் ஒருவர் செய்தியை உரக்கக் கத்தினார். அவ்வேளை அனைவர் முகங்களிலும் நம்பிக்கை ஒளி பரவியது.

நிமிடங்கள் கரைகின்றன, படகுத்துறையில் கூச்சலான ஓசைகள்...

கிளாலியில் இருந்து பயணிகளை சுமந்து வந்த படகுகளில் ஆலங்கேணி படகுத்துறையில் நின்ற பயணிகள் ஏறினர். ஒவ்வொரு படகிலும் பதினைந்து பேராக ஏற்றப்பட்டனர். நானும் அம்மாவும் மூன்றாவது 'தொடுவைப்படகில்' ஏறிக்கொண்டோம். எனக்கு இந்த படகுப் பயணம் புதிய அனுபவமாக இருந்தது. ஆனால்... வயதாகி விட்ட எனது அம்மாவைப் பார்க்க... ஏனோ - பரிதாபமாக இருந்தது எனக்கு..!.

'எனது அம்மாவைப் போல...எத்தனை ஆயிரம் அம்மாக்கள்'- நான் எனக்குள் சமாதானம் செய்து கொண்டேன். ஒரு பெரிய இயந்திரப் படகின் துணிவுடன் பல படகுகள் தொடுவைகளாக...! கடலில் படகுகள் நகரும் வரை பலவிதமான மனித கூச்சல்கள் காதைப் பிழந்தன. ஒவ்வொரு படகின் அணியத்திலும் ஒவ்வொரு ஓட்டி...! கடல் மடியில் பழகிப்போன இயல்பான வாழ்க்கையால் முறுக்கேறிய உடல்வாகு மிக்க அவர்கள்... கம்பீரமாக நின்றனர்...

நான் 'தமிழினத்தின் தலைவிதியை... துன்ப துயரங்களை...' ஒரு கணம் நினைத்துப்பார்த்தேன். படகு உறுமத்தொடங்கியது- நிச்சயமற்ற... ஆனால் இறைவனில் கொண்ட நம்பிக்கையுடன் எங்கள் பயணம் கடலில் நகர்ந்தது.

ஒவ்வொருவர் வாயிலிருந்தும் தெய்வத்தை வேண்டிய முணுமுணுப்புக்கள் "மாதாவே... எங்களைக் காப்பாற்று... இந்த அகால நேரத்தில் நீதான் துணை"- இது அம்மாவின் வேண்டுதல். நான் புனித அந்தோனியாரை வேண்டிக்கொண்டேன். இருளைக் கிழித்த குளிர் வாடைக்காற்று வேகமாக வீசியது. கடல் அலைகள் வெண்பஞ்சுப் பொதிகளாக படகில் மோதின. கண்ணுக்கு எட்டிய நாற்புறமும் கடல் கருந்திரையாகப் படர்ந்து கிடந்து ஆர்ப்பரிக்கத் தொடங்கியது.

இருட்டில்- கடலில் பயணம் செய்வது பயங்கரமான அனுபவம் தான்- என இப்போது விளங்கியது. கிளாலிக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும்- கடற்புலிகளுக்குமிடையே அடிக்கடி நடக்கும் கடற்சண்டைகளின் பயங்கரத்தை பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். இன்றைய பயணத்தில் அப்படி ஏதாவது நடந்தால்...? - கடவுளே... அப்படி எதுவும் நடக்கக் கூடாது "- நான் அடிக்கடி இறைவனை வேண்டிக்கொண்டேன்".

கடலில் இருளின் ஆட்சி... வடக்கில் இருந்து பல படகுகள் வேகமாக வந்து எங்களைக் கடந்து சென்றன. ஆனையிறவு இராணுவத் தடை முகாமிலிருந்தும் மேற்கே பூநகரி தடைமுகாமிலிருந்தும் பாரிய ஒளிவிசிறல்கள் கடல் பரப்பை துளாவி அணைந்தன, அனைவரும் பயத்தால் நடுநடுங்கினோம். சிலர் அழுது கூக்குரலிட்டனர்.



"கடவுளே என்ன துன்பமான வாழ்க்கை"- இது எனது அங்கலாய்ப்பு தூரத்தில் 'ஷெல்' முழக்கம் பலமாகக் கேட்டது. அனைவருக்கும் பழகிப்போன ஓசைதான் ஆனாலும் நடுக்கடலில் செல்லும் எங்களுக்கு துணிவு மருந்துக்கும் இல்லை.

திடீரென வானம் இருளத் தொடங்கியது. வானத்து வெள்ளிகள் மறையத்தொடங்கின. இக்கரை' ஒளிப்பொட்டுகள் மறைய அக்கரை ஒளிபொட்டுகள் மின்னி மின்னித் தெரிந்தன.

வடகிழக்குப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த 'தொடுவைகள்' வடமேற்குப் பக்கமாக திரும்பி நகர்ந்தன. மூன்று மணித்தியாலயப் பயணமாம்! பதினான்கு மைல் தூரம் 'கடவுளே! நவீன போக்குவரத்து வசதிகள் பெருகி விட்ட இந்த யந்திர மயமான உலகத்தில் நாங்கள் நகைப்புக்குரிய... பரிதாபத்துக்குரிய தொடுவைப்படகுகளில்... நடுங்கும் குளிரில் படுகின்ற துன்ப வேதனைகள்... எங்கள் வேதனைகளுக்கும்... சோதனைகளுக்கும் முடிவே இல்லையா'? எனது மனம் இவ்வாறு சிந்தித்தது. படகுகளில் மனித குரல்கள் ஓய்ந்தன. அனேகர் தூங்கி வழிந்தனர். அம்மாவும் தூக்கத்தில் சரிந்து கிடந்ததாள். எனக்கு ஏனோ தூக்கம் வரவில்லை- அடிக்கடி... மருத்துவமனையில் இருக்கும் அப்பாவின் நினைவு வந்துபோனது.

நிமிடங்கள் கரைகின்றன இருண்ட வானத்தில் இருந்து மழைத்துளிகள் விழத்தொடங்கின. அனைவரும் விழித்துக் கொண்டனர். 'இந்த நேரத்தில் யார் தான் எங்களுக்கு குடை தருவார்? குடைபிடிப்பார்-? நான் சிறுபிள்ளைத் தனமாகச் சிந்தித்தேன். குளிர் காற்று வேகமாக வீசத்தொடங்கியது. படகுகள் சரிந்து ஆடத்தொடங்கின. "அது பிரச்சினை இல்ல" - ஓட்டி ஆறுதல் கூறினார். நீர்த்துளிகள் எங்களை நனைத்தன.பயந்தவர்கள் தெய்வவேண்டுதலை பகிரங்கமாக சத்தமிட்டுச் செய்துகொண்டனர். குழந்தைகள் அழுகின்ற சத்தத்தை அலை ஓசைகள் விழுங்கின.

திடீரென... 'குய்...ய்' என்ற இரைச்சலுடன் எங்கிருந்தோ வந்த அதிவேக விசைப்படகுகள் இரண்டு தடவைகள் சுற்றிச் சுற்றி பின்பு... மேற்கு நோக்கி விரைந்து மறைந்தன. படகில் இருந்த எங்களுக்கு அதிசயமாகவும் பயமாகவும் இருந்தது.

ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கும் சற்றுத் தூரத்தில் வெடி ஒலிகள் முழங்கத் தொடங்கின.

இருண்ட வானத்தில் விழாக்கால வானவேடிக்கை போன்று தீப்பிழம்புகள் எதிரும் புதிருமாக பறக்கத் தொடங்கின. இதுவரை எங்கள் வாழ்க்கையிலே கண்டிராத... காண முடியாத அந்தக்காட்சியை எங்கள் பயந்த கண்கள் இரசித்தன. ஐயோ!... என்ன பயங்கர அனுபவம்.... ஆனால் அநேகமானவர்கள் பயத்தால் கூக்குரலிட்டு அழுதனர்.

சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு பின்னர் சண்டை ஓய்ந்தது. வானத்தில் தீப்பிழம்புகள் இல்லை. வேகமாகத் துடித்த எங்கள் இதயங்கள் வழமை போல அடிக்கத் தொடங்கின. மழை தூறிக்கொண்டு தான் இருந்தது. நேரம் பத்து மணியைத் தாண்டியிருக்கும். பசி வயிற்றைக் கிள்ளியது.

கடலில் கடை எங்கே? யார் உணவளிப்பார்? பலர் கொட்டாவிகளை மாறி மாறி உதிர்த்தனர். கிளாலிக்கரை வெளிச்சங்கள் அண்மித்தன. கலங்கரை விளக்காக - வெளிச்சப் பந்தம் ஒன்று கரையில் உயர்ந்து தெரிந்தது.

கிளாலிக்கரை -

பல படகுகளில் பொருட்கள் பயணிகள் ஏற்றப்பட்டு அக்கரைக்குச் செல்லத் தயாரான நிலையில்! ஆரவாரங்கள் ஒலித்தன.

தழிழரின் வாழ்வு இதுதானா? எங்கள் தலைவிதி ஏன் இன்னும் இருட்டினுள்...? கடவுளே- எங்கள் தேசம் விடிவதெப்போ? - நான் இதயத்தால் ஏங்கினேன்.

உப்புக் கலந்த குளிர் காற்று எங்கள் சோர்ந்த உடல்களை சல்லடையாகத் துளைத்தது. எங்கள் பயணப்படகுகளின் ஓட்டமும் ஓய்ந்து கரையை ஒதுங்கின.

"கரைக்கு வந்திற்றம் எல்லாரும் இறங்குங்கோ- கவனம்... கவனம்... பார்த்து இறங்கவேணும்..ம்" ஓட்டிகள் கத்தினார்கள். மூட்டை முடிச்சுக்களுடன் முழங்கால் அளவு தண்ணீரில் இறங்கி நடந்தோம்- மற்றறொரு துன்பப் பயணத்துக்குத் தயாராக!

எனது 'ரவலிங்' பேக்கை தோழில் கொழுவிக் கொண்டு திரும்பிப் பார்த்தேன் - பின்னால் எனது அம்மா கூனிக்குறுகி நனைந்த சீலைக் கரையை நீவிப்பிடித்தபடி முணுமுணுத்துக் கொண்டு வந்தாள்.

கரையில் கால் பதித்த அம்மா முழந்தாளிட்டு வானத்தைப் பார்த்து... நடுங்கும் கரங்களை உயர்த்தி "மாதாவே எங்களைக் காப்பாத்திப் போட்டியே" எனச் சத்தமிட்டாள்.

நான் வானத்தை அண்ணாந்து பார்த்தேன். இருள் கவிந்த வானப்பரப்பில் ஆங்காங்கே சில நட்சத்திரங்கள் மினுமினுத்தன... ●

நல்ல பல செய்திகளை எம் மண்ணின் மக்களுக்கு அள்ளி வழங்கிவரும் தமிழ் நாளிதழாம் "ஈழநாதம்" தனது பதின்னான்காவது ஆண்டினைநிறைவு செய்யும் இவ் இனிய நன் நாளிலே அதன் நடுவு நிலை தவறாத சேவை மேன்மேலும் உயர்ச்சி பெறவேண்டுமென எம் இனிய நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில்பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

"பொலித்தீன் பாவனைக்கு மாற்றீடாக
பனம் பொருளின் பாவனையை வளர்த்து
சுற்றுச்சூழலை பாதுகாப்போம்"

# கற்பகம் / திக்கம் வடிசாலை
# பனை அபிவிருத்திச்சபை

தலைமை அலுவலகம்,
53,கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே-222-2034

(சி-9228)



ஈரேழு அகவை தனை நிறைவு செய்யும் ஈழநாதமே!
உன்பணி தொடர்ந்திட வாழ்த்துகின்றோம்!

ரீ.வி, டெக் ரேடியோ, மணிக்கூடு
அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்தையும் பெற்றுக் கொள்ள
அன்றும் இன்றும் என்றும்
நன்மதிப்பை பெற்று விளங்கும்
ஒரே ஸ்தாபனம்.

# ராஜீ ஸ்ரேரர்ஸ்

190 நாடுகளில் இருந்து விரைவாகப்
பணத்தைப் பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

இல:67,69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P-0094-21-2225224

WESTERN UNION | மணி டிரான்ஸ்ஃபர் SM

உலகெங்கும் பணத்தை பெற விரைவான வழி. SM

பணம் மாற்றும்
வாடிக்கையாளர்களுக்கு
அன்பளிப்புப் பொருட்கள்
வழங்கப்படும்.

(சி-9230)





15ஆவது அகவை காணப் புறப்படும் ஈழநாதம்
தினசரியினை வாழ்த்துகின்றோம்.

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்.

# மஹாலக்ஷ்மி தங்கமாளிகை

## தங்கப்பவுண் நகை வியாபாரம்

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி (சி-9225)



பல்சுவையுடன் செய்தி குவிக்கும் ஈழநாதமே!
புது அகவையில் பொலிவு பெறுக!

உங்கள் தேவைகள் எதுவாகினும்
நிறைவேற்றக்காத்திருக்கின்றோம்.

# லவ்லி கூல்பார்
# லவ்லி ஒலி,ஒளிப்பதிவுக்கூடம்
# லவ்லி 'பஸ்' ஆசனப் பதிவகம்
# லவ்லி சைனீஸ்ரெஸ்ரோரன்ட்

T.P:021-226 3219 பிரதான வீதி, நெல்லியடி. (சி-9226)



ஈழநாதம் தினசரியின் பக்கச்சார்பின்மையும், நடுநிலைமையும்
தொடர்ந்து வளர வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர், பணியாளர்கள்.

# வடமாகாணம் கடற்தொழிலாளர்
# கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்

(வ-து)

இல:100, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:-021-222 2347

(சி-9232)






15ஆம் அகவையில் இன்று காலடி எடுத்து வைக்கும்
ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

* புதிய வடிவமைப்பில் நவீன
கண்ணாடிகளைப்பெற்றிட....
* முக அமைப்பிற்கேற்ப சங்குப்பற்களைப் பொருத்திட....
மிதப்புப்பற்களுக்குக் கிளிப் பொருத்திக்கொண்டிட
கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்.

# எரிக் கணேஷ்

பல் கட்டும் இடமும்
மூக்குக்கண்ணாடி அகமும்

564,566,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2222486
(சி-9231)



நாதமே!
உன்பணி சிறக்க
எமது வாழ்த்துக்கள்!

## அங்கத்தவர், பணியாளர்கள்.

# பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்
# பருத்தித்துறை

T.P:-021-226 3699

(சி-9224)



தமிழீழ தேசத்தில் தக்கதோர் விடயங்களை
உண்மையாய் எடுத்துரைக்கும் எங்கள் நாதமே!
உனை என்றும் பார் புகழ வாழ்த்துகின்றோம்!

தலைவர்,பணிப்பாளர்,
பொதுமுகாமையாளர்,பணியாளர்கள்,
அங்கத்துவ சங்கங்கள்.

# வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்
# கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்

T.P:-021-226 3614 பருத்தித்துறை (சி-9229)



ஈழநாதம் நாளிதழுக்கு எமது வாழ்த்துக்கள்

# பொன்னரசி நகையகம்

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்




பொன்னரசி நகையகம்
76A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P;0777-066427 (சி-9227)

புதுக்குடியிருப்பில் ஆறு வருட சேவையின் பின்னர் தற்போது யாழ்நகரில் இயங்குகிற[illegible]து.



காலத்தின் குரலாய் ஈழத்தில் ஒலிக்கும் எங்கள் நாதமே!
என்றும் உன் பணி தொடர்ந்திட வாழ்த்துகின்றோம்.

* நுகர்ச்சிப்பொருட்கள் விற்பனை
* ஒப்பந்தச் சேவைகள்
* உலர் உணவுப்பொருட்கள் விநியோகம்
* கல்விச் சேவைகள்

இன்னும் பல சேவைகளினூடாக மக்களுடன் இணைந்துள்ளோம்.

தலைவர், பணிப்பாளர்,
பொதுமுகாமையாளர், பணியாளர்கள்.

# வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்
# அச்சுவேலி.

T.P: 0602-212382 (சி-9223)

எல்லோர் மனங்களிலும் எழிலாகும் ஈழநாதமே! வாழ்க! வளர்க!

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்

**புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்**

இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு.

(சு-8773)



சுபமுகூர்த்தப்பட்டுப்புடவைகளின்
மகத்தான தரமான தெரிவுகளுக்கு
நீங்கள் நம்பிக்கையோடு நாடவேண்டிய இடம்

**மகாசில்க்ஸ்**

இல:32, 40A, நவீன சந்தை
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

இன்று புதிய அகவை காணும்
ஈழநாதம் நாளிதழுக்கு எமது வாழ்த்துக்கள்!

கிளைநிறுவனமான:

**பியூட்டி சில்க்ஸ்**

இல:69, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(சி-9233)



ஈழநாதமே ஊடகத்துறையில் உன் பணி தொடர வாழ்த்துகின்றோம்!



**டாட் என்ரபிறைஸ்**

அன்பளிப்புப் பொருட்கள் அழகு சாதனப் பொருட்கள்,
மின்சாரப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.



DE

T.P-2223098 Fax-2227622

இல:11,12 நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

(சு-9246)

இன்று புதிய அகவை காணும் ஈழநாதம் நாளிதழுக்கு எமது வாழ்த்துக்கள் !

அசல் 22 கரட் தங்க நகைகளை விரும்பிய வடிவங்களில்
குறித்ததவணையில் நம்பிக்கை, நாணயம் உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

**கலையரசி நகைமாடம்**



முதன்மைச்சாலை, முல்லைத்தீவு. முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு.

(சு-8773)

ஈழநாதமே! உன்பணி தொடர வாழ்த்துகின்றோம்

குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள்

மேல்நாட்டு உள்நாட்டு உணவு வகைகளுக்கு

**வஸ்தியன் ஹோட்டல்**

021-2222605

இல: 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சு-9247)


பதினைந்தாம் அகவையில் பாதம் பதிக்கும் ஈழநாதம் நாளிதழுக்கு
எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
நியூ நகுலா ஜுவல்லறி
இல:71, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
: 021-222 5511
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
இல:71, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
: 021-222 3433
யாழ் நகரில்
மின்னிடும்
தங்க நகைகள்
விற்பனையில்
தமக்கெனத்
தனியிடம்
பதித்தவர்கள்
(சி-9235)


யாழ் நகரில்... அழகிய பூங்கனிச்சோலைகளின் மத்தியில்
மில்லேனியம்
மிலேனியம்
19.01.2004 அன்று மில்லேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த விருந்தினர்கள்.
உல்லாசப்பயணிகள் விடுதி
உங்களை
அழைக்கின்றது.
நவீன வசதிகளுடன் கூடிய
முற்றிலும் குளிரூட்டப்பட்ட
அறைகள்
ஈழநாதம்
தினசரிக்கு
எமது
வாழ்த்துக்கள்
உங்கள்
விருப்பத்திற்கு ஏற்றவாறு
மேல்நாட்டு, உள்நாட்டு
உணவு வகைகளையும்
சுவைத்து மகிழலாம்.
உங்கள் தொடர்புகளுக்கு
மில்லேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி,
76/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
T.P:021-222 2310
MILLENNIUM
GUEST HOUSE & RESTAURANT
(சி-9234)

# இயல்பு வாழ்வுக்கு இடையூறாக யாழ். உயர் பாதுகாப்பு வலயம்

குடா நாட்டில் படையினரால ஆக்கிரமிக்கப்பட்டு, உயர் பாதுகாப்பு வலயமென பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் இருந்து 21,414 குடும்பங்களைச் சேர்ந்த 79,334 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இக்குடும்பங்களில் முகாம்களில் 2,198 குடும்பங்களும், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடென 19,216 குடும்பங்களும் வசித்து வருகின்றன.

இப்பகுதிகளுள் மொத்தமாக 29,525 வீடுகளும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 67 கிராம சேவையாளர் பிரிவுகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 12,257 ஏக்கர் விவசாய நிலமும் பயன்படுத்தப்படாதுள்ளது. இதனால் 16,027 விவசாய குடும்பங்களும் தொழிலை இழந்துள்ளன.

இதேவேளை 40 தொழிற்சாலைகளும் முடக்கப்பட்டுள்ளதுடன்,அதனை நம்பி தொழிலில் ஈடுபட்டிருந்த 1670 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் 82 கிலோ மீற்றர் கடற்கரையும் இப்பாதுகாப்பு வலயத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 4,436 மீனவ குடும்பங்களும் இதனால் தொழில் வாய்ப்பை இழந்துள்ளன.

சுமார் 60 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளும் இதனால் இயங்க முடியாதிருக்கின்றன,அதேபோன்று மக்கள் வழிபாட்டிற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ள 246 ஆலயங்களும் இப்பகுதியினுள் உள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வெற்றிகரமாக ஈராண்டுகள் பூர்த்தியடைகின்றன. இவ உடன்படிக்கைக்கு ஆதரவாகவும் இரண்டாண்டுகள் பூர்தியாவதையும் ஒட்டி கொழும்பில் பேரணி ஒன்றிற்கும் ஏற்பாடாகியுள்ளது. உடன் படிக்கைக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் நடாத்தப்படவுள்ள இப்பேரணிக்கு சமாதானத்திற்கும் சனநாயகத்திற்குமான அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

ஆனால் இவ் உடன்பாட்டுச் சரத்துக்கள், உடன்பாட்டின் நோக்கங்கள் எந்தளவிற்கு நிறைவேற்றப்பட்டன.



யாழ். குடாநாட்டு உயர்பாதுகாப்புவலயங்கள்

முன்னேற்றம் கண்டுள்ளன என்பது இன்னமும் கேள்விக்குரிய நிலையிலேயே உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படை நோக்கங்களில் முக்கியமானது. இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டுவருதல் ஆகும். இது நீடித்து நிற்கக் கூடிய ஒரு தீர்விற்கான மார்க்கமாக அமையுமென்பது இதன் மூலமான எதிர்பார்ப்பாகும்.

ஆனால் இவ் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டுவருதல் என்பது தமிழர் தாயத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இராணுவ ஆக்கிரமிப்புடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளது.

அதாவது இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் என்பது தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குதல், ஏ-9 வீதி போன்றவற்றை மக்கள் போக்குவரத்திற்குத்திறந்து விடுதல் என்பனவற்றுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. மக்கள் தமது சொந்த ஊருக்கு, வீட்டிற்குத் திரும்புதல் என்பதுடனும் சம்பந்தப்பட்டதாகும்.

அதாவது இராணுவம் ஆக்கிரமித்துள்ள குடியிருப்புக்கள்,பொது இடங்கள்,பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் என்பனவற்றிலிருந்து வெளியேறுவதோடு சிறிலங்கா இராணுவத்தால் மூடப்பட்ட வீதிகளைத்திறத்தல் என்பனவற்றுடனும் நேரடியாகச் சம்பந்தப்பட்டதொன்றாகவுள்ளது.

குடா நாட்டு ஒட்டுமொத்த பரப்பளவின் 1/6 பங்கை அக்கிரமித்துள்ள அதி உயர் பாதுகாப்பு வலயம் அதன் தோற்றம் தொடர்பில் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டுள்ளது. 1990ஆம் ஆண்டின் பிற்பகுதிகளைத் தொடர்ந்து மூண்ட யுத்தத்தினால் வலிகாமம் வடக்கு மற்றும் தீவகத்தின் கணிசமான பகுதிகள் அதி உயர் பாதுகாப்பு வலயமாகின. அதைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இடம்பெற்ற "சூரியக்கதிர்" இராணுவ நடவடிக்கைகளை அடுத்து ஒரு பகுதியும் பின்னர் 1999 ஆம் ஆண்டின் இறுதிகளில் வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்தங்களையடுத்து மற்றோர் பகுதியுமாக அதி உயர் பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டிருந்தது.

இவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து அவசர அவசரமாக நாட்டப்பட்ட "அதி உயர் பாதுகாப்பு வலயம்" எனும் அறிவித்தல் பலகைகளினுள் அடங்கிப் போனவையும் ஒரு பகுதியாகும். அதி உயர் பாதுகாப்பு வலயமென மக்கள் குடியிருப்புக்களில், பாடசாலைகளில் மற்றும் விளைநிலங்களில் என நீக்கமற நிறைந்திருந்த காவல் கடவுள்களிடம் வரம் வேண்டும் பக்தர்களாக தமிழ் மக்கள் காலப்போக்கில் ஆகிப் போயினர். கோவிலில் வழிபட உரிமை மற்றும் பாடசாலை கட்டடத்தை பார்வையிட அனுமதி என இக்காவல் கடவுள்கள் இடையிடையே வரங்களை வழங்கிக்கொண்டிருக்கின்றன.

**ஆர்.தயாபரன்**

அடிப்படையில், இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்தல் தொடர்பான நடவடிக்கைகளாக "உயர் பாதுகாப்பு வலயம்" தொடர்பான விடயத்தில் சிறிலங்கா- அரசாங்கமோ-இராணுவமோ ஒத்துழைப்பிற்குத்தயாராக இல்லை. புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டு இரண்டு வருடங்களாகிவிட்ட நிலையிலும் இராணுவத்தினரின் பிடியிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை விடுவித்தல் என்ற விடயத்தில் முன்னேற்றம் காணுதல் என்பது சாத்தியமற்ற தொன்றாகவே உள்ளது .இத்தனைக்கும் புரிந்துணர்வு உடன்பாட்டின் பிரகாரம் இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள பாடசாலைகள், கோவில்கள்,பொது இடங்கள் என்பனவற்றிலிருந்து 160 நாட்களுக்குள் வெளியேறி இருத்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெற்றதாக இல்லை. வேறு விதமாகக் கூறுவதானால் பாதுகாப்பு ஒப்பந்தத்தால் இவ்விடயத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்றபட்டதாக இல்லை. இதேவேளை இவ்விவகாரமானது தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டமையால் சிறிலங்கா அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டது. இதன் காரணமாக தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை



களின் முடிவில் தீர்மானம் ஒன்றும் எட்டப்பட்டது.இதன் காரணமாக அன்றைய பேச்சுவார்த்தைகளின் முடிவில் அமைக்கப்பட்ட மூன்று உப குழுக்களில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிணக்குகள் ஆராயப்பட்டன.

ஆனால் இவ்விடயத்தில் சிறிலங்கா ஆட்சியாளர்களும் - இராணுவத்தரப்பினர்களும் விட்டுக்கொடுப்புக்கள் எதையும் செய்ததாக இல்லை. உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவம் வெளியேறுதல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகிவிடும் என்பதே அவர்களின் மாற்ற முடியாத நிலைப்பாடாகும்.

இருப்பினும் உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியேறுதல் தொடர்பாக பாதுகாப்பு உபகுழுக் கூட்டங்கள் ஓமந்தையிலும், முகமாலையிலும் நடந்த வகையிலும், இவ்விடயத்தில் இராணுவத்தினரின் நிலைப்பாட்டைப் பின்பற்றியே அரசாங்கம் நகர்வுகளை மேற்கொண்டது. பேச்சு வார்த்தை மேசைகளில் அரசாங்கம் கைக்கொண்ட அணுகு முறைக்கும் ஆயுதப்படைத் தரப்பு புலிகளுடன் தளபதிகள் மட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளுக்குமிடையில் வேறுபாடு காணப்பட்டது.

இந்நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் குடியேற அனுமதிப்பதற்கு இராணுவம் பல நிபந்தனைகளை முன்வைத்தது. இந்த நிபந்தனைகள் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கே மாறானவகையில் கடுமையானவையாக இருந்தன. இந்த வகையில் நிபந்தனைகளை முன்வைப்பதில் அப்போதைய யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா முக்கியமானவராக இருந்தார். அதாவது ஆயுதப்படையினரின் பாதுகாப்பு, இராணுவச் சமநிலை பேணப்படுதல் என்ற ரீதியில் மக்களின் குடியிருப்புப் பிரச்சினை புறந்தள்ளப்பட்டது. இவற்றின் காரணமாக பாதுகாப்பு உபகுழுவின் சந்திப்புக்கள் பயனற்றதானவையாயின. இதேவேளை அரசாங்கம் பாதுகாப்பு உயர் வலயத்தை மீள ஒழுங்கமைப்பது என்ற ரீதியில் இந்தியாவின் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியாரிடம் ஆலோசனை கோரியிருந்தது. இது ஒரு வகையில் இவ் விடயத்தை இழுத்தடிப்பிற்கு உள்ளாக்குவதாகவும், தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான நியாயப்படுத்தலைத் தேடுவதாகவுமே இருந்தது.

இந்த வகையில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினையில் சிறிலங்கா அரச தரப்பு யுத்தநிறுத்த உடன்பாட்டு சரத்தின் அடிப்படையிலும் சரி, அதன் பின்னர் நடந்த பேச்சுவார்த்தைகளின் தீர்மானங்களின்படியும் இணக்கப்பாடானதொரு நிலையைக் கடைப்பிடிக்கத் தவறியது என்றே கூறலாம்.

(46ஆம் பக்கம் பார்க்க)

## அதி உயர் பாதுகாப்பு வலயமெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள்.

### (i) தீவகம்

**காரை நகரின் நீலங்காடு**- 1.25 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை ஆக்கிரமித்து கடற்படையின் எலாரா தளம் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று கிராம சேவையாளர் பிரிவைக் கொண்ட இப்பகுதியிலிருந்து 200 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

**ஊருண்டி மற்றும் வேலணை**-ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பளவுடைய நிலப்பரப்பை ஆக்கிரமித்து கடற்படையின் கஞ்சதேவா தளம் அமைக் கப்பட்டுள்ளது. மூன்றுகிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து சுமார் 160 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

**மண்டை தீவு**- எட்டு சதுர கிலோ மீற்றர் பரப்பளவை ஆக்கிரமித்து கடற்படையின் வெலிசுமண தளம் அமைந்துள்ளது. இரண்டு கிராம சேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய 553 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

### (ii) யாழ். நகர்

51-2வது இராணுவப்பிரிவு ஒரு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 110 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

### (iii) அரியாலை

பன்னிரெண்டு சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட,6 கிராம சேவையாளர் பிரிவுகள். 2296 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

### (iV) தென்மராட்சி

தனங்கிளப்பு, மறவன்புலோ-25 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 3 கிராம சேவையாளர் பிரிவுகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. 625 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

**எழுதுமட்டுவாள்** - 34.5 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பளவை ஆக்கிரமித்து 3 கிராம சேவையாளர் பிரிவை உள்ளடக்கியுள்ளது. 651 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

### (V) வடமராட்சி கிழக்கு

அம்பன், நாகர்கோவில் 12.5 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பளவை ஆக்கிரமித்து 4 கிராம சேவையாளர்கள் பிரிவை உள்ளடக்கியுள்ளது. 551 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ன.

### (Vi) வடமராட்சி

பருத்தித்துறை,பல்லப்பை மற்றும் வல்வெட்டித்துறை பகுதிகள் ஒரு சதுரகிலோ மீற்றர் நிலப் பரப்பரப்பளவை ஆக்கிரமித்து, 4 கிராம சேவையாளர் பிரிவை உள்ளடக்கியுள்ளது. 80 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளது.

### (Vii) வலிகாமம் வடக்கு

49 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பளவை ஆக்கிரமித்து, 38 கிராம சேவையாளர்பிரிவை உள்ளடக்கியுள்ளது. 18,936 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளது.

# தாஜ்மஹால் ஒரு அதிசயம்

வேரற்கேணியன்

* அறிந்த மாளிகை அறிந்திராத தகவல்கள்
* இந்தியாவில்தான் இஸ்லாமிய நினைவுச் சின்னங்கள் பெருமளவில் உள்ளன.

மனைவி மும்தாஜ் மஹாலின் நினைவாக, என்றும் அழியா அழகுமாடம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற ஆவலுடன், ஒரு வரைபடம் தயாரிப்பதற்காக, முகலாய மன்னன் ஷாஜஹான், இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கட்டடக்கலைஞர்களை வரவழைத்தான். ஒரு தெய்வீக அழகு வாய்ந்த கவின் மாளிகையை உருவாக்க ஒரு வரைபடம் தேவை என்று அவர்களிடம் வேண்டினான். அவர்கள் பலநாள் முயன்று எழுதிய வரை படங்களை ஷாஜ ஹானிடம் கொடுத்தார்கள். அவற்றுள், பேர்சியாவிலிருந்து வந்த இசாகான் கொடுத்த வரைபடம் மிகச்சிறந்ததெனத் தெரிவு செய்தான். அவனையே தலைமைக் கட்டடக்கலைஞனாகவும் நியமித்தான். பலுசிஸ்தான், சிரியா, பொக்கரா, பக்தாத், சமர்கன்ட் நாடுகளி லிருந்து வந்த நிபுணர்களை உதவியா ளர்களாக நியமித்தான். மன்னின் அரசவையின் புகழ் பெற்ற அலிமர்தான்கான் மாளிகையைச் சூழவரும் தோட்டத்தை திட்டமிடும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டான்.

இருபதினாயிரம் தொழிலாளர்கள் இருபத்திரண்டு ஆண்டு காலம் வேலை செய்து 1653ம் ஆண்டு அந்த நினை வாலயத்தைக் கட்டி முடித்தனர். அது ஒரு பிரார்த்தனை. ஒரு காட்சி ஒரு கவிதை ஒரு கனவு அதற்கும் மேலாக ஒரு அதிசயம். என்றனர், அதனை முதன் முதலில் பார்த்தவர்கள் ஷா ஜஹான் அதற்கு தாஜ்மஹால் எனப பெயரிட்டான். "வானுலகிலிருந்து இதன் வடிவமைப்பு வந்திருக்கவில்லையென்றால் இந்தக் கட்டடம் இந்த பூமிக்கு வந்திருக்காது" என்று வியந்தான்.

தாஜ்மஹால், ஷாஜஹான் தன் மறைந்த காதல் மங்கையின் நினைவாக, பளிங்குக் கற்களால் படைத்த சமரகவி, முகலாய கட்டடக்கலையின் சிறப்புமிக்க சிகரம். பதினோராம் நூற்றாண்டில் இந்திய உபகண்டத்தில் முஸ்லிம்களின் ஆட்சி நிறுவப்பட்டதுடன் தொடங்கிய இந்திய-பேர்சிய மரபுகளின் சேர்க்கை இங்கே உச்சமடைந்தது. முஸ்லிம் ஆட்சியாளர் தங்கள் சொந்த நாட்டுக் கட்டடக்கலை நுட்பங்களை இந்தியாவுக்குக் கொண்டு வந்தனர். அவற்றை இந்திய இனப்பண்புகளுடன் இணைத்து தனித்துவமான, இணையற்ற, இந்தோ - இஸ்லாமிய கட்டடக்கலையை உருவாக்கினர். உலகிலேயே இந்தியாவில் தான் பெருமளவு இஸ்லாமிய நினைவுச் சின்னங்கள் உள்ளன என்பது அநேகருக்குத் தெரியாது.

கட்டடக்கலை மற்றும் திட்டவரைபு விதிகளின் படி தாஜ் மஹாலின் முதல்முன்னோடி டில்லியிலுள்ள ஹுமாயின கல்லறை



ஹுமாயினுடைய விதவை மனைவி ஹமிதா பானு பேகம் கணவன் இறந்து பதினான்கு ஆண்டு களுக்குப் பின் அதனைக் கட்டுவதற்குத் தயாரானாள். சிவப்பு மணற்பாறையினால் (red saudstoue) கட்டப்பட்டு மாபிள் கற்களால் மாடத்தூபி அமைக்கப்பட்டது. எண்கோணக் கல்லறை அதன் அறைகளுக்கும் மாபிள் பயன்படுத்தப்பட்டன. இந்தமுறை பின்னாளில் வந்த அத்தகைய நினைவுச் சின்னங்களுக்கு அத்திவாரமாக அமைந்தது.

கணவன் மீது ஒரு மனைவி கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுக்கு அடையாளமாத் திகழ்கின்றது இக்கல்லறை. மனைவி மீது ஒரு புகழ் பெற்ற கணவன் கொண்டிருந்த காதலுக்கு இறவா நினைவாகத் திகழ்கின்றது தாஜ்மஹால்.

அதேபோல் அக்கராவுக்குச் சமீபமாக சிக்கந்தராவில் உள்ள அக்பர் கல்லறையின் நான்கு தூபிகளும் முழுதும் மாபிள் கற்களால் உருவாக்கப்பட்டவை தந்தை ஹுமாயின் அவர் மகன் அக்பர் கல்லறைகள் இரண்டிலும் அக்காலத்து மங்கலான சிவப்பு மணற்பாறை தோற்றமளிக்கின்றது.

மாபிள் வேலைப்பட்டறிவு வளர்ச்சியடைந்த பின்னர் மேலும் பல நுட்பமான கட்டடங்கள் திட்டமிடப்பட்டன. யமுனை நதியின் கிழக்குப் கரையில், தாஜ்மஹால் இருக்கும். இடத்திலிருந்து வடக்கே கட்டப்பட்டிருக்கும் இத்மத்உத்-உல்லாவின் கல்லறை சிறந்த ஒரு எடுத்துக்காட்டு. ஜஹன்கீர் மன்னர் அரசவை அமைச்சராக இருந்தவர் இந்த இற்மத்உத் - உல்மா இவருக்கு மிர்சா ஜியாஸ்பெக் என்று மற்றொரு பெயர் இவருடைய மகள் நூர்ஜகான் இவளை பின்னாளில் மன்னர் மணம் செய்து கொண்டார். இவள் தன் மறைந்த தந்தையின் உடலைப் புதைத்து அதன் மேல் இந்தக் கல்லறையைக் கட்டுவித்தாள். 'ஒரு மாபிள் நகைப் பெட்டி' என வருணிக்கப்படும் இந்த அக்பர் காலத்துக் கல்லறை உறுதியான சிவப்பு மணல் பாறைக் கட்டடக்கலையிலிருந்து ஷாஜ ஹானின் பலம் வாய்ந்த தாஜ்மஹால் வரையான இடை மாறுதலின் சிறப்பை தெளிவு படுத்துகின்றது. அதன் வடிவமைப்புக் கூறுகளின் தாக்கம் தாஜ் மஹாலில் தெரிவதாக நம்பப் படுகிறது. சைபிரஸ் மரம், மேசைப்பூச்சாடிகள், பழங்கள், சிவப்பு வைன்நிற மலர், வைன் கோப்பைகள் போன்ற பேர்சியவடிவமைப்புக்கள் அதன்உட்சுவர்களில் காணப்படுகின்றன. மணிக்கற்கள், மங்கலான இரத்தினக்கல், மங்களான சிவப்பு மணிக் கல்,கந்தகக்கன்மகி நீல வண்ண மணிக்கல், பச்சை நிறக் கனிப் பொருள், பவளப் பாறை, சிப்பி போன்ற வற்றாலும் மதிப்புமிக்க கற்களாலும் பூக்கள் வடிவில், மாபிள்தரையில் இயற்கை ததும்ப ஒப்பனை செய்யப்பட்டுள்ளது. சரிகைச் சித்திரவேலை போன்றும் கையெழுத்துப் போலவும் பதிவுகள் உள்ளன.

மாபிள் பதிக்கும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. குறிப்பாக அக்ரா நகரத்து தாஜ்மஹால் காலத்தில் வந்த கட்டடக் கலைஞர்களுடன் கூடிவந்த கைவினஞர்கள் தாஜ்கான்ஜில் தங்கி விட்டனர்; அவர்கள் இன்றும் கூட தாஜ்மஹாலிலிருந்து ஆற்றல் பெறுகின்றனர். அவர்களில் பெரும்பான்மையினர் அந்த அதிசய மாளிகையின் அதிகாரபூர்வ படிமங்களை இன்றும் வைத்திருக்கின்றனர். தாஜ்மஹால்! வார்த்தைகளால் வர்ணித்துக் காட்டுவது சுலபமல்ல. அனுபவித்தறிய வேண்டிய ஒன்று.

---

## அழிவிலிருந்து,...

மேற்கொள்ள முடியுமாக இருக்கையில அதனூடாக பெறப்படும் நன்மைகள் அதிகமாகவுள்ளன. நீண்ட காலமாக எந்தப்புனரமைப்புமின்றி இந்தநீர்ப்பாசன குளங்கள் இருப்பதால் போதியளவு நீரைத் தேக்கி வைக்க முடியாத சூழ்நிலையே இருந்து வருகின்றது எனவே சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இதுவிடயத்தில் அக்கறையுடன் செயலாற்றுவது அவசியமாகும்.

மேலும் வன்னியின் விவசாயத்துறை எதிர்கொள்ளும் மற்றுமொரு முக்கிய பிரச்சினை மூலதனப்பிரச்சினையாகும். இராணுவ ஆக்கிரமிப்புக்களால் இடம்பெயர்ந்து உடனடியாக விவசாய முயற்சிகள் உள்ளிட்ட வருமான வழிகளை முற்றாக இழந்து இன்று சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ள மக்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்த பெரும் பாடுபடுகின்றனர். இம்மக்களுக்கான மீள் குடியமர்வு கொடுப்பனவுகள் கூட ஒழுங்கான வகையில் வழங்கப்படாது இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகிறது. அனைவருக்கும் முதற்கட்ட கொடுப்பனவான 25,000 ரூபா கூட கிடைக்காத நிலையே இன்று வரை தொடர்கிறது. சமாதான சூழல் ஏற்பட்டு விட்டதுதான். ஆனால் மக்கள் வாழ்வில் பாரியளவில் மாற்றங்கள் நிகழ்ந்து விட்டதாக தெரியவில்லை. இயல்பு வாழ்வு என்பது இன்னும் எட்டாக்கனியாகவே தமிழர் வாழ்வில் உள்ளது. இந்நிலையில் மீள்குடியமர்ந்துள்ள மக்களின் பரிதாபகரமான நிலை போக்கப்படாதுள்ளதால் மேற்கொண்டு எந்த தொழில் முயற்சிகளிலும் ஈடுபட முடியாத நிலையில் அவர்கள் இருந்து வருகின்றனர். பொருளாதார தடைக்குள் வாழ்ந்ததுபோல் தொடர்ந்தும் அவ்வாறான தொரு வாழ்க்கைக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

விவசாயத்துறையின் திட்டமிட்ட வகையிலான புறக்கணிப்பு என்ற விடயத்தில் விவசாயிகளுக்கு இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் அழிவுகளுக்கு இழப்பீடு வழங்கக் கூட அரசு முன்வருவதில்லை. தென்பகுதியில் வெள்ளப்பெருக்குகள், வரட்சியால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படும் சமயங்களில் அரசு அதிலிருந்து விவசாயிகள் மீள இழப்பீட்டுத்தொகைகளை வழங்குகின்றது. ஆனால் இங்கு அவ்வாறான நிலை இல்லை. இந்த சமாதான சூழலில் கூட அவ்வாறான இழப்பீடு வழங்குதல் என்பதில் கூட அரசு எந்த விதமான கவனமும் செலுத்தவில்லை.

இதற்கும் அப்பால் பாரம்பரிய முறைகளைப் பின்பற்றியே நாம் விவசாய முயற்சிகளை மேற்கொள்கி றோம். மாறி வரும் நவீன உலகின் ஒழுங்கிற் கமைய நாமும் எம்மை மாற்றிக்கொண்டு உற்பத்தி முயற்சிகளைப் பெருக்க வேண்டும். அதாவது கிடைக்கும் வளங்களினூடாக உச்ச பயனை எவ்வாறு பெறுவது என்பது குறித்து ஆராய்ந்து செயற்படுவதன் மூலமாக அதிக நன்மையைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதற்குக் போதிய பயிற்சிகள், விளக்கங்கள் அவசியமாகும். விவசாயத்தின் மேம்பாட்டை நோக்காகக் கொண்ட பயிற்சித்திட்டங்களை விரிவாக்குவதன் மூலமாக உச்ச பயனைப்பெறமுடி யுமானால் அதற்குரிய வழிவகைகளை திறம்படச் செய்வது குறித்து எண்ணி செயற்படுத்துதல் அவசியமானதாகும். விவசாயிகளுக்கு நல்ல வழிகாட்டுதல்களை வழங்குதல் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்ற உச்ச பயனைப்பெற முடியும். இதற்கான வழிவகைகள் இன்று எத்தகைய மட்டத்தில் இருக்கின்றன?

இந்த வகையில் வன்னிப்பகுதியில் விவசாய நடவடிக்கைகள் எந்த மட்டத்தில் உள்தெனப் பார்த்தால் அது முற்றுமுழுதாக பாதிப்புக்களுக்கே முகம் கொடுத்துள்ளது எனலாம். மக்கள் வாழ்வாதாரங்கள் ஆக்கிரமிப்பாளர்களினால் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் அதிலிருந்து மீளமுடியாத சூழலே ஒவ்வொரு விவசாய குடும்பத்தின் நிலையாகவுள்ளது.

இந்த இரண்டாண்டு காலப்பகுதியில் இந்த விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு அரசு எந்தவிதமான உதவிகளையும் செய்யவில்லை. இந்நிலையில் அவர்கள் விவசாய நடவடிக்கைகளை எவ்வாறு மேற கொள்வது. சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வரும் இந்த மக்களின் தொழில் முயற்சிகளுக்கு அரசு ஏதாயினும் உதவிகளைச் செய்ததா? சிறிலங்கா ஆட்சியாளர்களினால் சிதைக்கப்பட்ட அவர்களது வாழ்வியலை உயர்த்த இந்த சமாதான காலத்திலாவது அரசு அவர்களுக்கு கைகொடுத்ததா? அவ்வாறாயின் எவ்வாறு இந்த மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்புவது.

உண்மையில் சிதைவுற்ற மக்களின் வாழ்வியலை மேம்படுத்த அரசு பல நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கலாம். பல்வேறு உதவி அமைப்புக்களின் நாடுகள் என பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுத்திட்டங்களுக்கு உதவிகளை வழங்க முன்வந்திருந்தும், அவைகளை செயற்படுத்தக்கூடியதான சூழ்நிலையை ஏற்படுத்த இந்த இரண்டாண்டு காலப்பகுதியில் அரசு எந்தநடவடிக்கைகளையுமே மேற்கொள்வில்லை. எல்லாம் இழுத்தடிப்புக்களாகவும், முட்டுக்கட்டைகளாகவும்,தடைகளாகவுமே நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

இனால் விவசாயத்தை நம்பி வாழ்ந்த குடும்பங்கள் எந்த முயற்சிகளையும் மேற்கொள்ள முடியாது இன்று பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் உள்ளன. இந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளை ஓரளவிற்காவது செய்திருந்தால் சிதைக்கப்பட்ட அவர்களது வாழ்வில் மலர்ச்சி ஏற்பட்டிருக்கும். அவ்வாறு எதுவுமே இல்லாத நிலையில் எவ்வாறு இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவது.

இவ் விடயத்தில், இன்னொரு விஷயத்தை சுட்டிக்காட்டுதல் பொருத்தமானது. மனிதாபிமான உதவி அமைப்புக்கள் மீள் குடியமர்ந்த மக்களை அணுகி அவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு சில உதவிகளை அளிக்கின்றன. விதைதானி யங்கள், விவசாய உபகரணங்களான மண் வெட்டி, உள்ளிட்ட சில பொருட்கள் என்பன வற்றை வழங்குகின்றன. ஆனால், இவை மட்டும் இந்த மக்கள் உற்பத்தியில் ஈடுபடப் போதுமானவையா? எந்த முயற்சிக்கும் உழைப்பு அவசியமானது தான். அதே சமயம் மூலதனம் என்பது மிகமிக இன்றியமையாததொன்றாகும்.

மீள்குடியமர்ந்த மக்களிடம் நிலம் இருக்கிறது. உழைப்பிற்கான ஆர்வம் இருக்கிறது. உதவி அமைப்புக்கள் வழங்கிய சில உபகரணங்கள் இருக்கின்றன. ஆனால் மூலதனம் தான் இல்லை. அந்த மூலதனத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்வது. எல்லாவற்றையும் இழந்த மக்களிடம் மூலதனம் எங்கிருக்கும். இந்த மூலதனம் இல்லாது எவ்வாறு அவர்களால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆகையினால் மீள் குடியமர்ந்த மக்களுக்கு முதலில் நிதி உதவியை வழங்க முன்வரவேண்டும். அதன் பின்னராக அவர்களின் முயற்சிகளை ஊக்குவிக்க, வாழ்வியலை மேம்படுத்த கூடியவாறாக பொருட்களை வழங்கலாம் இல்லாது போனால் இந்தப் பொருட்களை வைத்து அவர்களால் என்னதான் செய்யமுடியும்.

சிறிலங்கா ஆட்சியாளர் முற்றுமுழுதாகத் தமிழர் வாழ்வியலின் மேம்பாடு குறித்து சிந்திக்காது விடினும் இந்த உதவி அமைப்புக்களாவது சிந்தித்து செயற்படுதல் சிறப்பானதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

ஒட்டுமொத்தத்தில் இந்த இரண்டாண்டு காலப்பகுதியென்பது தமிழ் மக்களின் வாழ்வியலின் எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அவர்களின் வாழ்வியலை மேலும் சிதைப்பதாக அமைந்து விட்டது. இயல்பு வாழ்விற்காக மக்களின் காத்திருப்பும், ஏக்கங்களும், ஏமாற்றங்களுமே இன்று வரை தொடரும் உண்மைகளாகும். இது விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களுக்கும் மிகவும் பொருத்தப்பாடானதாக அமையும் என்பதே திண்ணம்.

# தேசிய விளையாட்டு அணிகளை உருவாக்கும் பணியில்...!

**ஜெயந்திரன்**

உறுதியான உடலில்தான் உறுதியான மனம் குடியிருக்கிறது என்பது கிரேக்கப் பழமொழி. இதனை வாழ்நாளில் நாம் அனுபவிக்கவும் முடிகிறது. இவ்வாறாக உறுதியான உடலை உருவாக்கி அங்கு உறுதி மிக்க எதனையும் கையாளக் கூடிய எதிர் கொள்ளக் கூடிய சவால்களை வெல்லக்கூடிய மனத்தை உருவாக்கும் வலிமை விளையாட்டின் கையில் உள்ளது என்றால் இதனை மறுக்க முடியாது.

உறுதியான உடலும் உறுதியான மனமும இல்லாதவர்கள் ஓரம் கட்டப்படுவார்கள் என்பது இன்னொரு பழமொழி. இது இன்றைய காலம் மட்டுமல்ல ஆதிகால மனிதனிடத்திலேயே பெறுமதிமிக்கதொன்றாகக் காணப்பட்டது. ஆரம்பகால மனிதன் தனது அன்றாட உணவுத் தேவைக்காக மிருகங்களை வேட்டையாடினான்.இதற்காக மிருகங்களைத் துரத்தவும், அதனுடன் சேர்ந்து ஓடவும்,துரத்தும் போது ஏற்படும் தடைகளைத் தாண்டவும் தேவைகள் ஏற்பட்டன. இதன் பிற்பட்ட காலப் பகுதியில் விலங்குகளைத் தன்பாதுகாப்பில் வளர்க்க முற்பட்டதன் பின் அம் மிருகங்களைப் பாதுகாக்க மனிதன் போர்ப்பயிற்சிகளைப் பெற வேண்டியவனாகக் காணப்பட்டான். இதன் போதே இடையர்கால உடற்செயற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன.

மேலும் கிரேக்க யுகத்திலே முன்னைய யுகங்களை விட பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. ஆறுவயதிற்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப் பட்டது. இராணுவப் பயிற்சிக்காக உடற்தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டோர் ஈட்டி எறிதல், குண்டெறிதல், பரிதிவட்டம் எறிதல்,வாட்போர்,மற்போர், விற்பயிற்சி, மிருகங்களில் ஏறி சவாரிசெய்தல், தேர் ஓட்டம் போன்ற செயல்களில் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறு போர் யுகத்தில் கண்ணும் கருத்துமாக உடல் வலிமை பெற்றிருப்போரிடையே போரற்ற காலப்பகுதியில் உடல் வலிமையைப் பாதுகாக்க விளையாட்டுப் போட்டியாக கி.மு.776 இல் முதன் முதலாகக் கிரேக்க நாட்டில் ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கப்பட்டு இன்றும் நடைபெற்று வருகிறது. இதனால் உறுதியான உடலை விளையாட்டின் மூலம் வளர்த்து அதன் மூலம் உறுதிமிக்க மனிதர்களை உருவாக்க முடியும் என்ற உண்மை கண்டறியப்பட்டது.



தேசியத் தலைவர் அவர்களுடன் தமிழீழ வலைப்பந்து அணி





வெற்றிக் கிண்ணத்துடன் சுவிஸ் அணி

உதைபந்தாட்டம் கூட ஆரம்பத்தில் இராணுவத்தினர் எதிரிகளை வென்று அவர்களது மண்டை ஓடுகளைக் கொண்டு ஆடினார்கள் என்று பழைய வரலாறு ஒன்று கூறுகின்றது. இவ்வாறு வளர்ச்சி பெற்று உதைபந்தாட்டம் இன்று நாடுகளிடையே சுமுகமான அதேவேளை நல்லுறவை வளர்த்துக்கொள்ளும் விதத்திலான விதிமுறைகளை வகுத்து உறுதிமிக்க மனிதர்களை உருவாக்கி வருகின்றது.

அந்த வகையில் போர் ஓய்ந்து விளையாட்டின் பக்கங்களை அறிந்து செயற்படக் கூடிய ஒரு நிலைமையை வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தற்போது பெற்றுவருகின்றனர். இந்த வகையில் இவர்களின் உறுதிமிக்க உடலும் விளையாட்டின் பலத்தையும் பரீட்சிக்கும் காலம் உருவாகியுள்ளது. இதனை இன்று தமிழீழ விளையாட்டுத்துறை தனது கையிலேந்தியுள்ளது. உண்மையில் போரின் எதிரொலிப்புக்கள் இன்னும் மக்களின் காதுகளில் இருந்து முற்றாக அகலாத போதும் விளையாட்டு ரீதியாகவும் தமிழ்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றனர். இதனை தற்போதைய சமாதான சூழல் ஏற்படுத்தியுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது திறமைகளைச் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லும் ஆரம்ப நடவடிக்கையாக தமிழீழ விளையாட்டுத்துறையின் முன்னேற்பாட்டின் மூலம் தமிழீழப் பெண்கள் வலைப்பந்தாட்ட அணி லண்டன் சென்று போட்டிகளில் ஈடுபட்டமையும் அதில் கலந்துகொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெற்றதுடன் இதில் தேசிய அணியில் அங்கம் வகிக்கும் வீரர்களைக் கொண்ட அணிகளையும் வெற்றி பெற்று திரும்பியமையை உண்மையில் பாராட்டாமல் இருக்க முடியாது. இது தமிழீழத்துக்கான தேசிய அணிகளை உருவாக்குவதற்கான தமிழீழ விளையாட்டுத்துறையின் முதற்படியாக அமைந்திருந்தது.



வலைப்பந்தாட்ட அணிக்குப் பாராட்டு

இதனைவிட புலம்பெயர்ந்து சுவிசில் வாழும் தமிழ் உறவுகளுடனான உதைபந்தாட் சுற்றுப்போட்டி ஒன்றையும் தமிழீழ விளையாட்டுத் துறை கிளிநொச்சியில் நடத்தியிருந்தது.

இச் செயற்பாடுகள் நாளடைவில் வளர்ச்சி அடைந்து ஏனைய விளையாட்டுக்களிலும் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கும் தகைமையை தமிழீழ வீரர்களிடையே வளர்க்க விளையாட்டுத்துறை பெரிதும் உழைப்பது நம்பிக்கையை ஊட்டுகின்றது.

ஒரு விளையாட்டை எந்த வியூகங்களினூடாக நகர்த்தலாம் என்பதனைப் பொறுத்தே அதன் வெற்றி தங்கியுள்ளது. அந்த வகையில் தமிழீழ விளையாட்டுத்துறையினால் நடாத்தப்படுகின்ற தமிழீழ தேசிய பெருவிளையாட்டுப் போட்டி நிச்சயமாய் வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

ஏனெனில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ள முன்பு குறிப்பாக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் வீரர்கள் விளையாட்டின் நுட்பங்களோ, பயிற்சிகளோ,உபகரணங்களோ இன்றி தான்தோன்றித்தனமாகவே தமது விளையாட்டுக்களை மேற்கொண்டிருந்தனர். உண்மையில் இது ஒரு பின்தங்கிய நிலையே.

இருப்பினும் விளையாட்டுத் தரங்களைக் கூட ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாத தன்மையில் சில மாவட்டங்கள் (கிளிநொச்சி,முல்லைத்தீவு) காணப்பட்டன. இந்நிலை தற்போது ஓரளவு நீங்கியுள்ளதையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இவ்வணிகள் முன்னர் மாகாணப் போட்டிகளைக் கூட எதிர்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டன.

உதைபந்தாட்டத்தைப் பொறுத்தளவில் சிறந்த வீரர்களாகக் காணப்பட்ட பலர் காலணிகளை உபயோகிக்க வழிப்படுத்தியதில் தமிழீழ விளையாட்டுத் துறையின் தேசிய விளையாட்டுப் போட்டி வழிகோலியதன் மூலமே இம் மாவட்ட அணிகள் ஓரளவு வளர்ச்சியை அடையக் காரணமாக இருந்ததையும் மறுக்க முடியாது.





இங்கிலாந்து மண்ணில் தமிழீழ வலைப்பந்து அணி

மேலும் முதலாவதுதேசிய விளையாட்டுப் போட்டியில் ஈடு கொடுக்க முடியாது திணறிய வன்னி மாவட்ட அணிகள் இரண்டாவது தேசிய விளையாட்டுப்போட்டியில் பலமாக மோதியதைக் காணக் கூடியதாக இருந்தது. இது போர்ச்சூழலில் முடங்கிக் கிடந்த அணிகளின் மன உறுதியைக் காண்பித்தது என்றால் மிகையில்லை. இவ்வாறு ஒவ்வொரு விளையாட்டாக வளர்ச்சியடைந்து வேகம் பெறும் வேளையில், இம்முறை நடைபெற இருக்கின்ற பெருவிளையாட்டில் துடுப்பாட்டப் போட்டி மென்பந்தல் லாமல் சர்வதேச போட்டிகளின் உபகரணங்களுடன் நடத்த விருப்பது தமிழீழ விளையாட் டுத்துறையின் மற்றுமொரு வளர்ச்சிப்படியாகும். இதனைவிட தமிழீழ ரீதியில் வருடா வருடம் காரத்தே சுற்றுப் போட்டிகளையும் நடாத்தி வருகின்றது.

மற்றும் குறிபார்த்துச் சுடும் போட்டியை எதிர்காலத்தில் தமிழீழத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை மிகவும் முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கையாகும்.

இது ஒரு புறமிருக்க தமிழீழ விளையாட்டுத்துறையின் பெரும்பங்கும் பொறுப்பும் என்னவென்றால் அந்தந்த பிரதேசங்களுக்குரிய விளையாட்டு உத்தி யோகஸ்தர்கள் மூலமாகவோ, மாவட்ட ரீதியிலாகவோ பெரும்பாலும் எல்லாவகையான விளையாட்டுக்களிலும் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பினை வீரர்களிடையே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இது இவ்வாறிருக்க மூன்றாவது தமிழீழ தேசிய விளையாட்டுப் போட்டியில் இருபாலாருக்குமான கிளித்தட்டு, கபடி,மற்றும், பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி என்பன அறிமுகப்படுத்தப்படுவது விளையாட்டுத் துறையின் மற்றுமொரு வளர்ச்சிப்படியாகும். இதனால் தமிழீழத்தின் பட்டிதொட்டிகள் எங்கும் விளையாட்டு வளர்த்தெடுக்கப்படும்.

அதேசமயம் பொருளாதார ரீதியில் மிகவும பின்தங்கியிருக்கும் பலதரப்பட்ட திறமை வாய்ந்த வீரர்கள் விரும்பியோ விரும்பாமலோ பாதிக்கப்படும் நிலை காணப்படுவதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இதனை அதிகாரிகள் மற்றும் கூட்டுறவாளர்கள் மற்றும் நிறுவனத்தினர் கருத்திற் கொண்டு விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குத் தம்மாலான சகல ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்பது விளையாட்டு ஆர்வலர் களின் எதிர்பார்ப்பாகும்.

அத்துடன் எங்கள் மத்தியில் அறிமுக மின்றி ஏனைய மாவட்டங்களில் ஆடப்பட்டு வரும் Basket Ball, Table Tennies,Rugger போன்ற விளையாட்டுக்களையும் வளர்த் தெடுக்க முயற்சிக்க வேண்டும். இதனை நேரடியாகப் பாடசாலையூடாக அறிமுகப்படுத்துதலே பொருத்தமுடைய ஒன்றாக இருக்கும்.

எனவே விளையாட்டுக்களைப் படிப்படியாக அதிகரிப்பதுடன் போட்டிகளையும் அதிகளவில் அதிகரித்து பயிற்சிகளை விரிவுபடுத்தி தமிழீழத்தில் சிறந்த வீரர்களுடன் அணிகளை வெளியீடு செய்யும் தகுதி தமிழர்களிடையே இருக்கின்றது என்பது சர்வதேச அரங்கில் புலனாகும் காலம் தொலை தூரத்தில் இருக்காது.

15ஆம் அகவை காணும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

T.p fax } 021.222 2367

இல:-165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

ஈமெயில்:-jaffna-c-c@ eu doramail. Com.

சி. 9244

# கரையோர மக்களின் கண்ணீர் துடைக்கப்படவில்லை

கடந்த 20 வருடங்களாக தமிழ்தாயகப் பகுதிகள் மீது சிங்கள இனவாத அரசுகள் மேற்கொண்ட இனவெறி யுத்தத்தால் தமிழ் தாயகத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய மீன்பிடி மற்றும் விவசாயத்துறைகள் இரண்டுமே பெரும்பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தன. ஒரு இனத்தின் பொருளாதாரக் கட்டமைப்பைச் சிதைப்பதன் மூலம் அந்த இனத்தின் தனித்துவத்தைச் சிதைத்துவிடலாம் என்ற எண்ணப்பாட்டில் சிங்கள அரசுகள் தமிழ் மக்களின்பொருளாதார வலுவைச் சிதைப்பதில் முன்னின்று செயல் பட்டன.

அந்தவகையில் தமிழ் மக்களின் இப்பொழுது மாற்றமுள்ளதா? மீன்பிடித் தொழிலில் கடந்த 20 வருட காலப்போர் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியது என்பதே இங்கு நோக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப்பெற்றது முதல் தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து அவர்களின் பொருளாதாரத்தைச் சாய்ப்பதில் சிங்கள அரசுகள் முனைப்பாக செயற்பட்டு வந்தன. அந்த வகையில் பெருமளவான பொருட்கள் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டது. இது தாயகத்தின் பல்வேறு பட்ட தொழில் முயற்சிகளைப் பாதித்திருந்தது. அதிலும் மீன்பிடித் தொழிலே அரசின் இத்தகைய செயலால் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில் நீண்டகால பொருளாதாரத்தடையில் இடையிடையே சில தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததனால் விவசாயம் உள்ளிட்ட தொழில்கள் சற்று மீட்சி பெற்றுவந்தது. ஆனால் கடற்தொழில் மீது விதிக்கபட்டிருந்த முக்கிய தடையான கடல்வலயத் தடைச்சட்டம் தொழில் உபகரணங்கள் மீதான தடைகள் எதுவும் 2002ஆம் ஆண்டுக்கு முன்னரில் ஒருநாள் கூட தளர்த்தப்படாது மிகவும்வலுவாக நடைமுறைப் படுத்தப்பட்டு வந்ததுடன் மீனவர்கள் கடலில் இறங்குவதற்குக்கூட உத்தரவாதமற்ற நிலையே காணப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளின் முன்னர் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்கள்ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அதாவது கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் கடற்தொழிலைப்பொறுத்தவரை சில இடங்களில் மாத்திரம் சிறிதளவு தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. அதுவும் தீவிர கண்காணிப்புக்களின் மத்தியில் அனுமதிக்கப்பட்டது எனினும் சில கடற்பகுதிகளில் மீனவர்கள் செல்வதற்கு இன்னமும் அனுமதிக்கப்படாத நிலை காணப்படுகிறது. சில பகுதிகளில் பாஸ், தூரம், நேரம் போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நிலையில் மீன்பிடிக்கு அனுமதிக் கப்பட்டது.

இந்தநிலையில் மீனவர்கள் மீது சிறிலங்கா அரசு பிறப்பித்த தடைகளையும் அடக்கு முறைகளையும் சற்று விரிவாகப் பார்ப்பது அவசியமாகும். ஆகவே அவை பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கடல்வலயத் தடைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்தத் தடைச்சட்டம் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் ஆயுதப்போர் வடிவிற்கு மாற்றம் பெற்று சிறிது சிறிதாக முனைப்புப்பெற்று வருகின்றவேளை பாதுகாப்பை காரணங்காட்டி அப்போது ஆட்சியிலிருந்த ஜே. ஆரினால் இந்தச் சட்டம் பிறப்பிக் கப்பட்டது.

உண்மையில் இந்த தடைச்சட்டம் போடப்பட்டு விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை அரசு கட்டுப்படுத்தியதா என்றால் இல்லை. சிறிலங்கா அரசுக்கு , அது முயடியாததொன்றாகவே இருந்தது. தமிழ் மக்கள் மீது அடக்குமுறைப் போரை சிங்கள இனவாத அரசுகள் ஆரம்பித்த காலம்முதல் இன்று வரையான நாள்வரை அரசு பாதுகாப்பைக் காரணம்காட்டி மேற் கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் நேரடியாக மக்களையே பாதித்தது.

அந்த வகையில் கடல் வலயத் தடைச்சட்டம் கடல் தொழிலாளர்களையே பாதிப்படையச் செய்தது இக்கடல்வலயத் தடைச்சட்டம் மீனவர்கள் பாரம்பரியமாகத் தொழில்செய்து வந்த கடற் பரப்பை பெருமளவாக விழுங்கியது. இதனால் கடற்தொழிலாளர்கள்





ஆழ்கடல் மீன்பிடியை முற்றாகக் கைவிடவேண்டியேற்பட்டது. குறுகிய எல்லைக்குள் கரையோர மீன்பிடித்தொழிலை மட்டுமே செய்யவேண்டிய இக்கட்டான சூழலுக்குள் தள்ளப்பட்டனர். இந்த நிலையின் உருவாக்கத்தால் கடற்தொழிலாளர்களின் பொருளாதாரக் கட்டமைப்புக்கள் சிதைந்து போனது.

குறுகிய கால இடைவெளிக்குள் அரசு தொடர்ச்சியாக மீன்பிடித்தொழிலின் மீது விதித்த கடல்வலயத் தடைச்சட்டம் கடல் தொழில் உபகரணங்கள் மீதான தடை என்பவற்றால் இலங்கையின் கடலுணவுத் தேவையில் மூன்றில் இரண்டு பங்கை பூர்த்தி செய்து கொண்டிருந்த இந்த மக்கள் பொருளாதார ரீதியாக பாரிய வீழ்ச்சியடைந்து தமதுஅன்றாட வாழ்வைக் கூடகொண்டு நகர்த்த முடியாது திண்டாட வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த நிலையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் ஒரு சமாதானம் உருவாக்கப்பட்டது. இம்முறை சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதால் கடந்த கால சமாதானங்கள் தந்த கசப்புணர்வுகளைத் தராது ஒரு விடிவை ஏற்படுத்தும். இதனால் தாம் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்த அவல வாழ்வு அகலும் என்பதில் அவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் சமாதான முன்னெடுப்புக்கள் உருவாகி இரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டன. இந்த இரண்டு வருடத்தையும் மக்கள் குருதி சிந்தாது உயிர்களைப் பலிகொடுக்காது கழித்தார்கள் என்பது மகிழ்ச்சிதான். அந்த மகிழ்ச்சியின் பின் விரிந்து கிடக்கின்ற சோகம்தான் மிகக் கொடுமையானது. அமைதியாகக் கடந்து சென்ற இரண்டு வருடங்களையும் இந்தக்கரையோர மக்கள் எதிர்பார்ப்புடனும்ஏக்கத்துடனும்தான் கழித்துள்ளனர் என்பதே உண்மை.

சமாதானம்இரண்டு வருடங்களைக் கடந்தும் இந்த மக்களின் வாழ்வில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியது. அவர்கள் எதைச் சாதித்தார்கள்? அவர்கள் தொழில் ரீதியாக முன்னேற்றமடைந்தார்களா? யுத்த காலத்தில் தினம்தினமாக இவர்கள் இழந்த இழப்புக்களை ஈடு செய்வதற்கு அரசு ஏதாவது முயற்சிகள் மேற்கொண்டதா? அல்லது பாரம்பரிய தொழில் உபகரணங்களுடனும் இராணுவத் தாக்குதல்களினால் சேதமடைந்த மற்றும் பழுதடைந்து போன உபகரணங்களுடனும் தொழில் செய்கின்ற அவல நிலை மாற்றப்பட்டதா? அல்லது கடற்படையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தும், காயமடைந்தும், அங்கவீனர்களாக மாறிவிட்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டதா? என்றால் இல்லை என்றே கூறலாம் அதற்கான எந்தவொரு முயற்சி கூட மேற்கொள்ளப்படவில்லை. மாறாக தமிழ்மக்களை ஒடுக்குகின்ற இனவாத நோக்குடன் யுத்த காலத்தில் செயற்பட்டதைப்போன்றே இப்போதைய சமாதான சூழலிலும்அரசு இனவாத நோக்குடனே செயல்படுவதாகவே மக்கள் கருதுகின்றனர். இந்த நிலையில் கரையோர மக்கள் இம்முறை உருவாகியுள்ள சமாதானத்தின் மீதும் நம்பிக்கை இழந்துள்ளனர்.

கடந்த இரண்டு வருட சமாதான காலம் கடற்தொழிலாளர்களுக்கு மாவட்ட ரீதியாக ஒருசில சாதகங்களையும் பாதகங்களையும் ஏற்படுத்தியது. அந்தவகையில் இராணுவ கட்டுப்பாடற்ற வெற்றிலைக்கேணி தாளையடி, கட்டைக் காடு, ஆழியவளை , சுண்டிக் குளம்,மாத்தளன், முல்லைத்தீவு, செம்மலை, நாயாறு போன்ற கட்டுப் பாடற்ற பகுதி கடற்தொழிலாளர்

அ.லோகீசன்

களின் தொழில் பரப்பில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு கடற் படையின் தாக்குதல்கள் படிப்படியாக குறைவடைந்தது. யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டு ஏறத்தாழ ஒருவருடம் வரையான காலப்பகுதி வரையும் கடலில் கடற்படையின் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. கடற்தொழிலாளர்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் கடற்படையின் இத்தகைய செயற்பாடு குறித்துப் பல தடவை முறைப்பாடுகளை மேற்கொண்டதற்கமைவாக அது முற்றாக நிறுத்தப்படாவிட்டாலும் அதில் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் குறிப்பிட்ட பகுதி மீனவர்களின் மீன்பிடி எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டது. இதனால் முன்னரைவிட சற்று ஆழ் கடலுக்கு சென்று தொழில் புரியும் நிலை உருவானது. இவ்வாறு உருவாகிய சந்தர்ப்பத்தை இந்தத் தொழிலாளர்களால் சரியாகப் பயன்படுத்த முடிந்ததா என்றால் இல்லை. என்றுதான் கூறவேண்டும் யுத்த காலத்தில் இவர்களது தொழில் உபகரணங்களை கடற்படை அழித்தும் சேதப் படுத்தியும், உயிர்களைக் குடித்தும் இருந்ததுடன் இந்த மக்களின் பொருளாதார வலுவையும் சிதைத் திருந்தது. இந்நிலையில் இவர்களால் கரையோர மீன்பிடியை மாத்திரம் மேற்கொள்ள இயலுமாக இருக்கிறது.

எனவே தற்போது எழுந்துள்ள மீனின் தேவையை இவர்களால் பூர்த்தி செய்ய முடியாதிருக்கின்றது. இந்தவகையில் இவர்களைத் தொழில் ரீதியாக வலுவடையச் செய்வதற்கு பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடையச் செய்வதற்கான உதவிகள் இவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. யுத்தத்தால் இந்த மக்களின் உயிர், உடைமைகளைப் பறித்து அகதிகளாக மாற்றிய அரசு இவர்களுக்கு ஏதாவது உதவிக் கொடுப்பனவுகளை வழங்கி அவர்களை உயர்த்துவதற்கு முன்வராத நிலை தொடர்ந்தது. இந்த நிலையில் கடந்தகால தொடர் யுத்தத்தால் ஏற்பட்டிருந்த உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்கள் ஆகியவற்றுக்கான நிவாரண உதவிகள் எதனையும் அரசோ அன்றி பொதுச் சேவை புரியும் நிறுவனங்களோ வழங்கவில்லை. கடந்த யுத்த காலத்தில் கடற் தொழிலாளர்கள் மீது கடற்படை மேற்கொண்ட இரக்கமற்ற தாக்குதல்களால் இவர்கள் வகைதொகையின்றிக் கொன்று குவிக்கப் பட்டனர். .இந்த வகையில் முல்லைத்தீவில் மாத்திரம் 272 கடற்தொழிலாளர்களின் உயிரை கடலிலும் தரையிலுமாக தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை பறிகொடுத்தனர். அது மட்டுமன்றி 92 கடற்தொழிலாளர்கள் தாக்குதல்களால் ஊனமுற்றனர் இதனால் 60க்கும் மேற்பட்ட குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோர் தாய்,தந்தை இருவரையும் இழந்து அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். அதேவேளை தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கடற்படையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பத் தலைவர்கள் உயிரிழந்தமையால் 117 க்கு அதிகமான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். இதுமட்டுமன்றி இப்பகுதி மீனவர்களுக்கு தொழில் உபகரண இழப்பாக 352 வள்ளங்கள், மற்றும் சிறிய மரவள்ளம், குல்லாய் வலைகள் போன்ற பல்வேறுபட்ட மீன்பிடி உபகரணங்கள் என 12கோடி 32 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டது. முல்லை மாவட்ட மீனவர்கள் இழந்தவற்றைப் போலவே தமிழர் தாயகப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஏனைய மாவட்ட மீனவர்களும் பெரும் இழப்புக்களைச் சந்தித்தனர். யுத்தத்தின் ஆரம்பம் முதல் இது இப்போதைய சமாதானம் வரை இது தொடர்ந்தது.

இததகைய இழப்புக்களுக்கான கொடுப்பனவுகள் எதுவும் இவர்களுக்கு வழங்கப்படாத நிலையில் இவர்களது மீன்பிடித் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டு பல ஆண்டுகள் பின்நோக்கித்தள்ளப் பட்டது. அந்தவகையில் தொடர் இழப்புக்களுக்கு முகம்கொடுத்து வந்த மக்களால் தற்போதைய நிலையில் மீன்பிடி உபகரணங்கள்

(43ஆம் பக்கம் பார்க்க....)

பதினைந்தாவது அகவை காணும் ஈழநாதம் நாளிதழுக்கு எமது வாழ்த்துக்கள்.

# இளவேனில் வாணிபம்

உங்களுக்குத் தேவையான சகல வகையான கட்டட நிர்மாணப்பொருட்கள் ,மின் உபகரணங்கள்
மோட்டார் வாகன உந்துருளி ஈருருளி உதிரிப்பாகங்கள், உழவுஇயந்திர உதிரிகள், எரிபொருள் உராய்வு நீக்கிகள்
என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

MITSUI CEMENT — ரோக்கியோ சீமெந்து கம்பனியினரின் சீமெந்து வகைகள்

ANTON — அன்ரன் பி.வி.சி உற்பத்திப்பொருட்கள்

RHINO — றைனோ கூரைத்தகடுகள்

CALTEX — கல்ரக்ஸ் உராய்வு நீக்கிகள்

METROOF Total Roofing Solutions — மற்றும் நாகம் பூசப்பட்ட கூரைத்தகடுகள்

HERO HONDA — கீரோ கொண்டா மோட்டார் சைக்கிள்கள்,உதிரிகள்

TVS — T.V.S மோட்டார் சைக்கிள் உதிரிகள்

VICTORY — விக்டோரியா வில்லுத்தகடுகள்

என்பவற்றை நீங்கள் தென்பகுதி சென்று பெற்றுக்கொள்ளும் நேரத்தையும் செலவையும்
மீதப்படுத்தி எம்மிடம்நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தேவையறிந்து சேவையாற்ற
வன்னியெங்கும்

# இளவேனில் வாணிபம்

- கிளிநொச்சி
- கந்தபுரம்
- வட்டக்கச்சி
- பளை
- தருமபுரம்
- மல்லாவி
- துணுக்காய்
- நாச்சிக்குடா
- இலுப்பக்கடவை
- ஆண்டாங்குளம்
- புதுக்குடியிருப்பு
- முல்லைத்தீவு
- தண்ணீருற்று
- கலியுகவரதன் வாணிபம் (புதுக்குடியிருப்பு)

(சி-9248)

## வாழை...

மிகக் கூடுதலாக பயன்படுகின்றது. வளம் குன்றிய நிலத்தில் அது வளரும் தன்மையுடையது. அது சுற்றுச் சூழலுக்கு ஊறு விளைவிக்காது. மிக வேகமாக அறுவடை செய்வதால் முதலீடுகள் அதே வேகத்தில் மீளக் கிடைக்கின்றன.

மரத்தேவைக்காக காடுகள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு மூங்கில் வளர்ப்பு மிகவும் சிறந்த மாற்று உபாயமாகின்றது. 'பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்ற இரசாயனப் பொருள்களுக்கு மாற்றீடாக மூங்கில் இடம்பெறுகின்றது. புவியில் புல் தோன்றிய நாட்தொட்டு வளரும் மூங்கிலை எதிர்கால உலகின் சுபீட்சத்திற்கு உதவும் பயிராக ஆய்வாளர்கள் வர்ணிக்கின்றனர். உயரம் பருமனாக வளரும் மூங்கில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை. இலாபகரமாக இயங்காத தேயிலை,கோப்பி, புகையிலைப் பெருந்தோட்டங்களை மூங்கில் செய்கைக்கு உட்படுத்தும் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இலாபகரமாக இயங்காத தேயிலைத் தோட்டங்களை அழித்துவிட்டு மூங்கிலைப் பயிரிட முடியுமா? என்ற நோக்கில் சிறிலங்கா அரசு ஆய்வு செய்கின்றது.

மூங்கில் மரத்தின் அடியில் முளைக்கும் கன்றுகள் மூலம் வர்த்தக அடிப்படையில் மூங்கிலைப் பயிரிட முடியாது. மூங்கில் திசுவிலிருந்து ஆயிரக்கணக்கான கன்றுகளை உருவாக்கிப் பயிரிவதே ஒரேயொரு முறை. ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த உலக நாடுகள். யாவும் மூங்கில் செய்கையில் ஆர்வம் காட்டுகின்றன. 1827 ஆம் ஆண்டிற்குப் பின் ஐரோப்பாவிலும் கூட 400 மூங்கில் வகைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் வர்த்தக அடிப்படையிலான முயற்சிகள் தொடங்கப்படவில்லை. ஏற்கனவே ஆசியாவில் மாத்திரம் 2.2 பில்லியன் மக்கள் தமது வாழ்வாதாரமாக மூங்கிலை நம்பியுள்ளனர். மத்திய மற்றும் தென் அமெரிக்காவிலும் பெருந்தொகை மக்கள் இதே நிலையில் உள்ளனர்.

ஆசியாக் கண்டத்தின் 18 மில்லியன் ஹெக்ரேயர் நிலத்தில் மூங்கில் பயிரிடப்படுகின்றது. சீனாவில் 3 மில்லியன் ஹெக்ரேயரிலும் இந்தியாவில் 8 மில்லியன் ஹெக்ரேயரிலும் தீவிர மூங்கில் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. புகைத்தலுக்கு எதிரான உலக மட்டப் பிரசாரம் வலுத்து வருவதால் அமெரிக்காவின் பாரிய புகையிலைத் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. அந்த நிலத்தில் மூங்கில் வளர்க்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பேப்பர் தயாரிக்கும் கூழ் உலகச் சந்தை யில் பெருவிலை போகின்றபடியால் மூங்கிலின் சந்தை வாய்ப்பு பிரகாசமாக இருக்கின்றது. ஒரு தொன் கூழின் இன்றைய விலை 500 அமெரிக்கா டாலர் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வியட்நாம்,தாய்லாந்து,பர்மா போன்ற நாடுகள் தரமான பேப்பர் தயாரிக்க உதவும் மூங்கில் கூழை ஏற்றுமதி செய்கின்றன. வியட்நாம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மூங்கில் கணிசமான பங்களிப்புச் செய்கின்றது. வியட்நாமின் மூங்கில் கூரைத்தகடுகள் அந்நாட்டின் கட்டடத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. குடிசைக் கைத்தொழில் முறையில் பின்னப்பட்ட மூங்கில் தகடுகளை வியட்நாம் நவீன தொழிற்சாலைகளுக்கு அனுப்பி கூரைத் தகடுகளை வடிவமைக்கிறார்கள். கடும் மழை, வெய்யிலைத் தாங்குவதோடு இத்தகடுகள் பாரம் சுமக்கும் வலுவுள்ளதாகவும் இருக்கின்றன. அஸ்பெஸ்ரோஸ் கூரைத் தகடுகள் போல் இவை வீட்டை வெப்பமடையச் செய்வதில்லை.

டென்டிரோகலாமுஸ் அஸ்பர்(Dendrocalamus asper) என்பது மனித உணவாகும் மூங்கில்களில் ஒரு ரகம் இது சிறிலங்காவின் மத்திய மற்றும் தெற்கில் இயற்கையாகக் காணப்படுகின்றது. ஆனால் வர்த்தக அடிப்படையில் இது பயிரிடப்படுவதில்லை. சீனா போன்ற நாடுகளில் வளரும் இராட்சத மூங்கில் ரகங்கள் சிறிலங்காவில் கிடையாது. 17,000 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மனித உணவாகும் மூங்கில் தாய்லாந்து நாட்டில் பயிரிடப்படுகின்றது.தாய்வானின் வருடாந்த மனித உணவாகும் மூங்கில் ஏற்றுமதியின் பெறுமதி 50 மில்லியன் டாலிலும் கூடுதலானது. அதிகளவில் இதைப் பயிரிடும் திட்டங்களை இவ்வருடம் செயற்படுத்த இந்தியா தீர்மானித்துள்ளது.

நடுவில் குழாய் இல்லாத ஒருவகை மூங்கிலை நிலக்கரி தயாரிப்பதற்குப் பயன்படுத்துகிறார்கள். இந்த நிலக்கரியை தொழிற்சாலை இயக்கத்திற்குப் பயன்படுத்தலாம். இந்தியாவின் சில தொழிற்சாலைகள் இதில் இயங்குகின்றன. வடிவுக்கு வளர்க்கப்படும் மூங்கில் ரகங்களின் எண்ணிக்கை நூறைத் தாண்டுகின்றன. பூச்செடியில் வளர்க்கும் மூங்கில் செடி ஏற்றுமதியில் பல ஆசிய நாடுகள் ஈடுபடுகின்றன. இதனால் பெரும் வருமானம் கிடைக்கின்றது. நாளுக்கு நாள் மூங்கிலின் சந்தை வாய்ப்புக்கள் கூடிக்கொண்டே போகின்றன. எவ்வகை நிலத்திலும் செழித்தோங்கும் சிறப்புடைய இப்பயிர் எமது பொருளாதாரத்தை வளமாக்கும் திறனுடன் திகழ்கின்றது.

## கல்வியில்...

இவ்வாறான பல காரணி கள் மாணவர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் மாணவர்களின் கல்வி சாணேற முழம் சறுக்கலாகி விடும் என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்று.

இந்நிலை தொடருமானால் வன்னியின் கல்வி வளர்ச்சி என்னாவது.....?

சிங்களப் பாடசாலைகளில் 14ஆயிரம் ஆசிரியர்கள் மேலதிக மாகக் கடமையாற்றுகின்றார்கள். ஆனால் வன்னியில் 35 சதவீதமான ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின் றது.

அதனால் கல்வியமைச்சு எமது கல்வி மீது அக்கறை காட்டும் என்பது நம்பத்தகுந்த விடயமல்ல. அதனால் இருக்கும் வளத்தைக் கொண்டுதான் வன்னியின் கல்வி முன்னேற்றம் காணவேண்டும்.

அது ஆசிரியர்களின் கையில் தான் உள்ளது. தாரமும் குருவும் தலைவிதிப்படி எனும் பழமொழியை ஆசிரியர்கள் பொய்யாக்கக் கூடாது. கிராமப் புறப்பாட சாலைகளின் மீது ஆசிரியர்கள் பற்று வைக்கவேண்டும். அப்போது தான் கிராமப் புறமாணவர்களின் கல்வி வளம்பெறும்.

ஆசிரியர்களில் 90 வீதமானவர்கள் நகரப்புறப் பாடசாலைகளில் பணியாற்றவே விரும்புகின் றார்கள். போக்குவரத்து, விடுதி வசதிகள் என்பவற்றை காரணம் காட்டி கிராமப் புறப்பாடசாலைகள் என்றால் பின்னடிப்புச் செய்கின்றார்கள்.

இந்த நிலை மாறாத வரை கல்வியின் முன்னேற்றம் என்பது நகர்ப்புற பாடசாலைகளோடு மட்டுமே தங்கிவிடும்.

உதாரணமாக. ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலையில் ஏழாம் ஆண்டு வரை உள்ளன. ஆசிரியர்களோ அதிபர் உட்பட ஐந்து பேரே கடமை புரிகின்றார்கள். பாடசாலை அதிபர் வகுப்பொன்றிற்கு வகுப்பாசிரியராக கடமையாற்றுகின்றார். அவர் வெளிவேலைகளில் கவனம் செலுத்தவும் வேண்டும். அப்படியெனில் அவரது கடமை எவ்வளவு சிக்கலானது....?

இந்த நிலை மாறவேண்டும். அதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் தனது சொந்த மாவட்டத்தில் பணியாற்ற முன்வரவேண்டும். முக்கியமாக கிராமப்புற பாடசாலைகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஆசிரியர்கள் என்றாலே மாணவர்களுக்கு (தொண்டு) சேவை செய்பவர்கள் என்று சுட்டப்படுகின்றது. அப்படியெனில் ஆசிரியர்கள் நகரமென்ன, கிராமமென்ன.... எங்குமே கடமையாற்ற முடியுமே...

எனவே புனிதமான ஆசிரியர் சேவை சுயநல சேவையாக மாறி விடக்கூடாது.

அதற்கு, நகர்ப்புற பாடசாலைகளில் மேலதிகமாக கடமைபுரியும் ஆசிரியர்கள் முதல் ஏனைய வளங்கள் அனைத்துமே கிராமப் புறப்பாடசாலைகளுக்கும் மாற்றப்படவேண்டும்.

இதற்கு அரச அதிகாரிகளே கவனம் செலுத்த வேண்டும் தகுந்த நடவடிக்கை எடுக்காத வரை, கிராமங்களில் உள்ள மாணவர்களின் கல்வி பின்தள்ளப்படும். அதற்கு அரச அதிகாரிகளே பொறுப்பாளிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த சமாதான சூழலில் கூட"மழை விட்டும் தூவாணம் போகாத கதையாய்" மக்களின், மாணவர்களின் மனநிலைகள் மாற்றமடையவில்லை என்றே கூறவேண்டும்.

கல்வியின் பால் மாணவர்களை திசைதிருப்ப இலைக்கஞ்சித்திட்டம், சத்துணவுத் திட்டம், மதியபோசனம் என வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் மாணவர்கள் இன்னும் போரின் தாக்கங்களில் இருந்து மீண்டிடவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. ஏனெனில் 2003 தான் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பாடசாலைகள் வரவின்மையால் மூடப்பட்டிருக்கின்றன.

எனவே சமாதான சூழலில் கல்வி வளர்ச்சிப் போக்கை காட்டுகின்றதா... என்றால் புள்ளி விபரங்கள் இல்லையென்றே வெளிக்காட்டுகின்றன.

இருப்பினும் சமாதான சூழல் தொடருமானால் எமது கல்வி வளர்ச்சிப் போக்கை காட்டும்..... என்றும் அதற்கு கல்வி சார்ந்தவர்கள் ஒத்துழைப்புக் நல்குவார்கள் என்றும்.... நம்புவோமாக.

## துயர்...

யனுக்கு மேல் என புள்ளி விப்ரங்கள் தெரிவிக் கின்றன.

சிறிலங்கா அரசின் கூட்டுறவு தொடர் பான நடவடிக்கைகளைப் பார்க்கும்போது கூட்டுறவைத் தனிமைப்படுத்தி விட்டது என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்யும் திட்டமெதுவும் கூட்டுறவு அமைச் சிடமிருப்பதாகத் தெரியவில்லை.ஆதலால் கூட்டுறவு தொடர்பாக அரசு புதிய கொள்கைத் திட்டமொன்றை வகுத்துச் செயற்படுத்த முனைவது சிறந்த பெறுபேறுகளைத் தரவல் லது என பல கூட்டுறவாளர்கள் உறுதிப்படக் கூறி நிற்கின்றனர்.

முகம்கொடுக்க முடியாத போரின் விளிம்பில் நின்று கூட்டுறவு இயக்கத்தையும், மக்களையும் அரவணைத்துச்சென்ற வல்ல மையைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டி ருந்தன என்பது பாராட்டப்பட வேண்டிய வொன்றாகும்.

போரினால் ஏற்பட்ட இழப்பீடுகளைப் பெறவும் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்யவும் கோரி கூட்டுறவு ஆணையாளர் வடக்கு-கிழக்கு (சீ.சீ.டீ) கூட்டுறவு ஆணையாளர் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (ஏ.சீ.சீ.டீ) கூட்டுறவு அமைச்சர், கூட்டுறவு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்குப் பல தடவைகள் விண்ணப்பித்திருந்தும் நிவாரணம் ஏதும் கிடைக்கவில்லை என கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வடபகுதி கூட்டுறவுச் சங்கங்களின் நலனில் அரசாங்கமும், அமைச்சர்களும் எவ்வித அக்கறை இல்லாமல் இருப்பதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் திணைக்களமும், திரிசங்கு சொர்க்க நிலையின் நிலை தடுமாறும் கூட்டுறவுச் சங்கங்களும் தான். 21ஆம் நூற்றாண்டில் கூட்டுறவா? என மூத்த கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஒருவர் என்னிடம் கேள்வி எழுப்பினார்.

தமிழர்கள் தொன்று தொட்டு கூட்டுறவு வாழ்வை வாழ்ந்தார்கள் என்பதற்கு வரலாற்றில் பல ஆதாரங்கள் கூட்டுறவு தமிழர்களுடன் இரண்டறக் கலந்தது.

தமிழர் தாயகத்திலும் அது மிளிர வேண்டுமென்பது பலரது கனவு. ஆகையால் கூட்டுறவை அழியவிடாமல் பாதுகாப்போம். கூட்டுறவை இயக்கம் தொடர்பாக இக்கட்டுரை மூலம் உங்கள் எண்ணக் கருத்துக்கள் என்னை வந்து சேர வேண்டும்.

## தமிழக...

கைது செய்யப்படுவது குறித்து இந்திய தென்பிராந்திய கடற் படைத் தளபதி விடுத்திருந்த செய்திக்குறிப்பே போதுமானதாகும்.

வடபகுதி கடல்வளம் இலங்கைத் தமிழர்களின் சொத்து. இதை வைத்து இருவேறு சக்திகள் அரசியல் நடத்துகின்றன. சிறிலங்கா அரசினதும் தமிழக ,இந்திய மத்திய அரசினதும் அரசியலுக்கு தமிழக, வடபகுதி மீனவர் கள் பகடைக்காய்களாக பயன்படுத்தப்படுகின்றனர்

மறுபுக்கத்தில் வடபகுதி கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களுக்கு சிறிலங்கா அரசு அனும தியளித்துள்ளது. இது குறித்து சீன கம்பனிகளுடன் ஒப்பந்தம் ஒன்றையும் சிங்கள அரசு செய்துள்ளது. இதன் மூலம் சிங்கள அரசிற்கு வருமானம் பெறப்படும் அதேவேளை வடபகுதி மீனவர்களின் பொருளாதார வலுவைக் குறைக்க முடியும். இது நீண்டகாலத்தில் தமிழர்களைப் போராட்டத்தின் பால் வலுக்குன்றியவர் களாக்கும் என்றும சிறிலங்கா அரசு நம்புகின்றது.

இதன் அடிப்படையிலேயே யுத்த காலத்தில் தமிழர்களின் சொத்துக்களை வாழ்வாதாரங்களை இலக்கு வைத்து சிங்களப் படைகள் தாக்குதல் நடத்தி வந்திருக்கின் றன. தற்போது யுத்தமில்லாத சூழ்நிலையில் மறுபக்கத்தால் தமிழக மீனவர்களை அத்துமீறி பிரவேசிப்பதற்கான ஊக்கத்தை சிங்களக் கடற்படையினர் தமது செயற்பாடு மூலம் ஆதரித்து நிற்கின்றனர்.

இந்த வகையில் இலங்கைத் தமிழர்களின் விடுதலைக்கான பாதையில் ஏற்படும் முட்டுக்கட்டைகளில் இதுவும் ஒன்று இதை ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டியது. போராட்டத்தின் முன்னோக்கிய நகர்வுக்கு வலுச்சேர்ப்பதாக அமையும்.

## வீடு...

தாயின் கழுத்தை இறுகக் கைகளால் கட்டிக்கொண்டான்.

வாய் மெல்லியதான நடுக்கத்துடன் அரற்றியது. "என்ர வீடு என்ர வீடு... ரீச்சரிட்டக் காட்ட வேணும்".

விடிய வைரவ கோவிலுக்கு முன் சனங்கள் கூட்டமாக நின்றார்கள். ஆட்டம் சற்று ஓய்ந்திருந்தது. அரன் சிணுங்கலுடன் அழுதுகொண்டிருந்தான்.

"அம்மா என்ர வீட்டை எடுத்தாங்கோ"

"அப்பு அழக்கூடாது. ராத்திரி சண்டையெல்லே நடந்தது. சண்டை முடிய அப்பா வீட்டை எடுத்தருவார்."

கமலம் மகனைச் சமாதானப் படுத்தினாள். கணவனைப் பார்த்தாள்.

"என்னப்பா இப்ப அமைதியாகக் கிடக்கு வீட்டுக்குப் போகலாம் போல."

"வீட்டை விட்டு ஓடிவந்தவர்கள் வீட்டை போக அவதிப்பட்டார்கள்.

"என்ன யோசிக்கிறியள் நாதண்ண. வாங்கோ போவம்"

"அப்பா வரேக்க என்ர வீட்டை எடுத்திட்டு வாங்கோ"

அரன் விம்மலுடன் கத்தினான்.

நாதன் வீடு பார்க்கப் புறப்பட்டவர்களுடன் கிளம்ப. எதிரே முன்னரே இவர்களிடம் சொல்லிக் கொள்ளாமல் வீடுபார்க்க போனவர்கள் பதைபதைப்புடன் ஓடி வந்தார்கள்.

"ஐயோ எல்லோரும் திரும்பிப் போங்கோ வீட்டுப் பக்கமெல்லாம் செல்விழுகுது. நாதண்ணை உங்கட வீடு இடிஞ்சுபோய் தரைமட்டமாய் கிடக்குது. நாங்கள் நிக்காமல் ஓடிவாறம்."

"கடவுளே என்ர வீடு தரைமட்டமாய் போச்சுதோ நான் பாடுபட்டு கட்டின வீடு. என்ர ஐயோ நான் என்ன செய்வேன். இனி எப்படி ஒரு வீடு கட்டப் போறன். கமலம் என்ர காசு, வீடு போட்டுதே" நாதன் நிலத்தில் வீழ்ந்து புரண்டு அழுதான். கமலம் தலையில் அடித்தபடி கத்த, அரன் தாயின் நாடியை இறுகப் பிடித்து இழுத்தபடி கேட்டான்.

"அம்மா என்ர வீடும் உடைஞ்சிருக்குமே?"

அவன் குரல் விம்மலுடன் உடைந்து வந்தது.



முல்லை மருத்துவமனையின் ஒரு பகுதி

# உயிர்காக்கும் மருத்துவசேவை இன்னமும் உயிர்பெறவில்லை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழி தனி ஒரு மனிதனுக்கு மட்டுமன்றி ஒரு தேசத்துக்கும் மிகப்பொருத்தமானதே.

ஆயினும் எமது வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை நோயற்ற மனிதன் ஒருவனுக்கு வைத்திய, சுகாதாரத் தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றதா எனில் அது வினா மட்டுமே. எமது வன்னிப் பிரதேசம் பல தசாப்தங்களாக பின்தங்கியே காணப்படுகின்றது. ஆரம்பகாலத்திலிருந்தே இப்பிரதேசத்தில் மலேரியா என்ற உயிர்க் கொல்லி நோய் அச்சுறுத்தி வருகின்றது வன்னி என்றால் மலேரியா என்பதே ஞாபகத்தில் வரும் ஒன்றாகியது.

எனினும் அம்மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான உயிர்காக்கும் மருத்துவ சேவை நிறைவு செய்யப்படாத நிலையிலேயே இருந்து வருகிறது.

பொதுவாகவே பின் தங்கிய நிலையிலிருந்த வன்னிப் பிரதேசத்தின் சுகாதார வைத்திய சேவைகள் யுத்தத்தின் காரணமாக மேலும் பாதிப்புக்குள்ளாகியது. வன்னிப் பிரதேசத்தின் மீது பாரிய படையெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட சிறிலங்கா அரசு பொருளாதாரத் தடைபோன்று மருந்துப் பொருட்கள் மீதும் தடை விதித்ததன் மூலம் ஓர் ஒடுக்குமுறையைக் கையாண்டது எனில் தவறாகாது. இதேவேளை சிறிலங்காவின் ஆயுதப் படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலால் வன்னியின் மருத்துவ சேவைகள் பெரும் சீரழிவுக்குள்ளாகின. குறிப்பாக முல்லைத்தீவு கிளிநொச்சி மருத்துவ மனைகள் அழிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆனால் யுத்தநிறுத்தமும் புரிந்துணர்வு உடன்பாடும் செயற்பட்டவுடன் முதலில் தீர்க்கப்பட வேண்டியபிரச்சினையாக இம் மருத்துவ சேவை இருக்கும் என்பதே எதிர்பார்க்கப்பட்ட விடயமாகும். அதாவது முதலில் கட்டுப்படுத்தப்பட்டிருந்த மருத்துவ சேவைகளும், மருந்துப்பொருட்களும் தடையின்றிக் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

வன்னிப் பிரதேசத்தின் அத்தியாவசிய தேவைகள் துரிதகதியில் புனரமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுப்பது குறித்து இடம்பெற்ற பேச்சுக்களிலும் இது காணப்படுகின்றது. யுத்த காலத்தில் இப்பகுதி சுகாதார சேவைகளை அரச அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவனங்களான எம்.எஸ்.எவ், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பவை ஓரளவு பூர்த்தி செய்து வந்தன. முல்லைத்தீவை அரச படைகள் கைப்பற்றிய வேளையிலும் கிளிநொச்சி மாவட்டத்தைக் கைப்பற்றிய வேளையிலும் அந்நிறுவனங்களின் உதவியுடன் மக்களுக்கான இடம்பெயர் வைத்திய சேவைகள் ஓரளவு கிடைக்கப் பெற்றுள்ளன.

அவசர சிகிச்சை பெறவேண்டிய- இங்கு குணப்படுத்த முடியாத நோயாளர்கள் கொழும்பு போன்ற வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லவும் அந்நிறுவனங்களே துணை புரிந்தன. இந்நிலையில் சமாதானம் ஏற்பட்டவுடன் த'மக்குத் தேவையான மேலும் உதவிகளைச் சிறிலங்கா அரசாங்கம் விரைவில் பூர்த்தி செய்யும் என மக்கள் எதிர்பார்த்தனர். எனினும் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு இரண்டு வருட காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் துரித புனரமைப்பின் கீழ் இதுவரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியாக்கப்படவில்லை.

சமாதானம் ஏற்பட்ட நிலையில் தென்னிலங்கை வியாபாரிகளும் பொதுமக்களும் தமது போக்கு வரத்தை அதிகரித்ததன் காரணமாகவும் இங்கு பல வாகன விபத்துக்கள் ஏற்பட்ட வண்ணமேயுள்ளன. இவ்வாறு விபத்துக்களில் சிக்கி கடுமையாகப் பாதிக்கப்படுவோருக்கு உடனடி அவசர சிகிச்சைகள் செய்வது இரு மாவட்ட வைத்திய சாலைகளிலும் ஒன்றிலாவது சாத்தியப்பாடற்றதாகக் காணப்படுகிறது. அது போன்றே மாரி மாழையினாலும், பனியினாலும் ஏற்படும் நோய்களுக்கேற்ற வைத்திய வசதிகள் போதுமானதாக இல்லை. இவ்வாறு கடுமையாகப் பாதிக்கப்படுவோர் யாழ்ப்பாணம் வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளுக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதன் காரணமாக வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்க்கை நடத்துவோர் மிகுந்த சிரமத்துக்காளாக நேரிடுகிறது.

அதேபோன்று இப்பிரதேசங்களில் பணியாற்றுவதற்குத் தேவையான வைத்தியர்கள் உதவி வைத்தியர்கள், மருந்தாளர்கள் சிற்றூழியர் என்போருக்கும் பாரிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

உதவி வைத்தியர்கள் ஏனைய ஊழியர்கள் இல்லாமை மேலும் சிக்கல் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இதேவேளை கடமையாற்றும் ஊழியர்களுக்கான (வைத்தியர்களுட்பட) விடுதி வசதிகள், மின்சார வசதிகள், தொலை பேசி வசதிகள் என்பவை காணப்படாத நிலையில் இங்கு வந்து கடமையாற்றவும் அவர்கள் பின்னிற்கின்றனர்.

இச்சுகாதார மற்றும் மருத்துவ சேவைகள் குறித்த நெருக்கடிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அங்கு சமாதானம் ஏற்பட்டு இரண்டு வருடங்களாகியும் மாவட்ட வைத்திய சாலைக்கான அடிக்கல் கூட இதுவரை நாட்டப்படவில்லை. அதற்காக காரணம் என்னவாயினும் இவ்வருடம் அதன் பணிகள் முடிக்கப்படவேண்டும் அதற்கான நிக்கொட் அமைப்பு 600 லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறது. எனினும் நிர்மானப் பணிகளில் அந்நிறுவனம் நேரடியாகத் தலையிட முடியாது. அத்துடன் இதற்கான ஒப்பந்தக்காரர்கள் எவரும் முன்வரவில்லை எனவும் அவ்வொப்பந்தக்காரர்களும் சில வசதியீனங்களை எதிர்நோக்குவதாக அறியமுடிகிறது. அம்மாவட்டத்திலுள்ள மத்திய மருந்தகத்திற்கான கட்டடமும் வைத்தியருக்கான வதிவிடக் கட்டடமும் அமைக்கப் படவேண்டும் அவை மந்தகதியிலேயே நடைபெறுகின்றன மற்றும் அம்மாவட்டத்திலுள்ள 5 உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிர்மாணப்பணிகள் தொடர்வதாக அறிய வந்த போதும் துரித முன்னேற்றம் காணப்படவில்லை.

அடுத்ததாக ஆளணி வளம் முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்கு 20 வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புக்கு தலா 4 வைத்தியர்களும் 1 சுகாதார உத்தியோகத்தரும் மல்லாவிக்கு 2 உதவி வைத்தியர்கள் மற்றும் இவர்கள் விடுமுறையில் செல்லும்போது கடமையாற்றவென உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர் ஆனால் 7 பேர் மட்டுமே இம்மாவட்டத்தில் பணியாற்றுகிறார்கள். இங்கு பல காலமாக தொண்டர் பணியில் யுத்த காலத்திலும் சமாதான நேரத்திலும் அயராது சேவையாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்கும் எந்த முயற்சியும் அரசுமேற் கொள்ளவில்லை. இதன் காரணமாக இவர்கள் பணியிலிருந்து நீங்கினால் அவ்விடங்களை நிரப்பி மக்களுக்குச் சரியான சேவை வழங்குவது சிக்கலாகும்.



அம்புலன்சில்......

அடுத்தபடியாக இம்மாவட்டத்திற்கு வழங்கப்படும் மருந்துப்பொருட்கள் உபகரணங்கள் என்பவை ஒரு மாவட்டத்திற்கு வழங்கப்படும் அளவாக இருப்பதில்லை. முல்லைத்தீவு, மாவட்டம் என்றாலும் அங்கு மருந்துப் பொருட்களையோ உபகரணங்களையோ களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய வசதியில்லை. நேரடியாகப் பெற்றுக் கொள்ள வாகன வசதி கிடையாது. இம்மாவட்டத்துக்கு கிடைக்கவேண்டிய மேற்படி மருந்துப்பொருட்கள் கிளிநொச்சி மாவட்ட மூடாகவே கிடைக்கிறது. ஆயினும் மிக அவசியமான மருந்துப் பொருட்கள் இம்மாவட்டத்துக்குக் கிடைப்பதில்லை. Bco பரசிட்டமோல் போன்றவை மட்டுமே உள்ளன. கொட்றிம், ஊசி மருந்துகள், இரத்த அழுத்தம்,முட்டு போன்ற வருத்தங்களுக்கான மருந்துகள், பாம்புக்கடி, மற்றும் சத்திரசிகிச்சைக்கான திரவம் பனடோல் சிறப் இவைகளுக்கு எல்லாம் தட்டுப்பாடு நிலவுகின்றது.

கிராமிய அதாவது துார இடங்களிலிருந்து கடுமையான வருத்தக்காரரை மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுவருவதென்றால் அம்புலன்ஸ் வசதி தேவை. 2003ம் ஆண்டில் யுனிசெவ் நிறுவனம் முல்லைத்தீவுக்கு ஒரு புதிய அம்புலன்ஸ் வண்டியையும் இன்னொன்றைப் புதுப்பித்தும் கொடுத்தது அது. புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்கு கொடுக்கப்பட்டது. நட்டாங் கண்டல், ஒட்டுசுட்டான், கொக்கிளாய், முள்ளியவளை இங்கெல்லாம் இந்த வசதியில்லை. 2003 ஆம் ஆண்டு முள்ளியவளைக்கு மட்டுமாவது ஒன்று பெற்றுத்தர கோரப்பட்டது. ஆனால் இதுவரை கிடைக்கவில்லை.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகளும் பின்தங்கியே காணப்படுகின்றது. மாவட்ட வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டு மேற்கொண்டு பணிகள் தொடர்வதைக் காணவில்லை. இதேபோன்று கிராமப்புற மருந்தகங்களும் வசதியற்றுக் காணப்படுகின்றது. உதாரணமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உருத்திரபுர வைத்தியசாலை அப்பகுதி மக்களினாலேயே புனரமைக்கப்பட்டு சேவைகள் நடைபெறுகின்றன. அத்துடன் அங்குள்ள மகப்பேற்று விடுதியும் பாதுகாப்பு வேலிகள் இன்றியும் கட்டடங்கள் பாதிக்கப்பட்ட நிலையிலும் உள்ளதைக் காணமுடிகிறது. மேலும் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டிக்கொடுக்காத நிலையில் அந்தப்பணி வேறு நிறுவனங்களின் கட்டடங்களிலும் பொதுக்கட்டடங்களிலும் நடைபெறுவதை அவதானிக்கலாம்.

மற்றும் தாய் சேய் போசாக்குணவும் இப்பிரதேசங்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை. எனவே இவ்வன்னி மாவட்டத்திலுள்ள சுகாதார தேவைகளை இனங்கண்டு துரித கதியில் பணிகள் மேற்கொள்ளப்படாவிடில் இம்மக்கள் சமாதானத்தின் நன்மைகளையும் அர்த்தத்தையும் பெறமுடியாது விடும் என்பதே இன்றைய நிலை.

**வடிவேல்**

---

## சமாதான காலத்திலும்.....

3. கனரக இராணுவத் தளபாடங்களை குத்தகைக்கு வழங்குதல் அல்லது விற்பனை செய்தல்.
4 புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறுதல்.
5. கடலில் கூட்டு ரோந்து.

என்பன போன்ற விடையங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் வரும் மார்ச் மாதத்தில் கையொப்பமிட ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருந்தார். ஆனால் பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்கள் பறிக்கப்பட்டபின். அவரால் இதுகுறித்த முயற்சிகளில் ஈடுபட முடியாது போனாலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த ஒப்பந்தம் குறித்த முயற்சிகளில் தீவிர ஈடுபாடு காட்டி வருகின்றார்.

1987இல் ராஜீவ்- ஜே.ஆர் ஒப்பந்தத்திற்கு எதிராக ஆயுதப்போராட்டத்தைத் தீவிரப்படுத்திய ஜே.வி.பி தற்போதைய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்கிறது. இப்பொழுது கூட்டுச்சேர்ந்துள்ள நிலையில் ஜே.வி.பி இதனை ஆதரிப்பதால் ஒப்பந்தம் செய்துகொள்வதில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு இடையூறு எதுவுமில்லை.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கத்துடன் உடனடியாக ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள சந்திரிகா விரும்புகிறார்.

ஆனால் சிறிலங்காவில் அரசியல் குழப்பநிலையில் இவ்வாறான ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள இந்திய அரசாங்கம் விரும்பாமையால் அடுத்த அரசாங்கம் ஏற்படும்வரை ஒப்பந்தம் செய்துகொள்வது தாமதமடையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் தமிழ் மக்கள் சமாதான முயற்சிகளுக்கு தீவிரமாக ஒத்துழைப்பு வழங்கி வருகையில் சிங்கள மக்கள் சமாதானத்துக்கு ஆதரவாக இருக்கையில் தென்பகுதி அரசியல்வாதிகள் அதில் காட்டிவரும் அக்கறையிலும் பார்க்க இராணுவ முனைப்புக்களில் தீவிரம்காட்டி வருகின்றமை தெளிவாகின்றது.

சமாதான முயற்சிகள் எந்த அரசாங்கம் வந்தாலும் தொடருமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிவருகிறார்.

ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தின் பெயரால் கிடைக்கவிருந்த நிதி பற்றிக் கவலைப்படுகிறார்.

ஆனால் இருவரும் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்துத் தீவிரமாக இருக்கின்றனர்.



உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட்
தங்கத்தில்செய்து கொடுக்கப்படும்.
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

**சிறிமாரி நகைமாடம்**

தங்க வைர நகை வியாபாரம்




இல:49, கே.கே.எஸ் வீதி,
[சத்திரச்சந்திக்குஅருகாமை]
யாழ்ப்பாணம்.

☎: 021-222 7164

(சி-9208)



வீரம் விளைந்த மண்ணில்
தமிழர் விடுதலைக்குரலாய் ஒலிக்கும்
ஈழநாதமே!
என்றும் ஆற்றுக உன் பணியை தொடர்ந்து...



**தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்**

தலைவர், பொதுமுகாமையாளர், பணிப்பாளர், பணியாளர்கள்.

(சி-9209)



ஆண்டு 15 இல் பாதம் பதிக்கும் ஈழநாதமே
உன்பணி சிறக்க, நாடெங்கும் உலவ வாழ்த்துகின்றோம்.

அழகுக்கு அழகூட்டும்
புத்தம் புதிய சாறிகள்.

சிறுவர் சிறுமியர்க்கான
றெடிமெட் ஆடைகள்.



ஆடவர்களுக்கான
சேட்டிங், சூட்டிங் வகைகள்.

நங்கையர் விரும்பும்
துணி வகைகள்.

அத்தனையும் ஒரே
கூரையின் கீழ் பெற்றிட...

**நெல்லை சில்க்**

NELLAI SILK

நவநாகரிக ஆடையகம்

பிரதான வீதி, நெல்லியடி

☎: 021-226 3207

(சி-9210)

15ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!

**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**

GREAVES LIMITED



AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும்
இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.



(மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)

**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**



இல 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-222 2488, 021-2223820

(சி-9211)



# ஒற்றைக் காலுக்கே அளவற்ற செருப்பாக வன்னியில் மீளக்குடியமர்விற்கான உதவி

**கனகபுரச்சோதி**

**போ**ர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பெற்று சில தினங்களில் இரண்டு வருடங்கள் பூர்த்தியடையவுள்ள நிலையிலும் வடக்குக்கிழக்கு வாழ் மக்களின் உடனடி மனிதாபிமான, அத்தியாவசிய தேவைகள் இன்று வரை பூர்த்தி செய்யப்படாததொன்றாகவே உள்ளது.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சொந்த இடங்களைவிட்டும், சொத்துச் சுகங்களை இழந்தும், புலம் பெயர்ந்து வாழ்ந்த மக்கள் போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டதன் பின்பு தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பி தமது இயல்பு வாழ்க்கையினை மேற்கொள்ளலாமென மக்கள் மீள் குடியமரத் தொடங்கினர்.

உண்மையில் வன்னியில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின் மக்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த பொழுதிலும், இம்மக்களுக்கான மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகள் மற்றும் வீடமைப்புக்கொடுப்பனவுகள், பாதிக்கப் பட்டோருக்கான நஸ்டஈட்டுக் கொடுப்பனவுகள் என்பனவற்றினை முற்று முழுதாக இக்காலப் பகுதியில் இம்மக்களுக்கு வழங்கப்பெற்றுள்ளதாவெனில் சுருக்கமாக அதனை இல்லையென்றே கூறமுடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தினை எடுத்து நோக்குமிடத்து, கிளிநொச்சிநகர் மற்றும்அதனை அண்டிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு புனாவாழ்வு புனரமைப்பு அமைச் சினால் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கான முற்று முழுதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாவெனில் “அது காலுக்கு செருப்பு தேவை என்றதற்காக ஒற்றைக் காலுக்கு அளவில்லாத செருப்பு வழங்கிய கதையாகவே முடிந்துள்ளது”

கிளிநொச்சி மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்பு 18,381 குடும்பங்கள் கிளிநொச்சிநகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இவர்களில் ஒருங்கிணைக்கப்பெற்ற உதவித் திட்டக் கொடுப்பனவினை (மீள் குடியமர்வுக் கொடுப்பனவு) பெறுவதற்கு 15,871 குடும்பங்கள் தகுதியுடையவர்கள் என கணிப்பிடப்பட்டதன் பின்பும் மீள் குடியேற்ற முதலாவது கட்டகொடுப்பனவாகிய ரூபா இருபத்தையாயிரத்தினை இவ்விரு ஆண்டுக்காலப் பகுதிகளில் 9275 குடும்பத்தினரே பெற்றுள்ளனர். 1978 குடும்பத்தினர் பகுதிக்கொடுப்பனவினைப் பெற்றுள்ளனர்.

அதாவது 9275 குடும்பங்களுக்கு மொத்தம் 231.875 மில்லியனும், 1978 குடும்பங்களுக்கு ஒரு பகுதிக்கொடுப்பனவாக மொத்தம் 28.205 மில்லியனும் இவ் ஒப்பந்த இரு ஆண்டு இடைவெளிக் காலப்பகுதியில் வழங்கப்பெற்றுள்ளது.

இந்த வகையில் முழுமையான கொடுப்பனவாகவும், பகுதிக் கொடுப்பனவாகவும் இதுவரை 11,253 குடும்பங்களுக்கு மொத்தம் 260.08 மில்லியன் ரூபா அமைச்சினால் வழங்கப்பெற்றுள்ளது. மற்றும் மிகுதியாகவுள்ள 4618 மீளக் குடியமர்ந்த மக்களுக்கும், பகுதிக் கொடுப்பனவினைப் பெற வேண்டியுள்ள 1978க் குடும்பங்களுக்குமான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மேற்படி குடும்பங்கள் இக்கொடுப்பனவுகளையும் பெற முடியாத நிலையில் பெரும் ஏமாற்றத்தினை தழுவியுள்ளனர்.



இந்த நிலையில் மேற்குறிப்பிட்ட 6596 குடும்பங்களுக்குமான கொடுப்பனவிற்கு 136.695 மில்லியன் தேவைப்படுமிடத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இதுவரை இக்கொடுப்பனவை வழங்குவதற்கான எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதன் காரணமாக இவற்றினை எதிர்பார்த்திருந்த இம்மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

அடுத்து, மற்றும் 2500 ரூபாவிற்கு மேற்பட்ட வருமானத்தினைப் பெற்றுவரும் 3742 குடும்பங்களின் சொத்திழப்பு விபரங்கள் சேகரிக்கப்பெற்று இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்ற போதிலும், இதுவரை 11 குடும்பங்களுக்கு மட்டுமே இக் கொடுப்பனவுகள் வழங்கப்பெற்றுள்ளன.

அதாவது 3742 குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவிற்கு 374.2 மில்லியன் பணம் தேவைப்படுமிடத்து புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் ஒரு மில்லியன் ரூபா வழங்கப்பெற்று 11 குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை இக்கொடுப்பனவு வழங்கப்பெற்றுள்ளது. மேலும் 3731 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்குதற்கான 373.1 மில்லியன் ரூபாவினை அமைச்சு இதுவரை வழங்க முன்வராமையின் காரணத்தினால் இரண்டு வருடகாலமாக மீளக்குடியமர்ந்த 3731 மேற்படி குடும்பங்கள் கொடுப்பனவுகள் அற்ற நிலையில், பலத்த சிரமங்களுக்கு மத்தியில் தமது வாழ்வைத் தொடர வேண்டியுள்ளது.

மற்றும் வீடமைப்புக் கொடுப்பனவாக ஒரு குடும்பத்திற்கு 75,000 ரூபா வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பெற்ற பொழுதிலும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையினையும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

குறிப்பாக மீளக்குடியமர்ந்து மேற்படி கொடுப்பனவிற்கு தகுதி பெற்ற 15,871 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கொடுப்பனவிற்கென 1190.325 மில்லியன் ரூபா தேவைப் பெற்றபொழுதிலும் அமைச்சினால் இதற்கான எந்தவித கொடுப்பனவிற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவீல்லையென்பதே உண்மை.

அதேபோன்று கடும்பாதிப்புற்றோருக்கான நஸ்டஈட்டுக் கொடுப்பனவு, அதாவது இராணுவ நடவடிக்கையின் போது காணாமற்போனோர், கொல்லப்பட்டோர், ஊன முற்றோர் ஆகிய 1318 பேருக்கான கொடுப்பனவுகள் மேற்படி மாவட்டத்தில் வழங்கப்படவேண்டியிருந்தும் 2002, 2003ஆம் ஆண்டுகளில் 211 பேருக்கான கொடுப்பனவுகளே புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பெற்றுள்ளது.

அதாவது 1318 கடும் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவிற்கு 64.975 மில்லியன் ரூபா தேவைப்படுமிடத்து 211 பேருக்கு 12.07 மில்லியன் ரூபா மட்டுமே இதுவரை வழங்கப்பெற்றுள்ளது.

மற்றும் மரணச்செலவுக் கொடுப்பனவு என்பது மரணம் சம்பவித்தவுடன் (வன்செயலினால் ஏற்பட்ட இறப்பு, மற்றும் நலன்புரிநிலையங்களில் தங்கி இருக்கையில் இறப்பு என்பனவற்றிற்கு உடனடியாக 10 ஆயிரம் ரூபா மரணவீட்டுச்செலவிற்கென புனர்வாழ்வு புனரமைச்சினால் உடனடியாக வழங்கப்படவேண்டிய பொழுதிலும் இராணுவ வன்செயல்கள் காரணமாக 96ஆம் ஆண்டுமுதல் 98 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மரணமானவர்களில் 2002ஆம் ஆண்டுகளில் 121 பேர்களுக்கான மரணச் செலவுக் கொர்டுப்பனவு 1.21 மில்லியனும்,2003ம் ஆண்டு 22 பேர்களுக்கான 0.22 மில்லியனும் ஆக மொத்தம் 143 பேருக்கான கொடுப்பனவுகள் 1.43 மில்லியன் மட்டுமே வழங்கப்பெற்றுள்ளது. மேலும் 628 மரணித்தோருக்கான மரணச்செலவுக் கொடுப்பனவுகள் 6.28 மில்லியன் இன்றுவரை புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பெறவில்லை. மரணம் சம்பவித்து எட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை மரணச் செலவுக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமையானது புனர்வாழ்வு அமைச்சின் திட்டமிட்ட புறக்கணிப்பு, இழுத்தடிப்பு நடவடிக்கையாகவே மேற்கொள்ளப் பெற்று வருகின்றது என்பதுபுலனாகியுள்ளது.

இந்த வகையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவுறும் நிலையிலும் முதற்கட்ட புனர்வாழ்வுப் பணிகளே முற்றுப் பெறாதவையாக அரைகுறை நிலை யிலேயே உள்ளன. இந்நிலையா னது அரசாங்கம் இவ்விடயத்தில் சிரத்தையற்ற நிலையில் இருந்த மையே காரணமாகும்

புனர்வாழ்வு, புனரமைப்பு எனப் பல அமைச்சுக்களை கொண்டிருந்த அரசாங்கம் முதற்கட்ட புனர்வாழ்வுப் பணியை இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யாது இருந்தமை அவர்கள் தமிழ் மக்களின் நலனில் எத்தகைய அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதற்கானதொரு எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

---

**கரையோர மக்களின்...**

மீதான தடையை சிறிலங்கா அரசு நீக்கியுள்ளபோதும் அவற்றைப் பெற்று ஆழ்கடல் மீன்பிடியில் ஈபடுவதற்கான பொருளாதார வலு இல்லாத நிலையே உள்ளது. அந்த வகையில் முன்னர் இவர்கள் இழந்த இழப்புக்களுக்கான கொடுப்பனவுகள் எதையாவது அரசு மற்றும் தொண்டர் நிறுவனங்கள் வழங்காத நிலையில் மீனவர்களால் யுத்த இழப்புக்களிலிருந்து மீளமுடியாத துயரநிலையே தற்போதும் நிலவுகிறது. இதனால் மீன்பிடி உபகரணங்களைப்பெற்று ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் மீன்பிடித் தொழிலாளர்களின் அவல வாழ்வு தொடர்கிறது. அதில் கவலை தரும் விடயம் என்னவென்றால் பாதிக்கப்பட்ட இந்தமீனவர்களுக்கான உதவிக்கொடுப்பனவுகளை வழங்குவதில் அரசு எத்தகைய கொள்கையைக் கடைப்பிடிக்கிறதோ அதே கொள்கையையே இங்கு பணிபுரியும் தொண்டர் நிறுவனங்களும் கடைப் பிடிக்கின்றன என்பதுதான். சில தொண்டு நிறுவனங்கள் இவர்களுக்கு வழங்கும் உதவிகள் கட்டுமரம் வாங்கவே போதுமானதாக இல்லை.

பின்தங்கிய நிலையில் இழந்துபோன தமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக முயன்றுகொண்டிருக்கின்ற இந்த வேளையில் வடபகுதி கடலில் இந்திய மற்றும் தென்பகுதி மீனவர்கள் அதி நவீன இயந்திரப்படகுகளுடனும் மீன்பிடிக்கருவிகளுடனும் மீன்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் அதிக பிரகாசம் வாய்ந்த ஒளி யைப் பாய்ச்சி மீன்களைத் தம்வசம் இழுப்பதனால் கரையோர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் எமது மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுகிறது.

இந்த நிலையில் போரினால் பெரிதும் பின்தங்கிப் போயுள்ள மீன்பிடித் தொழிலாளர்களுக்கு இவ் நவீன முறைகளும், நுட்பங்களும் மேலும் இடையூறுகளைக் கொடுப்பவையாகவே உள்ளன. இத்தனைக்கும் மேலாக இவர்களால் பிடிக்கப்படுகின்ற கடலுணவுகளை நீண்ட நாட்களுக்குப் பாதுகாத்து வைத் திருக்க முடியாதநிலை. மீன்களை உலரவைத்து கருவாடாக பதனிடுகின்ற முறையை தவிர குளிரூட்டிகளில் வைத்து கடலுணவுகளை பழுதடையாது மீண்டும் பயன்படுத்துவதற்கான நவீன வசதிகள் இல் லாத நிலை. இதனால் மீன்களைக் கருவாடு ஆக்குவதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாதநிலை இந்த நிலையால் தற்போது கிடைத்திருக்கின்ற சாதக சூழ்நிலையிலும் மீனவர்களால் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடையமுடியவில்லை. நீண்டகாலமான வன்முறைகளாலும், அடக்குமுறைகளாலும் வடபகுதி மீனவர்கள் வெகுவாகப்பாதிக்கப் பட்டிருக்கின்ற இந்த வேளையில் கூட இவர்களின் வறுமை நிலையைப் போக்கி தொழில் ரீதியான ஊக்குவிப்புக்கள் எதனையும் மேற்கொள்ளாத அரசு சிங்கள மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் தொழில் ரீதியான முன்னேற்றங்களை ஏற்படுத்தவும், வட்டி இல்லாத கடன், அன்பளிப்பு, மானியம்போன்ற பல்வேறுபட்ட கொடுப்பனவுகளை வழங்கியும், கரையோரப்பகுதிகளில் மீன்பதனிடும் தொழிற்சாலைகளை நிறுவியும், மீன்பிடித்தொழில் தொடர்பான கல்வியை வழங்குவதற்கான கல்வி நிலையங்களை அமைத்து இலவசக் கல்வி வழங்கியும் மீன் பிடித்தொழிலை மீன்பிடிக் கைத் தொழிலாக உயர்த்தி அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக முழுமூச்சாக முயன்று வருகிறது.ஆனால் அரசு வடபகுதி மீனவர்களின் சுதந்திரத்தைப் பறித்து தொழில் ரீதியான அடக்குமுறைகளைப் பிரயோகித்து இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளையும் முடக்கும் வகையில் அரசு திட்டமிட்டு செயல்படுகின்ற தன்மை பாதிக்கப்பட்ட மீனவர்களை மேலும் கவலையடையச் செய்துள்ளது.


வெப்பகுதியின் ஒளிதரும் சூரியன்
THE VANNI AGROTECHS
வன்னி வேளாண் மக்களின் நீண்ட நாள் இருளகற்ற வந்த "பகலவன்"
JINASENA LIMITED
வேளாண் பொறிகள் தூவற்பாசன தொகுதிகள், சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள், ஏனைய வேளாண் துணைக்கருவிகள்
கால்நடை உணவு, மருந்து, கால்நடைவளர்ப்பு துணைக்கருவிகள்
மல்ரி பிளைக்ஸ் நுண்ணூட்டசத்துக்களடங்கிய உரம், இயற்கைப்பீடைக் கொல்லிகள்.
Duro நீர்க்குழாய்கள், மின்னிணைப்புக் குழாய்கள்
ஊர்திகள் ,வேளாண் பொறிகள் சேவைப்பகுதி.
THE VANNI AGROTECHS
ETA LANKA உரவகைகள்
HAYLEYS AGRO
வேளாண் உள்ளீடுகள், துணைக்கருவிகள்.
கதிரவன் ஒளியில் கலக்கம் தீர்ப்பீர்! வாழ்வு உயர்ந்து வளம் பெற எம்வாசல் நாடுவீர்!
LML பிறீடம் உந்துருளிகள், ஸ்கூட்டர் வகைகள்
மண்ணாய்வும் மதியுரையும், மாதிரிப்பண்ணைகளும்
15ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் ஈழநாதம் மக்கள் நாளிதழுக்கு எமது வாழ்த்துக்கள்!
எமது முகராண்மை பெற்றவர்கள்:
சேரன்வாணிபக்கிளைகளான, பரந்தன், புதுக்குடியிருப்பு, தண்ணீரூற்று, மல்லாவி, முழங்காவில்,
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம் கஸ்தூரியார் வீதி, யாழ். தொ.பேசி: 021-2222988
தொடர்புகளுக்கு:
வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்
கண்டிச்சாலை கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285745
தொலைநகல்:021-2285746

## யாழ்ப்பாணம்...

கணக்கினூடாக லொத்தர் திட்டம் பெண்களுக்கு, சிறுவர்களுக்கு, குழந்தைகளிற்கு என பல திட்டங்களைக் காட்டி சேமிப்பைப் பெருக்கியது. இதனால் கொழும்புத் தலைமையகத்திற்கு இவ்வங்கிகள் பெருமளவான சேமிப்பைத் திரட்டிக்கொடுத்தன. இங்குள்ள வங்கியாளர்களும் கடன் வழங்குவதற்கு பின்னின்று கொண்டு சேமிப்பைத் திரட்டுவதில் மாத்திரம் சாதனைகளை முன்னிறுத்தி தம் பதவிகளை உயர்த்துவதில் ஆர்வத்துடன் செயறபட்டனர். "சிசுஉதான" போன்ற சிங்களப் பெயர்களிடப்பட்ட (தமிழில் இது மாற்றப்படாமல் அது பற்றி எந்தக் கோரிக்கையும் முன்வைக்கப்படாமல் இட்ட கட்டளையை மிகச் சிறப்பாகநிறைவேற்றிக் கொண்டனர்) வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் போரின் பின்னர் மீண்டுவரும் யாழ்ப்பாணத்தின் சேமிப்பை தலைநகர் நோக்கி நகர்த்தினர்.

இரண்டாவதாக மக்களிற்கான புனர்நிர்மாண வேலைக்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் பல உள் நுழைந்தன. பாதை திறப்பதற்கு முன்னரும் சில இங்கிருந்து செயற்பட்டன. அவை மட்டுப்படுத்தப்பட்ட சேவையாகவே இருந்தது. போரினால் ஏற்பட்ட நிச்சயமற்ற நிலையில் நிவாரணங்களை மாத்திரம் வழங்கிய சர்வதேச, தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதை திறக்கப்பட்டதோடு ஏற்பட்ட நிச்சயத்தன்மையைக் கருத்திற் கொண்டு புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபட்டன. போரின்போது சேதமடைந்த பாடசாலைகள், அரசாங்க நிர்வாக மையங்கள், வைத்தியசாலைகள், போக்குவரத்து மையங்கள், துறைமுகங்கள், வீதிகள், பாலங்கள் போன்றவற்றை புனர்நிர்மாணம் செய்ய முன்வந்தனர். பாதை திறப்புடன் புதிய அரச சார்பற்ற நிறுவனங் களும உள்வந்தன. மக்களிற்கு சில நிவாரணங்கள் புனர் நிர்மாண வேலைகளைச் செய்யவந்தோர் பயன்படுத்தும் வாகனங்கள் அவர்களிற்கான நிர்வாகச் செலவுகள், வாழ்விடச் செலவுகள், கவர்ச்சிகரமானதாகவும் அவர்களால் பயனடையப் போகும் மக்கள் மிக வறுமையுடையவர்களாகவும் இருக்கும் நிலை இவர்களின் வரவுகளிலும் பொருத்தப்பாடின்மையைப் பிரதிபலித்தது. இவர்கள்சேவை மக்களிற்கு திருப்தியளிப்பதாயில்லை.

A-9 பாதை திறந்தால் யாழ்பாணத்திற்கு உள்வருவோர் தொகை அதிகரித்துள்ளது. பல்வேறுபட்ட தேவைகளை நோக்காகக் கொண்டு வருகின்றனர். அவற்றை பொதுவாக பட்டியலிடும் போது

1. அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள்.

2. யாழ் மக்களை அரசியல் மயப்படுத்தி தங்களின் அரசியல் இலாபங்களுக்காக ஒருசில குழுக்கள் அடிக்கடி வந்து போகின்றனர்.

3.சமாதானம் நிலைக்கவேண்டும் அதற்கு யாழ்பாண மக்களின் பிடித்துப்பார்க்க ஆய்வுப்பட்டறை நடத் தன்னிலங்கையிலிருந்தும், வெளிநாடுக லிருந்தும் அடிக்கடி வந்து போகின்றனர்.

4.அரசாங்க உயர் அதிகாரிகள் மாகாணசபை உயர் அதிகாரிகள் நிர்வாகத்தை இலகுவாக்குவதாகக் கூறி வந்து போகின்றனர்.

5.வெளிநாடுகளில் பல வரு டங்கள் இருந்த எம்மவர்கள் உறவினரைப் பார்க்கவும் சொத்துக்களை உரிமை கோருவதாகவும் கடவுளுடனான நேர்த்திக் கடன்களை கோயில்களில் நிறைவேற்றுவதற்காகவும் தம் சொந்த நிலம் இதுதான் என்று தம் வெளிநாட்டில் பிறந்து, வளர்ந்த பிள்ளைகளுக்கு காட்டுவதற்காகவும் வந்து போகின்றனர்.

6. நாக விகாரையை தரிசிப்பதற்காக சிங்கள மக்கள் அடிக்கடி வேறு வேறு குழுவினராக வந்து போகின்றனர். அவர்களில் சிலர் தம் உறவினரோ,பிள்ளைகளோ அரசாங்க படையில் இருப்பதால் அவர்களை சந்தித்து உரையாடிச் செல்வதற்காகவும் வந்து போகின்றனர். அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையின் தமிழர் வாழ்விடப் பிரதேசத்தில் பெரியதொரு பிரதேசத்தை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்து நீதி, நிர்வாக,பொருளாதார சேவைகளை நடத்துவதை பார்த்து செல்வதற்காகவும் வன்னியூடான பயணத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து போகின்றனர்.

7.வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகவியளாளர்கள் அடிக்கடி வந்து போகின்றனர்.

8.மட்டக்களப்பு, மன்னார் ,திருகோணமலை, கொழும்பு, மலையகம், போன்றவற்றில் வசிக்கும் தமிழர்களும், முஸ்லீம்களும் உறவினர்களைப் பார்ப்பதற்கும் வன்னி,யாழ்ப்பானம் இருண்ட யுகத்திலிருந்து மீண்டுள்ளது. அதைப் பார்த்துச் செல்வோம் என்ற அடிப்படையிலும் வந்து போகின்றனர்.

9.வெளிநாட்டிலிருந்து நேரடி முதலீடு செய்ய விரும்புவோரும், தென்னிலங்கையிலிருந்து முதலீடு செய்ய விரும்புவோரும் தமது வெளியீடுகளுக்கான சந்தை வாய்ப்பு உண்டா என்பதை அறிந்து செல்வதற்காகவும் தம் பொருட்களுக்கான விளம்பரங்களை மேற்கொள்வதற்காகவும் வந்து செல்கின்றனர்.

10. தமிழீழ விடுதலைப்புலிகளின் எல்லா வகையான தந்திரோபாயங்களையும் அறிந்து கொள்வதற்கான எல்லாத்தரப்பிலான எல்லா நாட்டின் உளவாளிகளும் வந்து போகின்றனர் .

11.சுற்றுலாப்பயணிகளும் வந்து போகி ன்றனர். இவர்கள் உள் வருவதற்கும், வெளிச் செல்வதற்கும் பயன்படுத்திய வாகன எண்ணிக்கையும் வந்து போனவர்கள் பற்றிய விபரத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்தை மாத்திரம் கவனத்தில் கொண்டு பின்வரும் அட்டவணை தரப்பட்டுள்ளது.

ஏற்பட்டிருந்தது. இப்போது எல்லா வசதிகளும் இங்கு கிடைப்பதால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வெளிநாட்டுத் தொடர்பாடல்களை ஏற்படுத்த முடியும்.

04. பாதை திறப்பின் பின்னர் மெய்ச் சொத்துக்களாகிய பயிர்செய்நிலம், குடியிருப்பு நிலம், வர்த்தக மைய நிலம் பெருவீதிகளுக்கும் பல்வேறு வசதிகளைக்கொண்ட இடஅமைவுள்ள நிலம் போன்றவற்றில் பெறுமதி அதிகரித்துள்ளது. போர்க்காலத்தில் இவற்றிற்கு எப்பெறுமானமும் இல்லை. இப்போது அவை பெறுமதியுடையதாய் மாறியதால் அவை கைமாற்றம் செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வருவாய் சிலரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது. சிலருக்கு நல்ல முதலீடாக மாறியுள்ளது. அவ்விதமே அசையும் சொத்துக்களின் பெறுமதியும் உயர்ந்துள்ளது.

05. முன்னரை விட போக்குவரத்துச் செலவும் குறைந்துள்ளது.

06. மென்குடிபானம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்றவை கிடைப்பது சிலரது

### 2002 ஆம்ஆண்டு பாதை திறக்கப்பட்டவுடன் ஆகஸ்ட் மாதத்தில் வந்துபோன வாகனங்கள் பற்றிய விபரம்

| விபரம் | யாழ்ப்பாணம் வந்த வாகன எண்ணிக்கைகள் | | | யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே சென்றவை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகஸ்ட் | ஒக்ரோபர் | டிசம்பர் | ஆகஸ்ட் | ஒக்ரோபர் | டிசம்பர் |
| லொறி | 879 | 1885 | 316 | 938 | 829 | 231 |
| வான் | 583 | 1080 | 217 | 598 | 337 | 151 |
| பஸ் | 122 | 156 | 10 | 206 | 22 | 13 |
| கார் | 392 | 254 | 54 | 352 | 182 | 31 |
| மோட்டார் சைக்கிள் | 329 | 7578 | 2255 | 412 | 6022 | 1620 |
| உழவுஇயந்திரம் | 231 | 177 | 38 | 196 | 119 | 18 |
| கன்ரர்/எல்வ் | 267 | 358 | 86 | 208 | 277 | 115 |
| கொள்கலன் | 4 | 77 | 9 | 12 | 10 | 2 |
| ஆட்டோ | 114 | 43 | 47 | 95 | 106 | 45 |

*குறிப்பு: –2003ஆம் ஆண்டுத் தரவுகள் கிடைக்கவில்லை*

வாகனங்கள் வந்து போனது போலவே அதில் வந்து போன மக்களின் எண்ணிக்கையும் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**2002இல் யாழ்ப்பாணத்திற்குள் -உள்வந்த வெளிச்சென்றபயணிகள்எண்ணிக்கை பற்றி விபரம்**

| விபரம் | ஆகஸ்ட் | ஒக்ரோபர் | டிசம்பர் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணத்திற்குள் வந்த பயணிகள் | 73068 | 25879 | 50225 |
| யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே சென்ற பயணிகள் | 73798 | 17609 | 47809 |

யாழ்பாணத்தில் குறித்த தேவையை நிறைவேற்றும் பொருட்டு பல்வேறு வகையினர் வந்து போயுள்ளனர். இவர்கள் வரவால் அல்லது மக்கள் தொடர்புகள் அதிகரித்ததால் சாதகமான விளைவுகளும்,பாதகமான விளைவுகளும் ஏற்பட்டுள்ளன.

### சாதகமான விளைவுகளாக நாம் கொள்ளக் கூடியன

1.பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதால் ஏற்பட்ட பொருட்கள் நகர்வு மக்களின் வாழ்க்கைத்தரத்திலும் உற்பத்தியமைப்புக்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக பல்வேறு வகையான பல் வேறு தரமான நுகர் பொருட்கள் கிடைத்தன. அதே வேளையில் உற்பத்தித் தேவையான உள்ளீடுகளும் கிடைத்தன. கட்டடவாக்கத்திற்கான சீமேந்து, ஆற்று மணல் போன்றனவும் பலகை, மரம் போன்றவையும் கிடைத்ததால் புனர் நிர்மாணம், கட்டடவாக்கம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது.

2.பெற்றோலிய எரிபொருட்கள் தாராளமாகக் கிடைத்ததால் தனியார் போக்குவரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. குறிப்பாக தனி நபர், குடும்ப போக்குவரத்துக்கான எரிபொருள் கிடைத்ததால் அவற்றின் கொள்வனவும் அதிகரித்தது. அதன் பயன்பாடும் அதிகரித்தது. கொழும்பு யாழ்ப்பாண தனியார் பஸ் சேவைகளும் அதிகரித்தது.

03. தனிநபர், குடும்ப தொடர்பாடலுக்கான கையடக்கத் தொலைபேசிகளும், சாதாரண தொலைபேசி வசதிகளும் அதிகரித்துள்ளன. முன்னர் வெளிநாட்டுத் தொடர்பாடலுக்காகவே கொழும்பில் லொஜ்சில் தங்க வேண்டிய நிலை

வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது.

07. வாகன வருகையும், வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்ததால் அத்துடன் இணைந்த சேவைகள் புத்துயிர் பெற்றன.

அதாவது சேர்விஸ் நிலைங்கள், பழுது பார்க்கும் நிலையங்கள், வர்ணம் பூசும் நிலையங்கள் போன்றன மீண்டும் இயக்கப் பட்டதோடு புதியதும் உருவாக்கப்பட்டது.

08. பல்வேறு உயர்வருமானமுள்ளவர்களும் வந்து போவதால் முன்னர் என்றுமில்லாத அளவுக்கு யாழ் மாநகரசபைப் பிரதேசத்தில் குளிரூட்டப்பட்ட உல்லாசப்பயணிகள் விடுதிகள் (கொட்டல்) விருந்தினர் விடுதிகள் தோற்றம் பெற்றன. அதனுடன் இணைந்த சேவைகளும் அதிகரித்தன. முன்னர் உல்லாசப் பயணிகள் விடுதிகளாக இருந்த "சுபாஸ் கோட்டல்" "ஞானம்ஸ் கொட்டல்" "அசோக் கோட்டல்" போன்றவை படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் இன்று வரும் உல்லாசப்பயணிகளையும் தேவை நோக்கிவரும் விருந்தினர்களையும், பராமரிக்க வீடுகள் பல கொட்டல்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ஸ்தலயாத்திரையாக வரும் தென்னிலங்கை மக்கள் தாமே சமைத்து தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்யும் பழக்க முள்ளதால் அவர்களின் பயணங்களால் வர்த்தக ரீதியில் நன்மையடையவில்லை. அவர்கள் "கருவாடு" "திராட்சை" போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதால் அவற்றிற்கு நல்ல கேள்வி ஏற்பட்டுள்ளது.

09.விவசாய உற்பத்திப்பொருட்களில் குறிப்பாக வெங்காயம், வாழைப்பழம் போன்றவை தென்னிலங்கையில் சந்தைப்படுத்த முடிந்தது.

10.உயர்கல்விக்கான வாய்ப்பினை கொழும்பில் பெறுவதற்காக பயணம் செய்யும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

11. வெளிநாட்டு உறவினர்கள் காலஅட்டவணைப்படி வந்து போவதால் உறவினருக்கு மகிழ்ச்சியைத்தருகின்றது.

மேற்குறித்தவாறு இன்று சில நன்மைகள் கிடைத்த போதும் பாதகமான விளைவுகளுமுண்டு. இப்பாதகமான விளைவுகளை குறுங்கால, நீண்டகால நோக்கில் அதாவது தொலை நோக்கில் மதிப்பிடுதல் வேண்டும்.

### வெளிப்படையாகத் தெரியும் பாதகமான விளைவுகளாவன

1. நிதி நிறுவனங்கள் போட்டி போட்டு தம் சேவையை விஸ்தரித்து யாழ்ப்பாண மக்களின் சேமிப்பை தலைநகருக்குக் கொண்டு சென்று அரசாங்கத்திற்கோ அல்லது தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கோ கடன்கொடுக்கின்றது. கடன் பெறவேண்டி இங்குள்ள மக்களுக்கு இலகுவில் கடன் கிடைப்பதில்லை. கடன் பெறுவதாயினும் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. வைப்பிற்களிற்கான லொத்தர் என்ற போர்வையில் மிகக்குறைந்த வட்டியே சேமிப்புக்கு வழங்கப்படுகின்றன.

2. தென்னிலங்கையிலும் உலகிலும் சுகாதாரக் கேடென கழிக்கப்பட்ட பொருட்கள் எந்தவிதத் தரக்கட்டுப்பாடும் பின்பற்றப்படாமல் யாழ்ப்பாணத்திற்கு விற்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் ஒரு குப்பை கூழங்கள் கொட்டும் குப்பைக் கூடைபோல மாறிவருகிறது.

3. தொலைத் தொடர்புச் சேவை விஸ்தரிக்கப்பட்டதால் ஏற்பட்ட நன்மைகளைவிட தீமைகளும் அதிகரித்துள்ளது. இணையத் தளத்தைக் கல்விக்காக பயன்படுத்தும் ஆர்வமில்லாமல் கலாச்சார சீரழிவுக்காகப் பயன்படுத்துவது அதிகரித்து வருவதால் கணினிக் கலாச்சாரத்தை விரைவாக உள்வாங்கிய யாழ்ப்பாணம் வக்கரித்த சிந்தனையுள்ள இளைஞர்களையும் உருவாக்கி வருகிறது.

இளைஞர்களின் தேவை இதுவெனக் கங்கணம் கட்டும் மது சாலைகளும், விருந்தினர் விடுதிகளும், சின்னத்திரைகளும் புற்றீசல்கள் போல் யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்றுள்ளன.

இளைஞர் சமூகத்தைச் சீரழிக்கக் கூடிய வகையில் பாடசாலைக்கும், பல்கலைக் கழகத்திற்குமருகில் மதுசாலைகளையும், போதை வஸ்த்து விற்கும் நிலையங்களும் உருவாகி வருகின்றன.இதுவே கட்டுப்பாடில்லாத பொருள் தெரிவு என்று சிலரால் பறைசாற்றவும் படுகின்றது.

4. உல்லாசப் பயணிகள் விடுதியும் அரச சார்பற்ற வெளிநாட்டவர்களின் பழக்கவழக்கங்களும் எம்மக்களுடன் பொருந்தாத தொடர்பாகவும் பொருத்தப்பாடில்லாத நுகர் பழக்கமாகவுமுள்ளது.

5.பல்தேசிய நிறுவனங்களின் விளம்பரம் எங்கள் வளத்தையும் எங்கள் வருவாயையும், எங்கள் கலாச்சாரத்தையும் சுரண்டிவிடும் இது உலகமயமாக்கத்திற்குள் விரைவில் யாழ்ப்பாணம் முழுமையாக உள்வாங்கப் பட்டுவிடும் என்ற பேராபத்தும் உள்ளது. அதன் பின்னர் எமக்கான அடையாளங்களை எங்கும் நிறுவமுடியாமல் போய்விடும்.

6.தமிழ் மக்களின் தமது உரிமையைப் பெறுவதற்கான தொடர்ச்சியான போராட்டத்தை மழுங்கடித்துவிடும் போக்கும் காணப்படுகின்றது. தென்னிலங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆய்வுப்பட்டறைகள் இதற்கு நல்ல சான்று.

7. உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக பல ஏக்கர் நிலங்களை படையினர் ஆக்கிரமித்துள்ள நிலையில் அங்கு வாழ்ந்த மக்கள் திரும்பவும் அவ்விடத்தில் குடியிருக்க வசதி செய்யப்படாதவரையின் பாதை திறப்பில் சில நன்மைகள் கூட உண்மையில் பாதிக்கப்படாதவர்களுக்குக் கிடைக்கவில்லை. உயர் பாதுகாப்பு வலய இயற்கை வளங்கள், பயிர்செய் நிலங்கள், மீன்பிடிப்பிரதேசங்கள் அவற்றின் முதலீடுகள் தடைப்பட்டிருக்கும் இவ்வேளையில் பாதை திறப்பு ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்தையும் அபிவிருத்தியடையவிடவில்லை. வளமற்ற நிலத்தில் வாழும் மக்களிற்கு இப்பாதைதிறப்பு ஒரு களியாட்ட நிகழ்வாக இருக்க முடியும்.

ஒட்டுமொத்தமாக நோக்கின் A-9 பாதை பலகாலங்களின் பின் மீண்டும் திறந்துவிடப்பட்டதென்பது சமாதான ஒப்பந்தம் என்ற பெருநிகழ்விற்கும் பின்னரே A-9 எங்கள் மக்களின் தேவைகருதி அமைக்கப்பட்டதொன்றல்ல. வடகிழக்கு மக்களின் உண்மையான அபிவிருத்திக்கென வீதி வலைப்பின்னல் போடவேண்டுமாயின் A-9 பாதைக்குப்பதிலாக வடக்கையும், கிழக்கையும் இணைக்கக்கூடிய கரையோரப் பெருவீதி ஒன்றே அபிவிருத்திக்குப் பொருத்தமான வலைப்பின்னலாக இருக்க முடியும். முன்னர் இருந்தது மீண்டும் திறக்கப்பட்டது என்ற நோக்கில் இக்கட்டுரை வரையப்பட்டதேயொழிய A-9 எமது அபிவிருத்திக்கு உகந்ததா மாற்று வழி என்ன என்பதை தன்னாதிக்கம் கொண்ட நிர்வாக அலகு ஒன்று ஏற்படும் போதுதான் எமக்கான வீதி வலைப்பின்னல் எது என்று சிந்திக்க முடியும்.

## தன் பலம்...

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் பின்னர் புலிகள் கொண்டிருந்த மேலாதிக்க நிலையினைத் தகர்க்கும் நோக்குடன் அரச படைகள் .முழுஅளவிலான தொரு பன்முனைத் தாக்குதல்களுக்கேற்ப தனது படைப்பிரிவுகளைத் தயார்படுத்தி வந்தது.

போரியல் ரீதியாகப் புலிகள் வளர்ச்சி பெற்றிருந்தாலும்-படையினரின் இத்தகைய நகர்வு திறன் பெரும் பின்னடைவைத் தரக்கூடும் என்பதைக் கணித்து புலிகள் ஓயாத அலைகள்-4 நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரையில் அதன் முன்னணித் தாக்குதல் படைப்பிரிவுகளாக இருப்பது 53வது டிவிசனும், 55வது டிவிசனும் தான். ஆனையிறவின் வீழ்ச்சிக்குப் பின்னர், இந்தப் படைப்பிரிவுகள் தென்மராட்சிக்குள் தம்மை மீளமைத்துக்கொண்டு தாக்குதலுக்குத் தயாராகி வந்தன.

இதனால் இரண்டு தசாப்த காலமாக அரச படைகளிடம் இருந்து வந்த நகர்வு திறனை முறியடிக்க வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு இருந்தது. இதனால் தென்மராட்சிக்கு முன்னைய நிலைகள் மீது தொடுத்த பலமானத் தாக்குதல்களால் இந்த முன்னணிப் படைப்பிரிவுகள் தாக்குதல் நிலையிலிருந்தும் -நகர்வு திறனையிழந்து-தற்காப்பு நிலையில் நிறுத்தப்பட வேண்டியயேற்பட்டது.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் கெரில்லா நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக புலிகளுடன் மரபுவழிப் படைகளைக்கொண்டு போரிட்ட அரச படைகள் இன்று தலை கிழான நிலைக்கு மாறியிருக்கின்றன.

புலிகளின் முன்னணித் தாக்குதல் படைப்பிரிவுகள் இப்போது முழுமையாகத் நகர்வுத் திறனுடன் இருக்கும் நிலையில்-அதனை முழுமையாகத் தடுக்கக்கூடிய பலமில்லாததால் -புலிகளின் கட்டளைத் தளபதிகளைக் குறிவைத்து கெரில்லாத்தாக்குதல் நடத்த வேண்டிய நிலைக்கு அரச படைகள் தள்ளப்பட்டிருக்கின்றன.

இரண்டு தசாப்த காலப் போர் மூலம் அரச படைகள் ஒருபுறத்தில் ஆளணி வள ரீதியாவும்,ஆயுதவள ரீதியாகவும், போரிடும், திறனிலும் வளர்ச்சி பெற்று வந்த போதிலும்-புலிகளின் வளர்ச்சிக்கேற்ப இந்தக் காலத்தில் இவர்களால் ஈடுகொடுக்க முடியாத கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இரண்டு தசாப்த காலப் போரில் அரச படைகள் எதிர்கொண்ட ஆளணி இழப்புக்கள், ஆயுத இழப்புக்கள் எல்லாம் ஒருபுறம் இருக்க, புலிகளிடம் இவர்கள் இழந்து போயிருக்கும் நகர்வு திறன் மிகவும் முக்கியமானது.

இப்போது சமாதான காலம் என்பதால் இதன் தாக்கம் பெரிதாக உணரப்படாமல் இருந்தாலும்- இந்த முடக்கநிலைதான் சமாதானத்துக்கு வழிகோலியது. இதேவேளை அரச படைகள் இந்தச் சமாதான காலத்தில் தம்மை மீளமைத்துக் கொள்ள எடுத்த பல்வேறு முயற்சிகளும் படுதோல்வியில்தான் முடிந்திருக்கின்றன.

இன்னமும் படையிலிரந்து தப்பி ஓடுவோர் தொகை அதிகரித்துக்கொண்டேயிருப்பது புலப்படுத்துவது எதை? சமாதான காலத்திலும் கூட அரச படைத்தலைமையால் தமது படையினர்களை ஒழுங்கு கட்டுப்பாட்டனும்-உயர் போரிடும் திறனுடனும் வைத்திருக்க முடியவில்லை என்பதையே.

இரண்டு தசாப்த காலப் போராட்டத்தில் அரச அ படைகள் பெற்றிருக்கும் இந்த மாற்றம் நிச்சயம் அவர்களுக்கு ஆபத்தானதொரு கட்டமாகவே இருக்கக் கூடும். ●

## வன்னியின்...

பயணிப்பதற்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கினார்கள். மழை காலங்களில் சில நாடகளுக்கு இவ் வீதியின் போக்குவரத்து ஸ்தம்பித நிலையடைந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இம்மூன்று பாலங்களையும் மிக விரைவாக புனரமைப்புச் செய்வதன் மூலம் இந்நிலை ஓரளவு மாறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இதனைப்போன்று வன்னி மண்ணிலுள்ள ஏனைய பாலங்களும் புனரமைக்கப்படுமா? என அனைத்து உள்ளங்களிலும் ஓர் ஏக்க உணர்வு காணப்படுகின்றது.

கிளி. மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட வீதிகளின் புனரமைப்பு பணியை வைத்து ஒப்பு நோக்கும்போது வன்னிப் பிரதேசத்தின் நிலையைப் புரிந்து கொள்ள முடியும்.

வன்னிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு இடையூறாகவுள்ள வீதிகள் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு இரண்டு வருடங்களாகின்ற போதிலும் முன்னேற்றம் ஏற்படாமையானது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றே. இதனால், ஏனைய அபிவிருத்திகளும் தாமதமடையக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. போக்குவரத்து வசதியை மேம்படுத்துவதன் மூலம் மட்டுமே ஏனைய அபிவிருத்தி வேலைகளைச் சுலபமாக்க முடியும். ●

## விடுதலைக்கான...

வரும் பேசப்படுபவரும் க. சிதம்பரநாதன் அவர்கள். அவர் ஒரு வகையான வீச்சுக்கொண்ட விடுதலைக்கான அரங்கு பற்றி சிந்திக்கிறார். பல்பரிமாண வீச்சுக்கொண்ட விடுதலைக்கான அரங்கு எதிர்காலத்தில் பரிணமிக்கும்.

07. ஈழத்தமிழருக்கான அரங்கு ஒரு இயக்கமாக அண்மைக்காலத்தில் வளர்ந்து வருகின்றது. அது சமூக அரசியல் விமர்சனங்களை முன்வைக்கும் அளவிற்கு அழகியலையும் கவனத்தில் கொள்வதாகக் கருதலாமா?

'அரங்கில் சமூக அரசியல் பிரச்சினைகள் முதன்மைப்படுத்திப் பேசப்படுகின்ற போது கலைநயம் கெட்டு விடுகிறது' என்று கோட்பாடுகளை விழுங்கி வில்லங்கப்படும் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இங்கு எது அழகியல்? என்ற கேள்வி உண்டு. இதற்கு விடை பல.

இலக்கு பார்வையாளருக்கு திருப்தியைக் கொடுப்பது அழகியல் என்ற வாதமும்

மனிதனது அனைத்துச் செயல்களும் அழகியல் தான் என்ற வாதமும்.

சில வரன்முறை கோட்பாடுகளைப் பூர்த்தி செய்வது தான் அழகியல் என்ற வாதமும் உண்டு.

எமது தேசத்தில் போதாமைகளோடு அரங்கைச் செய்கின்ற நிலைமைகள் காணப்படு கின்றன.

போதாமைகளோடு அல்லது பற்றாக்குறையோடு அரங்கைச் செய்கின்றபோது அழகியல் புறந்தள்ளப்படுவதான துயரமும் நடக்கிறது. இதனால், செலவு செய்து பிரமாண்டமாக தயாரிப்பதுதான் அழகியல் என்று சொல்வதாகத் கருதத் தேவையில்லை.

திறன் மிக்க ஆளணி, போதிய நேரம், பழகும் இடம் என்ற அடிப்படையான போதாமைகளும் உள்ளன. இதனால் கிடைப்பதை வைத்து செய்யப்படுகிறது, அழகியல் கெட்டு விடுகிறது. மாறாக ஒருவன் உண்மையான தன் உணர்வை வெளிப்படுத்த எதுவும் தேவையில்லை என்ற விவாதத்தை ஏற்க முடியாது. 'உண்மையான உணர்வை' வெளிப்பாட்டு திறன் உள்ள ஒருவன் வெளிப்படுத்தும் போது அது அழகாக இருக்கும். எமது தேசத்து அரங்கில் அழகுணர்வு குறைந்து வருகிறது என்று சொல்லலாம்.

08. இன்றுள்ள அரசியல் சூழலில் அல்லது யுத்தமற்ற எதிர்காலச் சூழல் ஒன்று ஏற்படுத்துமிடத்து 'நாடகம்' எத்தகைய தேவைகளை முன்நிறுத்தும்?

தமிழர் தம் சுயத்தை ஒடுக்கிய போது அதிரிஇல்லாது போகின்றது மட்டும் விடுதலைக்கான தகுதி நிலையாக அமையாது. நாம் விடுதலையை உணர்வதற்கு அரங்கு அவசியமாகிறது. மனதில் ஊடுருவி தசையில் தொடுவது அரங்கு தான். அதனால் அது சாதிப்பது பல.

பொது எதிரி தொலையும் போது சிறிதுசிறிதாக பல எதிரிகள் எமக்குள் நுழைத்துக்கொள்ளும். அதனை புரிந்து கொள்வதற்கும் போராடுவதற்குமான பலத்தை கொடுக்க அரங்கு அவசியமாகிறது.

சமூக விடுதலைக்கும், ஆரோக்கியமான மனித விழுமியம் சார்ந்த சமூக உருவாக்கத்திற்கும் அரங்கு அவசியம்.

இவ்வாறு செயல்திறன் அரங்க இயக்க இயக்குனர் தே.தேவானந் தெரிவித்தார். ●

## இயல்பு...

அதாவது புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகிய இயல்பு வாழ்க்கையை தோற்றுவித்தல் என்ற விடயத்தில் முன்னேற்றங்காணத்தக்க வகையில் மக்கள் தமது சொந்தக் குடியிருப்புக்களில் குடியேறுவதற்கு உயர் பாதுகாப்பு வலயங்கள் தடையாகவே இருந்தன.

இதன் காரணமாக இரண்டாண்டுகள் யுத்த நிறுத்தமும்-அமைதியும் நிலவிய போதும் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் குடியிருப்பைக் கொண்டிருந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது தொடர்ந்தும் போராடடங்களை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திலேயே இருந்தனர். ஒருவகையில் இவ்விரண்டாண்டு காலமும் அவர்களின் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தது.

இப்போராட்டங்கள் சாத்வீக ரீதியில் மறியல போராட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் என்ற வகையிலும் மகஜர்கள் சமர்ப்பிப்பு, யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்யும், உள்நாட்டு, வெளிநாட்டு அதிகாரிகள், இராஜதந்திரிகள் போன்றவர்களுடனான சந்திப்புக்கள் மூலமான வலியுறுத்தல் போன்றன வையாக இருந்தன.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்ற வேண்டும். என்ற போராட்டங்களில் மாணவர் தொடக்கம், வெகுசன அமைப்புக்கள் வரையில் பங்கேற்றிருந்த ஒப்பந்தத்தின் பின்னான உயர் பாதுகாப்பு வலயத்திற்கு எதிரான போராட்டம் பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள ஹாட்லிக் கல்லூரி,மற்றும் மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றுக்கான பாதைகளைத் திறந்துவிடுதல், மற்றும் இராணுவச் சூழலை விலக்கிக்கொள்ளுதல் தொடர்பான மாணவர்போராட்டமாக இது இருந்தது.

அதன் பின்னர் பல போராட்டங்கள் மாணவர்களினாலும் வெகு சன அமைப்புக்களினாலும் மேற்கொள்ளப்பட்டதுண்டு. கடந்த ஆண்டில் யாழ்.பல்கலைக்கழ மாணவர்கள் நடத்திய பொங்கு தமிழ் நிகழ்விலும் "உயர் பாதுகாப்பு வலயம் " என்பதே முக்கிய கருப்பொருளாக இருந்தது. இதேவேளை இப்போராட்டமானது இறுதியில் சாகும்வரையிலான உண்ணாவிரம் என்ற நிலையை எட்டும் வரையில் சென்றுள்ளது.

இந்த வகையில், இவ்விரண்டாண்டு காலமும்,நாட்டில் "அமைதிச் சூழ்நிலை" காணப்பட்டாலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் தொடர் போராட்டங்கள் நடத்த வேண்டியவர்களாகவே இருந்தனர். ஆனால் அவர்களின் போராட்டங்களால் இதுவரை பயனெதும் ஏற்படவில்லை. இதேவேளை புரிந்துணர்வு உடன்பாடு தனது இலக்கை அடைவதற்கு பெரும் தடையாக அமைந்த விவகாரமாகவும் இருந்தது. ●

## இரண்டாண்டு...

வரும் விடுதலைப்புலிகள் குறித்தும், அதன் தலைமை மீதான பார்வை குறித்தும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவும் ஏதுவாகியது.

கடந்த இரண்டாண்டு கால யுத்த நிறுத்தத்தில் விடுதலைப்புலிகள் அதில் காட்டி வந்த உறுதியும், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இராஜதந்திர அணுகு முறைகளும், ஒத்திசைவான போக்கும் மேற்குலகத்தவரின் பார்வையை மாற்றுவதற்குப் பெரிதும் உதவின.

மேலும், இலங்கைத்தீவில் இரண்டு அதிகார மையங்கள் இருப்பதை சர்வதேச சமூகம் படிபடியாக ஏற்றுக்கொள்ளும் நிலை வளர்ச்சி கண்டது. கொழும்பிற்கும் அடுத்து கிளிநொச்சிக்குமாக வெளிநாட்டு பிரதிநிதிகள் (அமைச்சர்கள், விசேட தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், இராஜதந்திரிகள்) வருகை தருவதும், அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இதன் வெளிப்பாடு என்றே கொள்ள வேண்டும்

மறுவளமாக, விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் இன்று பல சர்வதேச நாடுகளுடனும், தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளதோடு, பல நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொண்டு இராஜதந்திரிகள் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் போன்றவர்களுடன் பேச்சுவார்த்தைகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தவும் தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தவும் கூடியதானதொரு சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

அது மாத்திரமல்ல, விடுதலைப்புலிகள் அமைப்பு தற்பொழுது தமது தேவைக்கான வெளிநாடுகளில் சந்திப்புக்களையோ அன்றி கூட்டங்களையோ நடத்தக்[illegible] அளவில் இராஜீக மட்டத்தில் அங்கீக[illegible]தை பெற்றுக் கொண்டுள்ளது. இதில் விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்து தடை விதிக்க முற்பட்ட சில நாடுகள் கூட உள்ளடங்கியுள்ளன.

இத்தோடு, விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்கள் பட்டடியலில் சேர்த்துக் கொண்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள்- உள்ளூர் சட்டங்களுக்கு அமைவாக மட்டுமே அவ்விடயத்தை கவன[illegible]ில் எடுத்துக் கொள்வதாக வெளிப்படையாக [illegible]தரிவிக்கும் நிலை வரையில் வந்துள்ளன. தமது நாட்டு எல்லைகளுக்கு அப்பால் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சந்திக்கவும், பேசவும் அவை தயக்கம் காட்டவில்லை.

இந்த வகையில், அமெரிக்கா, பிரிட்டன் அரசுகளின் நடவடிக்கைகள்கூட விடுதலைப்புலிகளுடன முரண்பாடான போக்கைக் கொண்டவையாக இல்லை. இந்த வகையில் இவ்யுத்த நிறுத்த காலப் பகுதி சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான அடித்தளம் மிகவும் உறுதியான முறையில் இடப்பட்ட காலமாகும்.

அதாவது, சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை சர்வதேச ரீதியில் பலவீனப்படுத்துவதற்காக சுமார் ஆறு வருடங்கள் மேற்கொண்ட தீவிர இராஜதந்திர முயற்சிகள் இவ் இரண்டாண்டு காலப் பகுதிக்குள் விடுதலைப்புலிகளால் அதே இராஜதந்திர முயற்சிகள் ஊடாக வெற்றிகொள்ளப்பட்டதெனலாம்.

இதேசமயம், இவ் அங்கீகாரத்திற்காக விடுதலைப்புலிகள் இயக்கம் எவரின் அழுத்தத்திற்கும் பணிந்து அரசியல் - இராஜதந்திரப் பணிகளில் ஈடுபடவில்லை என்பதும் சுட்டிக்காடடத்தக்கது. எடுத்துக் காட்டாக, ஒஸ்லோவில் 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடந்த பல நாடுகள் பங்கேற்ற சமாதானத்திற்கு ஆதரவான மாநாட்டில் அமெரிக்க பிரதி இராஜங்கா அமைச்சர், ரிச்சார்ட் ஆர்மிரேஜ் "விடுதலைப்புலிகள் வன்முறையையும், பயங்கரவாதத்தையும் கைவிட்டு விட்டதாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும்" என்ற வற்புறுத்தலை விடுதலைப்புலிகள் மீது திணித்தார். ஆனால், அம்மாநாட்டின் முடிவில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இது குறித்து பிரஸ்தாபித்த புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் "வன்முறை, பயங்கரவாதம் என்ற விடயங்களுக்கு அமெரிக்கா என்ன வரைவிலக்கணத்தைக் கொண்டிருக்கின்றது என எமக்குத் தெரியவில்லை. ஆனால், எமது செயற்பாட்டை 'வன்முறை' 'பயங்கரவாதம்' என்ற வியக்கியனப்படுத்துவதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை" எனத் தெளிவாகவே நிராகரித்திருந்தார்.

இதேபோன்று சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்ற வேண்டும் என்ற ரீதியில் - ஒருவகையில் மறைமுக அழுத்தங்களுக்கு விடுதலைப்புலிகள் உட்படுத்தப்பட்டனர் என்றே கூறுதல் வேண்டும். ஆயினும், விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. தமது கோரிக்கையை வலியுறுத்தியே நின்றனர். இந்த வகையில், அழுத்தங்கள் எதற்கும் புலிகள் விட்டுக்கொடுப் புக்கள் எதையும் செய்ததாகவும் இருக்கவில்லை.

இந்நிலையில், இரண்டாண்டு கால யுத்த நிறுத்தமானது- இனப்பிரச்சினைக்கான தீர்வு எதற்குமோ அன்றி தமிழ் மக்களின் நெருக்கடிகள், இன்னல்கள் என்பனவற்றைத் தீர்ப்பதற்கோ எந்த வகையிலும் பேருதவி புரியவில்லை. ஆயினும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான நியாயப்பாட்டையும் - சிறிலங்கா ஆட்சியாளர்களின் அதிகாரப் போட்டி சிறுபான்மை மக்களின் உரிமைகள் எந்தளவில் நசுக்குவதாக அமைகின்றது என்பதைச் சர்வதேச சமூகம் விளங்கிக் கொள்வதற்கும் பெரிதும் வாய்ப்பளித்ததொரு காலப் பகுதியாகவுமே இது இருந்தது. இக்காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் கைக்கொண்ட அரசியல் இராஜதந்திர நகர்வுகள் அவ் இயக்கத்தின் அந்தஸ்தினையும், அவ் அமைப்பின் தலைமையின் ஆற்றலையும் உலகிற்கு வெளிப்படுத்த உதவிய காலப்பகுதியாக அமைந்ததெனில் மிகையாகாது. ●



15 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் ஈழநாதத்திற்கு எமது வாழ்த்துக்கள்!

எமது மண்ணில் மங்காப்புகழ் பூத்த மாபெரும் மகத்தான
LG ஸ்தாபனத்தாரின் இலத்திரனியல் பொருட்கள் அனைத்தையும்
யாழ் நகரில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

அபான்ஸ் லிமிட்டெட்டின்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்



LG

## யாழ்ப்பாண மின்னகம்

இல:141,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2225766

இல:06,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2222353

(சி-9258)

---



15 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் ஈழநாதத்திற்கு எமது வாழ்த்துக்கள்!

சேட்டிங்-சூட்டிங், பட்டுச்சேலை-பட்டுவேட்டி வகைகள்
மற்றும் பாடசாலைப் பொருட்கள், அழகுசாதனப்
பொருட்கள், கண்ணாடி பிரேமிங் ஏனைய
வீட்டுத்தளபாடப்பொருட்கள்அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

சீர
கூ
ணா

## சுடர்ஒளி வண்ணச்சோலை

பிரதான ஸ்தாபனம்: சுடர் ஒளி வண்ணச்சோலை
சில்வா வீதி, வட்டக்கச்சி.

கிளை: கண்டி வீதி, கிளிநொச்சி.

[சி.8778]

---

15 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் ஈழநாதத்திற்கு எமது வாழ்த்துக்கள்!

மின் உபகரணங்கள்
ANTON பைப் நீர் இணைப்புக்குழாய்கள், இணைப்புப்பொருத்திகள்
அலங்கார பொருட்கள்
மின் விசிறிகள், ரைகர் இஞ்சின்
வயர்கள், வயறிங் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள், நீர் இறைக்கும் இயந்திரம்
காஸ்குக்கர், றைஸ்குக்கர், குளிர்சாதனப்பெட்டிகள்
மின்மாற்றிகள், மின்னழுத்தி, ரியூப்லைற்செற்




இன்னும் பல பொருட்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

## திருமகள்

### பல்பொறி உதிரிகள் வாணிபம்

இல:113, யாழ்சாலை, கிளிநொச்சி. (கரடிப்போக்குச்சந்திக்கு அருகாமையில)

[சி.7780]

---

HITACHI, SINGER, WEELING, HERO HONDA, TEPAL, HERO, YAMAHA, TIGER, USHA, SONY, AKIRA NATIONAL UNIC

15 ஆவது அகவை காணும் ஈழநாதம் தினசரிக்கு எமது வாழ்த்துக்கள்!



SINGER

## சீர்மை SEERMAI

கிளிநொச்சி -முல்லை மாவட்ட விற்பனை முகவர்

SINGER
சிங்கர் சிறிலங்கா லிமிட்டெட்
HERO HONDA
ஸ்ரபோட் மோட்டார் கம்பனி லிமிட்டெட்
HERO STREEM
பெண்களுக்கான மோட்டார் சைக்கிள்
எஸ்.ரீ.சி ஜெனரல் ரேடிங் கொம்பனி
AKIRA
எய்ம்ஸ் லிமிட்டெட்




எம்மிடம் தையல் இயந்திரங்கள், மின் விசிறிகள், குளிர்சாதனப்பெட்டிகள்
மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள்,
வானொலிப்பெட்டிகள், V.C.D, CD, மின் வாயு அடுப்புகள், நீர்ப்பம்பிகள்,
மின்பிறப்பாக்கிகள், மணிக்கூடுகள், இயந்திரங்கள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
என்பன பெற்றுக்கொள்ளலாம்.

[சி.8777]

**தையல் இயந்திரம் சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும்.**

ம. இக்னேசியஸ்

வருவாய்ப்பகுதிச்செயலகம் முன்பாக
யாழ்சாலை, கிளிநொச்சி.

# ஈழநாதத்திற்கு இனிய வாழ்த்துக்கள்!

தமிழீழ மக்களின்
தேசிய நாளிதழ்
ஈழநாதம் 15 ஆம் ஆண்டில்
காலடி பதிப்பதையிட்டு
மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்!

**இளந்தென்றல் அணைகல வாணிபம்** யாழ்சாலை, கிளிநொச்சி.

**இளந்தென்றல் ஓய்வகம்** யாழ்சாலை, கிளிநொச்சி.

**இளந்தென்றல் தங்ககம்** பச்சிலைப்பள்ளி, பளை

(சி-8789)

14ம் ஆண்டை நிறைவு செய்து வீறுநடை போடும் ஈழநாதம் தினசரிக்கு வாழ்த்துக்கள்





Software Creation
Software Training
Service & Maintenance
Repair

குடாநாட்டில் கடந்த 5 வருடகாலமாக பல அரச, தனியார்
நிறுவனங்களை கணனிமயப்படுத்தலில்
ஈடுபடுத்திய எம்மோடு சுபீட்சமான எதிர்காலம் நோக்கி நீங்களும்.......

STP

# Your Partner in ITSolution

73, Palaly Road, Kantharmadam, Jaffna.
e.mail: stpworld@sltnet.lk T.P : 0212222674

(சி-9257)


பதினைந்தாம் அகவையில் காலடி எடுத்து வைக்கும்
ஈழநாதம் என்றென்றும் தமிழீழ மக்களின் இதயநாதமாக
ஒலிக்க எமது வாழ்த்துக்கள்.
வாருங்கள் உங்கள்
வளமான வாழ்விற்கு
வழிகாட்டுகிறோம்.
தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்
தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM
(சி-9256)


YAMAHA
Touching Your Heart
இன்று புதிய அகவையில் பாதம் பதிக்கும்
ஈழநாதம் தினசரியினை
இன்னும் பல அகவை இனிதாய் வாழ வாழ்த்துகிறோம்!
Castrol
யாழ் நகரில் உள்ள - சர்வதேச புகழ் பெற்ற
ஒரே ஒரு மோட்டார் கொம்பனி
யமஹா மட்டுமே !!
மிக நீண்ட காலப் பாவனை !
மிக கவர்ச்சியான வடிவமைப்பு !
மிக் நவீன தொழில்நுட்பம் !
மிக சொகுசான பயணம் !
இலகுவாக கையாளக்கூடியவை !
நூற்றுக்கு நூறு யமஹா !
யமஹா பிளாஸாவில் மட்டுமே !!
coming soon!
YAMAHA
YAMAHA PLAZA
யமஹா பிளாஸா
ஏக விநியோகஸ்தர்கள்:
(சி-9252)
One to One Service
YAMAHA GENUINE Parts & Accessories
298 KKS Road, Jaffna. 021 4590 200. www.yamahaplaza.com










இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.